279

279
1-19

புதுமுறைத்

தமிழ்

மணிக் கோவை

எட்டாம் வகுப்பு

தொகுத்தவர்

புலவர் பு. செல்வராசனார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1958
MADRAS

TB
031(8)
N58
89770

...ியம் கம்பெனியார் திண்டுக்கல்

புதுமுறைத்

தமிழ் மணிக் கோவை

எட்டாம் வகுப்பு

279
1-59

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 ... 1959
MADRAS

தொகுப்பாசிரியர் :

புலவர் பு. செல்வராசனார்

தலைமைத் தமிழாசிரியர்,

C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

வி. சுப்ரமணியம் கம்பெனியார்

கல்வி நூல் பதிப்பாளர்கள்

திண்டுக்கல்

பதிப்புரிமை] 1958 [விலை ரூ. 2·00

முதற்பதிப்பு—1958.

TB
O31(8)
N58

32 இராத்தல் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.

89770
சென்னை-600 008.

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

முன்னுரை

புதுமுறைத் தமிழ்மணிக் கோவை என்னும் பெயருடன் வெளிவரும் இப்பாட நூல் எட்டாம் வகுப்பிற்கு உரிய தாகும். அண்மையில் அரசியலார் வெளியிட்ட புதிய பாடவியலைக் கருத்தில் கொண்டு இந்நூலில் பாக்களும் பாடங்களும் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் கற்பிப்பதற்குமுன் வீட்டில் பிறர் உதவி யின்றி மாணவர் தாமே படித்து அறிதற்குத் துணையாக இருக்குமாறு அருஞ்சொற்பொருள், கேள்விகள், உரைநடை ஆக்கப் பயிற்சி, இலக்கணக் குறிப்பு முதலியவை, பாக் களின் பின்னரும் பாடங்களின் பின்னருமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இந்நூலில் பாக்களும், பாடங்களும் மாணவரின் மன நிலைக் கேற்றவாறு ஆய்ந்து தொகுக்கப்பட்டிருக்கின்றன. தத்தம் கவிதைகளையும், கட்டுரைகளையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ள இசைவு அளித்த ஆசிரியர்கட்கும், உரிமையாளர்கட்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இத்தொகுப்பு நூலைக் கண்ணுறும் கல்வி நிலையத் தலைவர்களும் தமிழாசிரியர்களும் இதனைத் தத்தம் பள்ளி யில் பாடமாக வைத்து மாணவர்க்குப் பயன்படச் செய்ய வேண்டுகின்றேன்.

ஆசிரியன்

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
	செய்யுட் கோவை	
I.	வாழ்த்துப் பகுதி :	
1.	கடவுள் வாழ்த்து ..	1
2.	தமிழ்மொழி வாழ்த்து ..	1
3.	தமிழ்நாட்டு வாழ்த்து ..	1
II.	அறவுரை :	
1.	திருக்குறள் ..	3
2.	நாலடியார் ..	18
3.	புறநானூறு ..	21
III.	தொடர்நிலைச் செய்யுள் :	
1.	மணிமேகலை ..	23
2.	திருவிளையாடற் புராணம் ..	31
3.	நளவெண்பா ..	38
4.	குசேலோபாக்கியானம் ..	44
5.	மனோன்மணீயம் ..	48
6.	ஆசிய சோதி ..	52
IV.	பல்சுவை :	
1.	புனைந்துரை	
	(1) தென்றல் ..	55
	(2) மருதம் ..	55
	(3) மலைவளம் ..	56
2.	சீட்டுக்கவி ..	57
3.	சிலேடை (கலைசைச்சிலேடை வெண்பா) ..	58

4. சிறு பிரபந்தங்கள்

(1) தமிழ் விடுதூது .. 60
(2) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் .. 62
(3) திருவெங்கைக் கலம்பகம் .. 63
(4) திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி 65
(5) கலிங்கத்துப் பரணி ... 66

5. வழிபாட்டுப் பாடல்கள்

(1) தேவாரம் .. 68
(2) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் .. 68
(3) சீறாப் புராணம் .. 69
(4) இரட்சணிய யாத்திரிகம் .. 69

மனப்பாடம் செய்யவேண்டியவை

நூல்		செய்யுள் எண்	வரிகள்
திருக்குறள்	—	1, 4, 13, 16, 19, 20, 25, 26, 31, 32, 38, 41, 42, 43, 45, 48, 50, 52, 53, 59, 60, 62, 63, 64, 65, 66, 68, 71, 73, 74.	60
நாலடியார்	—	4, 6.	8
புறநானூறு	—	1. 2.	18
ஆசிய சோதி	—	1, 2, 3, 4.	16
			102

மனப்பாடம் செய்யத் தக்கவை

திருக்குறள்	—	160	வரிகள்
நாலடியார்	—	24	,,
புறநானூறு	—	18	,,

உரைக் கோவை

1. நமது தாய்மொழி .. 71
(பண்டித, நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்)

2. முள்ளால் எழுதிய ஓலை .. 79
(டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள்

3. கல்வெட்டுகள் .. 86
டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர் அவர்கள் எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பிஎச்., டி.,

4. நாடும் நகரமும் .. 95
டாக்டர் திரு. அ. சிதம்பரநாதன் அவர்கள் எம். ஏ., பிஎச். டி., எம். எல். சி.

5. பண்டைத் தமிழரசரும் புலவரும் ... 105
[பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்]

6. தமிழகத்தின் பண்டைப் பல்கலைக் கழகங்கள் ... 112
வித்துவான் திரு. பு. செல்வராசனுர் அவர்கள்

7. இளைஞர்களுக்கு அறிவுரை ... 122
திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள், எம். ஏ., எல் டி.

8. திங்கள் ... 130
திரு. வி. சேஷகிரி அவர்கள், M. A., L. T.,

9. குண்டலகேசி ... 135
திரு. பூ. ஆலால சுந்தரனுர் அவர்கள், எம். ஏ.

10. இசையும் இசைக் கருவிகளும் ... 140
வித்வான் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

11. குடும்பக்கலை ... 146
வித்வான் திரு. அன்னுள் சாந்தப்பன் அவர்கள்

12. கோவூர் கிழார் ... 151
வித்வான் திரு. வீ. உலக ஊழியனுர் அவர்கள்

13. தமிழன் கண்ட மலேயா (கடிதம்) ... 159
திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்
எம். ஏ., எம். லிட்.

14. முன்னேற்றப்பாதையில் நம்நாடு .. 165
திரு. சு. இலக்குமி அவர்கள், M. A., B. T.

15. அழகிய ஜப்பான் நாடு 172
முன்னைய மேயர் திரு. சு. இராமசுவாமி நாயுடு
அவர்கள்

16. கல்வி-செல்வம் (சொற்போர்) ... 180
வித்வான் திரு. பு. செல்வராசனுர் அவர்கள்.

17. ஈறிலா இன்பம் பெறவழி ... 189
கவியரசர் தாகூர் தெளித்த கருத்து

18. கௌசாம்பி மன்னன் ... 193
திரு எஸ். உருத்திரபதி அவர்கள், எம். ஏ.

———

தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிருய்;
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

I. வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து

திருவாசகம்

கருங்கல் மனமும் கரைந்துருகும் வண்ணம் மாணிக்க வாசகர் பாடிய அருள்கனிந்த பாக்களின் தொகுதியே திருவாசகமாகும். இதனைப் பெரியோர் 'திருவாசகத்தேன்' எனப் பாராட்டுகின்றனர். போப்பையர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

மாணிக்க வாசகர் பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராயிருந் தார். இவர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர். பெற்றோர்: சம்புபாதர் - சிவஞானவதியார். காலம்: கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

2. தமிழ்மொழி வாழ்த்து

இச்செய்யுள் அணி இலக்கண நூலாகிய தண்டியலங்காரம் என்னும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் எவரெனத்தெரியவில்லை.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

3. தமிழ்நாட்டு வாழ்த்து

இச்செய்யுளை எழுதியவர் நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களாவர். பிறப்பிடம்: மோகனூர். தந்தை: வேங்கட

ராம பிள்ளை. பிறந்த காலம்: 10-10-1888. இவர் கவிகள் பாடுவது போலவே, ஓவியம் எழுதுவதிலும் வல்லவர்.

கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க.

அருஞ்சொற்பொருள்

1. யாக்கை-உடம்பு. புரைபுரை-துளைகள் தோறும். கனிய-இனிக்கும்படி. பொன்-அழகிய. எளியையாய்-எளிமையாகிய இயல்புடையவனாக வந்து. மயக்காம்-அறியாமையுமாகிய. தொடக்கு-பந்தம். சிக்கென-உறுதியாக. புரைபுரை—அடுக்குத்தொடர்.

2. ஓங்கல்-(பொதிய)மலை. ஏங்கு ஒலி-மிகுந்து ஒலிக்கின்ற. ஞாலம்-உலகம். இருள்-இருட்டு, அறியாமை. வெங்கதிர்-சூரியன்.

3. கொடை வள்ளல்-இல்லை என்னுமல் கொடுக்கும் தன்மை உடையோர். இல்லாமை-வறுமை. இரவாமை-பிச்சை எடுக்காதிருத்தல்.

வினாக்கள்

1. குறிப்பு வரைக: திருவாசகம், மாணிக்கவாசகர், இராமலிங்கம் பிள்ளை.

2. 'துன்பமே பிறப்பே இறப்போடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற்சோதி'—விளக்கம் வரைக.

3. 'பொன்நெடும் கோயிலாப் புகுந்து என் என்பெலாம் உருக்கி'—ஏன் இவ்வாறு கூறினர்?

4. சூரியனுக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை யாது?

5. தமிழ் நாட்டின் உயர்வு எத்தகையது?

பயிற்சி

1. வாழ்த்துப் பகுதியில் உள்ள செய்யுள் ஒவ்வொன்றையும் உரைநடைப் படுத்துக.

2. பொருள் வரைக :—புன்புலால் யாக்கை, மாசிலாமணி.

3. வாக்கியங்களில் பயன்படுத்துக :—

கனிய, துன்பம், புலால், ஞாலம், வெங்கதிர், கொல்லாமை.

4. பிரித்து எழுதுக :—

பொன்னெடுங் கோயில், என்பெலாம், மாசிலாமணி, எங்கெழுந்தருளுவதினியே, வெங்கதிர், தனியாழி.

5. அடுக்குத் தொடர், பண்புத் தொகை, வினைத் தொகை, வேற்றுமைத் தொகை, தொழிற் பெயர்—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வொரு சான்று தருக.

II. அறவுரை

1. திருக்குறள்

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. கடைச் சங்க நூல்கள் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்று செய்யுட்களின் அடியளவைக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன. நான்கு வரிகளுக்கு மேற்பட்டுள்ள பாக்களைக் கொண்டவை மேற்கணக்கு நூல்கள் எனப்படும். மேற்கணக்கு நூல்கள் பதினெட்டு ஆகும். அவை பத்துப் பாட்டு எனப் பத்து நூல்களும், எட்டுத்தொகை என எட்டு நூல்களுமாகும். நான்கு வரிகளும் அதற்குக் குறைந்தும் உள்ள பாக்களைக் கொண்ட நூல்கள் கீழ்க்கணக்கு நூல்களாகும். கீழ்க்கணக்கில் பதினெட்டு நூல்கள் இருக்கின்றன. அவற்றினை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் செய்யுளால் அறியலாம்.

திருக்குறள் உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவான சிறந்த அறவுரைகளைக் கூறுகிறது. இது உலகின் சிறந்த மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால் இந்நூல் முப்பால் எனும் பெயரைப் பெற்றது. அறத்துப் பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப் பாலில் 25 அதிகாரங்களும் இருக்கின்றன. ஆக மொத்தம் 1330

குறட்பாக்கள், 133 அதிகாரங்களாகத் திருக்குறளில் அமைந்திருக் கின்றன.

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் காலம் கி. பி. முதல் நூற்ருண்டு. இவர் அரசரின் ஆணைகளை வெளியிடும் உள் படு கருமத் தலைவர் பதவியாகிய வள்ளுவர் பதவியில் பணியாற்றி யவர். அதனுல்தான் இவருடைய இயற்பெயர் மறைந்து பதவிப் பெயராகிய வள்ளுவர் என்பதே வழக்கத்தில் வந்துவிட்டது. இவ ரைப்பற்றி வழங்கும் கதைகள் அனைத்தும் ஆதாரமற்றவை.

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை இல்லான் அடிசேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல. (1)

வான் சிறப்பு

விசும்பில் துளிவீழின் அல்லான்மற் ருங்கே
பசும்புல் தலைகாண் பரிது. (2)

நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (3)

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு. (4)

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (5)

இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றில் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன். (6)

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். (7)

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. (8)

மக்களைப் பெறுதல்

தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (9)

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. (10)

விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (11)

இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். (12)
அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். (13)

செய்ந்நன்றி யறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (14)

நடுவுநிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். (15)

அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. (16)
எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (17)

பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (18)

அழுக்காறாமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. (19)

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். (20)
இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். (21)

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னல்வருங் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (22)

ஈகை

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. (23)
வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. (24)
அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (25)

புகழ்

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். (26)
வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். (27)

புலான் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். (28)

தவம்

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (29)

கூடாவொழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். (30)

வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல். (31)

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். (32)

இன்னா செய்யாமை

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய் [யார்
நோயின்மை வேண்டு பவர். (33)

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. (34)

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். (35)

ஊழ்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். (36)

இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறு மன்னன் நிலம். (37)

கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (38)
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (39)

கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். (40)
விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (41)

கேள்வி

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (42)

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (43)
எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. (44)

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை. (45)
இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும். (46)

தெரிந்து செயல்வகை

நன்ருற்றல் உள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்ருக் கடை. (47)
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (48)

வலியறிதல்

நுனிக்கொம்பர் ஏறினுர் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். (49)
ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. (50)

காலமறிதல்

அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின். (51)
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (52)

இடனறிதல்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின். (53)

தெளிந்து வினையாடல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (54)

சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. (55)

பொச்சாவாமை

அச்சம் உடையார்க் கரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (56)

செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (57)

வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. (58)

கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை, (59)

ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ திலார்
மரமக்கள் ஆதலே வேறு. (60)

ஆள்வினையுடைமை

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. (61)
தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (62)

அமைச்சு

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். (63)

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (64)

வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற. (65)

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். (66)

படைச்செருக்கு

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து. (67)

நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (68)

நட்பாராய்தல்

ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (69)

பழைமை

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நாட்டார் செயின். (70)

சூது

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். (71)

மானம்

புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. (72)

சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (73)
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (74)

நாணுடைமை

அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை. (75)

குடிசெயல் வகை

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (76)

நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (77)

இரவச்சம்

இரவுள்ள உள்ளம் உருகுங் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். (78)

கயமை

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். (79)
அறைபறை அன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். (80)

அருஞ்சொற்பொருள்

1. வேண்டுதல்—விரும்புதல், (தொழிற் பெயர்); வேண்டாமை—வெறுத்தல்; யாண்டும்—எக்காலத்தும்; இடும்பை - துன்பம்; இலான்—வினையாலணையும் பெயர்; சேர்ந்தார்க்கு+யாண்டும்—சேர்ந்தார்க்கியாண்டும் - குற்றியலிகரம்.

2. விசும்பு - ஆகாயம்; துளிவீழின் - மழைத்துளி விழல்; பசும்புல் - பசுமை+புல் - பண்புத்தொகை.

3. இருமை - இம்மை, மறுமை ஆகிய இரண்டும்; பிறங்கிற்று-உயர்ந்தது.

4. ஈனும் -தரும்; அறத்தினூஉங்கு - செய்யுளிசை அளபெடை; ஆக்கம் - சிறப்பு.

5. ஒல்லும் வகை - தத்தமக்கியலுந்திறன்; ஓவாதே-ஒழியாமல்.

6. ஆற்றின் - செலுத்துவானாயின்; புறத்தாற்றில் - வேறு வழிகளில்; போஒய் - செய்யுளிசை அளபெடை.

7. திண்மை - கலங்கா நிலைமை; பெறின் - பெற்ருல்.

8. நிறை - கற்பு.

9. தம்மிற்றம் - தம்மில் + தம்; மானிலம் - உரிச்சொற்ருெடர்.

10. மறத்திற்கும் - தீமைகளைப் போக்குதற்கும்; சார்பு - துணை.

11. ஓம்பி - காத்து; வேளாண்மை - உதவி; விருந்து - புதுமை (பண்பாகு பெயர்).

12. ஈரம் - இரக்கம்; அளைஇ - கலந்து, சொல்லிசை அளபெடை. படிறு - குற்றம், வஞ்சனை.

13. அல்லவை - பாவம்; நல்லவை - நன்மை செய்தல்; நாடி- ஆராய்ந்து.

14. வையகம் - மண்ணுலகம்; ஆற்றல் அரிது - ஒப்பாகாது. வையகமும் வானகமும் - எண்ணும்மைகள்

15. கெடுவல்யான் - யான் கெடுவேன்; ஓரீஇ - நீங்கி, சொல்லிசை அளபெடை.

16. அதனினுங்கு - அதைவிட; காக்க - வியங்கோள் வினைமுற்று.

17. பணிதல் - அடங்குதல்; தகைத்து -சிறப்பினை உடையது

18. ஒறுத்தார் - தண்டித்தார்; பொதிந்து - போற்றி; ஒறுத்தார், பொறுத்தார் - வினையாலணையும் பெயர்கள்.

19. அழுக்காற்றின் - பொருமையினுல்; ஆற்றின் - செய்தால்; ஏதம் - துன்பம்; படுபாக்கு - உண்டாதல்.

20. அஃகாமை - குறையாமலிருப்பதற்கு; வெஃகாமை - விரும்பாமை.

21. இலமென்று - இல்லாதவரென்று; புன்மையில் - குற்றமற்ற; காட்சியவர் - அறிவினையுடையார்.

22. ஒப்புரவு - உலகநடை; கோள்தக்கது - கொள்ளும் தகுதியுடையது; கேடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

23. எவ்வம் - இழிவான சொல்; ஈதல் - தொழிற் பெயர்.

24. வறியார்க்கு - ஏழைகளுக்கு; குறிஎதிர்ப்பு - அளவுகுறித்து வாங்கும் கடன் ; நீரதுடைத்து - தன்மை உடையது.

25. அழி - மிக்க; வைப்புழி - வைக்குமிடம்; அற்ருர்-ஏழைகள்.

26. பொன்ருது - இறவாது; ஒன்ரு - இணையின்றி.

27. வசை - பழி; இசை - புகழ்; பெருஅ - செய்யுளிசை அளபெடை.

28. ஊன் - தசை; அருள் - கருணை.

29. ஈண்டு - இவ்வுலகத்தில்.

30. மழித்தல் - மயிர் நீக்கல்; நீட்டல்—சடைவளர்த்தல்.

31. வாய்மை - உண்மை.

32. சினம் - கோபம்.

33. நோய் - துன்பம்.

34. நெருநல் - நேற்று.

35. வெகுளி - கோபம்; காமம் - ஆசை.

36. நன்று + ஆம் + கால் - நன்மைகள் உண்டாகும்போது.
அன்று + ஆம் + கால் - தீயவை உண்டாகும்போது.

37. மீக்கூறும் - மேலாகப் பேசுவர்; நிலம் - உலகத்தார் (இடவாகு பெயர்).

38. எண் - கணக்கு, இலக்கணம்; எழுத்து - இலக்கியம்.

39. உவப்ப - மனம் மகிழுமாறு; புலவர் - அறிஞர்.

40. தலைப்பெய்து - கூடி, கலந்து; சோர்வுபடும் - கெடும்.

41. அனையர் - போன்றவர்; இலங்கு - விளங்குகின்ற; இச் செய்யுள் உவமையணியாகும்.

42. நுணங்கிய - நுட்பமான; வணங்கிய - பணிவான.

43. மெய்ப்பொருள் - உண்மைப்பொருள்: யார்யார் - அடுக்குத் தொடர்; இக்குறள் சொல் பொருள் பின்வரு நிலை அணியாகும்.

44. எவ்வது - எவ்வாறு.

45. தமரா - தமக்குச் சிறந்தாராக.

46. ஏமரா - காவலற்ற; இடிப்பார் - எடுத்துரைப்பார்.

47. ஆற்றல் - செய்தல்; பண்பு - குணம்.

48. ஊக்கார்—மேற்கொள்ளார்.

49. நுனிக் கொம்பர்—மரக்கிளையின் நுனியில்; கொம்பர்-கடைப்போலி.

50. ஆகாறு - பொருள்வரும் வழி; இட்டி-சிறிது; போகாறு-செலவு செய்யும் வழி.

51. அருவினை - செய்வதற்கரிய வேலை.

52. கூம்பும் - வினையைச் செய்யாமல் அடங்கியிருக்கும் போது; பருவம் - காலம்; கொக்கொக்க—கொக்கு + ஒக்க.

53. அஞ்சாமை - திண்மை; எஞ்சாமை - ஒழியாது, குறைவுபடாமை.

54. தேற்றம் - தெளிவு; நன்குடையான் கட்டே - நிலையாக உடையவனிடையே.

55. பற்றற்ற - செல்வம் இழந்த.

56. அரண் - பாதுகாவல்; பொச்சாப்பு - மறதி; இக்குறள் எடுத்துக்காட்டு உவமை அணியாகும்.

57. கொடியாரை - வினையாலணையும் பெயர்; பைங்கூழ் - பசுமை + கூழ் - பண்புத்தொகை. இக்குறள் உவமை அணியாகும்.

58. அருஞ்செவ்வி - காண வேண்டுவோர்க்குக் காணற்கரிய காலம்; இன்னாமுகம் - கடுகடுப்பான முகம்; இக்குறள் உவமை அணியாகும்.

59. கண்ணோட்டம் - தாட்சணியம், நாகரிகம்; பொறை - சுமை.

60. உரம் - வலிமை; உள்ள வெறுக்கை - ஊக்கம்.

61. தாளாண்மை - முயற்சி; வேளாண்மை - உதவி.

62. மெய் - உடல்; கூலி - பயன்.

63. அறி + கொன்று - அறிந்து சொல்பவரது அறிவையும் அழித்து; உழையிருந்தான் - அமைச்சன். அறி - முதனிலைத்தொழிற் பெயர்.

64. ஈன்றாள் - தன்னைப் பெற்றவள்; செய்யற்க - வியங்கோள் வினைமுற்று.

65. திட்பம் - திண்மை.

66. நெஞ்சம் - மனம். அடுத்தது - ஆகுபெயர். இச் செய்யுள் உவமையணி ஆகும்.

67. விழுப்புண் - போரில் மார்பிலும் முகத்திலும் ஏற்படும் காயங்கள்; வழுக்கினுள் - வீணாகக் கழிந்த நாட்களுள்.

68. நவில்தொறும் - கற்குந்தோறும்; பயில்தொறும் - பழகும் தோறும்; இக்குறள் உவமை அணியாகும்.

69. கேண்மை - நட்பு; ஒரீஇ - ஒழித்து, சொல்லிசை அளபெடை.

70. நோதக்க - வெறுக்கத்தக்க; நட்டார் - நண்பர்; கிழமை - உரிமை.

71. சீரழிக்கும் - உள்ள புகழையும் கெடுக்கும்.

72. உய்யாது - செலுத்தாது.

73. நோன்மை - தவம்; சால்பு - பண்பு.

74. இன்னா - தீமை; பயத்தது - பயனையுடையது.

75. அணி - ஆபரணம்; பீடு - பெருமிதம்; பிணி - நோய்.

76. குடி செய்து - குடியை உயரச் செய்து.

77. நல் கூர்ந்தார் - வறுமையுற்றோர்.

78. இரவு - உடையார்முன் இல்லார் சென்று யாசித்து நிற்கும் கொடுமை; கரவு - இல்லையென்று மறைத்தல்.

79. அனையர் - ஒரு தன்மையர்; மேவன - விரும்புவன; இக்குறள் வஞ்சப் புகழ்ச்சி அணி.

80. அறைபறை - வினைத்தொகை; உய்த்து உரைக்கலான் - தாங்கிக் கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலால். இச் செய்யுள் ஏது அணியாகும்.

வினாக்கள்

1. சங்க நூல்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டிருக்கின்றன?
2. திருக்குறளின் சிறப்பு யாது?
3. திருவள்ளுவரைப் பற்றிய குறிப்பு வரைக.
4. திருக்குறளின் அமைப்பு யாது?
5. இறைவன் பெருமை எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?
6. மழையின் பெருமை யாது?
7. உலகிற் சிறந்த பெருமை எது?
8. அறம் உயிர்க்கு எவற்றை ஈனும்?
9. 'செல்லும் வாயெல்லாம் செயல்'—எதனை? எப்படி?
10. இல்வாழ்க்கையின் சிறப்பு யாது?
11. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'— இங்ஙனம் கூறிய தேன்?
12. சிறை காப்பு, நிறை காப்பு—விளக்கம் தருக.
13. 'மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது'—எது?
14. அன்பு மறத்திற்கும் துணை என்பதை விளக்கிக்காட்டுக.
15. 'விருந்தோம்பல்' எனும் தலைப்பில் கூறப்பட்டிருப்பதன் கருத்து யாது?
16. இன்சொல் என்பது யாது?
17. இனியவை கூறலினால் உண்டாகும் பயன் யாது?
18. செய்ந்நன்றியறிதலின் சிறப்பு எத்தகையது?
19. 'கெடுவல் யான் என்பதறிக'—ஏன்?
20. 'காக்க பொருளா அடக்கத்தை'—விளக்கம் கூறுக.

21. 'செல்வர்க்கே செல்வம் தகைத்து'—விளக்கி வரைக.

22. எவரைப் பொன்னைப்போற் பொதிந்து வையார்? எவரை வைப்பார்?

23. அழுக்காறுமை என்ற தலைப்பில் உள்ளகுறளின் கருத்தை விளக்குக.

24. அஃகாமை செல்வத்திற்கு யாது?

25. 'இலமென்று வெஃகுதல் செய்யார்'—எவர்?

26. 'விற்றுக் கோள் தக்கதுடைத்து'—இங்ஙனம் கூறப்பட்டதேன்?

27. ஈகையின் பெருமையினை விளக்குக.

28. எது ஈகை?

29. 'பெற்றான் பொருள் வைப்புழி'—எது? எப்படி?

30. உலகத்துப் பொன்றாது நிற்பது எது?

31. 'வசை என்ப வையத்தார்க் கெல்லாம்'—எப்போது?

32. புலால் உண்ணல் கூடாதென்பது எங்ஙனம் கூறப்படுகிறது?

33. தவத்தின் சிறப்பு யாது?

34. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா'—ஏன்?

35. வாய்மை எனப்படுவது யாது?

36. வெகுளாமையின் சிறப்பு எங்ஙனம் கூறப்படுகிறது?

37. நோயின்மை வேண்டுபவர் என்ன செய்யார்? ஏன்?

38. உலகத்தின் பெருமை யாது?

39. எவற்றின் நாமம் கெட நோய் கெடும்?

40. ஊழின் வலிமை எத்தகையது?

41. மன்னனின் சிறப்பு யாது?

42. உயிர்க்குக் கண் என்பது எவை?

43. புலவர் தொழில் யாது?

44. கல்லாமையின் இழிவு எங்ஙனம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

45. மக்கள் விலங்கொடு அனையர் எனப்பட்டதேன்?

46. கேள்வியின் சிறப்பு எத்தகையது?

47. அறிவுடைமையின் சிறப்பு எவ்வண்ணம் விளக்கப்பட்டுள்ளது?

48. பெரியாரைத் துணைக்கொள்வதன் சிறப்பு யாது?

49. 'நன்ருற்றல் உள்ளும் தவறுண்டு'—விளக்குக.

50. அறிவுடையார் எதனை ஊக்கார் ?

51. 'உயிர்க்கிறுதி யாகிவிடும்'—ஏன் ?

52. ஆகாறு, போகாறு—விளக்குக.

53. அருவினை என்பது எவருக்கில்லை ?

54. கொக்கைக் கொண்டு வள்ளுவர் கூறும் அறவுரை யாது ?

55. இடனறிதல் என்ற தலைப்பில் வள்ளுவர் கூறியிருப்பது யாது ?

56. நன்குடையார் கண் தெளிவு—எவை ?

57. 'சுற்றத்தார் கண்ணே உள'—எது ?

58. அச்சம் உடையார், பொச்சாப்பு உடையார்—விளக்கி வரைக.

59. செங்கோன்மை எது ?

60. 'பேய் கண்டு அன்னது உடைத்து'—எது ? ஏன் ?

61. எவர் நிலக்குப் பொறை ?

62. எவர் மறமக்கள் ? ஏன் ?

63. ஆள்வினையுடைமை எவ்வாறு விளக்கப்படுகிறது ?

64. 'தெய்வத்தான் ஆகாதெனினும்'—விளக்கி வரைக.

65. உழையிருந்தான் கடன் யாது ?

66. சான்ருேர் மதிக்கும் வினைபற்றி வள்ளுவர் என்ன கூறுகிருர் ?

67. வினைத்திட்பம் என்பது யாது ?

68. பளிங்கு எதற்கு உவமை காட்டப்பட்டது ?

69. 'படைச் செருக்கு' எனும் தலைப்பில் வந்த குறளை விளக்குக.

70. பண்புடையாளர் தொடர்பு எத்தகையது ?

71. ஒருவற்கு ஊதியம் என்பது யாது ?

72. 'நோதக்க நாட்டார் செயின்'—என்ன செய்தல் வேண்டும்?

73. சூதின் தீமை எத்தகையது ?

74. புகழ் இன்று புத்தேள் நாடு உய்யாது—எது ?

75. நோன்மை எது ? சால்பு எது ?

76. 'என்ன பயத்ததோ சால்பு'—விளக்கி வரைக.

77. எது எவருக்கு அணியும் பிணியுமாகும் ?

78. 'சுற்றமாச் சுற்றும் உலகு'—எவரை ? ஏன் ?

79. 'சொற்பொருள் சோர்வு படும்'—ஏன் ?

80. இரவச்சம் எங்ஙனம் விளக்கப்படுகிறது ?

81. கயவர் தேவரோடு ஒப்பிடப்பட்டதேன் ?

82. அறைபறைக்குக் கயவர் ஒப்பிடப்பட்டதன் காரணம் என்ன ?

பயிற்சி

1. திருக்குறளின் சிறப்புக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. ஈகையின் சிறப்பைத் தொகுத்து வரைக.

3. பொருள் கூறுக :—இடும்பை, வாழ்க்கைத் துணைநலம், அழுக்காறு, பொறை, வெஃகாமை, ஒப்புரவு, வெகுளாமை, இன்னு, ஊழ், இறைமாட்சி, இடனறிதல், தழால், பொச்சாவாமை, வெரு வந்த, ஆள்வினையுடைமை, சான்ருண்மை, நல்குரவு, இரவச்சம்.

4. பிரித்து வரைக:—சேர்ந்தார்க்கியாண்டும், பிறங்கிற்றுலகு, மற்ருங்கே, அறத்தினூஉங்கு, அறத்தாற்றின், யாவுள, சார்பென்ப, அதனினூங்கில்லை, அஃதொருவன், வேண்டியாங்கெய்தலால்.

5. வாக்கியங்களில் பயன்படுத்துக :—புகழ், வசை, அருள், வாய்மை, காக்க, கடுஞ்சொல், உயிர்க்கு, உவப்ப, கெடுப்பார், அஞ்சாமை.

6. உவமையணி, சொற்பொருள் பின்வரு நிலையணி, வஞ்சப் புகழ்ச்சி யணி-இவற்றை விளக்கி, இப்பாடப் பகுதியிலிருந்து ஒவ்வொன்றுக்கும் சான்று தருக.

2. நாலடியார்

நான்கு அடிகளை உடைய வெண்பாவினுல் ஆனமையால் இதற்கு நாலடியார் என்று பெயர் வந்தது. 'ஆர்' சிறப்புப் பெயர் விகுதி. இதுவும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட நானூறு வெண்பாக்களையுடையது. இந்நூலை இயற்றியவர்கள் சமண முனிவர்கள். இப்பாடல்களைப் பால், இயல், அதிகாரங்களாகப் பகுத்துத் தொகுத்தவர் பதுமஞர் என்பவர். சமண முனிவர்களது காலம் கடைச்சங்க காலம். இந்நூல் திருக்குறளுக்கு அடுத்தபடி வைத்தெண்ணப்படும் சிறப்புடையது; ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டிருக்கிறது. " நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி"

என்பதும், " பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் " என்பதும் இதன் சிறப்பை உணர்த்துவன வாகும்.

பொறையுடைமை

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க; பொறானாயின்
தூற்றாதே தூர விடல். 1

கல்வி

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி. 2

குடிப்பிறப்பு

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார். 3

மேன்மக்கள்

பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்(து)
ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு. 4

அறன்வலியுறுத்தல்

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 5

நட்பாராய்தல்

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 6

அருஞ்சொற்பொருள்

1. கலந்து-மனங்கலந்து. நட்டக்கால்-நண்பர்களானவிடத்து. தேற்ரு ஒழுக்கம்-நம்பத்தகாத தீய ஒழுக்கம். ஆற்றும் துணையும்-பொறுக்குமளவும். பொருன் ஆயின்-பொறுக்க மாட்டாதவனுயின். தூற்ருதே-(அவன் தீய ஒழுக்கத்தைப்) பலரறியச் சொல்லாமல். தூரவிடல்-(அவனது) நட்பைவிட்டு விலகுவானுக. விடல்-வியங் கோள் விணைமுற்று.

2. தவல்அரும்-கெடுதல் இல்லாத. இகல் இலர்-பகைமை இல் லாதவரும். எஃகு உடையார்-கூர்மையான அறிவுள்ளவர்களும். குழீஇ-கூடி இருந்து, சொல்லிசை அளபெடை. நகலின்-மகிழ்தலைக் காட்டிலும், உம்பர்உறைவார்பதி - தேவர்கள் வாழும் அமராவதி என்னும் நகரம். அகல்வானம்-விணைத்தொகை.

3. ஒருபுடை-ஒருபக்கம். அம் கண் மா ஞாலம்-அழகிய இட மகன்ற பெரிய உலகம். விளக்குறூஉம்-தன் ஒளியால் விளங்கச் செய்கின்ற, இன்னிசை அளபெடை. செல்லாமை-வறுமை. ஒல்கார்-தளர்ச்சி அடையார். இச்செய்யுளில் உவமை அணி காண்க.

4. மறை-இரகசியம். இல்-வீடு; வீட்டிலுள்ள மணைவியரைக் குறித்தது, இடவாகு பெயர். மூங்கை-ஊமை. யாதும்-எவ் வகையான.

5. உறக்குந்துணையது-மிகச் சிறிய அளவுள்ளதாகிய. ஈண்டி-வளர்ந்து. இறப்ப-மிகவும். பயந்தாஅங்கு-தருவதுபோல. வான் சிறிதா-மிகப் பெரிய வானமும் சிறிதென்னும்படி. போர்த்துவிடும்-பரப்பிவிடும். இச்செய்யுளில் உவமையணி இருத்தல் காண்க.

6. நண்பு ஒரீஇ-நட்பை நீக்கி, சொல்லிசை அளபெடை. கேண்மை-நட்பு. கெழீஇக் கொளல்-தழுவிக்கொள்ளுதல். அறிந் தறிந்தும்-பலகால் பழகியும். மெய்யதா-உடம்பில் உள்ளதாக. இச் செய்யுளில் ஏதுவணியும் உவமையணியும் இருத்தல் காண்க.

விஞக்கள்

1. நாலடியார் குறிப்பு வரைக.
2. பொறையுடைமை எங்ஙனம் விளக்கப்படுகிறது ?
3. கல்வியின் சிறப்பு எத்தகையது ?
4. திங்களை உவமை காட்டி விளக்கப்படுவது யாது ?
5. மேன்மக்கள் யாவர் ?

6. ஆலமரத்தைக் காட்டி அறம் வற்புறுத்தப்படுவது எங்ஙனம் ?

7. சிறந்த நட்பு, கூடா நட்பு-இவற்றிற்கு எவை உவமைகள்? ஏன் ?

பயிற்சி

1. நாலடியார், திருக்குறளுக்கு அடுத்து வைத்தெண்ணப்படுவது ஏன் ?

2. பொருள் தருக:—நட்டக்கால், தூரவிடல், உம்பர், செவ்வனேர், உறக்கும், அனையவர், நட்பாராய்தல்.

3. பிரித்து வரைக:—கலந்திடுவர், பொருளுயின், இகலிலர், திறனறிந்து, அறிந்தறிந்தும், நண்பொரீஇ.

4. நட்டக்கால், தூரவிடல், மாஞாலம், விளக்குறாஉம், நண்பொரீஇ, அகல்வானம்-இலக்கணக் குறிப்பு வரைக.

5. உவமை அணி, ஏதுவணி-இவற்றை விளக்கி, இப்பாடப் பகுதியிலிருந்து சான்று தருக.

3. புறநானூறு

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறப்பொருளைக் கூறும் நானூறு அகவற்பாக்களைக் கொண்ட நூலாதலின் இது புறநானூறு எனப் பெயர் பெற்றது. இது புறம், புறப்பாட்டு எனவும் வழங்கும். இது எட்டுத்தொகை நூல் வகையைச் சேர்ந்தது. எட்டுத்தொகை நூல்களாவன; நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு, புற நானூறு என்பன. புறநானூறு செய்யுட்களை இயற்றியவர் நூற்றைம்பத்தொன்பது பேராவர். இவர் பல காலத்தவர். பல மரபினராவார். இந்நூலைத் தொகுத்தவர் எவரெனத் தெரியவில்லை.

புறநானூற்றுல் மூவேந்தர், குறுநில மன்னர், வள்ளல்கள், புலவர்கள் ஆகியவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களையும் பண்டைத் தமிழரின் ஈகை, வீரம், கற்பு, அரசியல், நீதி, தமிழ்ப்பற்று ஆகியவற்றையும் அறியலாம்.

இச்செய்யுளைப் பாடியவர் நரிவெரூஉத்தலையார் என்னும் கடைச் சங்கப் புலவராவார். இவர், சேரமான் கருவூரேறிய ஒண்வாட்கோப் பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தவர்.

நல்லது செய்தல் ஆற்றீராயின்...

பல்சான் றீரே ! பல்சான் றீரே !
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனில் மூப்பிற் பல்சான் றீரே!
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ !
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் ; அதுதான்
எல்லாரும் உவப்ப(து) ; அன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே. 1

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்

இச்செய்யுளைப் பாடியவர் கடலுண்மாய்ந்த இளம்பெரு வழுதி யாவார். இவர் கடைச் சங்க காலத்துப் பாண்டிய மன்னன்.

உண்டால் அம்மஇவ் வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் !
துஞ்சலும் இலர்;பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர் ;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 2

அருஞ்சொற்பொருள்

1. பல்சான்றீரே-பலவாக அமைந்த குணங்களையுடைய பெரியோர்களே. திரை கவுள் - சுருங்கிய கன்னங்களுடைய. கணிச்சிக் கூர்ம்படை - மழுவென்னும் கூர்மையான ஆயுதம். கடும் திறல் - மிகுந்த வலிமை. ஓம்புமின் - பாதுகாத்துக் கொள்ளுங்கள். நல் ஆற்றுப்படூஉம் - நல்வழிப்படுகின்ற. நெறியும் - வழியும். பல் சான்றீரே - என விளிப்பது வஞ்சப்புகழ்ச்சி. மாதோ - அசை.

2. முனிவு இலர்—யாரிடத்தும் வெறுப்பு இல்லாதவராய்; துஞ்சலும் இலர் - சோம்பி இருத்தல் அற்றவராய்; அயர்வு-மனச் சோர்வு; முயலா - முயற்சி செய்யாத; நோன்தாள்-வலிய முயற்சி. முயலுநர் - முயற்சி செய்பவர்கள். ஆல், அம்ம - அசைகள். இவ்வுலகம் உண்டு எனக் கூட்டுக.

வினாக்கள்

1. புறநானூறு மூலம் நாம் அறியக் கூடியவை யாவை?

2. புறநானூறு - குறிப்பு வரைக.

3. எல்லாரும் உவப்பது எது ?

4. 'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன் பிணிக்குங் காலை' - விளக்குக.

5. அன்னமாட்சியனையராகி - எத்தகைய மாட்சி ?

6. நரிவெரூஉத்தலையார், இளம்பெருவழுதி—குறிப்பு வரைக.

பயிற்சி

1. புறநானூற்றுப் பாக்கள் இரண்டையும் உரைநடைப் படுத்துக.

2. பொருள் வரைக :—கயல்முள், உவப்பது, உண்டாலம்ம இவ்வுலகம், இயைவதாயினும், தமியர், உண்மையானே.

3. பிரித்து எழுதுக :— கடுந்திறல், நல்லாற்றுப்படூஉம், இயைவதாயினும், இவ்வுலகம், முனிவர், உலகுடன், அஞ்சுவதஞ்சி.

4. சேர்த்து எழுதுக :— முள் + அன்ன, செய்தல் + ஆற்றீர், எல்லாரும் + உவப்பது, தமியர் + உண்டலும் + இலர்.

5. கடுந்திறல், செய்தல், நல்லது, ஓம்புமின், கொள்ளலர், முயலா—இலக்கணக் குறிப்பு வரைக.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. மணிமேகலை

உலக அறவி புக்க காதை

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்த வணிகர் குலத் தோன்றலாகிய கோவலனுக்கும், மாதவி என்னும் நாடகக்கணிகைக்கும் பிறந்த மணிமேகலை என்பவளின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இது மணிமேகலை எனப்பெயர்பெற்றது. இந்நூல் மணிமேகலைத் துறவு என்றும் வழங்கப்பெறும்.

இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. ஏனைய காப்பியங்கள் சிலப்பதிகாரம், சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. மணிமேகலையே காலத்தால் முந்திய நூலாகும்.

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் **சீத்தலைச் சாத்தனூர்**. இவர் சீத்தலை என்ற ஊரில் வணிக மரபில் பிறந்தவர். இவரது

சமயம் பௌத்த மாகும். இவர் மதுரையில் கூல (தானியம்) வாணிகம் செய்து வந்தமையால் மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என அழைக்கப்பட்டார். இவரது காலம் கி. பி. 2-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பர்.

அமுதசுரபியின் பெருமை

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலே
அறத்தின் ஈட்டிய வொண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்தொலே வில்லாத் தகைமை நோக்கி

காயசண்டிகை பெரும்பசி தணிதல்

யானேத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி,
"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலே யெல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறு புக்காங்(கு)
இட்ட தாற்ருக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன் என்றன் பழவினேப் பயத்தால் ;
அன்னே ! கேணீ ஆருயிர் மருத்துவி !
துன்னிய என்னேய் துடைப்பாய் " என்றலும்,
எடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்,
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும் ;

காயசண்டிகை வரலாறு

" மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநகர் உள்ளேன் ;
விஞ்சையன் றன்னெடென் வெவ்வினே யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன் ;
கடுவரல் அருவிக் கடும்புனல் கொழித்த
இடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தேன் ;

முனிவரின் செயல்

புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மரவுரி யுடையன் விருச்சிகன் என்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோர்
இருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணுறு பரப்பிற்
பூக்கமழ் பொய்கை ஆடச் சென்றேன்

காயசண்டிகை பெற்ற சாபம்

தீவினை உருத்தலின் செருக்கொடு சென்றேன் ;
காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன் ;
உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டனன் என்னைக் கருங்கனிச் சிதைவுடன் ;
'சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது
ஈரா றாண்டில் ஒருகனி தருவது
அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டில் ஒருநாள் அல்ல(து)
உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்
அந்தரஞ் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயாற் றனித்துய ருழந்து
முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்(கு)
உண்ணா நாளுன் றுறுபசி களை'கென
அந்நாள் ஆங்கவன் இட்ட சாபம்
இந்நாள் போலும் இளங்கொடி கெடுத்தனை ;

காஞ்சனன் வருத்தமும், காயசண்டிகை புகார் புகுதலும்

வாடுபசி உழந்து மாமுனி போயபின்
பாடிமிழ் அருவிப் பயமலை ஒழிந்தென்
அலவலைச் செய்திக் கஞ்சின னகன்ற
இலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி
'ஆரணங் காகிய அருந்தவன் றன்னாற்
காரண மின்றியுங் கடுநோ யுழந்தனை ;

வானூ டெழு' கென மந்திரம் மறந்தேன்;
ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்து மென்றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
ஆங்கவன் கொணரவும் ஆற்றேன் ஆக
நீங்கல் ஆற்ருன் நெடுந்துயர் எய்தி
ஆங்கவன் ஆங்கெனக் கருளொடும் உரைப்போன்
'சம்புத் தீவினுள் தமிழக மருங்கின்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்ரு மாக்கட் காற்றுந்துணை யாகி
நோற்ருே ருறைவதோர் நோனக ருண்டாற்
பலநா ளாயினு நிலனொடு போகி
அப்பதிப் புகு'கென் றவனருள் செய்ய,
இப்பதிப் புகுந்தீங் கியானுறை கின்றேன் ;
இந்திர கோடணை விழவணி வருநாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
என்னுறு பெரும்பசி கண்டனன் இரங்கிப்
பின்வரும் யாண்டவ னெண்ணினன் கழியும்
தணிவில் வெம்பசி தவிர்த்தனை ; வணங்கினேன் ;
மணிமே கலை!என் வான்பதிப் படர்கேன்;
துக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி யொன்றுண் டதனிடை
ஊரூர் ஆங்கண் உறுபசி உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்ருேர்
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால் ;
வடுவாழ் கூந்தல் ! அதன்பாற் போ ''கென்(று)
ஆங்கவள் போகிய பின்னர் ஆயிழை
ஓங்கிய வீதியின் ஒருபுடை ஒதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்தவ்
வுலக வறவியி னொருதனி யேறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்து
முதியோள் கோட்டம் மும்மையின் வணங்கிக்
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய

தந்துணைப் பாவையைத் தான்தொழு தேத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதல் மாக்கட்(கு)
அமுத சுரபியோ டாயிழை தோன்றி,
" ஆபுத் திரன்கை அமுத சுரபியிஃ(து)
யாவரும் வருக ஏற்போர் தாம்"என,
ஊஞெலி அரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூர் அம்பல மருங்கென்.

அருஞ்சொற்பொருள்

1. பத்தினிப் பெண்டிர் - ஆதிரை. பாத்தூண் - பகுத்துக் கொடுத்த உணவு.

2. பெருஞ்சோற்று அமலை - பெரிய சோற்றுத் திரளை.

3. அறத்தின் ஈட்டிய - நல்வழியே சம்பாதித்த; அறவோன் - அறவழி நடப்பவன்.

4. வழிப்படூஉம் - இன்னிசை அளபெடை.

5. வாங்குகை- ஏற்கும் கைகள், வினைத்தொகை. மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்.

6. தான் தொலைவு இல்லா - தான் சிறிதும் குறைவுபடாத. தகைமை - தன்மை.

8. காரிகை - பெண்.

9. நெடியோன் - திருமால். நிலமிசை - உலகின்மீது.

10. அடல் - வலிமை. முந்நீர் - கடல். ஞான்று - பொழுது.

12. அணங்கு உடை - வருத்தந்தரும். அளக்கர் - கடல்.

13. கட்டழல் - மிக்க வெம்மை. கடும்பசி - பண்புத் தொகை.

15. மருத்துவி - மருந்தாகிய உணவினை யுடையவளே !

16. துன்னிய - நெருங்கிய.

19. காய்பெரும் பசி - வினைத்தொகை. பெரும்பசி - பண்புத் தொகை.

21. மாசு இல் - குற்றம் இல்லாத. வால் ஒளி - வெண்மை யான ஒளி. சேடி - விஞ்சையர் உலகம்.

22. காசு - குற்றம். கடிநகர் - காவலையுடைய நகர்.

23. உருப்ப - வருத்த.

24. காணிய - செய்யிய எனும் வாய்பாட்டு வினை எச்சம்.

25. கடுவரல் அருவி - விரைந்த செலவினையுடைய அருவியானது.

26. கான்யாறு - காட்டாறு.

27. திரிபுரி வார்சடை-திரித்து முறுக்கிய நீண்ட சடை.

29. பெண்ணை-பனை. பெருங்குலை-பண்புத்தொகை.

31. சேண் நாறு-நெடுந்தூரம் மணம் வீசுகின்ற.

34. கருங்கனி-பண்புத்தொகை.

35. வேட்கை-விருப்பம். உண்டல் - தொழிற்பெயர். வரூஉம்-இன்னிசை அளபெடை

37. திப்பியமானது-தெய்வலோகத்திலிருந்து உண்டாயது.

39. ஆறு ஈராண்டு-பன்னிரண்டு வருடங்கள்.

40. யாக்கை-உடம்பு.

42. உண்ணு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

43. அந்தரம்-ஆகாயம்.

44. தந்தித் தீ - யானைத்தீ என்னுங் கொடிய பசிநோய்.

46. உறுபசி-மிக்கபசி, வினைத்தொகை.

48. இளங்கொடி - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

49. வாடுபசி-துன்பம் தரும் பசி, வினைத்தொகை. மாமுனி-உரிச்சொல்தொடர்.

50. பாடு இமிழ் அருவி-ஒலிமுழங்குகின்ற அருவி.

51. அலவலைச் செய்திக்கு-மனத்திற்றோன்றியதை ஆராயாது செய்த (என்) செயலுக்கு.

52. விழுமம்-துன்பம்.

53. ஆரணங்கு-அரிய தெய்வத்தன்மை.

55. வானூடு எழுக - ஆகாயத்தின்கண் எழுக.

56. உருப்பொடு-வெப்பத்தோடு.

59. ஆற்றேனாக-பசி தணியேனாக.

63. கம்பம்-நடுக்கம். கழிபெரும் செல்வர் - மிகப்பெரிய செல்வத்தையுடையவர்.

64. ஆற்ருமாக்கள்-வறிஞர்.

65. நோற்ருர்-முற்பிறப்பில் தவஞ் செய்தோர். நோன்நகர் - வலிமையையுடைய நகர்.

66. நிலனெடு போகி - பூமியில் நடந்து சென்று.

69. கோடணை - பெருமுழக்கோடு கூடிய.

72. கழியும் - நீங்குவான்.

73. தணிவில் வெம்பசி - தணியாத கொடிய பசி. வெம்பசி (வெம்மை + பசி) பண்புத் தொகை.

74. வான் பதி படர்கேன் – சிறந்த ஊராகிய காஞ்சனபுரத் திற்குச் செல்வேன்.

75. துகள் அறு - குற்றமற்ற.

77. பகுவாய் வாயில் – பிளந்த வாயையுடைய வாயிலைக் கொண்ட.

79. ஊரூர் ஆங்கண்-பற்பல ஊர்களிலும். உறுபசி உழந்தோர்- மிக்க பசியால் வருந்தியவர்கள். உறுபசி - வினைத்தொகை.

80. அரும்பிணி - பண்புத்தொகை.

82. வடு - வகிர். 'வடுவாழ் கூந்தல்' என்றது மணிமேக லையை. வாழ்கூந்தல் - வினைத்தொகை.

85. வந்தனை செய்து – வணங்கி.

88. முதியோர் கோட்டம் - சம்பாபதி கோயில்.

89. கந்து - தூணில். காரணம் காட்டிய - பழவினையாகிய காரணத்தை யாவருக்கும் அறிவிக்கும் பொருட்டு அமைத்த.

90. பாவை - கந்திற்பாவை.

91. வேய்கரி கானம் - மூங்கில் கரிந்த காடு.

92. மாமழை - உரிச்சொல் தொடர்.

93. பைதல் - துன்பம்.

96. வருக - வியங்கோள் வினைமுற்று.

98. யாணர் - புது வருவாய்.

வினக்கள்

1. மணிமேகலை : பெயர்க் காரணம் தருக.

2. காயசண்டிகை மணிமேகலையிடம் வேண்டியது யாது ?

3. காயசண்டிகை சாபம் பெற்ற வரலாற்றை 10 வரிகட்குள் எழுதுக.

4. காஞ்சனன் காயசண்டிகையிடம் கூறியதென்ன ?

5. காயசண்டிகை மணிமேகலையிடம் என்ன கூறிச் சென்ருள்?

6. மணிமேகலை உலக அறவி புகுந்து என்ன செய்தாள் ?

7. கீழ்வரும் உவமைகளை விளக்கி உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக :

(i) "வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக் கருவி,
மாமழை தோன்றிய தென்ன"

(ii) "அறத்தி னீட்டிய வொண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல"

8. இடம் சுட்டி விளக்குக :—

(i) 'காரணமின்றியும் கடுநோய் உழந்தனை'

(ii) 'ஆபுத்திரன் கை அமுதசுரபி இஃது'

9. மணிமேகலை, சாத்தனுர்-குறிப்பு வரைக.

பயிற்சி

1. காயசண்டிகையின் கதையைச் சுருக்கி வரைக.

2. பொருள் கூறுக:—ஊணொலி, தந்துணைப்பாவை, மும்மை, தந்தித்தீ, அந்தரம், மரவுரி.

3. பிரித்து எழுதுக:—பாத்தூணேற்ற, பெருஞ்சோற்றமலை, கேணீ, என்னேய், கானியாற்றியைந்தொருங்கிருந்தேன், சேணுறு, நாளுன்னுறு பசி.

4. சேர்த்து எழுதுக:—மக்கள் + யாக்கை, கருமை + கனி, பழம் + ஒன்று + ஏந்தி, விஞ்சையன் + தன் + ஒடு + என், வெம்மை + வினை.

5. குற்றியலிகரம்-இதனை இப்பாடப் பகுதியிலிருந்து சான்று காட்டி விளக்குக.

2. திருவிளையாடற் புராணம்

விறகு விற்ற படலம்

இந்நூல் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விளக்கிக் கூறுவது. இந்நூல் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், ஆலவாய்க் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளையுடையது. இது வடமொழியில் உள்ள 'ஆலாஸ்ய மகாத்மியம்' என்னும் நூலை முதலாகக் கொண்டு செய்யப்பெற்றமையால் வழி நூலாம்.

இந்நூலை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழநாட்டிலுள்ள திருமறைக்காடு என்னும் ஊரில் மீனுட்சி சுந்தர தேசிகர் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றியவர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர் என்பர்; இற்றைக்கு 300 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்பர்.

ஏமநாதன் மதுரையை அடைதல்

மன்றலந் தெரியல் மார்பன்
வரகுணன் செங்கோல் ஓச்சிப்
பொன்றலங் காவ லானிற்
பொலியுநாள் ஏம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன்
வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னேடும்
விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான். 1

ஏமநாதன் பாடுதல்

பூழியர் பெருமான் கோயில்
புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத்
தொழுதுபல் புகழ்கொண் டாடி,
ஏழிசை மழலை வீணை
இடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழிஇன் னிசைத்தேன் மன்னன்
அஞ்செவி வழியப் பெய்தான். 2

பாண்டியன் பாணபத்திரரை வருவித்தல்

மீனவன் வரிசை பெற்ற
செருக்கினும் விருதி னானும்
மானமேற் கொண்டு தன்னோ(டு)
இன்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங்(கு)
இல்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந்(து) உழையர் கூவிப்
'பத்திரற் கொணர்திர்,' என்றான். 3

பாண்டியன் பத்திரரை வினவுதல்

உழையரால் விடுக்கப் பட்டபத்திரன்
உவரி வென்றோன்
கழல்பணிந்(து) அருகு நிற்பக்
கௌரியன் நோக்கிப் 'பாணி
பழகிசை வல்லா னோடும்
பாடுதி கொல்லோ?' என்ன
மழலையாழ் இடந்தோள் இட்ட
பாணர்கோன் வணங்கிச் சொல்வான். 4

பத்திரர் விடையும் பாண்டியன் ஆணையும்

'தென்னவர் பெரும! யானுன்
திருவுள வலனும் கூடல்
முன்னவன் அருளும் கூட்டும்
முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி
அவனைவீ(று) அழிப்பன்,' என்றான்.
மன்னவன் 'நாளைப் பாடு;
போகெ'ன வரைந்து சொன்னான். 5

பத்திரர் சொக்கநாதரை வணங்குதல்

மையணி மிடற்றி னானை
மதுரைநா யகனை வந்தித்(து)
'ஐயனே! அடியேற் கின்றுன்
அருட்டுணை செய்யல் வேண்டும்

மெய்யனே !' என்று போற்றி
வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம்
புக்கினி திருந்தான் ; இப்பால், 6

சொக்கநாதர் விறகாளாய் வடிவம் கொள்ளுதல்

வருத்த ஞகிவந்(து) இரந்தவன்
இசைப்பகை மாற்ற
விருத்த ஞம்விற காளென
விண்ணிழி விமானத்(து)
ஒருத்த ஞர்அறி வாகிய
உண்மைஆ னந்தத்
திருத்த ஞர்தம(து) இச்சையால்
திருவுருக் கொள்வார். 7

சொக்கநாதர் விறகு சுமந்து செல்லுதல்

தறிந்த இந்தனம் தினந்தோறும் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை உடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையும் காண(து)
எறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி, 8

நடந்து கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரும் மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலும்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார். 9

சொக்கநாதர் பாடுதல்

எடுத்த இந்தனம் ஒருபுறத் திறக்கியிட் டூன்றி,
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினர் ; சுருதி
மடுத்து, 'யாரவன் பாடுவான்?' என்றிசை வல்லான், 10

வண்டறை கொன்றை யான்முன்
வந்து, 'நீயாரை?' என்றான் ;
'பண்டறு விபஞ்சிப் பாண
பத்திரன் அடிமை,' என்றான் ;

முண்டக மலரோன் மாயோன்
புரந்தரன் முதல்மற் றேனை
அண்டரும் தன்குற் றேவல்
அடிமையாக் கொண்ட அம்மான். 11

'கனியிசைக் கிழவன் தன்கீழ்க்
கற்பவர் அநேகர் தம்முள்
நனிமிசைக் கிழமை வேட்டு
நானுமவ் வினைஞன் ஆனேன் ;
தனியிசைக் கிழவன் நோக்கித்
' தசையெலாம் ஒடுங்க மூத்தாய் !
இனியிசைக் கிழமைக் காகாய்,'
என்றெனைத் தள்ளி விட்டான். 12

ஏமநாதன் வேண்டுகோள்

' வெவ்விற கெறிந்து கட்டி
விலைபகர்ந் தேனும்ஐய !
இவ்வுயி ரோம்பு கேன்என்(று)
இத்தொழில் பூண்டேன்,'என்ன
நய்வளந் தெரிந்த ஏம
நாதனும், ' விறகுமள்ளா !
அவ்விசை ஒருகால் இன்னும்
பாடு),'என ஐயன்பாடும். 13

இறைவர் பாடிய இசை வளம்

பைத்தலை விடவாய் நாகம்
பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய்
வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா(று) அறியா வாகித்
தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும்
இசைவலைப் பட்ட அம்மா ! 14

ஏமநாதன் எண்ணமும் செயலும்

‘இழுக்கி விட்டஇக் கிழமகன் இசையிதேல், அந்த
வழுக்கில் பத்திரன் பாடல்எற் றே!’என மதியா, [டர்
அழுக்கம் உற்றெழுந்(து), இசைவலான் அடுத்ததன் பண்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான். 15

சொக்கநாதர், பத்திரர் கனவில் தோன்றுதல்

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்,
‘இன்று பத்திர! இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று, ‘பத்திரன் அடிமையாம்,’ என்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்தும்நின் வேண்டுகோள்,’ என்றார்.
16

கண்ம லர்ந்தெழு பத்திரன் கரையிலா உவகை
உண்ம லர்ந்தெழும் அன்புகொண் டூக்கவெங் கதிரோன்
விண்ம லர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்ம லர்ந்தநான் மறைப்பொருள் அடித்தலம் பணிந்
தான். 17

அருஞ்சொற்பொருள்

1. மன்றல்-மணம். தெரியல் - மாலை. வடபுலம் - வடநாடு. விஞ்சைசூழ்-கல்வியில் வல்லவர் சூழ்ந்திருக்கின்ற.

2. பூழியர் பெருமான்-பாண்டியர் தலைவனாகிய வரகுண பாண்டியன். வேத்து அவை-அரசவை. சூழி-முகபடாம். இடம் தழீஇ-இடப்பக்கம் சார்த்திக் கொண்டு. தழீஇ-சொல்லிசை அளபெடை. சுருதி கூட்டி-பண் அமைத்து.

3. மீனவன்-பாண்டியன். தானம்-இசை பிறக்கும் இடம். உழையர்-ஏவலாளர்.

4. உவரி-கடல். கௌரியன்-பாண்டியன். பாணிபழகு-தாளத்தோடு பழகுகின்ற.

5. கூடல்-மதுரை. கூடல் முன்னவன்-சோமசுந்தரக் கடவுள். வீறு-செறுக்கு.

6. மை அணி மிடற்றினன் - (நஞ்சு உண்டமையால்) கருமை பொருந்திய அழகிய கழுத்தினையுடைய சிவன். வந்தித்து-வணங்கி. இப்பால்-பின்னர். அருட்டுணை — அருள் + துணை.

7. வருத்தனுகி - துன்பமுடையவனுகி. விருத்தன் - கிழவன். திருத்தனுர்-குற்றமற்ற தூய வடிவினராகிய சோமசுந்தரக் கடவுள்.

8. இந்தனம்-விறகு. பங்கி பறிந்து-தலைமயிர் பறிக்கப்பெற்று. பரிந்து-அன்பு கொண்டு. எறிந்த-வெட்டப்பட்ட. உறைமங்கை-வினைத்தொகை.

9. அருவிலை-வாங்க முடியாத மிகுந்த விலை. அரு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கவலை-இரண்டு தெருக்கள் கூடுமிடம். முடுக்கர்-குறுந்தெருக்கள்.

10. புறம் திண்ணை-வீட்டின் வெளித்திண்ணை. சிறிது எழீஇ-சிறிது எழுப்பி. எழீஇ-சொல்லிசை அளபெடை.

11. அறை-ஒலிக்கின்ற. முண்டக மலரோன்-தாமரை மலரில் வாழ்கின்ற பிரமன். புரந்தரன்-இந்திரன். அண்டர்-தேவர்கள்.

12. கனி இசை-சுவை மிகுந்த இசை. நனிவேட்டு-மிகவிரும்பி. தனி-ஒப்பற்ற. இசைக் கிழமைக்கு-இசைபாடும் உரிமை உடையவனுதற்கு.

13. ஓம்புகேன் - பாதுகாப்பேன். நய்வளம்தெரிந்த - இசை நூலில் வல்ல.

14. பைதலை-படத்தையுடைய தலை. மஞ்ஞை-மயில். நால் வாய்-தொங்குகின்ற வாய். அரிமான் - சிங்கம். புல்வாய்-மான். வல்லியம்-புலி. மாறு-பகைமை.

15. இழுக்கிவிட்ட - பாணபத்திரரால் நீக்கப்பெற்ற. வழுக்கு-குற்றம். அழுக்கம்-வருத்தம். பண்டர் குழுக்கள்-பாண்மக்களின் (மாணுக்கரின்) கூட்டங்கள்.

16. ஆடல்-வெற்றி. ஏறு-காளை. பாண்செய்து - இசைபாடி.

17. கண்மலர்ந்து-கண்விழித்து. உள்மலர்ந்து-மனம் மகிழ்ந்து. விசும்பு-ஆகாயம்.

வினுக்கள்

1. திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி-குறிப்பு வரைக.
2. ஏமநாதன் என்பவர் யாவர் ?
3. ஏமநாதன் பாண்டியன் அவையில் எவ்வாறு பாடினுர் ?
4. 'பத்திரற் கொணர்திர்' எனப் பாண்டியன் கூறியதேன் ?
5. 'பாணி பழகிசை வல்லானேடும் பாடுதி கொல்லோ'-இடம் சுட்டி விளக்குக.

6. பத்திரர் பாண்டியனுக்குக் கூறிய விடை யாது ?
7. சொக்கநாதர் விறகாளாய் வந்ததேன் ?
8. சொக்கநாதர் விறகாளாக வந்த தோற்றத்தை விளக்குக.
9. இடம் சுட்டி விளக்குக:—
   i. 'யாரவன் பாடுவான் ?'
   ii. 'பண்டறு விபஞ்சிப்பாணபத்திரன் அடிமை.'
10. சொக்கநாதர் ஏமநாதனிடம் கூறியவை யாவை ?
11. இறைவர் பாடிய இசை வளம் எத்தகையது ?
12. ஏமநாதன் மதுரையிலிருந்து நீங்கக் காரணம் என்ன ?
13. சொக்கநாதர் பத்திரர் கனவில் யாது கூறினர் ?
14. பத்திரர் என்ன செய்தார் ?
15. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்த கதைகளைக் குறிக்க:-
   (1) உவரி வென்றேன்.
   (2) மையணிமிடற்றினேன்.
   (3) மறிந்த கங்கையும் பங்குறை மங்கையும்.

பயிற்சி

1. இந்தக் கதையினைச் சுருக்கி வரைக.
2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—
செங்கோல், வடபுலம், விருது, தொழுது, கொண்டாடி, இன்னிசை, பணிந்து, அடிமை, வினைஞன், பூண்டேன்.
3. பிரித்து எழுதுக :— வேத்தவையத் தெய்தி, அருட்டுணை, அடியேற்கின்றுன், தேய்ந்தழுந்திய, போகியவ்விசை வலான், ஒருபுறத்திறக்கியிட்டுன்றி.
4. சேர்த்து எழுதுக :— மீது + அமர்ந்து + இளைப்பாறி. இனிமை + இசை. சிறிது + எழீஇ. குறுமை + ஏவல். கிழமைக்கு + ஆகாய். என்று + என்ன. இ + உயிர் + ஓம்புகேன்.
5. இலா உவகை, எழுபத்திரன், வெங்கதிரோன், நின் வேண்டுகோள், பத்திர — இலக்கணக் குறிப்பு வரைக.

3. நளவெண்பா

சுயம்வர காண்டம்

நளன் + வெண்பா = நளவெண்பா. நளனது வரலாற்றைக் கூறும் வெண்பாவினுலாகிய நூல் என்பது இதன் பொருள். நளன் நிடத நாட்டை ஆண்ட ஒரு மன்னன். இந்நூல் சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்று பிரிவுகளையுடையது.

இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் வெண்பாப் பாடுவதில் வல்லவராதலின் 'வெண்பாவில் புகழேந்தி' என்று சிறப்பித்துரைக்கப்பட்டார். இவர் தொண்டைநாட்டைச் சேர்ந்த பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். இவர் வைணவ மதத்தைச் சேர்ந்தவர். இவர் முரணை நகரை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசனுல் ஆதரிக்கப்பெற்றவர். இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டு என்பர்.

நிடத நாட்டுச் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்நாட்டம் போலும் தகைமைத்தே சாகரம்சூழ்
நன்னுட்டின் முன்னுட்டும் நாடு. 1

நளன்முன் அன்னப்பறவை தோன்றுதல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப—மாணிறத்தான்
முன்அப்புள் தோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 2

தோழிகள் அன்னத்தைப் பிடித்துக் கொடுத்தல்

நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 3

நளன் அன்னத்தை அஞ்சாதே எனல்

‘அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்’ என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 4

நளன் சொற்கேட்டு அன்னம் பயமின்றி இருத்தல்

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனிஅன்னம்—வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான். 5

தமயந்தி வீமன் மகள் என்று கூறுதல்

‘எழுஅடுதோள் மன்னா! இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 6

அன்னம் தமயந்தியின் பெருமை கூறல்

‘நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.’ 7

அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனிஇடம்சேர்ந்து ஆங்கதனை
‘என்நாடல் சொல்’என்றாள் ஈங்கு. 8

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு. 9

அன்னத்தைத் தமயந்தி வேண்டுதல்

'வாவி உறையும் மடஅனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்,—காவினிடைத்
தேர்வேந்தற்கு என்நிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 10

நளன் சுயம்வர மண்டபத்தில் இருத்தல்

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதை பெருங்கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 11

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 12

தோழி தமயந்திக்கு முறையே அறிவித்தல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்று இயல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 13

தமயந்தி திகைத்தல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்டு ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று
ஊசலா டுற்றாள் உளம். 14

' மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில், கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்டஅருள் ' என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 15

தமயந்தி நளனை அறிதல்

கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 16

தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டுதல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனம்சுளிப்பக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 17

அருஞ்சொற்பொருள்

1. காமர் - அழகு. காவிமுகை - நீலோற்பல அரும்புகள். தளை - கட்டு. நாட்டம் - கண். சாகரம் - கடல். செம்மை + தேன் = செந்தேன்.

2. பொய்கை - தடாகம். மாண் நிறத்தான் முன் - அகன்ற மார்பையுடைய நளன் முன். அப்புள் - தண்ணீரில். முளரி-தாமரை மலர். நீள் + நிறம் = நீணிறம். மாண் + நிறத்தான் = மாணிறத்தான்.

3. மயில்குழாம்-மயில் கூட்டம். வல்லியர்கள் - பூங்கொடி போன்ற தோழிகள். கோவின் முன் - அரசனாகிய நளன் முன். பசுமை + கூந்தல் = பைங்கூந்தல்.

4. வஞ்சி அனையார் - பூங்கொடி போன்ற பெண்கள். விஞ்சியது - சிறந்தது. தார்மன் - மலர் மாலையை அணிந்த அரசன்.

5. திரு - இலக்குமி. அடுமாற்றம் இல்லா - கொலைப்பகை இல்லாத.

6. எழு-தூண். இழை-ஆபரணம். நுதி-நுனி. ஓர்கொம்பு-ஒப்பற்ற பூங்கொடி போல்வாள்.

7. நாற்குணம்-நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள். ஆர்க்கும்-ஒலிக்கின்ற. வதனம்-முகம், நான்கு + குணம் = நாற்குணம். ஐந்து + புலன் = ஐம்புலன்.

8. வடிவில் திகழ்கின்ற-அழகில் சிறந்த. நன்னுதலும்-அழகான நெற்றியையுடைய தமயந்தியும். ஆடல்-விளையாட்டு. என் நாடல் சொல்-என்ன விரும்பி வந்தது சொல். நன்மை + நுதல் = நன்னுதல். தன் + ஆடல் = தன்னாடல். என் + நாடல் = என்னாடல்.

9. தண் அளியான்-குளிர்ந்த இரக்கமுடையவன். வாங்கும்-தம் வசப்படுத்தும். தடம் தோள்-பெரிய தோள். நானிலம்-நான்காகிய (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்) நிலங்களைக் கொண்ட பூமி.

10. வாவி-தடாகம். ஆவி-உயிர், காவினிடை -பூஞ்சோலையிலுள்ள. பார்வேந்தன் பாவை-பூமியை ஆளும் வீமராசனுடைய மகளாகிய தமயந்தி.

11. கன்று குதட்டிய கார் நீலம்-கன்றுக் குட்டிகள் வாயிற் குதப்பி உமிழ்ந்த கருங்குவளை மலர்கள். நோற்றிருந்த-தவஞ் செய்திருந்த.

12. பொன்னின் மடப்பாவை - திருமகள் போன்ற அழகினையுடைய தமயந்தி. செங்கமலப் பொய்கை-செந்தாமரைத் தடாகம்.

13. இன்னபரிசு-இப்படிப்பட்ட தன்மையுடையன. இயல் அணங்கு-நற்குணம் பொருந்திய ஒரு தோழி. தனி கொடி-ஒப்பில்லாத கொடி போன்ற தமயந்தி.

14. காவலரை-அரசரை. சேடி-தோழி. ஈர் இருவர் தேவர்-நான்கு தேவர்கள் (இந்திரன், வருணன், எமன், அக்கினி). பூவரைந்த-மலர்களை அணிந்த.

15. மின்னும் தார்-விளங்குகின்ற மாலை. கடிமாலை-மணமுள்ள மாலை.

16. காசினி-பூமி. தோய்தலால்-படிதலால். வண்ணம்-அழகிய. நன்னுதலே அன்னுள்-இலக்குமியை ஒத்த தமயந்தி. நன்மை + நுதல் = நன்னுதல், பண்புத் தொகை.

17. விண் அரசர்-தேவர். வெள்கி-வெட்கமடைந்து. மனம் சுளிக்க-மனம் வருந்தவும். கண் அகல்-இடம் அகன்ற. வன்மாலை-வலிய மயக்கம். வயம்-வெற்றி. பொன்-திருமகளைப் போன்ற தமயந்தி.

வினாக்கள்

1. நிடதநாட்டுச் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

2. 'மயில்குழாம் ஓடிவளைக்கின்ற தொப்பவே'-இவ்வுவமையை விளக்கி எழுதுக.

3. அன்னம் அச்சம் நீங்கி நளனிடத்தில் இருக்கக் காரணம் யாது ?

4. அன்னம் தமயந்தியின் பெருமையை நளனுக்குக் கூறியதெவ்வாறு ?

5. அன்னம் நளனின் பெருமையைத் தமயந்தியிடம் எவ்வாறு கூறிற்று ?

6. தமயந்தி சுயம்வர மண்டபத்துக்கு வருதலைக் கவி எவ்வாறு வருணித்துள்ளார் ?

7. " ஊசலாடுற்ருள் உளம் "—யார் ? ஏன் ?

8. தமயந்தி உண்மை நளனை அறிந்தது எவ்வாறு ?

9. தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டியது எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

10. நளவெண்பா, புகழேந்தி-குறிப்பு வரைக.

பயிற்சி

1. நளன் கதையைச் சுருக்கி உரைநடையில் வரைக.

2. பொருள் வரைக:—நெகிழ, முன்னுட்டும், மாணிறத்தான், தங்கோவின், விஞ்சியது, வெய்ய, எழு அடு தோள், மேனிலத்து, நன்னுதல், வெள்கி, பொன்.

3. பிரித்தெழுதுக: —மண்ணரசன், கண்ணகல், விண்ணரசர், நன்னுதல், ஊசலாடுற்ருள், செங்கமலம், மன்றலந்தார், உவந்தளித்தாய், தண்ணளியான், ஆங்கதனை.

4. செந்தேன், பைங்கூந்தல், வைத்தார் தாழ்ந்து, அனமே, இல்லா, இலங்கிழை, கடிமாலை—இலக்கணக் குறிப்பு வரைக.

4. குசேலோபாக்கியானம்

குசேல + உப + ஆக்கியானம் = குசேலோபாக்கியானம். குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது பொருள். உபாக்கியானம்-கிளைக்கதை. இது கண்ணனது சரித்திரத்தைக் கூறும் பாகவதத்திலுள்ள ஒரு கிளைக் கதை. குசேலன்-கிழிந்த ஆடையையுடையவன்.

இந்நூலாசிரியர் வல்லூர்த் தேவராசப் பிள்ளை என்பவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள வல்லூரில் கருணீகர் குலத்தில் வீராசாமிப் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர். இவரது காலம் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

குசேலர் வருகையைக் கண்ணனுக்கு அறிவித்தல்

மாமறைத் தலைவ போற்றி மதிக்குல விளக்கே போற்றி
காமரிந் திரன்முன் னானோர் காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ணா போற்றி தரியலரேறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவ போற்றி. 1

'ஆதிநா ளையில் நின்னோ டருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பி னான்பேர்' 2

கண்ணன் குசேலரை அழைத்துவரச் சொல்லுதல்

என்றலு முவகை விம்ம எழில்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப் பொழிதர 'விரைவிற் சென்(று)
இன்றுநம் வாயில் வந்த இருந்தவத் தலைவன் தன்னை
மன்றவிங் கழைப்பீ' ரென்று வாய்மலர்ந் தருளி னானே. 3

குசேலரிடம் கண்ணன் கூறியதைக் கூறுதல்

'நின்னுடை வரவு ரைத்தேம்' நிருபனுக் கப்போழ் துற்ற
பன்னருங் களிப்பை யாமோ பகர்ந்திட வல்லம் ஐய
முன்னமங் கிருந்த இன்பம் முழுவது மறந்து நின்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ? 4

'தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி' போன்று
நேயமிக் குடைய ணுகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே யெனவிரை பொருளிற் சொற்றுன். 5

குசேலர் கண்ணனைக் காண்டல்

வருந்துமோர் மிடியன் சேம வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன் விண்ணோர் அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற் பகமெதிர் கண்டாற் போலும்
சரிந்தபற் றினன்மெய் யாசான் தனையெதிர் கண்டாற் போலும். 6

எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற்
[கண்டான். 7

கண்ணன் குசேலரை வரவேற்றுப் பாராட்டுதல்

'மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணர்ந்த மாதவனே!
உன்னுடைய தரிசனத்தால் உடம்புபூ ரித்தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல் வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே றியார்பெற்றுர்? யார்
[பெறுவார்? 8

கண்ணன் குசேலரிடம் சிற்றுண்டி வினவுதல்

'பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை? அதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற' தென்றுன் தெரிவரும் வஞ்சக் கள்வன். 9

'இனியசிற் றுணவே தேனும் இன்றிநீ வருவாய் கொல்லோ?
இனியநின் னுள்ள மின்றே எண்ணியா னறிதல் வேண்டும்
இனியநின் மனைவி வாளா ஏகிவா வென்ப ளோமற்(று)
இனியவெற் கன்றி யார்க்குக் கொண்டுவந் திருக்கின் றயே!' 10

கண்ணன் அவல் உண்ணுதல்

மலிதரும் அன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்றுள் நன்று வாய்த்தது நமக்கி தென்னு
ஒலிதரு கழற்கா லையன் ஒருபிடி யவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான் மாதோ. 11

செறிதரு சுவைத்தீ தென்றுந் தேவர்க்கு மரிய தாகும்
அறிதரு விருப்பி னில்லின் அமைத்ததே பழைது மன்று
குறிதரு விலைப்பாற் சென்று கோடலிவ் வளத்த தோவென்(று)
உறியளை வாரி யுண்டோன் ஒருபிடி யவல்தின் ருனே. 12

முன்னுமிவ் வவலொன் றேனும் முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் ருகும் பட்டவங் கையும ணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம குளமும் வேண்டுவதின் றென்னு
உன்னுபல் லுலகு முண்டோன் ஒருபிடி யவல்தின் ருனே. 13

மற்றெருரு பிடியெ டுத்து வாயிடப் போகுங் காலை
முற்றிழைத் திருவு ருக்கு ம்ணியெனு முத்த மூரல்
பொற்றெடிப் பூங்கொம் பன்னுள் பொருக்கென வோடி வந்து
கற்றவர் புகழ்தன் கேள்வன் கரத்தினைப் பிடித்துக் கொண்டாள். 14

குசேலர் மறுநாள் தம் ஊருக்குப் புறப்படுதல்

கதிருதிக்கும் காலையெழீஇக் கடன்பலவும் முற்றியடர்
முதிர்புலன்செற் றருஞானம் முயன்றடைந்தோன் ஆதலினல்
மதிகுலத்து மன்னவன்பால் வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனுய் நினைந்தூர்க்கு வழிக்கொண்டான். 15

அருஞ்சொற்பொருள்

1. மதிக்குலம்-சந்திரகுலம். காமர்-அழகு. தரியலர்-பகைவர். ஏறு-ஆண்சிங்கம் போன்றவன். தோம்-குற்றம்.

2. போதவும்-மிகவும். கந்தை - கிழிந்த ஆடை. நீரான் - தன்மையையுடையவன். கோது அறு-குற்றம் இல்லாத.

3. உவகை விம்ம-மகிழ்ச்சி மிக. எழில் - அழகு. பொன்றல் இல்-அழிதல் இல்லாத.

4. நிருபன்-அரசன் (கண்ணன்). பன்னரும்-சொல்லுதற்கரிய.

5. குழவி - குழந்தை. நேயம் - அன்பு. பூப்ப - உண்டாக. இன்னே-இப்பொழுதே. "தாயது வருகை... ...போன்று"—உவமை.

6. மிடியன் – வறுமையுடையவன். சேமவைப்பு - புதையல். பரிந்து-வருந்தி. சரிந்த பற்றினன்-பற்றில்லாதவன்.

7. எண் அ(ன்)னைக்கு-யாவராலும் நினைக்கப்படுகிற தாயாகிய திருமகளுக்கு. கண்ணனை = கள் + நனை-தேனிருல் நனைதலையுடைய.

8. மன்னுடைய - நிலைபேறுடைய. மாதவன்-பெரிய தவத்தினையுடையவன். பேறு + யார் = பேறியார்-குற்றியலிகரம்.

9. பந்தனை-பிறப்புக்கேதுவாகிய கட்டு. பக்கணம்-சிற்றுண்டி.

10. வாளா-சும்மா. எற்கு அன்றி-எனக்கு அல்லாமல்.

11. மலிதரும்–மிகுந்த. வண்பொதி-அழகிய முடிப்பு. காதல் பொலிதர-ஆசை அதிகரிக்க.

12. செறிதரு-நிறைந்த. அளை - தயிர்.

13. முட்டை - பக்குவப்படாத அவல். குளம் - வெல்லம். அம்ம – வியப்பிடைச் சொல். அகம் + கை = அங்கை.

14. முற்று இழை - (தொழில்) முற்றின ஆபரணங்களை யணிந்த. முத்தமூரல் - முத்துப்போன்ற பற்கள். பொற்றொடி = பொன்தொடி-பொன் வளையல். கேள்வன் - கணவன்.

15. எழீஇ-எழுந்து, சொல்லிசை அளபெடை. முற்றி-முடித்து. நிதியம் - செல்வம். முதிர் புலன் - வினைத் தொகை.

வினுக்கள்

1. வாயிற்காவலர் கண்ணனைப் போற்றிய தெவ்வாறு?

2. வாயிற்காவலர் குசேலன் கூறியதாகக் கண்ணனிடம் கூறியன யாவை?

3. வாயிற்காவலர் குசேலரிடம் வந்து கூறியன யாவை?

4. குசேலர் கண்ணனைக் கண்டதற்கு ஆசிரியர் கூறும் உவமைகள் யாவை?

5. "எண்ணனைக்கு" என்று தொடங்கும் செய்யுளுக்குப் பொழிப்புரை எழுதுக.

6. "என்னுடைய பெறலரும்பே றியார்பெற்ருர்"—இடஞ் சுட்டி விளக்குக.

7. கண்ணன் அவல் தின்ற முறை யாது?

8. குசேலோபாக்கியானம் - வல்லூர் தேவராசப் பிள்ளை— குறிப்பு வரைக.

பயிற்சி

1. இந்தக் கதைப்பகுதியை உரைநடையாக்குக.

2. பிரித்து வரைக :—முன்னோனேர், தரியலரேறே, தோமறு, துவாரகைக்கிறைவ, நின்னேடருங்கலே, குசேலனென்றியம்பினுன், இருந்தவத்தலேவன், போயழைத்திடுமினின்னே, கண்ணனைத் துளவத்தாமக் கண்ணனே, எண்ணனேக் கிலங்குமார்பம்.

3. சேர்த்து எழுதுக :— வலம் + இடம் + உற, மண் + அனேத்தும். பேறு + யார், கழல் + கால் + ஐயன், நினேந்து + ஊர்க்கு.

4. வினேத் தொகை, பண்புத்தொகை, வினே எச்சம், பெயரெச்சம், சொல்லிசை அளபெடை ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டவிளி, உவமை—இவற்றிற்கு இப்பாடப் பகுதியிலிருந்து சான்றுகள் தருக.

---

5. மனேன்மணீயம்

பாண்டிய நாட்டு மன்னராகிய சீவக வழுதியின் மகள் மனேன்மணியின் வரலாற்றைக்கூறும் நூல். இது ஆங்கில நூலொன்றைத் தழுவிக் கற்பனையாகச் செய்யுளில் வரையப்பட்ட நாடக நூல். இந்நூலே இயற்றியவர் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளே. இவர் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் பெயர் பெருமாள் பிள்ளே; தாய் மாடத்தி அம்மாள். இவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமையுடையவர். இவர் ஆங்கிலத்தில் M.A. பட்டம் பெற்றுத் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக இருந்தவர். இவரது காலம் 1855—1897.

இயற்கையின் இலக்கு

எவ்வினே யோர்க்கும் இம்மையிற் றம்மை
இயக்குதற் கின்பம் பயக்குமோ ரிலக்கு
வேண்டும்; உயிர்க்கது தூண்டுகோல் போலாம்;
ஈண்டெப் பொருள்தா னிலக்கற் றிருப்பது ?
இதோஒ ! இக்கரை முளேத்தவிச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி.
அதன்சிறு பூக்குலே யடியொன் றுயர்த்தி,
இதமுறத் தேன்றுளி தாங்கி, ஈக்களே
நலமுற அழைத்து, நல்லூ ணருத்திப்

பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகா யாக்கி, இதோ! என்
தூசிடைச் சிக்குந் தோட்டியுங் கொடுத்தே;
“இவ்வயின் யாமெலாஞ் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமிலை, சிறுர் நீர் பிழைப்பதற்கு
ஏகுமின் புள்ஆ எருதுஅயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின்!” எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையுஞ்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சா லன்பும்
போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப,
ஆர்த்தெழு மன்பினு லனைத்தையுங் கலந்துதம்
என்பெலாங் கரைக்குநல் லின்பந் திளைப்பர்.
தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்,
எனப்பலர் கருது மிச்சிறு வாய்க்கால்
செய்தொழி லெத்தனை விசித்திரம்! ஐயோ!
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறுநெறென் றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென் றில்லை, யாவையு மீர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தருமிவை யெனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்று இட்டுமற்(று) ஐயா!
அண்ட யோனியி னுணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்
ஊறிடுஞ் சிறிய ஊற்ருய்ப் பரந்தும்
ஆருய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,

மதகிடைச் சாடியும், வாய்க்கா லோடியும்
பற்பல பாடியான் பட்டங் கீட்டியது
அற்பமே யாயினும் ஆதர வாய்க்கொள் ;
"இன்னமு மீதோ ஏகுவன்" எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவ ணடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர் ?
நிரந்தரம் ஐயோ ! நொந்தனை ? நில் ! நில் !
இரைந்ததென் ? அழுவையோ ! ஆயி னேகுதி.
நீரே ! நீரே ! என்னையுன் நிலைமை ?
யாரே யுனைப்போ லனுதின முழைப்போர் ?
நீக்கமி லன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போ லுளவேற் பிணைப்பே றென்னை ?
ஓகோ ! நாங்கூழ்ப் புழுவே ! உன்பாடு
ஓவாப் பாடே ! உணர்வேன் ! உணர்வேன் !
உழைப்போ ருழைப்பி லுழுவோர் தொழின்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.
எம்மண் ணுயினும் நன்மண் ணுக்குவை.
விடுத்தனை யிதற்கா எடுத்தவுன் யாக்கை
உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேருய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை யுன்குழி வாயுமோ ருருண்டையால்
இப்புற் பயிர்நீ யிங்ஙன முழாயேல்
எப்படி யுண்டாம் ? எண்ணு துனக்கும்
குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை ?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள ?

அருஞ்சொற்பொருள்

2. ஓர் இலக்கு- ஒரு குறிக்கோள், 10. பூ பராகம் - அழகிய மகரந்தப்பொடி. 12. தூசு-ஆடை. தோட்டி-கொக்கிமுள். 13. துன்னில்-கூட்டமாகக் கூடியிருந்தால். 15. புள்-பறவை. அயம்-ஆடு. 20. பேரழகு-பண்புத்தொகை. 22. கண் பனிப்ப-கண்கள் அன்புமிகுதியால் நீர் துளிக்க. 29. சிறுகால்-சிறிய வாய்க்கால்.

30. நெறுநெறு-இரட்டைக் கிளவி. 34. முந்நீர் மடுவுள்-கடலாகிய மடுவில். 38. அண்டம் யோனியின் ஆணையின் - இவ்வுலகம் தோன்றக் காரணமாகிய கடவுளின் கட்டளைப்படி. 42. கதித்து எழு-விரைந்து எழுகின்ற. 49. எழிலி-மேகம். 50. இராப்பகல்-உம்மைத் தொகை. 52. நில்நில்-அடுக்குத் தொடர். 59. ஓவாப்பாடே-ஒழியாத வேலையே. 63. யாக்கை-உடல், தொழிற்பெயர். 64. உழுதுழுது-அடுக்குத் தொடர். 65. வேதித்து-வேறுபடுத்தி.

வினாக்கள்

1. மனோன்மணீயம், பெ. சுந்தரம் பிள்ளை-குறிப்பு வரைக.

2. 'உயிர்க்கது தூண்டுகோல் போலாம்'—எது ? எவ்வாறு ?

3. சிறுபுல்லின் குறிக்கோளாகக் கூறப்படுவதை எழுதுக.

4. 'தம் என்பெலாங் கரைக்கும் நல்லின்பந் திளைப்பர்'—யார் ? எங்ஙனம் ?

5. வாய்க்காலின் செய்தொழில் விசித்திரம் எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளது ?

6. 'இரைந்ததென் அழுவையோ?'—இடஞ்சுட்டி விளக்குக.

7. நாங்கூழ்ப் புழுவின் செய்தொழில் யாது ?

8. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள ?—இடம் சுட்டி விளக்குக.

பயிற்சி

1. சிறுபுல், சிறுவாய்க்கால், நாங்கூழ்ப்புழு-இவற்றின் பயன்களைத் தனித்தனிக் கட்டுரையாக வரைக.

2. பிரித்து வரைக :—போலியார்க்குள, பிழைக்குமாறென்னை, நீயிங்ஙன முழாயேல், வாயுமோருருண்டையால், உழுதுழுது, உழைப்போருழைப்பி லுழுவோர்.

3. சேர்த்து வரைக :—பிணை + பேறு + என்னை, நீக்கம் + இல் + அன்பும், யாரே + உனைப்போல், அனுதினம் + உழைப்போர், ஆயின் + ஏகுதி, மற்று + இரா + பகல், வந்து + இவண்.

4. நீரேநீரே, செய் எறும்பு, ஏகுதி, இராப்பகல், பெருமலை, அலைகடல்—இலக்கணக் குறிப்பு வரைக.

6. ஆசிய சோதி

கருணைக்கடல்

புத்தர் பெருமான் வரலாற்றையும் அவர் போதித்த அறவுரைகளையும் நன்கு கற்றுணர்ந்த ஆங்கில ஆசிரியர் சர் எட்வின் ஆர்னல்டு ஆங்கிலத்தில் எழுதிய கவிதை நூலைத் தழுவித் தமிழ் மணங்கமழக் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** அவர்கள் **ஆசிய சோதி** எனும் பெயரால் கவிதை நூலாக எழுதியுள்ளார்.

ஆசிய சோதி இயற்றிய கவிமணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தேரூரில் பிறந்தவர். பெற்றோர்: சிவதாணுப் பிள்ளை—ஆதிலட்சுமியம்மையார். ஆசிரியர் : திருவாவடுதுறையாதீனம் சாந்தலிங்கத் தம்பிரான். பல்லாண்டுகள் தமிழாசிரியராகவும், மகளிர்க் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்து பணியாற்றியவர். இவர் பல நூல்களை எளிய தமிழ்நடையில் கவிதைகளாகவும் உரைநடையாகவும் இயற்றியுள்ளார். காலம் : 1876-1954.

பிம்பிசாரன் செய்த யாகத்தில் ஆடுகளைப் பலியிட அழைத்துச் சென்றபோது, அதைக் கண்ட புத்தர், அங்குச் சென்று பிம்பிசாரனுக்கும், யாகம் செய்யவிருந்த வேதியர்க்கும் அறவுரைகள் கூறி யாகத்தைத் தடுத்து நிறுத்தினர். அவர் கூறிய அறவுரைகள் இங்குப் பாடமாகத் தரப்படுகின்றன.

அறவுரை

1. வாழு முயிரினை வாங்கிவிடல்—இந்த
 மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
 வீழு முடலை எழுப்புதலோ—ஒரு
 வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா

2. யாரும் விரும்புவ தின்னுயிராம்—அவர்
 என்றுமே காப்பதும் அன்னதேயாம்
 பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப்—படும்
 பாடு முழுதும் அறிந்திலீரோ ?

3. நேரிய உள்ளம் இரங்கிடுமேல்—இந்த
 நீணிலம் முற்றுமே ஆண்டிடலாம்
 பாரினில் மாரி பொழிந்திடவே—வயல்
 பக்குவ மாவ தறிந்திலீரோ?

4. காட்டும் கருணை யுடையவரே—என்றும்
கண்ணிய வாழ்வை யுடையவராம்
வாட்டும் உலகில் வருந்திடுவோர்—இந்த
மர்மம் அறியாத மூடரையா.

5 ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ கூறுமையா.

6. மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ—இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா.

7. மன்னுயி ரெல்லாம் உலகில் ஒருதாயின்
மக்களென் றுண்மை யறிந்திலீரோ
தன்னுயிர் போற்றிப் பெரும்பழி செய்வது
சண்டாளர் கண்ட நெறியலவோ ?

8. ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம்—ஏழை
ஆட்டின் தலையோ டகன்றிடுமோ
தீயவும் நல்லவும் செய்தவரை—விட்டுச்
செல்வ தொருநாளு மில்லையையா.

9. நெஞ்சினில் வாயினில் கையினில் செய்திடும்
நீதி அநீதிகள் யாவையுமே
வஞ்சமி லாது மறுபிறப்பில்—உம்மை
வந்து பொருந்தாமற் போயிடுமோ !

10. ஆதலால் தீவினை செய்யவேண்டாம்—ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்க வேண்டாம்
பூதலந் தன்னை நரகம—தாக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையுமையா ?

அருஞ்சொற்பொருள்

1. வீழுமுடல்-இறக்கும் உடல். 2. பாரில்-உலகில். பாடு-வேலை. 3. நேரிய-நேர்மையான. நீணிலம்-பெரிய உலகம். மாரி-மழை. 4. வாட்டும் - துன்பந்தரும். மர்மம் - இரகசியம். 5. அவி உணவு-தேவர்கள் உணவு. 7. சண்டாளர் - கீழ்மக்கள். நெறி-வழி. 8. அகன்றிடுமோ-நீங்கிவிடுமோ. 10. தீவினை-தீயசெயல்கள். பூதலம் - உலகம்.

வினாக்கள்

1. இந்த உலகில் எது எளிது ? எது ஆகாதது ?

2. எறும்பைக் கொண்டு நாம் அறிய வேண்டுவது யாது ?

3. 'நீணிலம் முற்றுமே ஆண்டிடலாம்'—எப்படி ?

4. 'இந்த மர்மம் அறியாத மூடர் ஐயா !'—இடம் சுட்டி விளக்குக.

5. அவியுணவுபற்றி இங்கு என்ன கூறப்படுகிறது ?

6. பலியைக் கடவுள் விரும்பவில்லை என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது ?

7. எது உண்மை? எது சண்டாளர் கண்ட நெறி ?

8. 'ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ'—இடம் சுட்டி விளக்குக.

9. மறுபிறப்பில் வந்து பொருந்துபவை எவை ?

10. 'பூதலந்தன்னை நரகமதாக்கிடும் புத்தி'—எது இப்படிச் சொல்லப்படுகிறது ?

பயிற்சி

1. இப்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்து ஒரு கட்டுரையாக வரைக.

2. ஆசிய சோதி-கவிமணி-குறிப்பு வரைக.

3. பிரித்து வரைக :—வீழுமுடல், ஆகாதையா, விரும்புவதின்னுயிராம், பக்குவமாவதறிந்திலீரோ, மூடரையா, யாகத்தவியுணவை, பாருமையா.

4. சேர்த்து எழுதுக :—உயிர் + எல்லாம், தன் + உயிர், பெருமை + பழி, வஞ்சம் + இலாது, பிழையும் + ஐயா.

5. முற்றும்மை, தொழிற்பெயர், பண்புத்தொகை, இழிவு சிறப்பு உம்மை, பெயரெச்சம், வினை எச்சம், குறிப்பு வினைமுற்று—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வொரு சான்று தருக.

IV. பல்சுவை

1. புனைந்துரை

(1) தென்றல்

இச்செய்யுள் திருவிளையாடல் புராணத்தில் இருக்கிறது. இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர்; இதில் தென்றற் காற்றின் சிறப்பை இனிமை யொழுக விளக்குகிறார் :

பொங்கரில் நுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கொடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று
தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போ லியங்கு மன்றே!

அருஞ்சொற்பொருள்

பொங்கர்—சோலை. வாவி-குளம். பங்கயம்-தாமரை. மயிலை -இருவாட்சி. கடி-வாசனை. கொங்கு-தேன். அறிவன்-அறிஞன். பசுமை + கொடி = பைங்கொடி-பண்புத் தொகை.

(2) மருதம்

இதனைப் பாடியவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இச்செய்யுள் இவர் இயற்றிய இராமாயணத்திலுள்ளது. மருத நிலத்தின் காட்சி இச்செய்யுளில் அழகுபட வருணிக்கப்பட்டிருக்கிறது :

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து
நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

அருஞ்சொற்பொருள்

தண்டலை-சோலை. விளக்கம்-விளக்கு. கொண்டல்-மேகம். முழவு-மத்தளம். குவளை-நீலநிறப்பூ. தெண்டிரை—தெள் + திரை — தெளிந்த அலை. எழினி-திரைச்சீலை. தேம்பிழி-இனிமை மிக்க.

(3) மலைவளம்

இச்செய்யுள் திருக்குற்ருலக் குறவஞ்சி என்னும் நூலில் உள்ளது. இந்நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் முத்து விசய ரங்கநாத நாயக்கர் காலத்தவர்; 18-ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலிருந்தவர். இவர் புலமை மிக்கவர்; பல நூல்களை இயற்றியவர்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவி திசையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்ருலத் திரிகூட மலையெங்கள் மலையே.

அருஞ்சொற்பொருள்

வான்கவி-தேவலோகத்துக் குரங்கு. கானவர்-காட்டில் வாழும் வேடர். கவனசித்தர்-ஆகாயத்தில் உலவும் வன்மை பெற்ருேர். காயசித்தி-உடல் அழியாதபடி செய்யும் ஒரு வித்தை. தேனருவி-குற்ருல மலையிலுள்ள ஓர் அருவியின் பெயர். பரி-குதிரை. வேணி-சடை. வந்துவந்து-அடுக்குத் தொடர்.

வினக்கள்

1. பரஞ்சோதி முனிவர், கம்பர், திருக்குற்ருலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர் — குறிப்பு வரைக.

2. தென்றலுக்கு அறிவனை உவமை காட்டியது எங்ஙனம் பொருந்துகின்றது ?

3. தென்றல்—பெயர்க் காரணம் வரைக.

4. மருதநிலச் சிறப்பைக் கம்பர் எங்ஙனம் விளக்குகிருர் ?

5. மருதத்தின் எழில் ஓவியத்தை அழகு குன்ருமல் உரை நடை ஆக்குக.

6. திரிகூட மலையின் இயற்கை வளம் யாது ?

பயிற்சி

1. தென்றல், மருதம், திரிகூடமலை இவற்றைத் தனித்தனி உரைநடையாக எழுதுக.

2. பொருள் வரைக :—துழாவி, முழவினேங்க, செங்கதிரோன், வானவர், கூனலிளம்பிறை, வேணியலங்காரர்.

3. பிரித்து எழுதுக :—கொங்கலர், வண்டுகளினிது, செங்கதிரோன், வேணியலங்காரர், தேனருவி.

4. சேர்த்து வரைக :—வழி + ஒழுகும். திசை + எழும்பி. வீற்று + இருக்கும். அங்கு + அங்கே. போல் + இயங்கும்.

5. வினை எச்சம், பண்புத் தொகை, அடுக்குத்தொடர்—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வொரு சான்று தருக.

2. சீட்டுக்கவி

இச்சீட்டுக்கவியை எழுதியவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார். இவர் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பூதூரில் பிறந்தவர். இவர் தந்தை—வடுகநாத முதலியார்; இவர் காலம் 17-ஆம் நூற்றுண்டு. சீட்டுக்கவி பாடுவதில் இவர் சிறந்தவர்; இவர் பல நூல்களைப் பாடிப் புகழ்பெற்றவர். சீட்டுக் கவி என்பது தாம் விரும்பும் ஒருவருக்குத் தம் பெருமையும் தேவையும் விளங்குமாறு எழுதி விடுக்கும் பாட்டாகும். இது இக்காலத்தில் கடிதம் எழுதுவது போன்றதாகும்.

ஏடாயி ரம்கோடி எழுதாது தன்மனத்
        தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
        ராகவன்வி டுக்கும்ஓலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
        திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம்பு ரந்துதா கந்தீர்த்த
        செழியனெதிர் கொண்டுகாண்க:
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
        பற்றிக்கொ ளாதகோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணாத கோடைவெம்
        படையில்தொ டாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடுதொ
        டுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்து
        திக்கவர விடல்வேண்டுமே.

அருஞ்சொற்பொருள்

விரகன்-வல்லவன். சேடம்-பாம்பு. சேட + அதிபன்-பாம்புகளுக்குத் தலைவனாகிய ஆதிசேடன். புரந்து-காத்து. தாகம்-குடிகளின் துன்பம். திரிபதகை-கங்கை. தென்பாலை-தெற்கேயுள்ள பாலக்காடு. செழியன்-சேலத்தை ஆண்டுவந்த செழியதரையன். கந்தருவம்-வண்டு. கந்துகம்-பந்து. கோணம்-கொல்லக்கூடிய ஒரு வகை இயந்திரம். கொக்கு-பறவை. கோடை-வெயிற்காலம். வெம்படை-கொடிய போர்க்களக் கருவிகள். குந்தம்-ஈட்டி. பாடலம்-பாதிரிப்பூ. மா-மாமரம். சடிலம்-சடை. இவற்றுடன் அடைமொழி தந்து, குதிரை எனப் பொருள் வரச்செய்த திறம் காண்க. சொன்ன-உடன்பாட்டுப் பெயரெச்சம். சொல்லாத-எதிர்மறைப் பெயரெச்சம். ஓரடியில் இவ்வாறு எதிரெதிர்ச் சொற்கள் வர அமைத்தது முரண் தொடை.

வினாக்கள்

1. சீட்டுக் கவி, அந்தகக்கவி வீரராகவர்—குறிப்பு வரைக.
2. சீட்டுக்கவியில் கூறப்படும் செய்திகள் யாவை ?
3. குதிரையைக் குறித்த வெவ்வேறு பெயர்கள் யாவை ?
4. எவருக்குக் கவிஞர் சீட்டுக்கவி வரைந்தார் ?
5. அந்தகக்கவி வீரராகவனாரின் வேண்டுதல் யாது ?

பயிற்சி

1. வாக்கியங்களில் பயன்படுத்துக:—கோடி, விரகன், படித்த, எதிரிலா, புரந்து, காண்க, சொன்னசொல், வேண்டும், சொல்லாத.

2. பொருள் வரைக :—ஏடு எழுதாது தன்மனத்தெழுதி, இமசேது பரியந்தம் எதிரிலா, சேடாதிபன் சிரமசைத்திடும்புகழ், திரிபதகை. குலசேகரன்.

3. இச்செய்யுளில் உள்ள எதிர்மறைப் பெயரெச்சங்கள், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வேற்றுமைத் தொகை முதலியவற்றை எடுத்தெழுதுக.

4. இந்தச் சீட்டுக்கவியின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.

3. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை என்னும் ஊரைப்பற்றிச் சிலேடை வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறும் நூல் கலைசைச் சிலேடை வெண்பா எனப்படும். கலைசை— தொட்டிக்கலை என்பதன் மரூஉ. சிலேடை—பலபொருள் வருமாறு பாடுவது.

இதனை இயற்றியவர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் என்பவர். இவர் தொண்டைமண்டலத்திலுள்ள தொட்டிக்கலை என்னும் ஊரில் பிறந்தவர்; சைவ சமயத்தவர்; கவி பாடுவதில் வல்லமை உள்ளவர்; சிவஞான முனிவரின் மாணவர். காலம் ஏறக்குறைய 140 ஆண்டுகளுக்கு முன்.

1. ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே—மேவும்
அரிவையம் பாகத்தான் அரண்ஒருமூன்(று)
அரிவையம் பாகத்தான் அகம். [எய்தோன்

2. ஆயச் சிறுர்படமும் ஆர்க்குங் கடாசலமுங்
காயத் திரியுங் கலைசையே—நேயமுடன்
வைத்த பதஞ்சலியார் பார்த்துருகப் பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு.

அருஞ்சொற்பொருள்

1. பாவலர்-புலவர். காவலர்—அரசர். கா + அலர்-சோலையிலுள்ள பூக்கள். அரி-திருமால். வை-கூர்மை. அம்பு-பாணம். அரண் ஒருமூன்று-முப்புரம். அரிவை-உமாதேவி. அம்-அழகிய. பாகத்தான்-இடப்பக்கத்திலுடைய சிவன்.

2. ஆயச்சிறுர் - இடைக்குலச் சிறுவர். படம் - காற்குடி. ஆர்க்கும்-ஒலிக்கும். கடாசலம்-(கட + அசலம்) யானை. காயத்து இரியும்-வானத்தில் பறக்கும். காய + திரியும்-பகைவரைக் கொல்ல அலையும். பதஞ்சலியார் - ஒரு முனிவர். பதம் + சலியார் - பதஞ் சலியார்—பாதம் சலிக்காதவர்.

விளுக்கள்

1. சிலேடை, தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்—குறிப்பு வரைக.

2. காவலரைச் சூழும் கலசை—இதிலுள்ள சிலேடையை விளக்குக.

3. அரிவையம்பாகத்தான்—இதிலுள்ள சிலேடைப் பொருள்களை விளக்குக.

4. காயத்திரியும் கலசை—இதிலுள்ள சிலேடை யாது ?

5. பதஞ்சலியார்—இதிலுள்ள சிலேடைப்பொருள்கள் யாவை?

பயிற்சி

1. வாக்கியங்களில் பயன்படுத்துக :—

ஆவலுடன், சூழும், அரண், ஆயச்சிருர், திரியும்.

2. பிரித்து எழுதுக :—நேயமுடன், பொற்பொது, பார்த்துருக, வண்டினம்.

3. சேர்த்து எழுதுக :—கா + அலர், காயத்து + இரியும்.

4. வைத்த, வாழ்வு, பார்த்து, சிருர் படம், எய்தோன் - இலக்கணக் குறிப்பு வரைக.

4. சிறுபிரபந்தங்கள்

(1) தமிழ்விடு தூது

இந்நூல் மதுரையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்குஞ் சோமசுந்தரக் கடவுள்பால் அன்புகொண்ட தலைவி ஒருத்தி, துன்புற்றுத் தன் வருத்த மிகுதியைச் சென்று தெரிவிக்கும்படி தமிழையே தூது விட்டதாகச் செய்யப்பட்டது. இதை இயற்றிய ஆசிரியர் பெயர், ஊர் முதலிய ஒன்றும் தெரியவில்லை.

தமிழ் மொழியிலுள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் 'தூது' என்பது ஒன்று. பிரிவாற்ருமையால், துன்புற்ற தலைவன் தலைவியர்களுள் ஒருவர் மற்றவர்பால், தம் ஆற்ருமையைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப்பொருள்களையேனும் தூது அனுப்புவதாகப் புலவர்கள் செய்யுள் செய்வது மரபு. இதுவே தூதாகும்.

மண்ணிற் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர்
விண்ணிற்போய்த் தேவுருவாய் மேவுதற்கும்—
[எண்ணியுனைக் 1

கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால்—
[தண்டமிழே 2

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்ற—சொற்குள்ளே 3

எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனே—சொல்லியவுன் 4

ஈரடிக்குள் ளேயுலக மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிலனுண்டோ—ஓரடிக்கோர் 5
ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே
போயிரந்து தூதுசொல்லப் போக்கினா—யாயிருந்தும் 6
மாண்பாயோர் தூதுசொல்லி வாவென்பே னென்வருத்தங்
காண்பாயென் பெண்மதிநீ காணாதே. 7

அருஞ்சொற்பொருள்

1. புகழ் உரு-புகழுடம்பு. வாழுநர்-வாழ்பவர். தேஉருவாய்-தேவவடிவத்தோடு.

2. தொண்டருக்கு-ஆசைக்கு அடிமைப்பட்டவருக்கு. தென்பால்-தெற்குதிசை (நரகம்).

3. கசடு அற-குற்றம் நீங்க. கற்பவை-கற்க வேண்டிய நூல்களை. 391-வது திருக்குறள் அப்படியே எடுத்தாளப்பட்டது காண்க.

5. ஈரடி-திருக்குறள். நேரடிக்கு-நான்கடிச் செய்யுளுக்கு (நாலடியாருமாம்). நிலன்-பூமி.

5-6. ஓரடிக்கோராயிரம் பொன் இறைக்கும் ஐயர்-செய்யுளின் ஒவ்வோரடிக்கும் ஓர் ஆயிரம் பொன்னை அள்ளி வீசும் தலைவர்.

7. மாண்பு ஆய்-மாட்சிமை யுண்டாக. பெண்மதி-பேதைமை.

வினாக்கள்

1. தூது எனும் சிறுநூலின் இலக்கணம் யாது?

2. 'உனைக் கொண்டு புகழ் கொண்டவர்க்கே கூடும்'—எவை கூடும்?

3. தமிழ் எல்லார்க்கும் புத்திமதி இயம்பியது எவ்வாறு?

4. 'போயிரந்து தூது சொல்லப் போக்கினாய்'—யாரை? எப்போது?

5. ஈரடி-நேரடி—இவற்றினை விளக்குக.

பயிற்சி

1. இந்தச் செய்யுட்களை உரைநடையாக எழுதுக.

2. பிரித்து எழுதுக:—புகழுருவாய், தேவுருவாய், எண்ணியுனை, தண்டமிழ், நிற்கவதற்கு, வல்லாயுனக்குரைக்க, பொன்னிறைக்குமையர், ஓரடிக்கோர்.

3. சேர்த்து எழுதுக:—விண்ணில் + போய், கூடும் + உனை, கசடு + அற, தக + என்ற, எல்லாம் + அடங்கும் + எனில்.

4. இலக்கணக் குறிப்பு வரைக:—கற்க, கற்பவை, எண்ணி, தண்டமிழ், நிலன்.

(2) மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்

இது, மதுரையில் எழுந்தருளியுள்ள மீனுட்சி அம்மையின் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழாகும். இந்நூலை இயற்றியவர் குமர குருபரர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தார். இவர் பெற்றோர் சண்முக சிகாமணிக் கவிராயர்–சிவகாமியம்மை. இவர் சமயம் சைவம். ஐந்து வயது வரையும் ஊமையாக இருந்து திருச்செந்தூர் முருகன் அருளால் பேசுந் திறம் பெற்றவர். இவரது ஞானகுரு மாசிலாமணித் தேசிகர். இவர் இற்றைக்கு 300-ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.

பிள்ளைத் தமிழ்–இது தாம் விரும்பும் தலைவரைப் பிள்ளைப்பருவமுடையவராகப் பாவித்து நூறு செய்யுட்களில் பாடப்பெறும் பிரபந்தம். இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஆண்பால் பிள்ளைத் தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பத்துப் பருவங்கள் வரும். பெண்பால் பிள்ளைத்தமிழில் கடைசி மூன்று மட்டும் மாறி, அம்மானை நீராடல் ஊசல் என வரும்.

வருகைப் பருவம்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின்
பயனே ! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே !
அகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுக்கும் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும்
விளக்கே ! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு மிளமென்
பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன்
திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ
வியமே ! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள வஞ்சிக்
கொடியே ! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே !
வருக வருகவே.

அருஞ்சொற்பொருள்

தொடுக்கும்-பாடப்படுகின்ற. தொடையின்-மாலையின். துறை தீந்தமிழ்-அகத்துறை புறத்துறை என்ற துறைகளையுடைய இனிய தமிழ். அகந்தை-ஆணவம். தொழும்பர்-தொண்டர்கள். சிமயம்-உச்சி. பிடி-பெண் யானை. தரங்கம்-அலைகள். ஓவியம்-சித்திரம். மதுகரம்-வண்டுகள். குழல் காடு-கூந்தல் தொகுதி.

வினாக்கள்

1. பிள்ளைத் தமிழ்—இலக்கணம் யாது ?

2. குமரகுருபரர்—குறிப்பு வரைக.

3. மீனாட்சியம்மையின் இயல்பு இப்பாட்டில் எங்ஙனம் விளக்கப்படுகிறது ?

4. துறைத் தீந்தமிழ், அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்—இவற்றை விளக்குக.

பயிற்சி

1. இதனை உரைநடையாக வரைக.

2. வாக்கியங்களில் பயன்படுத்துக:—பழம்பாடல், பழுத்த, நறுஞ்சுவை, அகந்தை, விளக்கு, உருக்கும், பெருவாழ்வு.

3. பிரித்து எழுதுக :—தொழும்பருளக் கோயிற்கேற்றும், விளையாடு மிளமென்பிடி, குழற்காடேந்து மிளவஞ்சி.

4. பண்புத்தொகை, வினைத்தொகை, உருவகம்-இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து சான்றுகள் தருக.

(3) திருவெங்கைக் கலம்பகம்

இது திருவெங்கை எனப்படும் திருவெங்கனூரில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பெற்ற சிறு நூலாகும். கலம்பகம் என்பது தொண்ணூற்ருறு வகைச் சிறு நூல்களில் ஒன்று. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பலவ்கைப் பாக்களால் அந்தாதித் தொடையாகத் தொடுக்கப்பெற்றது. தூது, குறம், மறம், பாண் முதலிய பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டது. நூறு செய்யுட்களையுடையது.

இந்நூலை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். தந்தை பெயர் : குமாரசாமிப் பண்டாரம். இவர் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணம் பயின்ருர். காலம் 17-ஆம் நூற்ருண்டு.

மறவர் குடியில் பிறந்த ஒரு பெண்ணைத் தனக்கு மணம் பேசி வருமாறு ஓர் அரசன் தூதுவனை அனுப்ப, மறவர்கள் மணம்மறுத்து, அனுப்பிய அரசனை இகழ்ந்து பேசுவதாகச் செய்யுள் செய்வது மறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

மறம்

விற்ற தார்களை பாதி யோடுவ
னத்தி லேயழ விட்டதார் ?
வெஞ்சி றைப்புக விட்டதார் ?
துகிலுரிய விட்டுவி ழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டு மென்றினி
மன்னர் பெண்கொள லொண்ணுமோ ?
உமியடாமண மென்ற வாய்கிழித்
தோலை காற்றில் உருட்டடா.
வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவ ரெமைய டுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண்வ ளர்ப்பினி லீந்தனம்
பெற்ற பிள்ளைகொ டுப்பரோ விதென்
பேய்பி டித்திடு தூதரே !

அருஞ்சொற்பொருள்

முதலிரண்டு வரி நளனையும் மூன்ருவது வரி இராமனையும் நான்காவது வரி பஞ்சபாண்டவரையும் குறிக்கின்றன. துகில்-ஆடை. தாரம்-மனைவி. விமலரானவர்-குற்றமற்றவராகிய சிவபெருமான். மிச்சில் மிசைந்தபின்-எச்சிலை உட்கொண்ட பிறகு.

வினாக்கள்

1. மறம் என்னும் உறுப்பின் இலக்கணம் யாது ?
2. கலம்பகம் என்பது யாது ?
3. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்—குறிப்பு வரைக.
4. பெண் கேட்டுவந்த தூதரிடம் மறவர் கூறியன யாவை ?
5. மறவர் பழித்துரைக்கும் அரசர்கள் யாவர் ? அவர்கள் ஏன் பழிக்கப்பட்டனர் ?

பயிற்சி

1. இந்தச் செய்யுளை உரைநடையாக அழகு சிதையாமல் வரைக.

2. பிரித்து எழுதுக :—விற்றதார், வனத்திலேயழ, துகிலுரிய, வேண்டுமென்றினி, விமலரானவரெமையடுத்தினிதெங்கள்.

3. சேர்த்து எழுதுக :—விட்டது+ஆர், வெம்மை+சிறை, விழித்தது + ஆர், கொளல் + ஒண்ணுமோ, மணம் + என்ற, கிழித்து+ஓலை.

4. பண்புத்தொகை, தொழிற்பெயர், பெயரெச்சம், வினை எச்சம்-இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து சான்றுகள் தருக.

(4) திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

இந்நூல் பாண்டிய நாட்டுக் 'கருவை' என்னும் பதியில் எழுந்தருளியுள்ள சிவபிரான்மீது அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாக்களைக் கொண்டுள்ளது. பதிற்றுப்பத்து: ஒவ்வொன்றிலும் பத்துப் பத்தாக அமைந்த நூறு பாடல்கள். அந்தாதி: ஒரு பாட்டின் அந்தம் (முடிவு) அடுத்த பாட்டிற்கு ஆதியாக (முதலாக) வரத்தொடுப்பது.

இந்நூலை இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்; கொற்கையிலிருந்து அரசாண்ட சிற்றரசர்; சிறந்த புலவர். இவர் காலம் 16-ஆம் நூற்றாண்டு என்பர்.

சிந்தனை யுனக்குத் தந்தேன்;
　　திருவரு ளெனக்குத் தந்தாய்
வந்தனை யுனக்குத் தந்தேன்;
　　மலரடி யெனக்குத் தந்தாய்
பைந்துண ருனக்குத் தந்தேன்;
　　பரகதி யெனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா
　　கருவையி லிருக்குந் தேவே. 1

தேவனே நின்னை யல்லாற்
    பிறிதொரு தேவை யெண்ணேன்
பாவனை நின்னி லல்லாற்
    பிறிதொரு பற்று மில்லேன்
யாவையுங் காட்டக் கண்டேன்
    என்னுளே நின்னைக் கண்டேன்
காவலா கருவை யானே
    இனிமற்றோர் காட்சி யுண்டோ ? 2

அருஞ்சொற்பொருள்

1. துணர்-பூங்கொத்து, பரகதி-மேலான நிலை. பயந்த-பெற்ற. பசுமை + துணர்-பைந்துணர்.

2. தேவை-கடவுளை. பாவனை-பக்தி.

வினாக்கள்

1. அந்தாதி, அதிவீரராம பாண்டியன்—குறிப்பு வரைக.
2. கொடுத்தவை எவை ? பெற்றவை எவை ?
3. "இனி மற்றோர் காட்சி உண்டோ ?"—இதனை விளக்குக.

பயிற்சி

1. இச்செய்யுட்கள் இரண்டையும் உரைநடைப் படுத்துக.

2. பிரித்து வரைக :—திருவருள், மலரடி, பைந்துணர், பிறிதொரு, நின்னிலல்லால், என்னுளே, மற்றோர்.

3. சேர்த்து எழுதுக :—அருள் + எனக்கு. கருவையில் + இருக்கும். நின்னை + அல்லால். பற்றும் + இல்லோர். காட்சி + உண்டோ.

4. தன்மை ஒருமை வினைமுற்று, முன்னிலை ஒருமை வினைமுற்று-இவைகளை இப்பாடப் பகுதியிலிருந்து எடுத்து எழுதுக.

(5) கலிங்கத்துப் பரணி

இச்செய்யுள் கலிங்கத்துப்பரணியிலுள்ளது. இந்நூலை இயற்றியவர் சயங்கொண்டார். இவர் ஊர் சோழநாட்டில் உள்ள தீபங்குடி. காலம் 12-ஆம் நூற்றுண்டு. பரணி என்பது போர்க்களம் பற்றிப் பாடுதலாகும்.

போர்க்களத்தில் வீரர்முகம் மலர்ந்து கிடந்தமை

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் ! பார்மின் ! 1

கொடியொடு வீழ்ந்து கிடக்கும் யானைகள்

சாய்ந்துவிழும் கடகளிற்றி னுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியும் கொடிகள் தங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகும்
கற்புடைமா தரையொத்தல் காண்மின்! காண்மின்! 2

அருஞ்சொற்பொருள்

1. வறியவரும்-வறுமையால் வருந்தும் ஏழை மக்களும். நெருங்கி-மிகுதியாகத் திரண்டு. பதுமமுகம்-தாமரை மலர் போன்ற முகம்.

2. கடகளிற்றுடன்-மதநீர்பொழியும் ஆண் யானைகளுடன். குருதி-இரத்தம். காந்தர்-கணவர். கனல் அமளி-தீயாகிய படுக்கை.

வினாக்கள்

1. கலிங்கத்துப் பரணி, சயங்கொண்டார்—குறிப்பு வரைக.

2. போர்க்களத்தில் விழுந்துகிடந்த வீரர் முகம் எவ்வாறு வர்ணிக்கப்பட்டது?

3. கொடியொடு வீழ்ந்து கிடக்கும் யானைகள் நிலை எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது ?

4. இச்செய்யுள்கள் மூலம் வெளிப்படும் தமிழர் பண்பாடு யாது ?

பயிற்சி

1. இவ்விரண்டு செய்யுட்களின் கருத்தைக் கொண்டு பண்டைத் தமிழரின் பண்பாட்டைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. பொருள் வரைக :—வறியவர், பதுமமுகம், பார்மின், கடகளிறு, தடங்குருதிமிசை.

3. பிரித்து எழுதுக :—நெருங்கியுள்ள, பருந்தினம், கழுகினம், கனலமளியதன்மேல், கற்புடை மாதரை யொத்தல்.

4. உவமைத்தொகை, முன்னிலை ஒருமை வினைமுற்று, வினை எச்சம்—இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து ஒவ்வொரு சான்று தருக.

5. வழிபாட்டுப் பாடல்கள்

(1) தேவாரம்

தேவாரம் : தே+ஆரம் எனப் பிரித்து, தெய்வத்திற்கு அன்போடு சூட்டப்படுகின்ற பூமாலை போன்ற பாமாலை எனவும், தே+வாரம் எனப் பிரித்து, தெய்வத்தைப் பற்றிய இசைப்பாட்டு எனவும் இருவகையாகப் பொருள் கொள்வர். இது அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் சைவ சமயகுரவர் மூவரும் பாடிய பாடல்களின் தொகுப்பேயாகும். பின்வரும் பாடலைப் பாடியவர் **திருஞான சம்பந்தர்** ஆவார். இவர் சீர்காழியில் பிறந்தார். பெற்றோர் சிவபாத விருதயர்—பகவதி. சிவனருளால் மூன்றும் ஆண்டிலேயே ஞானப் பாலுண்ணப் பெற்றுப் பல தேவாரப் பதிகங்களைப் பாடியவர். இவரது காலம் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு என்பர்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

அருஞ்சொற்பொருள்

சாம்நாளும்-இறக்கப் போகும் நாள் இன்னதென்பதையும். சாய்க்காடு–திருச்சாய்க்காடு என்னும் சிவத்தலம். நாமம்–திருப்பெயர்கள். நவின்று ஏத்த-சொல்லித்துதிக்க.

(2) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் : வைணவ சமயப் பெரியோராகிய ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச்செய்த நாலாயிரம் அருங்கவிகளையுடைய நூல். இதில் ஒரு பகுதியாகிய பெருமாள் திருமொழியிலுள்ளது இப்பாசுரம். இதனைப் பாடியவர் **குலசேகர ஆழ்வார்** ஆவர்.

இவர் சேரநாட்டில் கோழிக்கூடு என்னும் பகுதியை ஆண்ட திடவிரதன் என்னும் சேர அரசனுடைய மகனுகப் பிறந்தார். திருமாவிடத்து ஆராத அன்புடைய இவரைக் குலசேகர ஆழ்வார், குலசேகரப் பெருமாள் என்றும் வழங்குவர். இவரது காலம் கி. பி. 8–ஆம் நூற்றுண்டு என்பர்.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டு அம்மானே
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

அருஞ்சொற்பொருள்

வாள்-கத்தி. சுடினும்-காய்ந்த ஊசியினால் சுட்டாலும். மருத்துவன்பால்-வைத்தியனிடம். மாயத்தால்-மாயையினால். மீளாத்துயர்-நீங்காத துன்பம். வித்துவக்கோடு-திருவித்துவக்கோடு என்னும் மலைநாட்டுத் திருப்பதி. அம்மானே-பெருமானே. ஆள் ஆக-(பிறர்க்கு அடியவனாகாமல் உனக்கே) அடியவனாக.

(3) சீறாப் புராணம்

சீறா என்பது 'ஸீரத்' என்னும் அரபி மொழியின் திரிபு. 'வாழ்க்கை வரலாறு' என்பது இதன் பொருள். இது நபிநாயகத்தின் வரலாற்றைக் கூறுவது. இதனைப் பாடியவர் உமறுப் புலவர்; கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர்; எட்டயபுரத்தினர்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் உயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

அருஞ்சொற்பொருள்

இதயாசனம்=இதய+ஆசனம். மனமாகிய இடம். உறைந்து-வாழ்ந்து. பதி-ஊர். மதி-அறிவு.

(4) இரட்சணிய யாத்திரிகம்

இரட்சணியத்தை அடைய விரும்பிய ஆன்மாவின் மோட்ச யாத்திரையைப் பற்றிய நூல். இது கிறித்துவக் காவியம். இதன் ஆசிரியர் H. A. கிருஷ்ண பிள்ளை; கி. பி. 19-ஆம் நூற்றாண்டினர்; திருநெல்வேலிப் பதியினர்.

அகில லோகம் படைத்தளித் தன்பினால்
சகல மன்னுயி ருங்கதி சார்ந்துய
மகவை நல்கிய மாண்புறு தாதையாம்
பகவ னுக்கித யாஞ்சலி பண்ணுவாம்.

அருஞ்சொற்பொருள்

கதிசார்ந்து-நன்மை பெற்று. உய = உய்ய—பிழைக்க. மகவை-ஏசுநாதரை. நல்கிய-உலகிற்குக் கொடுத்த. தாதை-தகப்பன். பகவன்-கடவுள். இதயாஞ்சலி-இதய + அஞ்சலி-மன வணக்கம்.

வினக்கள்

1. குறிப்பு வரைக :—தேவாரம், திருஞானசம்பந்தர், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், குலசேகர ஆழ்வார், சீருப்புராணம், உமறுப்புலவர், இரட்சணிய யாத்திரிகம், H. A. கிருஷ்ண பிள்ளே.

2. நல்வினே பெறுதற்குரிய வழி யாது ?

3. குலசேகரர் இறைவனிடம் யாது கூறுகிருர் ?

4. சுவர்க்கப் பதியையும் மதியையும் மறந்தவர் எவர் ?

5. பகவனுக்கு இதயாஞ்சலி பண்ணுவது எதற்காக ?

பயிற்சி

1. இச்செய்யுட்களேக் கொண்டு இறைவன் இயல்புகளே விளக்கி ஒரு கட்டுரை வரைக.

2. பொருள் வரைக :—நவின்றேத்த, பிறப்பிறப்பென்றிலாதவன், மன்னுயிருங் கதிசார்ந்துய மகவை நல்கிய தாதை.

3. பிரித்து எழுதுக :—பகவனுக்கிதயாஞ்சலி, படைத்தளித் தன்பினுல், பிறப்பிறப்பென்றிலாதவனே, இதயாசனத்திருந்தவன், உனதருள்.

4. நன்னெஞ்சு, வாழ்நாள், நல்வினே, மாளாத, மீளா, இன்பதுன்பம்—இலக்கணக் குறிப்பு வரைக.

உரைக் கோவை

---

1. நமது தாய்மொழி

[பண்டித, நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத கருவியாயிருப்பது மொழியேயாகும். மொழியே மக்களை மாக்களினின்று வேறுபடுத்துவதாகும். இப்பொழுது உலக மக்களால் எண்ணிறந்த மொழிகள் பேசப்படுகின்றன. எம்மொழி எவ்வினத்தவரால் வழிவழியாகப் பேசப்படுகின்றதோ அம்மொழி அவ்வினத்தவர்க்குத் தாய்மொழி என்று சொல்லப்படும். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது போல ஒவ்வொருவர்க்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே. தாய்மொழியிடத்துப் பற்றில்லாதவரும் மக்கள் எனத் தகுவரோ ?

மொழிகள் யாவும் ஒரு தன்மையன என்றுவது, ஒரே தகுதியுடையன என்றுவது கூற வொண்ணுது. இன்னமும் எழுத்துருவம் பெருது பேச்சளவில் இருக்கும் மொழிகளும் உண்டு. எழுதப்பட்டும் பலவகைக் கருத்துக்களை வெளியிடுதற்கேற்ற சொற்கள் இல்லாதனவும், திருந்திய நிலையை அடையாதனவும், போதிய இலக்கிய இலக்கணங்களைப் பெருதனவுமாகிய மொழிகளும் உள்ளன. ஒரு மொழியின் திருந்திய நிலை, அதன் சொற்பெருக்கம், இலக்கிய விலக்கணங்கள் என்பவற்றிலிருந்தே அதனைப் பேசும் மக்களின் நாகரிக நிலையை அறியலாகும். தமிழ், ஆரியம், எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் என்னும் இவை பல்வகைப் பெருமையும் தொன்மையும் வாய்ந்த மொழிகள் என்பர். இவற்றுள், நூல் வழக்கிலன்றி உலக வழக்கிலும் தளர்ச்சி இன்றி நடைபெற்றுவருவது தமிழே.

நம் தாய்மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியதென்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு

களின் முற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் வைத்து நோக்கு மிடத்துப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனாகின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழியென்றும், இலக்கண வரம்புடைய மொழியென்றும் தொன்று தொட்டுப் பலராலும் பாராட்டப் பெற்று வருகிறது.

பழைய புலவர்கள் தமிழ் மொழியைக் குறிக்குமிடத் தெல்லாம் அதன் பெயரை வாளா கூறாது, செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், மென்றமிழ், இன்ற மிழ் என்று இவ்வாறாக யாதேனும் ஒரு சிறந்த அடைமொழி கொடுத்தே வழங்கி வந்திருக்கின்றனர். கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பநாடர், தமது இராமாயணத்தில் அயோத்தி நகரைக் குறிக்குமிடத்தே, 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற் றமிழில் சீரிய கூரிய தீஞ்சொல், வவ்விய கவிஞரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது' என்று பாடியுள்ளார். இதில் எவ்வளவு அடைமொழிகளால் தமிழ் சிறப்பிக்கப் பெற்றுள்ள தென்பதனைப் பாருங்கள் !

குமரகுருபரர் என்னும் புலவர் பெருமான் தாமியற்றிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்,

> ''கலைப்பால் நிறைந்த முதுக்குறைவிற்
> கல்விச் செல்வர் கேள்விநலம்
> கனியக் கனிய அமுதூறும்
> கடவுள் மறையும் முதற்சங்கத்
> தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
> தண்டேன் நறையும் வடித்தெடுத்த
> சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
> தமிழும் நாற ... ...''

என்கிறார். தீஞ்சுவைக் கனியாம்! தண்டேன் நறையாம்! அவற்றை வடித்தெடுத்த சாரமாம்! அது கனிந்து ஊற் றிருந்த பசுந்தமிழாம்!! தமிழ் என்றவளவில் இன்ப உணர்ச்சியானது அவருள்ளத்தே பொங்கித் ததும்பி வழிந் திருப்பதை நோக்குங்கள்.

பழைய புலவர்கள் இருக்கட்டும்; நம்மனோர் கண்முன் விளங்கிய கவிஞராகிய சுப்பிரமணிய பாரதியார், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று பல மொழிகளோடு ஒத்து நோக்கியறிந்த உண்மையை உரைத்துளாரன்றோ? தமிழ் இங்ஙனம் இனிமையுடையதா யிருத்தலாலன்றோ தமிழ் என்ற சொல் லுக்கே இனிமை என்ற பொருளும் உளதாயிற்று? ஆனால், தமிழ் இனியது என்று பிறர் கூறக் கேட்டதனா லேயே அதன் இனிமை புலப்படமாட்டாது. கற்கண்டு சுவை மிக்கதென்று கேட்டவளவில் அதன் சுவையை உணர முடியுமா? அதனை வாயிலிட்டுச் சுவைத்து உண் ணும் பொழுதன்றோ அதன் இன்சுவை புலனாகும்? அதுவேபோல், தமிழையும் பலகாலும் கற்றும் கேட்டும் சிந்தித்தும் உரைத்தும் ஆராய்ந்தும் துய்க்கும் பொழுதே அதன் இனிமை மிகுதியாகப் புலனாகும்.

தமிழ் அவ்வாறு இனிதாதற்குக் காரணம் அதன் மென்மையும், எளிமையும், தெளிவும் முதலியனவாகும். தமிழ் மெய்யெழுத்துக்களில் வல்லெழுத்து என்று ஒரு பிரிவு இருப்பினும், வேறு மொழிகளிலுள்ள சில எழுத் துக்களை நோக்கின் இவை மென்மையுடையனவே. அன்றியும் ஒற்றெழுத்துக்களும் டகரம் முதலிய உயிர் மெய்யெழுத்துக்களும் சொல்லின் முதலில் வாராதிருப்ப தும், வல்லொற்றுக்களும் வேறு சில எழுத்துக்களும் இறுதியில் வாராதிருப்பதும், சொல்லின் இடையிலும் சில எழுத்துக்களுடன் சில எழுத்துக்கள் கூடாதிருப்பதும் முதலியவெல்லாம் சொற்கள் மென்மையும் எளிமையும் உடையனவாதற்குக் காரணமாகின்றன. தமிழுக்கே சிறப்பாகவுள்ள ழகர வெழுத்தோசையானது மிக்க இனிமையுடையதொன்று. இங்கே குறிப்பிட்ட முதல் நிலை, இறுதிநிலை, இடைநிலை என்பனவும், சொற்கள் ஒன்றோ டொன்று கூடும் சந்தியிலக்கணங்களும் ஆகிய வரம்பு சிதையாமலே தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி யுற்று வருகிறது.

இனி, தமிழின் சிறப்பியல்பு அனைத்தையும் இங் கெடுத்துக் கூறுதல் நம் கருத்தன்று. இலக்கணத்தில் எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்று பெயரிட்டிருப்பதும், சொல்லையும் பொருளையும் உயர்திணை அஃறிணை என்று பாகுபடுத்தியிருப்பதும் ஆகிய இவற்றிலிருந்தே தமிழ் மக்களின் பழைய நாகரிக நிலையையும், தத்துவ உணர் வையும் குறிப்பாக அறியக்கூடும். சங்கவிலக்கியங்க ளாகிய எட்டுத்தொகை பத்துப் பாட்டுக்களிலிருந்து அக் காலத்தில் கல்வி எவ்வளவு பரவியிருந்ததென்பதும், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் எங்ஙனம் ஓங்கியிருந்தன வென்பதும், அரசியல், சமயநிலை, ஒப்புர வொழுக்கம் என்பன எத்தகைய நன்முறையில் விளங்கின வென்பதும், மற்றும் தமிழர்களுடைய காதல், மானம், வீரம், வண்மை, நீதி, சான்றாண்மை முதலியனவும் நன்கு அறியப்படும்.

திருக்குறள் என்னும் தெய்வச்செந்தமிழ் மறையானது தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளம்; நாம் அறியவேண்டும் பொருளனைத்தையும் எளிதில் அடையு மாறு திரட்டித் தந்து நமக்கு எய்ப்பினில் வைப்பாக விளங் குவது. சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய காப்பியங்களோ ஒன்பான் சுவை யும் பெய்துவைத்த சுவைப் பெட்டகங்கள். தமிழர் தம் தாய்மொழியிலுள்ள இவையனைத்தையும் கற்றுக்களிக்குங் காலமே தமிழ்நாடு உயர்நிலையடையுங் காலமாகும்.

நாம் இதுகாறும் நம் தாய்மொழியாகிய தமிழின் பழமை, இனிமை, இலக்கண வரம்புடைமை, அதிலுள்ள சிறந்த நூல்கள், அவற்றால் அறியலாகும் பொருள்கள் என்பனவற்றை ஒருவாறு கூறினோம். இனி, காலத் துக்குக் காலம் தமிழ் எங்ஙனம் வேற்றுமைகளை யேற்றும் வளர்ச்சியுற்றும் வந்துள்ளதென்பதனையும், இனி நாம் கையாள வேண்டிய முறைகள் யாவை என்பதனையும் சிறிது நோக்குவோம்:

உலகிலுள்ள யாதொரு மொழியும் தோன்றிய நாள் தொட்டு ஒரே தன்மையாய் இருந்து வருவதன்று. ஒரு குழவி பிறந்து வளர்ந்து உயர்நிலையடைவது போன்றே மொழியும் தோன்றி வளரும் இயல்பினதாகும். அது வழக்காறற்ற நிலையை எய்தின் ஒருக்கால் அஃது ஒரே தன்மையை உடையதாகலாம். வழக்காறுடைய உயிருள்ள மொழிகள் யாவும் காலப் போக்கிற்கேற்ப வேறுபடுதல் இயல்பே. தமிழ் இவ்விதிக்கு விலக்கானதன்று.

தொல்காப்பியத்திலும், சங்க விலக்கியங்களிலும் கிறு, கின்று, ஆநின்று என்னும் இடைநிலை பெற்ற செய்கிருன், செய்கின்ருன், செய்யாநின்ருன் என்பன போலும் நிகழ்கால வினைகள் வழங்கவில்லை; பிற்காலத்தே அவை பெருவழக்காயின. நான் என்னும் ஒருமைப் பெயரும், நாங்கள், நீங்கள், தாங்கள், அவர்கள் என்னும் பன்மைப் பெயர்களும் பிற்கால வழக்கே.

மரபுச் சொற்களில் மக்களின் இளமைப் பெயராகக் குழவி, மகவு என்பனவன்றி, பிள்ளை என்னும் பெயர் அப்பொழுது வழங்கியதில்லை; பிற்காலத்தில் பிள்ளையென்னும் பெயர் பெருவழக்காயினமையைப் பிள்ளைத் தமிழ் என்னும் பெயரே உணர்த்தும்.

செய்யுட்களுள்ளே பண்டு நிலவிய பரிபாடல் என்பது பிற்காலத்தே அருகியது. முன்னில்லாத தாழிசை, துறை, விருத்தங்களாகிய பாவினங்களும் சந்தப்பாக்களும் பிறவும் பின்னர்த் தோன்றி வளர்ச்சியுற்றன. பரணி, உலா, அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, தூது முதலிய எத்தனையோ பிரபந்த வகைகளும் தலபுராணங்களும் பிற்காலத்தே தோன்றி வளர்ந்தன. இரண்டடியுள்ள தாழிசை, கண்ணி என்பனவற்ருலும், கீர்த்தனை முதலியவற்ருலும் சிற்சில பிரபந்தங்கள் தோன்றலுமாயின.

சமணம், புத்தம், கிறித்துவம், இசுலாம் என்னும் சமயங்களின் கொள்கைகளும் அவ்வக்காலந்தோறும் தமிழில் வந்தேறின. பிறமொழிச் சொற்களையும் பொருள்

களையும் தமிழ் வெறுக்கவில்லை. ஆசிரியர் தொல்காப்பியனாரே வழிநூல் வகையுள் மொழிபெயர்த்தியற்றுதலைச் சேர்த்தும், இன்றியமையாத வடசொற்களை எடுத்துக் கொள்ளுதற்கு விதி வகுத்துமுள்ளார். அவ்வாறே எத்தனையோ மொழிபெயர்ப்பு நூல்கள் உண்டாயின. வட சொற்களும் புகுந்தன. இராவுத்தர், சலாம், சபாசு என்னும் பிறமொழிச் சொற்களும் இலக்கியத்தில் ஏறின. மற்றும் அரேபியம், இந்துத்தானி, பாரசீகம், போர்த்து கேசியம், ஆங்கிலம் முதலியவற்றிலிருந்து தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் ஏறியுள்ள சொற்கள் நூற்றுக்கணக்காக உள்ளன. ஆனால், அவையெல்லாம் உரையாடல்களிலும், ஆவணம் முதலியவற்றிலுமன்றி இலக்கியங்களில் ஏறிற்றில. இவ்வாறாக ஈண்டுக் காட்டியனவும், காட்டாதனவுமாகிய எத்தனையோ வேறுபாடுகள் ஒவ்வொரு காலப் பகுதியிலும் தமிழின்கண் நிகழ்ந்திருக்கின்றன.

ஆனால், தமிழின் வழிமொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் என்பன வடவெழுத்துக் களையும், வடசொற்களையும், வடமொழி விதிகளையும் வரம்பின்றியேற்றுத் தம் பழைய வடிவினை இழந்து நிற்றல்போலத் தமிழ் தனது தூயவடிவினை இழந்திலது; அடிப்படையான தனது இலக்கணத்தினின்று பிறழ்ந்து மிலது. இங்ஙனம் தமிழ் நங்கை காலத்திற்கேற்ற புதிய பணிகளைப் புனைந்தும், தன் இயற்கையெழிலும் பண்பும் சிதையாமல் நடந்து வருதலினாலேயே கன்னியெனப்படு கின்றாள். ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் 'உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே' என்ற அருமைப் பாட்டை நோக்குங்கள்.

பிறமொழிச் சொற்களை எடுத்துக்கொள்வது குற்றமின்றாயினும், அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதானது, தமிழின் தூய்மையையும் அழகையும் சிதைத்து, அதன் தொன்றுதொட்ட மாண்பினைக் கெடுப்பதாகும் என்பதனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டு

மென்பது உண்மையாயினும், அதன்பொருட்டுத் தமிழி னைத் துருவி யாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்ட லும், அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று புதிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதலும், இன்றியமை யாத வழிப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளு தலுமே அறிவும் ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகாவனவாம். அந்நெறியே கலைப்பயிற்சியை எளி தாக்குவதாகும்.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்து அவற்றைத் தமிழியல்புக் கேற்ற ஓசையினவாகத் திரித்துக்கொள்ளுதல் ஆன்றோர் கைக்கொண்ட நெறி யாகும். கல்வியிற் பெரியாராகிய கம்பர் இலக்குவன், வீடணன் என்றிவ்வாருக வடசொல்லுருவினைத் தமிழியல் புக்கேற்ப மாற்றியுள்ளமை காண்க. கிறித்துவ வேத புத்தகத்தை மொழிபெயர்த்தோர் இயேசு, யோவான், யாக்கோபு என்றிங்ஙனம் தமிழியல்புக் கேற்பச் சொற் களைத் திரித்தமையால் அதன் பயிற்சிக்குக் குறைவுண் டாயிற்றில்லை. ஒவ்வொரு மொழியிலும் இவ்வியல்பு காணப்படும். ஆகவே, பிறமொழிகளி லுள்ளவாறே அச் சொற்களைத் தமிழில் வழங்க வேண்டுமென்பது நேர்மை யாகாது.

இனி, கொச்சையாகவும் வழூப்படவும் பேசுவதனையே நல்ல நடையெனக் கொண்டாடி, அப்படியே எழுத வேண்டுமெனக் கூறுவார் சிலருமுளர்; அவ்வறிஞர்களே ஆங்கில மொழியில் அவ்வாறு பேசுவதோ, எழுதுவதோ செய்தால் எவ்வகை மதிப்பினை எய்தலாகும் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும்.

ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்தல் கூடாதாயினும், அதன் போக்கிலேயே சென்று பாழாகாதபடி, கரைகோலி நேரிதிற் செலுத்தி, கண்வாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலங்களை விளைவித்தல் அறிவுடைமையாகும். அவ்வாறே மொழி

யினையும் சில வரம்புகளுக்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

சாதனம் - கருவி. வரம்பு - கட்டுப்பாடு. மதுரம் - இனிமை. தேன்நறை - சிறந்த தேன். துய்க்கும்போது - அனுபவிக்கும்போது. திளைத்தல்-மூழ்குதல். ஒப்புரவொழுக்கம்-பிறர்க்கு உபகாரம் செய்து வாழும் சமூக வாழ்க்கை. வண்மை-ஈகை. சான்றாண்மை-எல்லாப் பண்புகளும் நிறைந்த தன்மை. எய்ப்பு-வறுமை. பெட்டகங்கள் - பெட்டிகள். வழக்காறு-பேச்சுவழக்கு. சந்தப்பா-பலவித இனிய ஓசை அமைந்த விருத்தப்பாட்டுகள். ஆவணம்-பத்திரம். மணிகள்-ஆபரணங்கள். எழில்-அழகு. வழுப்பட-தவறாக. மரூஉ-ஒருசொல் பேச்சு வழக்கில் சிதைந்து வழங்குவது. கண்வாய்-மதகு. புலம்-விளை நிலம்.

வினாக்கள்

1 திருந்திய மொழியாவது யாது? அவ்வகையைச் சேர்ந்த மொழிகள் யாவை?

2. கம்பரும் குமரகுருபரரும் தமிழை எங்ஙனம் சிறப்பித்தனர்?

3. காலப் போக்கிற்கேற்பத் தமிழில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் எவை?

4. தமிழ் இனிமை வாய்ந்த மொழியாக இருப்பதற்குரிய காரணங்கள் யாவை?

5. தமிழ் மக்களின் நாகரிகத்தையும் தத்துவ உணர்வையும் விளக்குவன யாவை?

6. சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை பத்துப் பாட்டுக்களிலிருந்து நாம் அறிவன யாவை?

7. தமிழ்மொழி காலப்போக்கிற் கேற்ப வேறுபாடுகளை ஏற்றுள்ளது என்பதனை 20 வரிகட்குள் எழுதுக.

8. தமிழ் நங்கை கன்னி யெனப்படுவதற்குக் காரணம் என்ன?

9. தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குவதுபற்றி ஆசிரியர் கூறுவது யாது?

10. கொச்சையாகவும் வழுப்படவும் பேசுவதனையே நல்ல நடையென்பார்க்கு ஆசிரியர் கூறுவது யாது?

2. முள்ளால் எழுதிய ஓலை

[டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள்]

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது." —குறள்.

சிவகங்கை சமத்தானத்திற்குத் தலைவராக ஏறக் குறைய 150 வருடங்களுக்கு முன்பு மருத சேர்வைகாரர் என்று ஒருவர் இருந்தார். அவருடைய பெருமையையும் நல்லியல்பையும் அறிந்த குடிகளும், வித்துவான்களும் அவரை மருத பாண்டியர் என்று வழங்கி வந்தனர்; மகா ராசா வென்றும் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வார்கள். அவர் பல வித்துவான்களை ஆதரித்துப் பலவகையான பரிசுகளை வழங்கினுர். தமிழறிவுடையவராதலால், வந்த வித்துவான்களோடு சல்லாபம் செய்து சாதுர்யமாக அவர் களுக்கு ஏற்பப் பேசுதலும், அவர்கள் கூறுவனவற்றைக் கேட்டு மகிழ்ந்து உடனுடன் பரிசளிப்பதும் அவருக்கு இயல்பு. அவர்மீது வித்துவான்கள் பாடிய பிரபந்தங் களும், சமயத்திற்கேற்ப இயற்றியுள்ள பல தனிப்பாடல் களும் அங்கங்கே வழங்கி வருகின்றன. அவர் சிறந்த வீரர். அவர் ஆட்சியின் எல்லையில் திருடர்கள் பயம் முத லியன இல்லையென்று சொல்லுவார்கள். அவருடைய ஆணைக்கு அஞ்சி யாவரும் நடந்து வந்தனர்.

அவர் பரோபகார சிந்தையும், சிவபக்திச் செல்வமும், புலவர்களை யாதரிக்கும் இயல்பும், தம் குடிகளைத் தாய் போல் காப்பாற்றும் தகைமையும் வாய்ந்தவர்.

அவருடைய முன்னுேர்கள் அந்தச் சமத்தானத்து அதிபதிகள் அல்லர். ஆயினும் அவருக்கு முன்பு இருந்த அரசருடைய உயிரை அவர் புலிவாயினின்றும் காப்பாற்றி யதனுலும், இணையற்ற வீரராக இருந்ததனுலும் அந்தச் சமத்தானத்தின் தலைவராக அவர் பின்பு ஆக்கப்பட்டார். அவருடைய ஆஸ்தானத்தில் 21 தமிழ் வித்துவான்கள்

இருந்தார்களென்பர். சவ்வாதுப் புலவர், முத்துவேலுப் புலவர் முதலிய பலர் அவரைப் பற்றிப் பாடிய செய்யுட்கள் இப்பொழுதும் வழங்குகின்றன. அவரால் அப்புலவர்களுக்கு அப்பொழுதப்பொழுது சுரோத்திரியமாக விடப்பட்ட கிராமங்கள் உண்டு. அவருடைய வீரப்பிரதாபமும், கொடைப்புகழும் புலவர்களாலே பலவாறு பாராட்டப் பெற்றவை. சில வருடங்களுக்கு முன் வரையிலும் சிவகங்கையைச் சுற்றியுள்ள இடங்களில் கிராமந்தோறும் அவரைப்பற்றிய செய்திகளையெல்லாம் கதை கதையாக முதியவர்கள் சொல்லி வந்ததுண்டு.

மருதபாண்டியர் தம் இறுதிக் காலத்தில் வலியவரான சிலருடைய பகைமைக்கு இலக்கானர். பகைவீரர்கள் பல முறை அவரைப் பிடிக்க எண்ணி முயன்றனர். அவர்களுடன் போராடியும், தந்திரமான செயல்கள் புரிந்தும் பாண்டியர் அவர்கள் கையில் அகப்படாமலே இருந்தார். ஒருசமயம் அவர் தம் சமத்தானத்தைச் சார்ந்த திருக்கோட்டியூரென்னும் தலத்தில் பெருமாள் கோயிலுக்கு எதிரிலுள்ள மண்டபமொன்றில் தங்கி இருந்தார். அவருடைய வலக்கையில் ஒரு சிலந்தி உண்டாகி அவரை வருத்தியது. அதனுல் அவர் சிறிது துன்புற்று அங்கே இருக்கையில், “பகைவருடைய காலாட்கள் தேடி வருகிருர்கள்; இந்த ஊர் எல்லேக்குள் வந்து விட்டனர்” என்ற செய்தியை ஓர் அந்தரங்க வேலேயாள் அவரிடம் வந்து அறிவித்தான்.

அவன் கூறியதை மருத பாண்டியர் கேட்டவுடன் வீரத்தால் அவருடைய இரத்தம் கொதித்தது; ஓர் ஆடையை உடனே கிழித்து அவர் கைச்சிலந்தியை இறுகக் கட்டிகொண்டார். தம்முடைய குதிரையை வருவித்து அதன் மேலேறிக் குதிரைக்காரனேயும் உடனழைத்துக் கொண்டு புறப்பட்டார். கையிலுள்ள வளரி ஒன்றுதான் அவருடைய தனித் துணேயாக இருந்தது. அவ்வாயுதம் மரத்தாலேனும், இரும்பினுலேனும், வெண்கலத்தினுலேனும் செய்யப்பட்டிருக்கும். அதை வீசுவதன் மூலம்

பலரை ஒரே தடவையில் கொன்றுவிடும் ஆற்றல் மருத பாண்டியருக்கு உண்டு.

மருதபாண்டியர் குதிரைமேல் வருவதை அறிந்த விரோதிகள் அவரை வளைந்து கொண்டனர்; அப்பொழுது மாலைக் காலம்; தம்மை வளைந்துகொண்ட வீரர்கள் மேல் தம் வளரியை வீசியெறிந்து பாண்டியர் கலக்கினார். அதை எறிவதும், அது பட்ட வீரர்கள் வீழ்வதும், அவர்களை வீழ்த்தி நெடுந் தூரத்தில் விழுந்த அவ்வாயுதத்தை அவ ரிடம் குதிரைக்காரன் கொணர்ந்து கொடுப்பதுமாகச் சிறிது நேரம் போர் நிகழ்ந்தது. எதிர்த்த வீரர்களை மருதபாண்டி யர் சின்னபின்னமாக்கினார். அவர்களையெல்லாம் சிதைத்து வேகமாகக் குதிரையை அவர் செலுத்தலானார். பின்னே வந்த சிலர் மேலும் மேலும் அவரைத் துரத்தினர். அவர்கள் கண்ணிற்கும் கைக்கும் அகப்படாமல் இரவெல்லாம் குதி ரையை மனோவேகத்தில் அவர் விட்டுக்கொண்டுபோனார்.

விடியற்காலையில் ஒரு கிராமத்தை அவர் அடைந்தார். இரவு முழுவதும் உணவில்லாமையாலும் பிடிக்க வந்தவர் களோடு போராடியதாலும் அவருக்கு அதிகமான பசியும் தாகமும் உண்டாயின. பிறகு அவர் அவ்வூர் அக்கிர காரத்தை நோக்கி வந்தார். அங்கே ஒரு கூரை வீட்டின் வெளியே சில குழந்தைகள் நிற்க, ஒரு கிழவி கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். அவ்வீட்டின் முன்னே பாண்டியர் தம் குதிரையை நிறுத்தினார்.

கிழவி தலையை நிமிர்ந்து பார்க்கையில் மருதபாண்டிய ருடைய கம்பீரமான தோற்றம் அவள் மனத்தில் அன்பை உண்டாக்கியது; உடனே அவள், "யாரப்பா! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். "அம்மா, பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன. ஏதாவது இருந் தால் போடவேண்டும்" என்றார் பாண்டியர். அவருடைய குரல் இரவில் அவர் அடைந்த களைப்பை விளக்கியது. "இராத்திரி தண்ணீரில் போட்டுள்ள பழைய சோறுதான் இருக்கிறது; வேண்டுமானால் போடுகிறேன் அப்பா!" என்று அன்பு கனிந்த வார்த்தைகளில் அக்கிழவி விடை

யளித்தாள். ஏதாயிருந்தாலும் எனக்கு இப்போது அமிர்த மாகும். மற்ெறாரு சமாசாரம்; நான் இராத்திரி முழுவதும் பிரயாணம் செய்து தூக்கமேயில்லாமல் கஷ்ட மடைந் தேன். ஆகையால் உண்ட பிறகு மறைவாக ஓரிடத்தில் இந்தக் குதிரையைக் கட்டிவிட்டு நான் படுத்துத் தூங்க வேண்டும்; அதற்கு இடம் கிடைக்குமா?'' என்ருர். ''இது தாஞ பெரிது! இந்த வீட்டிற்குப் பின்னே ஒரு கொட்டகை இருக்கிறது. அதன் பக்கத்தில் குதிரையை நீ கட்டிவிட்டுப் படுத்துத் தூங்கலாம். இன்றைக்கெல்லாம் தூங்கினுலும் யாரும் எழுப்பமாட்டார்கள். குதிரைக்கு ஏதாவது தீனி கொடுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, அவள் அன்போடு பழையமுதும் பழங்கறியும் மருதபாண்டியருக்கு இட்டாள். அவற்றையுண்ட அவரது பசி அடங்கியது. அந்த உணவு, இராச போசனத்திலும் சிறந்ததாக அவருக்கு இருந் தது. உண்டபிறகு அந்தக் கிழவி கொடுத்த ஓலைப் பாயொன்றை விரித்துக் குதிரைச் சேணத்தையே தலையணை யாக வைத்துக்கொண்டு அவர் கொட்டகையில் படுத்துக் கொண்டார். கணநேரத்தில் தூக்கம் வந்து விட்டது. மெய்மறந்து நெடுநேரம் அவர் தூங்கினுர். குதிரைக்கார னும் உண்டுவிட்டு ஒரு பக்கத்தில் படுத்துக்கொண்டான்.

மருதபாண்டியர் விழித்து எழுகையில் சூரியன் உச்சி யில் இருந்தான்; அந்தக் கூரைவீட்டில் உண்ட உணவும் உறங்கிய உறக்கமும் அவர் உடலுக்கு ஒரு புது வன்மையை யும், உள்ளத்திற்கு ஒரு புது உணர்ச்சியையும் அளித் தன. அவர் மனத்தில் நன்றியறிவு பொங்கி வழிந்தது. தமக்கு அன்போடு உணவு தந்த அந்தக் கிழவிக்குரிய கைம்மாருக இந்த உலகத்தைக் கொடுத்தாலும் ஈடாகா தென்று அவர் கருதினுர்.

" அம்மா ! " என்று கிழவியை அழைத்தார் மருத பாண்டியர். கிழவி வந்தாள். " உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிருர்களா ? இந்தக் குழந்தைகள் யார் ? " என்று அவர் கேட்க," அயலூருக்கு ஒரு விசேஷத்துக்காக என் னுடைய பிள்ளைகள் போயிருக்கிருர்கள். இவர்கள் அவர்க ளுடைய குழந்தைகள் " என்ருள் கிழவி. " உங்கள்

வீட்டில் ஏடு எழுத்தாணி இருந்தால் கொண்டு வாருங் கள்'' என்று பாண்டியர் சொல்லவே, கிழவி, "இங்கே ஏடேது? எழுத்தாணி யேது? அவர்கள் எங்கே வைத் திருக்கிருர்களோ, தெரியாதப்பா'' என்ருள். உடனே அவர் குதிரைக்காரனை அழைத்து அந்த வீட்டுக் கூரையி லிருந்து ஒரு பனை ஓலையையும், பக்கத்திலிருந்த வேலியி லிருந்து ஒரு முள்ளையும் கொண்டுவரச் சொன்னர். அவன் கொணர்ந்து கொடுத்தான். அந்த முள்ளைக் கொண்டு அவ் வோலையில் அவர் ஏதோ எழுதலானர். கிழவி அவர் எழுதுவதை வியப்போடு பார்த்துக்கொண்டு நின்ருள். மருத பாண்டியர் அந்தக் கிராமம் அக்கிழவிக்குச் சுரோத் திரியமாக விடப்பட்டதென்று எழுதிக் கையெழுத் திட்டார். பிறகு முள்ளாலெழுதிய அந்த தர்மசாசனத் தைக் கிழவியின் கையிலே கொடுத்து "அம்மா! சிவ கங்கைச் சமத்தான அதிகாரிகளிடம் இதை நீங்கள் கொடுத் தால் உங்களுக்கு ஏதாவது அனுகூலம் உண்டாகும்'' என்று சொல்லிவிட்டு அவர் குதிரை மேலேறிக் குதிரைக் காரனையும் அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

பழையது போட்ட கிழவி தன் குமாரர்கள் ஊரிலிருந்து வந்த பிறகு அவர்களைக் கொண்டு அவ்வோலையைச் சிவகங்கை அதிகாரிகளிடம் காட்ட எண்ணினள். ஆனல் சில நாள் கழித்து அந்தச் சமத்தானத்தை விரோதிகள் கைப்பற்றிக் கொண்டதாக அறிந்து வருந்தினள்.

மருதபாண்டியரை அப்பால் பகைவர்கள் பிடித்துச் சிறையில் வைத்தனர். சிலகாலஞ் சென்ற பிறகு அவ ருடைய அந்திய காலத்தில், "உம்முடைய விருப்பம் யாது?'' என்று பகைவருடைய முக்கிய அதிகாரிகள் கேட் டார்கள். "நான் சுரோத்திரியமாக யார் யாருக்கு எந்த எந்தக் கிராமத்தை அளித்தேனே, எந்த எந்தப் பொருளை வழங்கினேனே அவைகளெல்லாம் அவர்களுக்கு உரியன வாகவே இருக்கும்படி செய்ய வேண்டும். இது தான் என் பிரார்த்தனை; வேறு ஒன்றும் இல்லை'' என்று அவர் வேண் டிக்கொண்டார். நன்றியறிதலின் மிகுதியால் எழுந்த அவ

ருடைய இறுதி விருப்பத்தை விரோதிகள் அங்கீகரித்து நிறைவேற்றினுர்கள்.

மருதபாண்டியன் வழங்கிய பொருள்கள் உரியவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவென்ற செய்தியை அறிந்த அக்கிழவி, தன்னிடமுள்ள ஓலையைக் காட்டினுல் ஏதாவது கிடைக்கலாம் என்ற நம்பிக்கையினுல் அதனை அனுப்புவித்தாள்; தான் இருந்த 'பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்' என்ற கிராமத்தைச் சுரோத்திரியமாகப் பெற்ருள். தன் வீட்டிலே பழையது உண்ட வீரர் மருதபாண்டியரென்பதை அப்பொழுதுதான் அவள் உணர்ந்தாள். முள்ளாலெழுதிய ஓலைக்கு அவ்வளவு மதிப்பிருந்ததைக் கண்டு அவள் வியந்தாள். மருதபாண்டியருக்கு இருந்த நன்றியறிவை நினைந்து உருகினுள்; அவருடைய முடிவையறிந்து அவள் அடைந்த வருத்தத்திற்கு எல்லையேயில்லை. கையிற் சிலந்தியைக் கட்டிய கட்டுடன் வீட்டினிறப்பிலுள்ள பனை ஓலையையும் வேலி முள்ளையும் ஏடெழுத்தாணியாகக் கொண்டு முகமலர்ச்சியுடன் மருதபாண்டியர் எழுதிய காட்சியைத் தன் மரணகாலம் வரையில் அக்கிழவி தன் மனத்திற் பதித்துவைத்து வாழ்த்தினுள். அங்ஙனம் அவள் செய்ததில் ஆச்சரியமில்லை அல்லவா ?

அருஞ்சொற்பொருள்

ஞாலம்-உலகம். மாண-மிகவும். சமத்தானம்-அரசவை, சிற்றரசு. வித்துவான்-புலவர். நல்லியல்பு-நல்ல குணம். சாதுர்யம்-திறமை. ஆஸ்தானம்-சபை. அக்கிரகாரம்-வேதியர் வாழுமிடம். இறுதி விருப்பம்-கடைசிக்கால விருப்பம். மகாராசா-பேரரசர். சல்லாபம்-கூடிப் பேசுதல். பிரபந்தம்-நூல். பரோபகாரம்-பிறர் நலம். அதிபதி-தலைவர். சுரோத்திரியம்-பரிசாகத் தரப்படும் நிலம்.

வினுக்கள்

1. மருத சேர்வைக்காரரின் பண்புகள் யாவை ?
2. அவர் சிவகங்கைச் சமத்தானத் தலைவரானது எப்படி ?
3. அவர் புலவர்களை எவ்வாறு நடத்தினுர் ?

4. திருக்கோட்டியூர் கோவில் மண்டபத்தில் அவர் ஏன் இருந்தார் ? அங்கு என்ன நடந்தது ?

5. பகைவர் வந்துவிட்டனர் என்பதறிந்த மருதபாண்டியர் என்ன செய்தார் ?

6. போர் நடந்த வகை யாது ?

7. பாண்டியர் கிழவியிடம் என்ன கேட்டார் ?

8. கிழவி பாண்டியருக்குச் செய்த உதவி யாது ?

9. பாண்டியர் தூங்கி விழித்தபின் கிழவியிடம் என்ன கேட்டார் ?

10. பாண்டியர் கிழவிக்குச் செய்த உதவி யாது ?

11. மருதபாண்டியரின் இறுதி வேண்டுகோள் யாது ?

12. கிழவி அடைந்த நன்மை யாது ?

3. கல்வெட்டுகள்

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனூர் அவர்கள்,
எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச்.டி.]

எகிப்து, சீனம், பாபிலோனியா முதலிய நாடுகளில் தோன்றிய நாகரிகங்களே உலக நாகரிகங்களில் மிகப் பழமையானவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இவ்விடங்களில் கிடைத்துள்ள எழுத்துக்களின் வளர்ச்சிக் குறிகளையும், மெக்ஸிகோ, ஈஸ்டர் தீவுகள் முதலியவற்றில் காணப்படும் எழுத்துக் குறிகளையும் நன்கு ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், " இவ்வெழுத்து முறைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஒருபடித்தாகவே காணப்படுகின்றன" என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

" முதலில் உடும்பின் உருவம் அவ்வுயிரைக் குறிக்க வரையப்பட்டது. பின்னர் அவ்வுருவம் அவ்வுயிரைக் குறிக்காமல் நிலத்தைக் குறிக்கப் பயன்பட்டது. முதலில் வரையப்பட்டது 'உரு எழுத்து' எனப்படும்; பின் குறிக்கப் பட்டது சித்திர சங்கேதக்குறி (குழூஉக்குறி) எனப்படும். சீனம், எகிப்து முதலிய பண்டைநாடுகளில் இச்சங்கேதக் குறிகள் பல கிடைத்துள்ளன. நடைக்குக் கால்களும், பார்வைக்குக் கண்ணும், அதிகாரத்திற்குக் கையும், பலத்திற்குத் தோளும் வரையப்பட்டன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்க வரையப்பட்ட சித்திரம், நாளடைவில் அப்பொருளின் பெயரைக் குறிப்பதாக மாறியது. அதுவே 'ஒலி எழுத்து' என்பது. அஃதாவது, 'வேல்' என்பதை உணர்த்தும் சித்திரம் 'வேல்' என்னும் பெயரையே குறிக்கத் தொடங்கியது. ஒரு மனிதனைச் சித்திரித்துக் காட்டி, அவன் கையில் 'வேல்' இருப்பதாக எழுதியுள்ள தொடர்ச் சித்திரம் 'வேல்' 'ஆள்' என்னும் இரு பெயர்களைக் குறிக்கத் தொடங்கியது.

" ஆனல் இக்குறிகளைக் கொண்டு தொடர் மொழிகளையும் முற்றிய கருத்துக்களையும் எழுத, இடர்ப்பாடு ஏற்பட்

டது. அதனல் வார்த்தைகளை அசைகளாகவும் சீர்களாக வும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உருவத்தை எழுதி, அவற்றைச் சேர்த்து வாசிக்கும் முறை ஏற்பட்டது. அம்முறையும் கடினமாகத் தோற்றியதால், பின்வந்த மக்கள் சில குறிப்பிட்ட குறிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு குறியையும் அது உணர்த்தும் சொற்களின் சிறப்பாகக் கொண்டனர். இம்முறையில் தோன்றிப் படிப்படியாக வரையத் தொடங்கியதே 'வரிவடிவம்' என்று எழுத்தாராய்ச்சியாளர் எடுத்தியம்புகின்றனர்.

தமிழ்நூற் சான்றுகள்

மேலே கூறப்பெற்ற சித்திர சங்கேதக் குறிகளும், அவற்றின் வடிவ வளர்ச்சிக் குறிகளும் இந்தியாவில் சிந்து வெளிநாகரிகப் புதை பொருள்கள் மீது பொறிக்கப்பட்டுள்ளன. இவற்ருல் இவை இந்தியாவிற்குப் புதியன அல்ல என்பதை அறியலாம்; ஆயினும், மேலே சொல்லப்பட்ட எழுத்துக்களின் விவரங்களைத் தமிழைத்தவிர வேறு எந்த இந்தியமொழி நூல்களிலும் காணல் இயலாது. நன்னூலுக்கு உரை வகுத்த மயிலை நாதர் எழுத்துக்களை 1. உரு எழுத்து, 2. தன்மை எழுத்து, 3. உணர்வு எழுத்து, 4. ஒலி எழுத்து என்று குறித்துள்ளார். யாப்பருங்கல இறுதிச் சூத்திர வுரையில் ஓராசிரியனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய எழுத்து வகைகளைக் குறிக்கும் இடத்தில் உரையாசிரியர், இவ்வெழுத்துக்களுக்குரிய சூத்திரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

1. "காணப் பட்ட வுருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்."

2. "கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை
உண்டென் றுணர்த்துவது உணர்வெழுத் தாகும்."

3. "இசைப்படு புல்லின் எழாஅல் போலச்
செவிப்புல னுவது ஒலியெழுத் தாகும்."

4. "முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்ருெடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை எழுத்து."

இவையன்றி, அச்சூத்திரவுரையில் வேறு பல எழுத்து வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில், காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தில் இறக்குமதியான மூட்டைகட்குக் 'கண்ணெழுத்து' இடப்பட்டது என்பது கூறப்பட்டுள்ளது. 'கண்ணெழுத்து-சித்திர எழுத்து' என்று நச்சினுர்க்கினியர் பொருள் கூறலை நோக்க, சிலப்பதிகார காலத்திலும் ஒருவகைச் சித்திர எழுத்துக்கள் குறிப்பிட்ட சில காரியங்களுக்கேனும் வழக்கில் இருந்தன என்று கருத இடமுண்டாகிறது. இவை நிற்க.

இந்திய எழுத்துக்கள்

வரலாற்று உண்மைக்குப் பொருந்தியனவாக ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொண்ட இந்திய எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை (1) பிராமி, (2) கரோஷ்டி (3) திராவிட (4) யவனுணியா என்பன. இவற்றுள் யவனுணியா என்பது கிரேக்கரும் அவரைச் சார்ந்தவரும் பயன்படுத்தி வந்தவை. 'கரோஷ்டி' என்பது வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியில் ஏறத்தாழக் கி. பி. 4-ஆம் நூற்ருண்டில் வழக்கில் இருந்த எழுத்து முறையாகும். பிராமி என்பது அசோகனுடைய கல்வெட்டுக்களிலும், கி. மு. முதல் மூன்று நூற்ருண்டுகளிலும், தென் இந்தியக் குகைகளிலும் காணப்படும் எழுத்து முறையாகும். பிராமி எழுத்து முறை மேற் சொன்ன இரண்டு எழுத்து முறைக்கும் மாறுபட்டது. பிராமி எழுத்துக்களை நன்கு ஆராய்ந்த அறிஞர்கள், அது தமிழுக்கென அமைக்கப்பட்ட குறியாகலாம் எனக் கருதுகின்றனர். திராவிட என்பது வட்டெழுத்து. உருவெழுத்து முதலிய நிலைகளைத் தாண்டி அகரவரிசை எழுத்துக்களைப் பெற்ற பிராமி லிபி, ஏறத் தாழக் கி. மு. 3-ஆம் நூற்ருண்டில் தமிழகத்திற் புகுந்து, நாட்டு நிலைக்

கேற்பச் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வட்டெழுத்தாக மாறியிருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர். வட்டெழுத்து ஒரு காலத்தில் தமிழகம் முழுதும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். தொண்டை நாட்டிலும் காவிரி வரையுள்ள தமிழகத்திலும் பல்லவராட்சி ஏற்பட்ட பிறகு, பல்லவரால் போற்றி வளர்க்கப்பட்ட பிராமி லிபியின் வழி வந்த கிரந்தமும், அதனை ஒட்டி வளர்ந்த கிரந்தத் தமிழும் வழக்காறு பெறத் தொடங்கின. அக்காலத்தில் பல்லவ ராட்சி ஏற்படாத பாண்டிய நாடு, சேர நாடு, கொங்கு நாடு களில் வட்டெழுத்து வழங்கி வந்தது.

பல்லவர்க்குப் பின்பு தென்இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட சோழர் காலத்தில் கிரந்தத் தமிழே பெருவழக்குப் பெற்றது.

சோழர்க்குப்பின் தமிழகத்தை ஆண்ட விசயநகர அரசர் காலத்திலும் மகாராஷ்டிர மன்னர்கள் காலத்திலும் நாகர எழுத்துக்கள் தமிழகத்தில் இடம் பெற்றன.

இந்திய சாசனங்கள்

இந்திய எழுத்துக்களைப்பற்றி இதுகாறும் கூறப் பெற்ற விவரங்கள், இந்தியாவிலுள்ள கல்வெட்டுக்களி லிருந்தும் செப்பேடுகளிலிருந்தும் தெரிவனவாகும். இந்திய சாசனங்கள் எவ்வாறு தோன்றலாயின என்பது அடுத்து வரும் வினவாகும். பிராமி எழுத்துக்களைக் கொண்ட அசோகன் காலத்துக் கல்வெட்டுக்கள் பௌத்த சமயக் கொள்கைகளை மக்களிடைப் பரப்புவதற்காக உண் டானவையாகும். பின் வந்த பட்டயங்களும் கல்வெட்டுக் களும் கல்வியிற் பெரியவர்க்கும், வீரர்கட்கும், கோவில்கட் கும், அவ்வப்போது நிலதானம் முதலிய தானங்கள் செய் யப்பட்டபோது எழுதப்பெற்றவையாகும். ஒரு பொருளைக் குறித்துக் கல்லில் வெட்டி, அக்கல்லைப் பலரும் சேர்ந்து பார்க்கத்தக்க கோவில்போன்ற பொது இடங்களில் பதித்து, மக்களைக் காணச் செய்வது நம் நாட்டில் இன்றளவும் இருந்துவரும் வழக்கமாகும். போரில் இறந்த வீரனுக்குக்

கல் நாட்டி, அதன் அடியில் அவனுடைய பெயரையும் சிறப்புக்களையும் வெட்டுவித்தல் தொல்காப்பியத்தில் கூறப் பட்டுள்ளது.

அரசர்கள் கற்றூண்களை நாட்டி, அவற்றில் தங்கள் வெற்றிகளைக் குறிக்கத் தொடங்கினது முதல், கல்வெட்டுக் கள் நாட்டில் மதிப்படையலாயின. ஏறத்தாழக் கி. மு. 170-இல் கலிங்கப் பேரரசனாக இருந்த காரவேலன் உதய கிரியில் நாட்டிய ஹதிகும்பாதூண் கல்வெட்டுக் குறிக்கத் தக்கது. தனக்கு 117 ஆண்டுகட்கு முன்பு (ஏறத்தாழக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில்) தமிழக வேந்தர் ஒற்றுமை யுற்று வன்மையோடிருந்தனர் என்பதை அவன் அக்கல் வெட்டில் குறித்துள்ளான்; மோரியப் படையெடுப்புத் தமிழகத்தில் நடந்து படுதோல்வியுற்றது என்பதைச் சங்க நூல்களின் வாயிலாக அறிகிறோம். ஆயின் அதன் காலம் புலப்படவில்லை. காரவேலன் கல்வெட்டுச் சான்றை நோக்க வலிமிக்க, மோரியர் படை யெடுத்துத் தோல்வி யுற்றதையும் காண, அத்தோல்விக்குத் தமிழரசர் ஒற்று மையே காரணம் என்பதையும், அப்படையெடுப்பின் காலம் கி. மு. 3-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் ஊகித்தல் தவறாகாது. இவ்வாறு இந்திய வரலாறு கட்ட, இலக்கியத்திற்கு உறுதுணையாக உதவுவது கல்வெட் டாகும்.

கி. பி. நான்காம் நூற்றாண்டில் பேரரசனாக இருந்த சமுத்திர குப்தன் கி. பி. 340-இல் தக்கணத்தின்மீதும் தென் னிந்தியாவின்மீதும் படையெடுத்து வந்தான். அவனது வெற்றியைக் குறிப்பது அல்லஹபாத்தில் உள்ள தூண் கல்வெட்டாகும். அதில் பல அரசர் பெயர்களும் அவர்கள் நாடும் ஊரும் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த குறிப்பு காஞ்சியை விஷ்ணுகோபன் என்ற பல் லவன் ஆண்டுவந்தான் என்பது. பல்லவர் என்ற சொல்லே சங்க நூல்களில் இல்லை. சங்க காலத்தின் இறுதியில், காஞ்சி சோழராட்சியில் இருந்ததை மணிமேகலை குறிக் கிறது. கி. பி. 340-இல் காஞ்சியில் பல்லவ வேந்தன் இருந் தான் என்பதை நோக்க, பல்லவர் சங்கப் பாடல்களில்

குறிக்கப்படாமையையும் நோக்க, சங்கத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்று கொள்ளச் சமுத்திர குப்தனது வெற்றித் தூண் கல்வெட்டு உதவிபுரிதலைக் காணலாம்.

வடநாட்டு ஹர்ஷனையே புறங்கண்ட சாளுக்கிய வேந்தனான இரண்டாம் புலிகேசி என்பவன் சுமார் கி. பி. 642-இல் நரசிம்மவர்மனிடம் தோல்வியுற்றான். அவனது தலைநகர் வீழ்ந்தது. அங்கொரு வெற்றித் தூண் எழுந்தது. அதில் பல்லவன் வெற்றி பெற்றதையும் வாதாபி பல்லவராட்சியில் 13 ஆண்டுகள் இருந்ததையும் அத் தூண் கல்வெட்டுக் குறிக்கிறது. தம் அரசன் ஏவலாற் சென்று வடபுலத்து வாதாபியை வென்றவர் சிறுத்தொண்டர் என்று சேக்கிழார் தமது வரலாற்றுச் சிறப்புடைய பெரிய புராணத்தில் பாடியுள்ளார். வாதாபி இவ்வாறு வீழ்த்தப்பட்ட காலம் கி. பி. 642 என்று மேற்சொன்ன கல் வெட்டுக் குறிக்கிறது. இதனால் சிறுத்தொண்டர் காலம் இன்னதென உறுதிப் படுகிறது. அதனால் அவரது சம காலத்தவரான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நின்ற சீர் நெடுமாறர் முதலியோர் காலமும் உறுதிப்படுகிறது. வாதாபிக் கல்வெட்டுச் செய்தி பெரிய புராணச் செய்திக்கு உறுதுணையாக நின்று, சமயாச்சாரியர் காலத்தை அறியவும் பெருந்துணை புரியும் பெற்றியை நாம் நன்கு உணரலாம்.

இப்பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயர், அவனுடைய விருதுப் பெயர்கள், அவனுடைய போர்ச் சிறப்புகள், கல்வெட்டு எழுந்த நோக்கம் முதலியன சுருங்கிய அளவில் குறிக்கப்பட்டன. ஆயின், கூரம் பட்டயம் போன்ற பல்லவர் பட்டயங்களில் அவ் வேந்தர்கள் செய்த போர்களின் வருணனைகள் விரிவான முறையில் வடமொழிச் சுலோகங்களாகக் காணக் கிடக்கின்றன.

மெய்க்கீர்த்தி

பல்லவர்க்குப் பின் வந்த விசயாலயன் மரபினரான பிற்காலச் சோழப் பேரரசருள் முதலாம் இராசராசன் கால

முதலே தென் இந்தியக் கல்வெட்டுக்களிலும் பட்டயங்களிலும் விரிவானமுறையில் அரசர் தம் வெற்றிகளை முறைப் படுத்திக் கூறும் 'மெய்க் கீர்த்தி' இடம் பெறலாயிற்று. மெய்க்கீர்த்தி எப்படி அமைந்திருக்கும் என்பதைப் பின் வரும் உதாரணம் கொண்டு அறியலாம்:

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக் கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்ப பாடியும் தடிகைபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோராச கேசரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 26-வது.........."

இதனுல், இராசராசன் தனது 26-ஆம் யாண்டுக்குள் சேரநாடு, வேங்கை நாடு எனப்படும் கீழைச் சாளுக்கிய நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் எனப்படும் மாலத்தீவுகள் என்பவற்றை வென்று சோழப் பேரரசனுக விளங்கினுன் என்பது தெளிவாதல் காணலாம்.

இவ்வாறு சாசனங்களில் இராசராசன் நுழைத்த மெய்க்கீர்த்தி முறை பின் வந்த சோழப் பேரரசர் அனைவராலும் கைக் கொள்ளப்பட்டது. மேலும் சோழப் பேரரசர் சமயவுணர்ச்சி மிக்கவராயிருந்தமையால், அவர்கள் காலத்தில் கோவில்கள் பெருஞ்சிறப்புற்றன ; அரசன் முதல் சாதாரணக் குடிமகன் ஈருக அனைவருமே கோவில்களைத் தம் உயிரெனக் கருதி, அவற்றின் வளர்ச்சிக்குத் தம்மாலான அறங்களைச் செய்தனர் ; அவ்வறங்களைக் கல்வெட்டுக்களில் பொறித்தனர். எனவே, சோழர் காலத்தில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் ஏற்பட்டன.

கல்வெட்டுக்கள் உணர்த்துவன

கல்வெட்டுக்கள் அனைத்தும் வேந்தர்தம் போர்ச் செயல்கள், அரசியல் அமைப்பு, கொடைச் சிறப்பு, சமய நிலை, நாட்டு நடப்பு, உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம், கைத்தொழில், பயிர்த்தொழில், நாட்டு விளை பொருள்கள், அயல் நாட்டு உறவு, நாட்டில் வழங்கிய எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைகள், பலவகை ஆடைகள், அணிகள் முதலியன பற்றிய விவரங்களை நமக்குத் தெரிவிக்கின்றன. இவற்றுடன், இலக்கியங்களில் உள்ள பல விளங்காத பகுதிகட்கும் கல்வெட்டுக்கள் விளக்கம் தருகின்றன. சிறுத்தொண்டர் வாதாபி வென்ற காலத்தை உறுதிப்படுத்த வாதாபிக் கல்வெட்டுத்தானே உதவி புரிந்தது! மற்றொரு சிறந்த செய்தியையும் இங்குக் குறிக்க விரும்புகிறேன்:

தன் மைந்தனது தேர்க்காலில் பசுக்கன்று அகப்பட்டு இறந்தமைக்காக, அம்மகன் தன் ஒரே மைந்தன் என்பதையும் கருதாது அவனைத் தேரூர்ந்து கொன்ற மநுநீதிச் சோழனது வரலாறு முழுவதையும், அதாவது அரசன் ஏவற்படி அரசகுமாரனைக் கொல்ல மனம் வராது தானே தற்கொலை செய்து கொண்ட அமைச்சன் செயல் உட்பட எந்தத் தமிழ் நூலிலும் கூறப்படவில்லை என்பது நோக்கத் தக்கது. இந்த விவரங்களை எல்லாம் நமக்குத் தரும் நூல் பெரிய புராணம் ஒன்றுதான். அந்நூலாசிரியர் இவ்விவரங்களை எங்கிருந்து பெற்றார் எனின், அவருக்குச் சிறிது முன்னர்ப் பொறிக்கப்பெற்ற திருவாரூர்க் கோவிலில் உள்ள பெரிய கல்வெட்டிலிருந்துதான் எனக் கூறலாம். சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர். மேற்சொன்ன கல் வெட்டு இவ்விரண்டாம் குலோத்துங்கனுக்குத் தந்தையான விக்கிரம சோழன் காலத்தில் பொறிக்கப்பட்டது. மனுவேந்தன் ஆணையை நிறைவேற்ற மனமில்லாது இறந்த அமைச்சனது பரம்பரையினருள், ஒருவன் விக்கிரம சோழனுக்கு அமைச்சன். அவன் பெயர் பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதி

விடங்கனுன குலோத்துங்க சோழ மாவலிவாணராயன் என்பது.

சுந்தரருடைய தாயாரான இசை ஞானியார் திருவாரூர்க் கோவில் தலைமை அர்ச்சகரான ஞான சிவாசாரியார் மகளார் என்பதைத் திருவாரூர்க் கல்வெட்டே உணர்த்துகின்றது. இவ்வாறு கல்வெட்டுக்கள் உணர்த்தும் அரிய செய்திகள் மிகப் பல. இவை நாட்டின் பழம் பெருமைக்கு உயிர் நாடி ஆதலை நன்குணர்ந்தே அக்கால மக்கள் இவற்றைப் பொன்னே போலப் போற்றி வந்தனர்; இவை சிறிதும் பழுதுபடாதபடி எண்ணெய் பூசிப் பாதுகாத்து வந்தனர்; கல்வெட்டுக்களுக்குச் செப்பேடுகளில் படியும் எடுத்து வைத்திருந்தனர்; பழுதுற்ற கோவிலையிடித்துப் பழுது பார்ப்பதற்கு முன்பு, அவற்றில் இருந்த கல்வெட்டுச் செய்திகளைப் பனையோலைகளில் எழுதிக் கொண்டு, கோவில் திருப்பணி முடிந்த பின்னர், அவற்றை ஊரவையோர் காண, அக்கோவிற் சுவர்களில் பொறித்து வைத்தனர்.

அருஞ்சொற்பொருள்

ஒருபடித்தாக-ஒரேவாருக. இடர்ப்பாடு-தொல்லை. வடபுலம்-வடநாடு. பெற்றி-தன்மை. ஈருக-இறுதியாக.

வினக்கள்

1. மிகப்பழமையான நாகரிகம் எங்குத் தோன்றியது ?
2. முதன் முதலாக எழுத்து எப்படித் தோற்றம் எடுத்தது ?
3. சங்கேதக் குறிகள் என்பவை யாவை ?
4. வரிவடிவம் எப்படித் தோன்றியது ?
5. மயிலைநாதர் குறித்துள்ள எழுத்துக்கள் யாவை ?
6. இந்திய எழுத்துக்கள் யாவை ?
7. இந்திய எழுத்துக்கள் நான்கு வகையினையும் விளக்குக.
8. இந்திய சாசனங்கள் எவ்வாறு தோன்றின ?
9. கல்வெட்டுக்களால் உண்டாகும் பயன் யாது ?
10. வாதாபிக் கல்வெட்டால் உண்டான பயன் என்ன ?
11. மெய்க்கீர்த்தி என்பது யாது ?
12. கல்வெட்டுக்கள் உணர்த்துவன யாவை ?

4. நாடும் நகரமும்

[டாக்டர் திரு அ. சிதம்பரநாதன் அவர்கள்,
எம். ஏ., பிஎச். டி., எம். எல். சி.]

பழங்காலத் தமிழகம் என்றவுடனே, ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்பது அறியப்படும். அக்காலத் தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகள் கடைச்சங்க கால இலக்கியம் எனக் கூறப் படுவனவற்றுள் குறிக்கப்பட்டுள ; சிறப்பாகப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் சொல்லப்பட்டுள. அவற்றுட் சிலவற்றைக் காண்போம்:

பழைய தமிழ் நாடு சேர சோழ பாண்டியர்களால் ஆளப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே. சேரர்க ளுடைய தலைநகரம் வஞ்சி ; சோழருடையது காவிரி புகும் பட்டினம் ; பாண்டியருடையது மதுரை.

இந்த நகரங்களில் காவிரி புகும் பட்டினத்தைப் பற்றி அறிவனவற்றை முதலிற் காண்போம். அங்கே பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்தனர் ; தட்ப வெப்ப நிலை நன்றாக அமைந்திருந்தது ; கடற்காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது ; மண் நல்ல வளம்பொருந்தியதாக இருந்தது. அந்நகர மக்களின் சிறந்த தொழில் உழவே. காவிரியாறு கடலொடு கலந்த அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைக்காக வானத்தை நோக்கி வாழ்ந் தவர் அல்லர். நெல்லும் கரும்பும் நிறைய விளைவிக்கப் பட்டன. அடுத்த சிறப்புடைய கைத்தொழிலாய் அமைந் திருந்தது நெசவே. அந்நகரத்திற் பஞ்சமும் தொழு நோயும் ஏற்பட்டதில்லை. அந்நகரத்தைச் சோழ அரசன் ஆண்டுவந்தான். அவ்வரசனை நாட்டின் முதற்குடியாக மதித்தார்கள். இது, "பெருநிலம் முழுதாளும் பெரு மகன் தலைவைத்த......குடிகள்" என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியப்படும். அவ்வரசன் செங்கோலினனாக ஆண்டுவந்தான். அமைச்சர், புரோகிதர், சேனாபதியர்,

தூதுவர், சாரணர் என்பவர்கள் அவனுக்கு உற்ற துணைவராய் இருந்து உதவிவந்தார்கள். அவர்களை "ஐம்பெருங்குழுவினர்" என்றார்கள். இவரையல்லாமல் "எண்பேர் ஆயத்தார்" என்பாரும் அரசனுக்கு உறு துணையாய் அமைந்திருந்தனர். அவர்கள் கரணத் தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்பவர்கள்.

அரசன் தக்க ஆட்களை அமைத்து, வரிகளை உரிய முறையில் வாங்கிக் குடிமக்களின் நன்மைக்குப் பயன் படுத்திவந்தான். உதாரணமாக, கரிகால் வளவன் என்ற சோழன் தன் நகர எல்லையை அடைந்த பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கும்படி பணித்திருந்தான். அவ்வாறு சுங்கம் வசூலிக்கப்பட்டுவிட்ட பொருள்களின்மீது அவனுடைய ஏவலர்கள் அவனது புலி முத்திரையை இடுவது வழக்கம். இங்ஙனம் அவனது நகரத்தில் இறக்குமதி செய்து குவிக்கப்பட்ட பண்டங்கள் பல குன்றுகளைப் போலக் காட்சியளித்தன. இதனைப் பட்டினப்பாலை என்னும் பழைய நூல்,

"உல்குசெயக் குறைபடாது
... ...
அளந்தறியாப் பல பண்டம்
... ...
புலிபொறித்துப் புறம் போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போரேறி,"

எனச் சொல்லியிருக்கிறது.

அந்நகரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் இன்ன என்ற விவரமும் அறிகிறோம். அரேபியாவிலிருந்து கப்பல்களிற் குதிரைகளும், மேற்குக்கடற் பக்கத்திலிருந்து படகுகளில் மிளகுப் பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், பொதிய மலையிலிருந்து

சந்தன மரமும், பாண்டி நாட்டிலிருந்து முத்துக்களும், கீழ்க்கடற் பகுதியிலிருந்து பவளங்களும் வந்திறங்கின என அறிகிறோம், ஈழநாட்டிலிருந்து பனைவெல்லம் முதலிய சில உணவுப் பொருள்களும், பர்மாவிலிருந்து சில மணப் பொருள்களும், சீன தேசத்திலிருந்து கர்ப்பூரம், குங்குமம் முதலிய பொருள்களும் வந்திறங்கின.

காவிரிபுகும் பட்டினத்தில் வாழ்ந்த மக்களிற் சிலர் பகற்பொழுதில் ஓய்வு நேரத்தை எவ்வாறு கழித்தனர் என உருத்திரங்கண்ணனூர் கூறியுள்ளார். நன்றாக உண்டுடுத்து வாழ்ந்த அவர்கள் சில வேளைகளில், ஊர் நடுவே கூடி ஆட்டுக்கிடாயையும், சிவல் என்னும் பறவையையும் முட்டவிட்டு விளையாட்டுப் பார்ப்பது வழக்கம். இன்னும் சில வேளைகளில் களரியிற் புகுந்து குத்துச் சண்டை, வெட்டுச் சண்டை, கவண் கல் எறிதல் முதலியவற்றில் ஈடுபடுவர்; பல வேளைகளில், கடலாடியும், புனல் படிந்தும், நண்டுகளைப் பிடித்து ஆட்டியும், அலைகளோடு போட்டியிட்டும் பொழுது போக்குவர்; இரவில் பட்டாடைகளை நீக்கி மெல்லிய பருத்தியாடைகளை உடுப்பர்; பாடல்கள் கேட்பர்; நாடகம் காண்பர்; வெண்ணிலவின் பயனையும் துய்ப்பர்.

இவ்வாறு இனிமையாகப் பொழுது போக்கினர் என்றால் அம்மக்கள் மிக்க செல்வம் படைத்தவராகவும், உழைத்துழைத்து ஊதியம் திரட்டினவராகவும் இருந்தனர் என்பது சொல்லாமலே விளங்கும் அன்றோ! அவரெல்லாம் பகலிலே சாயுங்காலம் வரையும், பொழுதுபோன பின்னரும் தொழில் ஆற்றினவர். அவர்களிற் சிலர் பூவும் புகையும் விற்றவர்கள்; சிலர் வண்ணமும் சுண்ணமும் விலை பகர்ந்தவர்கள்; சிலர் பட்டாலும் எலி மயிராலும் பருத்தி நூலாலும் ஆன ஆடைகளை இயற்றி விலைக்கு விற்றவர்கள். இன்னும் சிலர் அவரை, துவரை முதலிய எண்வகைத் தானியங்களை விற்று ஊதியம் தேடினவர்கள்; சிலர் பிட்டும் அப்பமும் விற்றவர்கள்; மீன் விற்றவரும்

உப்பு விற்றவரும் உண்டு. வெண்கலக் கன்னரும், செம்புக் கொட்டிகளும், மரவேலை செய்த தச்சரும், உழைத்துழைத்துக் களைத்துப்போன கொல்லரும் நாடகம் நயந்தும் ஆடல்கள் ஓர்ந்தும் வந்தார்கள் என அறிகிறோம். காவிரி புகும் பட்டினத்திலே, உருக்குத் தட்டாரும், பணித் தட்டாரும், சிற்பாசிரியர்களும், சித்திரக் காரர்களும், தையற்காரர்களும் விரும்பித் தொழில் புரிந்தனர் என அறிகிறோம். துணியினாலும் நெட்டியினாலும் பூ, வாடா மாலை, பொய்க் கொண்டை முதலிய பொருட்களை அமைக்கும் கைத்தொழில் வல்லவர்கள் இருந்தார்கள். அவர்களைப்பற்றிச் சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்திற் செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புகாரின் கடற்கரைப்பக்கம் மருவூர்ப்பாக்கம் என ஒரு பிரிவாகவும், உட்பக்கம் பட்டினப்பாக்கம் என ஒரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளரும், பட்டினப்பாக்கத்தில் அரசரும் செல்வரும் வாழ்ந்திருந்தனர்.

மதுரை ஆகிய பாண்டியர் நகரத்தைக் குறித்து மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியிற் கூறியுள்ளார். மதுரை ஆறுகிடந்தாற் போன்ற அகன்ற தெருக்களை உடையது. தெரு ஆறு போலவும், இருபக்கத்து வீடுகள் ஆற்றின் கரைபோலவும் அமைந்திருந்தன. இனி, மதுரையின்கண் உள்ள கடைகளில் இரவிலும் பகலிலும் எவ்வாறு வாணிகம் நடந்தது என்பதை அறிவோம். அந்திக் கடையை அல்லங்காடி என்றும், பகற்கடையை நாளங்காடி என்றும் கூறுவது அக்கால மரபு.

சிலர் அறுத்த சங்கினை வளையல் முதலியனவாகக் கடைந்து தருவர்; சிலர் அழகிய மணிகளுக்குத் துளையிடுவர்; சிலர் பொன்னை உரைத்து மாற்றுக் காண்பர்; சிலர் பொன்வேலை செய்வர்; சிலர் புடைவை விற்பர்; சிலர் அருமையான ஓவியம் வரைவர். சிலர் சிற்றுடையும் பெரும் புடைவைகளும் கொண்டுவந்த தத்தம் சிறுவரோடும் நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் கால் கடுக்க நின்று விற்பர். பலாப்பழம், வாழைப்பழம், மாம்

பழம், பாகற்காய், வழுதுணங்காய், வாழைக்காய், கிழங்குகள், கீரை முதலானவற்றை விற்கும் பல இரவுக் கடைகளும் உண்டு.

இவ்விரவுக் கடைகளெல்லாம் முதல் யாமத்திலேயே மூடப்பட்டுவிடும். பிறகு, இரண்டாம் மூன்றும் யாமங்களிலே ஊர்க்காவலர்கள் உறுதியுடன் நகரில் உலாவப் போவர். மழை பெய்து தெருவில் நிறைய நீரோடிக் கொண்டிருக்கிற பொழுதிலும், தம் கடமையில் வழுவாராய், கையில் வில்லும் அம்புமாக இவர்கள் திரிவார்கள் என மதுரைக் காஞ்சி சொல்கிறது.

மதுரை நகரத்தில் அக்காலத்தில் தொழில் புரிந்தார் இவரிவர் எனச் சிலப்பதிகாரம் கூறுவதை நோக்குவோம்: சிலர் செம்பாலும் வெண்கலத்தாலும் பற்பல பாத்திரங்கள் செய்வர். சிலர் ஆனைக்கொம்பு முதலியவற்றைக் கடையும் தொழிலில் ஈடுபடுவர். வண்டியும் தேர்வட்டையும் தேர்க் கொடிஞ்சியும் செய்வோர் பற்பலர் உண்டு. கையில் துலாக் கோலோடும் மரக்காலோடும் நின்று பண்டங்களை நின்றவிடத்திலேயே அளந்து கொடுப்போர் பலர். சில கடைகளில் ஆடகப் பசும்பொன் விற்கப்படும். இங்கே "சாம்பூனதம் விற்கப்படும்," "இங்கே சாதரூபம், கிளிச் சிறை விற்கப்படும்" என்று குறிப்புப்பட எழுதப்பட்ட கொடிகள் திகழும். அதனால் பொருள் வாங்குவோர் ஒவ்வொரு கடையிலும் புகுந்து திரும்பாமல் வேண்டிய கடையில் புகக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது என அறிகிறோம்.

சேரர் வஞ்சி ஒரூரின் தனிநிலை பெறுததாய் நானிலத்தின் பான்மையும் பொருந்தப் பெற்றிருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. அந்நகரத்தில் மலையும் கடலும் கானும் வயலுமுண்டு என்று சொல்லத் தக்கபடி ஒரு வருணனை காணப்படுகிறது. "குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாட்டினையும், உழவர் பாடிய ஓதைப் பாணியையும், இடையர் பாடிய குழலின் பாணியையும், நுளைச்சியர் பாடிய நெய்தற் பாணியையும்" செங்குட்டு

வன் மனைவி கேட்டனளாய்ப் படுக்கையில் இருந்தாள் எனக் கூறப்பட்டிருப்பதால், அந்நகரத்தின் தட்ப வெப்ப நிலை கலப்பு வாய்ந்தது என்பது பெறப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் வேட்டுவரும், உழவரும், இடையரும், பரதவரும் ஆகிய பலதிறத்தவர் என்பது பெறப்படும். அந்த நகரத்தில், சிவனுக்கும் திருமாலுக்கும் சிறந்த கோவில்கள் அமைந்திருந்தன.

அக்காலத்தில், தமிழரசருடைய தலைநகரங்களிற் பிறநாட்டு வேந்தருடைய ஒற்றர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குரிய சான்று சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திற் காண்கிறோம். சேரன் செங்குட்டுவன் வடநாடு புகுந்து வெற்றிகொள்ள வேண்டும் எனத் தன் அமைச்சனிடம் சொல்லவும், அவன், "கண்ணகிக்குக் கோவில் எடுக்க ஒரு கல்லிற்காகத்தானே போகவேண்டும்! வடநாட்டு மன்னர்க்கு முடங்கல் அனுப்பினால் வந்துவிடும்" என்றான். அப்பொழுது அழும்பில்வேள் என்பான், "முடங்கல் வரைய வேண்டா. இந்த ஊரிற் பறை அறைந்தாற் போதும். இவ்வூரின்கண் வடநாட்டு மன்னரின் ஒற்றராய் வந்திருப்போர் அறிவித்து விடுவர்," எனச் செங்குட்டுவனுக்குச் சொன்னான் எனப் படிக்கின்றோம். இதனால் சேருடைய தலைநகரத்திற் பிற வேந்தரின் ஒற்றர்கள் வந்து தங்கியிருந்தனர் என்பதும் அவ்வாறே ஏனைய நாடுகளில் தமிழ் வேந்தர்களின் ஒற்றர்கள் போய்த் தங்கியிருந்தனர் என்பதும் அறியப்படும்.

இனி, நாட்டுப்புறங்களில் மக்கள் வாழ்க்கை நடத்தி வந்த விதத்தைப் பார்ப்போம்: சில இடங்களில், உப்பு வாணிகர் வண்டி நிறைய உப்பு மூட்டைகளை ஏற்றிப் பக்கத்து ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பர். அப்படிப் போகுங்கால், வண்டியில் பூட்டப்பட்ட எருது சோர்ந்தாற் பூட்டுதற்கு வேண்டும் என வேறு எருதுகளைத் தம்மோடு கொண்டுபோவர். வண்டியில் ஆடவர் ஏறிக்கொள்ளாது, மகளிரை ஓட்டச்செய்து, தாம் சாலையில் இருமருங்கும் எருதுகள் திரும்பாமலும் வண்டியச்சு முறியாமலும் பாது

89770
சென்னை-600 008

காத்துச் செல்வர். சில வேளைகளில், கையிலே குழந்தை யுடைய மகளிரும் அவ்வாறு எருதுகளைத் துரத்தி வண்டியை ஓட்டிக்கொண்டு போவது உண்டு என்பது பெரும்பாணாற்றுப் படையால் அறியப்படுகிறது. வேறு சில இடங்களில் மிளகுப் பொதிகளைக் கழுதை மீதேற்றிப் பக்கத்தே வாளும் கையுமாகப் போய்க் கொண் டிருந்தவர்களும் உண்டு.

TB
031(8)
N58

பெரும்பாணாற்றுப் படையில் அடியிற் காணுமாப் போல ஒரு வருணனை அமைந்துள்ளது. ஆண்டு ஒரு குடிசை தோன்றுகிறது. அஃது ஈச்ச இலையால் வேயப் பட்டிருக்கிறது. குடிசையின் முன்பக்கத்தில் ஒரு விளா மரம் நிற்கிறது. அவ்விளாமரத்தடியில் ஒரு பார்வை மான் கட்டின இடம் தேய்ந்துபோயிருக்கிறது. அக்குடிசை யிற் குழந்தையைப் பெற்றுள்ள பெண்ணொருத்தி குழந்தை யோடு மான்றோலில் முடங்கிக் கிடக்கிறாள். அவ்வீட்டின் பிற பெண்டிர் இன்னொரு இடத்தில் காணப்படுகிறார்கள். அங்கே நிலத்தைக் கடப்பாரையினாலே குத்தித் தோண் டிக்கொண் டிருக்கிறார்கள். அவ்விடத்தில் எறும்புகள் தேடிவைத்துள்ள புல்லரிசியை வாரி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். விளாமர நிழலில் நிலவுரலிலே இட்டுக் குத்துகிறார்கள். ஆழ்ந்த கிணற்றிலிருந்து உவரிநீர் சிறிது முகந்து வருகிறார்கள். ஒரு வாய்போன பானையிலே அதைப் பெய்து, முரிந்த அடுப்பிலே ஏற்றுகிறார்கள். அப்படி ஆக்குஞ் சோற்றோடு உப்புக் கண்டத்தைச் சேர்த்துக் கொண்டு பிறர்க்கும் அளித்துத் தாமும் உண்கிறார்கள்.

ஒரு நாட்டின்கண் ஓரிடத்தில் காயவைத்திருக்கும் உணவுப்பொருள்களைத் தின்னவரும் கோழியைப் பொற் குழையினால் ஓட்டுகின்ற அளவு செல்வச் செருக்குடைய மகளிர் வாழ்ந்தார்கள்; அந்நாட்டில்தானே ஒரு மூலையில் பசியால் வாடிய மக்கள் பலர் வாழ்ந்தனர் எனச் சொல்லக் கூடிய வகையில் இவ்வருணனைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற வாழ்க்கையை நடத்திவந்த இடைக்குல மகள் ஒருத்தியின் செய்தியை இனிக் காண்போம்:

பொழுது விடிய இன்னும் ஓர் யாமம் இருக்கும்பொழுதே இவள் எழுந்து தயிர் கடைகிறுள். இவள் மத்தினுல் கடைவது புலி முழக்கத்தைப் போல் இருக்கிறது. தயிரைக் கடைந்து வெண்ணெயை எடுத்துவிட்டாள். இப்பொழுது தலையிலே மோர்ப்பானை அதற்குமேல் வெண்ணெய்ச் சட்டி. இவற்ருேடு புறப்பட்டு ஒரு நகர்ப்புறம் போகிருள். தலையிலே பூஞ்சுமட்டின்மீது அப்பானை ஏற்றப்பட்டுள்ளது. இவள் காதிலே குழை அசைகிறது. குறிய கூந்தலையுடைய இவள் மோர் விற்று நெல்லைப் பெறுகிருள். அந்த நெல்லெல்லாம் சுற்றத்தாரும் தானும் உண்பதற்கு ஆகின்றன. நெய்யை விற்று அதன் மதிப்பை அப்படியே நகர மக்களிடையே நிறுத்தி வைத்துவிட்டு மீள்கிருள். நாளடைவில் அந்த மதிப்பைப் பொன் கட்டி ஆக்கலாம். ஆனுல், இவள் அவ்வண்ணம் செய்ய விரும்பவில்லை. அந்தத் தொகைக்குப் பதில் பாலெருமைகளும் நல்ல பசுக்களுமே வாங்கி வருகிருள்.

இவள் வீட்டிலே உள்ள ஆடவன் சீழ்க்கை அடிக்கும் வாயை உடையவன் ; செருப்புத் தழும்பு ஏறின காலை உடையவன் ; பசுக்களை விரட்டுகின்ற தடி அமைந்த கையினை உடையவன் ; ஒழிந்த நேரங்களில் மரங்களை வெட்டி வருவதற்கு உதவும் கோடரியை உடையவன் ; காவடி சுமந்த தழும்பமைந்த தோளையுடையவன். அவன் பால் கறந்த கையைத் தலையிலே தடவித் தடவி ஒருவித சிறந்த மணம் அவன் தலையில் வீசுகிறது. கொம்பிலும் கொடியிலும் பூத்த பல பூக்களால் ஆன கதம்பத்தை அவன் தலையிலே சூடிக்கொண்டு வருகிருன். இப்பொழுது தான் மாடுகளை மேய்த்து வீடு திரும்புகிருன். அவனேடு சென்ருல் அவன் வீட்டிலே பசுந்தினைச் சோறும் பாலும் கிடைக்கும்.

இனி, ஒரு நாட்டுப்புற மறையவர் வீட்டினை நோக்குவோம். அந்த வீட்டின் வாசலிலே பந்தல் போடப்பட்டிருக்கிறது. அப்பந்தர்க்காலில், ஒரு பசுக்கன்று கட்டப்பட்டுப் பொலிவாக விளங்குகிறது. வீடு மெழுகப்பட்

டிருக்கிறது. அந்த வீட்டிலோ கோழியோ நாயோ காணப் படவில்லை. ஒரு கிளி மாத்திரம் கூண்டிலே காணப்படு கிறது. அதுவோ வேதம் ஒலிப்பதுபோலத் தோற்றுகிறது. அந்த வீட்டுப் பெண் இப்பொழுதுதான் நல்ல வெண்ணெ யில் மாதுளங்காயைப் பொரித்து மிளகுப் பொடியைத் தூவிக் கருவேப்பிலையிட்டுத் தாளித்துக் கொண்டிருக் கிருள். வாசனை மூக்கில் ஏறுகிறது. அவள் கையில் ஐந்தாறு வளையல்கள் ஒலிக்கின்றன. அங்கே போனல், நல்ல பருப்புச் சோறும், பொரியலும், மாவடு ஊறுகாயும் கிடைக்கும்.

இன்னும் சிறிது தொலை சென்ருல் ஆண்டு ஒரு வீடு தென்படும். அது வேளாளர் வீடுபோலத் தோற்றுகிறது. புதிய வைக்கோலால் அவ்வீடு வேயப்பட்டிருக்கிறது. பல பசுக்கன்றுகளைத் தாமணியாற் சேர்த்துத் தறிகளில் கட்டி யிருக்கிருர்கள். அவ்வீட்டில் சில பெரிய நெற்குதிர்கள் காணப்படுகின்றன. அக்குதிர்களைக் 'கூடுகள்' என்கிருர் கள். அவை ஏணிக்கு எட்டாத உயரமுடையன. முகட் டைத் திறந்து பழைய நெல் சொரியப்பட்டுள்ள கூடுகள் நிரம்பியிருக்கின்றன. அவ்வீட்டுச் சிறுவர் சிறுதேர் உருட்டி விளையாடிச் சோர்ந்துபோய்ச் செவிலித் தாயாரிடத் துப் பால் நிறைய அருந்திப் படுக்கையிலே துயில்கிருர் கள். அங்கே சென்ருல் வெண்ணெல்லிலிருந்து எடுத்த அரிசியாலான இனிய சோற்றைப் பெட்டைக் கோழிப் பொரியலோடு பெறலாம். இவை போன்ற பழங்கால நாட்டுப்புறச் செய்திகளும் நகரச் செய்திகளும் சங்க இலக் கியங்களால் அறியப்படுகின்றன.

அருஞ்சொற்பொருள்

தட்ப வெப்பநிலை-சீதோஷ்ண நிலை. தொழுநோய்-பெருநோய். புரோகிதர்-பின்வரப்போகும் நன்மையை முன்னரே அறிந்து கூற வல்லவர்; சாரணர்-ஒற்றர். கரணத்தியலவர்-கணக்கர். கருமகாரர்-அரசியல் அலுவலர். உல்கு-சுங்கம். மூடை-மூட்டை. பொதி-மூட்டை. களரி-மற்போர் நடக்கும் இடம். வண்ணம்-சாந்து. சுண் ணம்-வாசனைத்தூள். கொடிஞ்சி-கைக்கு உதவியாகத்தேர்த்தட்டின்

முன்னே நடப்பட்ட தாமரைப்பூ போன்ற அலங்கார உறுப்பு. துலாக் கோல்-தராசு. பாணி-பாட்டு. முடங்கல்-கடிதம். தாமணி-கன்று களைக் கட்ட உதவும் கயிறு.

வினாக்கள்

1. காவிரிபுகும் பட்டினத்தின் மேன்மைகளைத் தொகுத்து எழுதுக.

2. புகார் நகரத்தவர் பற்பல தொழில்கள் செய்து இன்ப வாழ்க்கை நடத்திய முறையை விளக்குக.

3. மதுரையைப் பற்றிச் சங்க நூல்கள் கூறும் செய்திகளைத் தொகுத்து வரைக.

4. சேரர் வஞ்சியைப் பற்றிச் சிலப்பதிகாரத்தால் அறியப்படுவது யாது?

5. அயல் நாட்டு ஒற்றர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து சென்றனர் என்பது எதனுல் அறியப்படுகிறது?

6. பெரும்பாணாற்றுப் படையில் காணப்படும் வருணனையை எழுதுக.

7. நாட்டுப்புற வாழ்க்கையை நடத்திவந்த இடைக்குல மகள் ஒருத்தியின் செயல்கள் யாவை?

8. இடைக்குல மகளின் வீட்டில் உள்ள ஆடவனைப் பற்றி எழுதுக.

9. நாட்டுப்புற மறையவர் வீட்டில் காணப்படுவன யாவை?

5. பண்டைத் தமிழரசரும் புலவரும்

[பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்]

இத்தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங்காலம் ஆண்ட பழந்தமிழ்க்குடி மக்களாகிய சேர பாண்டிய சோழர்களே, பண்டைத் தமிழரசராவர். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவரெனப் பட்டவராவர். ஈண்டுக் குறிக்கப்பெற்ற காலம் சங்க காலமாகும். அவ்வரசர்களின் கலைவன்மை, செங்கோன் மாண்பு, வீரத் திறன், வள்ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெரு மக்களின் உயர்ந்த பண்புகளையும், புலவரிடத்து அரசர் வைத்திருந்த நன்மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்குதலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்தற்குப் புறநானூறு, பதிற்றுப் பத்து முதலிய சங்க நூல்கள் துணையாவனவாம்.

இவற்றுள், அவ்வரசர்தங் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால் அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக் காட்டைவிட, அவர்தம் பாடல்களே தக்க சான்றாகும்; ஆதலின், சேரருள் பாலை பாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலியோரும், பாண்டியருள் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழருள் சோழன் நலங்கிள்ளி, சோழன் குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலியோரும் பாடியவை சங்க நூல்களிற் காணப்படுதல் கொண்டு கலை வன்மையை உணரலாம். பூதப்பாண்டியன் தேவி பெருங் கோப்பெண்டு பாடிய பாடல் புறநானூற்றிற் காணப்படுதலால் அரசியரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றி வாய்ந்திருந்தனர் என்பது புலனாகும்.

அவ்வரசர்தஞ் செங்கோன் மாண்பை, “நீதி மன்றங்களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தேனாக” என ஒல்லையூர் தந்த பூதப் பாண்

டியனும், "என் நிழலில் வாழுங் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக் காணது, 'எம் இறைவன் கொடியன்' எனக் கண்ணீர் விட்டுப் பழி தூற்றுங் கொடுங்கோலனுகுக" எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், "குடிமக்களை இறை வேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமையைப் பெற்ருல் அது அவனுக்குத் தாங்க முடியாத கனமுடையதாகும்" எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், "நின்னிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லது வேறு வெம்மையை அறியார்" எனச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடுதலானும், பிறவற்ருலும் உணரலாம்.

அவர்தம் வீரத்திறன், "யமன் கோபித்து வரினும் அதனையும் மாற்றும் வலியுடையை" என ஒரு சேரனிடம் ஒரு புலவரும், "கருக்கொண்ட மகளிர் விரும்பி உண்டாலல்லது பகைவரால் உண்ணப் படாத மண்ணையுடையை" என மற்ரெரு சேரனிடம் மற்ரெரு புலவரும் கூறுதலாலும், "தேர்மொட்டுப் பொலிவு பெற நின்றவன் யாவனே? அவன் கண்ணி வாழ்க! ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலுண்டலை ஒழித்து உணவும் இன்று தான் உண்டான்; தன் மேல் வெகுண்டு வந்த வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவரைத் தான் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்ததும் இலன்" என ஒரு பாண்டியனை ஒரு புலவர் பாராட்டுதலாலும், "சோழனேடு மாறுபட்டோர் வாழக்கண்டதுமில்லை; அவன் அடியடைந்தோர் வருந்தக் காணுதல் அதனிலும் இல்லை" என ஒரு சோழனை ஒரு புலவர் புகழ்தலாலும், அவர்தம் வெற்றியுணர்த்தும் பிற வரலாறுகளாலும் நன்கு தெரியலாம்.

அவர்தம் வள்ளன்மையை, "இந்திரர் அமிழ்தம் இயையினும் தனித்துண்ணுர்; யாரிடத்தும் வெறுப்பிலர்; புகழ் கிடைக்கின் தம் உயிரையுங் கொடுப்பர்; பழிவரு

மாயின் அதனுல் உலகமுழுதும் பெறினும் கொள்ளார்; தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர்க் கென முயலும் அத்தகைகையார் உண்மையால் இவ்வுலகம் உளது'' எனக் கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுதலானும், 'ஈயென இரப்பாராயின் என் அரசாட்சி யைக் கொடுத்தல் எளியது; என் இனிய உயிரையுங் கொடுப்பேன்' எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலாலும், 'நின்னைப் பாடிய செந்நா பிறர் புகழைச் சொல்லா வண்ணம் நினக்கென ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக் கும் எங்கோவே,' என ஒரு சேரனிடம் ஒரு புலவர் கூறுதலானும் அறியலாம். சேரர்தங் கொடைப் பெரு மையைப் பதிற்றுப்பத்தில், ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூருயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும், மற்ருெரு சேரன் மற் ருெரு புலவர்க்கு நூருயிரங் காணங் கொடுத்து ஒரு மலையி லேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் கொடுத் தான் என்பதும், பிறவும் காணப்படுதல் கொண்டும் நன்கறியலாம்.

இவ்வாறே ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறிற் பெருகுமாதலின், இன்றியமையாத சில கூறிய இவ் வளவில் நிறுத்திப் புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளைக் கூறுவேன்:

> ''பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
> செய்யா கூறிக் கிளத்தல்
> எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே'' (புறம், 148)

என ஒரு புலவரும்,

> வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
> பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
> பாடுப வென்ப பரிசிலர் ... ...'' (புறம், 168)

என ஒரு புலவரும் பாடுதலால், இல்லாதவற்றைச் சொல் லாத பொய்யா நாவினர் என்பதும்,

> ''இன்றும், பரணன் பாடினன் மற்கொல்'' (புறம், 99)

எனப் பரணரை ஒளவையாரும்,

''பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடு வரை ... ...'' (புறம், 74)

எனக் கபிலரை நப்பசலையாரும் புகழ்ந்திருத்தலால், பொருமையின்றிச் சிறந்தாரை உயர்த்துக் கூறும் நல்லியல்பினர் என்பதும் நன்கு அறியப்படும்.

பெருஞ் சித்திரனுர் அதியமான் நெடுமான் அஞ்சியுழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணுது, 'இது கொண்டு செல்க' என்று பிறர் வாயிலாகப் பரிசில் கொடுப்பக் கொள்ளாது,

''காணு தீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே'' (புறம், 208)

எனக் கூறுதலாலும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச் சேரலிரும் பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந்தாழ்க்க அவனை எதிர்பாராது பெருங்குன்றூர் கிழார் சென்றமையாலும், பிறவற்ருலும் தம்மை மதியாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலந் தாழ்த்தாரிடத்தும் பரிசில் பெருத பெருந்தன்மையுடையவர் என்பது அறியப்படும்.

இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்த வழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனுர், கண்டீரக்கோவைத் தழுவி விச்சிக்கோவைத் தழுவாராக அவன், 'என்னை ஏன் தழுவவில்லை?' எனக் கேட்டபோது, புலவர், "உன் முன்னோர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையராதலின் உன்னைத் தழுவவில்லை; கண்டீரக்கோ மகளிரும், ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவனுதலின் அவனைத் தழுவினேன்'' எனக் கூறியதனுல் புலவரை மதியாதவரைத் தாமும் மதியார் என்பதனை நன்கறியலாம்.

"வேந்தே! வெண்கொற்றக்குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப்பட்ட தன்று; குடிகட்கு நிழல் செய்தற் பொருட்டுக் கொள்ளப்பட்டது" எனவும், 'புலவர்மாட்டுப் பொது நோக்கொழிக' எனவும் பிறவுங் கூறுதலால், புலவர் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என்பது துணியப்படும். சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றி யிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்து செய்தற்குக் கோவூர் கிழாரும், மக்கண்மேற் சென்ற கோப்பெருஞ் சோழனைச் சந்து செய்யு நோக்கத்தாற் புல்லாற்றூர் எயிற்றியனாரும், வையாவிக்கோப்பெரும் பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு சேர்த் தற்குப் புலவர் பலரும் பாடி யிருத்தலால், மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும், நற்குணமும் வாய்ந்தவரென்பதும் புலப்படும்.

இனிப் புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு எத்தகையதென்பதை உற்று நோக்கின், அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் நன் மதிப்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடூ ரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் வரலாறு ஒன்றே தக்க சான்றாகும்; அஃதியாதெனின், முற்காலத்து அரசர் முரசில் தெய்வ மிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங் கரித்துச் சிறந்த கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும், அக்கட்டிலில் யாரேனும் ஏறினால் அவர்களைக் கொல்வதும் வழக்கம். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறைபாலும் அவ்வியல்பிருந்தது; ஒரு நாள் வழக் கப்படி முரசு, நீராட்ட எடுத்துச் செல்லப்பெற்றிருந்தது; அவ்வமயம், நெடுந்தொலைவிலிருந்து அங்கு வந்த மோசி கீரனார் என்னும் புலவர், முரசு வைக்கும் கட்டில் என்ப தறியாது, களைப்பு மிகுதியால் அதில் ஏறித் துயின்றனர்; அஃதறிந்த அரசன், புலவராதலின் அவரைக் கொல் லாததோ டமையாது, அவர் நன்கு துயிலும் வண்ணம் கவரிகொண்டு வீசினன்; பின்னர் அதுகண்ட புலவர், அவனைப் பெரிதும் பாராட்டினர் என்பதாம். அன்றியும், 'தன் வெற்றிச்சிறப்பைப் புகழ்ந்து பாடுதற்கு இன்று

கபிலரில்லையே' என்று சேரன் மாந்தரஞ்சேரலிரும் பொறை வருந்தியதாகப் பொருந்தில் இளங்கீரனார் கூறுவதும் அதனை வலியுறுத்துவதாம்.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை" (புறம், 72)

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் பாடியிருப்பதனால், பாண்டியர் புலவர்மாட்டும், அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார், கொல்லலாகாதென அவனைப் பாட, அவன் கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத் தானும், தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டா டும்போது புலவர் கைகரப்பச் சோழன் வட்டுக்கொண் டெறிந்தான்; அவனைப் புலவர் வெகுண்டு, 'நீ சோழன் மகனல்லை' என வைதனர்; அதுகேட்ட சோழன் புலவ ரைச் சினவாது நாணியிருந்தனன் என்னும் வரலாற்றா லும் சோழர்க்குப் புலவர்பாலிருந்த பெருமதிப்பு விளங்கு வதாம்.

இனிக் கோப்பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தை யாரும் பொத்தியாரும் உயிர் துறந்த வரலாறொன்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர்வற்ற நட்பின் மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலருமறிந்ததா கலின், இங்கு விரித்துரைக்கவில்லை.

இங்ஙனம் பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரச ரெல்லாரும் செல்வத்தால் வரும் இன்பமொன்றையே கருதிச் செருக்கில் முழுகாது கல்வியின் அருமை யுணர்ந்து நன்கு கற்றுக் கல்வியிடத்தும் கற்றார்மாட்டும் பெருமதிப்பு வைத்திருந்ததுபோல, இக்காலத்துச் செல்

வர்களும் கல்வியிடத்தும், கற்றுரிடத்தும் மதிப்பு வைத்துப் போற்றுவாராயின், அதுவே இக்கட்டுரையின் பயனுகும்.

அருஞ்சொற்பொருள்

நல்லிசை-நற்புகழ். கலைவன்மை-கலைத்திறமை. செங்கோல் மாண்பு - நேர்மையான ஆட்சியின் சிறப்பு. வஞ்சினம் - சபதம். வெம்மை-வெப்பம். கண்ணி-தலையில் சூடும் மாலை. ஐம்படைத் தாலி-திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்னும் ஐந்து வடிவங்களும் பொன்னுல் இயற்றப் பெற்றுக் குழந்தைகட்கு அணிவிக்கும் ஒரு வகை அணி. காணம்-பொற்காசு. ஈந்த-கொடுத்த. பீடு இல்-பெருமை இல்லாத. பாடுநர்-புலவர். சந்து-சமாதானம். துயின்றனர்-உறங்கினர். யானைக்கிடுவுழி-யானைக்கு இட முயன்றபோது.

வினுக்கள்

1. சங்க நூல்களின் துணையால் நாமறிவன யாவை ?

2. பண்டைக் காலத்தில் அரசரும் அரசியரும் கலைவன்மையுடையராயிருந்தனர் என்பதை எங்ஙனம் அறியலாம் ?

3. முற்கால அரசரின் செங்கோல் மாண்பை விளக்கும் சான்றுகள் யாவை ?

4. பழங்கால அரசரின் வீரத்தினை விளக்குக.

5. பண்டைவேந்தரின் வள்ளன்மையை எவற்றுல் அறியலாம்?

6. புலவர் பெருமக்களின் உயர்ந்த பண்புகளைத் தொகுத்து இருபது வரிகட்குள் எழுதுக.

7. மூவேந்தரும் புலவரிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் தருக.

8. புலவர்கள் மன்னர்கள்பால் கொண்டிருந்த அன்பைச் சான்று கொடுத்து விளக்குக.

9. கட்டுரையின் பயன் யாதென ஆசிரியர் குறிக்கின்றுர் ?

6. தமிழகத்தின் பண்டைப் பல்கலைக் கழகங்கள்

[வித்துவான் திரு. பு. செல்வராசனுர் அவர்கள்]

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, தமிழ் மக்களிடைப் பல கலைகளும் நாகரிகமும் சிறந்து விளங்கினவெனின், அவை தோன்றுதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே—குறைந்த அளவு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே—தமிழர் கல்வியறிவு பெருகியவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாக விளங்குதற்கு நாட்டில் எவ்வகையான கல்வி நிலையங்கள் இருந்தன? அக்கால மக்கள் இத்துணைச் சிறந்த முறையில் எவ்வாறு கல்வியை வளர்த்தனர்?

சங்கத் தோற்றம்

தமிழ் நாட்டில் தலைச்சங்கம், இடைச்சங்கம். கடைச்சங்கம் என மூன்று தமிழ்ச் சங்கங்கள் விளங்கிப் பன்னெடுங்காலம் கல்வித் தொண்டாற்றி வந்துள்ளனவென்பது தெரிகிறது. இந்த முப்பெருஞ் சங்கங்களுக்கு முன்னரும், பின்னரும், இடையிலும் சங்கங்கள் பல தோன்றிக் கல்விப் பணியை இடையருமல் தொடர்ந்து புரிந்து வந்திருக்கின்றன வென்பது அறியக்கிடக்கின்றது.

தமிழகம், இன்றுள்ள குமரி முனைக்கப்பால் பரவிக் கிடந்த காலத்து நிலப்பகுதியையும் சேர்த்துக் கணக்கிட்டால் பஃறுளியாற்றங்கரையில் அமைந்திருந்த தென் மதுரை என்னுமிடத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நடை பெற்றிலங்கியது என அறியக் கிடக்கின்றது. இதனை நிலந்தரு திருவிற்பாண்டியன் துவக்கி வைக்க, இச்சங்கம் நீண்ட காலம்வரை கல்விப்பணி புரிந்துவந்துள்ளது எனத் தெரிகின்றது. தான் அரசோச்சிய பகுதியில் பஃறுளியாற்றை வெட்டியவனும் இவனே. எனவே, பஃறுளி இயற்கையாறு அன்றென்றும், வெட்டப்பட்ட தொன்றுக அப்பகுதியில் பாய்ந்து நீரூட்டி நாட்டை வளப்படுத்தி வந்தது என்றும் அறிகின்றோம்.

இங்ஙனம் பஃறுளியாற்றினை வெட்டி, அதன் கரையில் தென்மதுரை நகரை நிறுவி, ஆட்சி நடாத்திய பாண்டியன், அந்நகரில் தோற்றுவித்த தமிழ்ச் சங்கத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கலைகளை வளர்த்தான் என்பது,

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

என்னும் புறப்பாட்டைக் (9) கொண்டு அறியக்கிடக்கின்றது.

நிலந்தரு திருவிற் பாண்டியன் நிறுவிய இச்சங்கத்திற்குப் பின்னர், குமரிக் கண்டத்து, குமரி நாட்டு, ஏழ்குன்ற மண்டலத்திலிருந்த மகேந்திரமலையில் ஒரு சங்கம் இருந்ததெனவும் அச்சங்கத்தில் பேரிலக்கணம், களவியல், பதினெட்டு ஒழுக்க நூல் முதலியன அரங்கேறி வெளிப்பட்டன வெனவும் அறியக் கிடக்கின்றது.

இதற்குப்பின் பொதிய மலையில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்ட தென்றும், அகத்தியர் இச்சங்கத்தின் தலைவராயிருந்தார் என்றும், அகத்தியம் எனும் இலக்கண நூல் இச்சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டதே யாகுமென்றும் தெரிகிறது. இச்சங்கம் பற்றித்,

"தென்றமிழ்நாட் டகன்பொதியிற் திருமுனி வன்றமிழ்ச்
சங்கம் சேர்கிற் பீரே லென்றுமவ னுறைவிடமாம்"

எனக் கம்பராமாயணம் நாடவிட்ட படலத்தில் குறிப்புக் காணக்கிடக்கின்றது.

ஏழ்குன்ற நாட்டுக்குத் தெற்கே, பேராற்றருகிலிருந்த மணிமலையில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததாகவும், செங்கோன் தரைச் செலவு, செங்கோடன் இயல் நூல் முதலிய நூல்கள் இச்சங்கத்தில் பாடப்பட்டன வாகவும் அறியப்படுகின்றது. இதனை,

"பேராற் றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றும் செங்கோ திறற்செங்கோ நேராற்றும்
பேரவை யிலேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்த தமிழ்ப் பைந்தேவி"

என்னும் "தமிழ்விடு தூது" அடிகள் விளக்குகின்றன. திருச்சீரலைவாய் என்றும், அலைநகர் என்றும் வழங்கப்படும் திருச்செந்தூரில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததாகவும், அகத்தியர், புலத்தியர் முதலியோர் இச்சங்கத்தில் அங்கம் பெற்றிருந்ததாகவும் இதில் பல இலக்கண இலக்கிய நூல்கள் வெளிவந்ததாகவும் கூறப்படுகின்றது.

தென்னாட்டில் பெரியதொரு கடற்கோள் உண்டாகி, பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே எழுநூற்றுக் காதத் தொலைவரை, பஃறுளியாறு, குமரி மலை முதலியவை உள்பட நாற்பத் தொன்பது நாடுகள் கடலில் மூழ்கி விட்டனவென்பது,

"வடிவேல் எறிந்த வான்பகை பொருது
ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என வரும் சிலப்பதிகார (காடுகாண் காதை, 13-20) அடிகளிலிருந்து அறியக் கிடக்கின்றது.

இவ்வண்ணம் பெரும் வெள்ளம் உண்டாகி அதனல் மக்களுயிர்க்கும், அரும்பாடுபட்டுத் திரட்டி வைத்திருந்த ஏடுகளுக்கும் அழிவு நேரிட்டது.

தலைச்சங்கம்

வெள்ளத்தில் அழியாமல் உயிர் தப்பிப் பிழைத்த பாண்டியனும், குடி மக்களுட் சிலரும், வடபகுதி நோக்கி வந்து குமரியாற்றங் கரையிலிருந்த மதுரை எனும் பெயருடைய ஊரில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவினர். இச்சங்கத்தின் தலைவராகக் காய்சின வழுதி என்பார் வீற்றிருந்தார். இச்சங்கம் எண்பத் தொன்பது பாண்டியர்களுடைய ஆட்சிக்காலம்வரை நீடித்து நடைபெற்றது. இதில் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகர் முதலியோருட்பட 549 புலவர்

கள் இருந்தனரென்றும், பாண்டிய வேந்தருள் எழுவர் விழுமிய புலவராய் விளங்கின ரென்றும், பரிபாடல், முதுநாரை, முது குருகு, களரியா விரை முதலிய நூல்கள் அரங்கேற்றப்பட்டன வென்றும் அறியக்கிடக்கின்றது. இச் சங்கமே தலைச்சங்கம் எனும் பெயரால் வழங்கப்படுவதா கும். இச்சங்கத்தினர் பயன்படுத்திய இலக்கணம் அகத் தியமேயாகும்.

இவ்வண்ணம் சிறிதுகாலம் கழிந்தபின் கடுங்கோன் எனும் பாண்டிய மன்னன் காலத்தில் மீண்டுமொரு முறை கடற்பெரு வெள்ளமேற்பட, இத்தலைச் சங்கமிருந்த குமரியாற்றங்கரைப் பிரதேசமும் கடலுள் மூழ்கி அழிந்தது. எனவே, தலைச்சங்கம் இதனுடன் முடிய வேண்டியதாகி விட்டது.

பின்னர்க் கொற்கையில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் தலைமையில் ஒரு தமிழ்ச் சங்கம் தோற்று விக்கப்பட்டது. இதில், அகப்பொருள் விருத்தி, ஐந்திரம், பரதம், கூத்து நூல் முதலியவை வெளிப்பட்டன.

இடைச் சங்கம்

பொருநை ஆற்றுச் சங்கமுகத் துறையில் இருந்த கபாடபுரம் என்னும் ஊரிலே ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவப் பட்டது. இதன் முதற்றலைவன் வெண்டேர்ச் செழியன் எனும் வேந்தன் ஆவான். இவனுக்குப்பின், எழுபத் தொன்பது பாண்டியர்கள் ஆட்சிக்காலம் வரையில் இச் சங்கம் இடையருது நடைபெற்று வந்ததென அறியக் கிடக்கின்றது. இச்சங்கம் கடற்கோட் பட்டபோது ஆண்ட வேந்தன் முடத்திருமாறன் என்பவனுவான்.

இச்சங்கமே இடைச் சங்கமென இயம்பப்படுகின்றது. இதில் அகத்தியன், தொல்காப்பியன், இருந்தையூர்க் கருங்கோழியார், மோசியார், வெள்ளூர்க்காப்பியனுர், சிறு பாண்டரங்கனுர், திரையன் மாறனுர், துவரைக் கோன் கண்ணனுர், கீரந்தையார் முதலிய ஐம்பத்தொன் பதின்மர் உறுப்பினராயிருந்தனர்.

இவ்விடைச் சங்கத்தார், அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் முதலிய வற்றினை இலக்கண நூல்களாகக் கொண்டனர்; கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலிய நூல்களை இசை நூல்களாகக் கொண்டனர். இவ்விடைச் சங்கத்திலே பாண்டியர் ஐவர் புலமைத் திறன்பெற்று விளங்கினர். இறுதியாக இச்சங்கமும் ஆழியின் வெள்ளத் திலே மூழ்கி அழிந்தது.

இடைச் சங்கமிருந்த கபாடபுரத்தைப் பற்றிய குறிப்பு கள் சில வான்மீகி இராமாயணத்திலும் குறிப்பிடப் பட் டுள்ளது. சுக்ரீவன், சீதையைத் தேடிச் செல்லவேண் டிய வழியை வானரங்கட்கு எடுத்தியம்புகையில்,

> “ தென்றிசையில் கபாடபுர மென்றோர் அழகிய
> நகரத்தைக் காண்பீர்கள் ”

என்றியம்பியதாக, 47-வது சருக்கம், 19–வது சுலோகத் தில் குறிக்கப்பட்டுள்ளது.

கபாடபுரம் அக்காலை மிகச் சிறப்புற்றிலங்கியது. ஆண்டு ஆழியில் முழுகி யெடுக்கப்பட்ட முத்து, வேறு இடங்களினின்று எடுக்கப்பட்ட முத்துக்களைவிடச் சிறந்த தாம். இதனுற்றான் “ முத்துக்குக் கபாடம் ” எனும் பெயரே நிலைத்து விட்டது. ஆண்டிருந்தும் உரோமாபுரி, எகிப்து, பாபிலோனியா முதலிய விடங்கட்கு முத்து ஏற்று மதி செய்யப்பட்டு வந்தது.

இதன் பின்னைத் திருப்பரங்குன்றத்தருகில் மற்றொரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. கபாடபுரத்துச் சங்கம் அழி வுற்றபோது நாடாண்டிருந்த முடத்திருமாறனெனும் வழு தியே இச்சங்கத்தினையும் தோற்றுவித்தான். இச்சங்கத் தில் பேரகத்தியம், சிற்றகத்தியம் எனும் பனுவல்கள் வெளிவந்தன. மற்றும், பெருந்தேவனார் பாரதமும் எட்டுத் தொகையைச் சேர்ந்த நூல்களிற் சிலவும் வெளிவந்தன.

கடைச் சங்கம்

திருப்பரங்குன்றத்துத் தமிழ்ச் சங்கமும் அழிவு பெற்ற பின்னே, முடத்திருமாறன் இப்போதுள்ள ஆலவாய் எனும் மதுரையிலே தமிழ்ச் சங்கமொன்றினை நிறுவினுன். இச்சங்கம் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மர் ஆட்சிக்காலம் வரையில் மாண்புற மிளிர்ந்து வந்தது. 449 புலவர்கள் இச்சங்கமிருந்து தமிழாராய்ந்து பல நூல்களை வெளியிட்டனர். சிற்றிசை, பேரிசை, வரி, கூத்து போன்ற பல நூல்கள்—இன்று சங்க நூல்களென வழங்கப் பெறுபவை அனைத்தும்-இச்சங்கத்தினின்று அரும்பியவைகளேயாகும். பாநூல்கள் பத்தும், தொகை நூல்கள் எட்டும் இச்சங்க நூல்களேயாம். இச்சங்கமே கடைச் சங்கம் என்று பகரப் படுகின்றது.

கடைச் சங்கத்திற்கு மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் தலைவராய்த் திகழ்ந்தார். மாங்குடி மருதனுர் என்பவரும் தலைமை வகித்துள்ளார்.

கடைச் சங்கமும் மறைந்துவிட்ட பின்னை, மீண்டும் திருப்பரங்குன்றத்தில் தமிழ்ச்சங்கமொன்று தோன்றியது. அதன் தலைவர் வச்சிரநந்தி என்பாராவர். இவர் சமணர். இதில் புராணக் காதைகள் பல தோன்றின.

இதுவ்வரை கூறப்பட்டுவந்த சங்கங்கள் யாவும் பொதுவாக எல்லாக் கலைகளைப் பற்றியும் ஆராய்ந்து வந்தன. ஆனுல், இசைக் கலையைப்பற்றிமட்டும் ஆராய்தற்கென்று இசைத் தமிழ்ச் சங்கம் தனியே இருந்திருக்கிறது. நாடகக் கலையையும், நாடக நூல்களையும் ஆய்வதற்கென்றும், புதிய நாடக நூல்களை இயற்றுவதற்கென்றும் நாடகத் தமிழ்ச் சங்கமும் தனியே இருந்திருக்கின்றது. இவையன்றிக் கடைச் சங்க காலத்திற்குப் பின்னர் மதுரையில் சமண சங்கமும், பௌத்த சங்கமும் நடைபெற்று வந்தனவென்றும் தெரிகின்றது.

நம் நாட்டுச் சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள புலவர்களின் பெயர்கள், அவர்களியற்றிய நூல்கள்,

ஆய்ந்த நூல்கள் முதலியவை குறித்து இறையனரகப் பொருளுரை, சிலப்பதிகாரவுரை முதலியவற்ருல் நன்கு அறியக் கிடக்கின்றன.

இவ்வாறு தமிழகத்தில் நிறுவி நடைபெற்று வந்த தமிழ்ச் சங்கங்கள், புலவர்கள் பலர் கூடியமர்ந்து பல கலை களைக் குறித்து ஆய்ந்து முடிவு காணும் பேரவைகளாக அமைந்திருந்தன. சங்கம் என்பதன் பொருள் கற்றுவல்ல புலவர் (புலவு-அறிவு; புலவர்-அறிஞர்) கூட்டம் என்பதே யாகும். சிற்சில சமயங்களில் மன்னர்கள் சங்கத் தலைவர் களாய் இருந்துள்ளனர் எனின், அம்மன்னர்கள் கற்றுவல்ல புலவர்களாயிருந்தனர் என்பதை அவர்களின் பாக்களைக் கொண்டு கண்டறியலாம். இம்மன்னர்கள் நாட்டு மக்க ளைக் காத்ததோடு, இளமை மாரு இன்றமிழ் மொழியினை யும் காத்து வளர்க்கும் பொருட்டுப் புலவர்களாய் விளங் கினமை யாற்ருன் தமிழ் மொழி சிறந்து வளர்ந்தோங்கியது.

தமிழ்ச் சங்கத்திலே பட்டி மண்டபம் உண்டு. பட்டி மண்டபம் என்பது புலவர்கள் இருந்து தமிழாராய்ச்சி செய் வதற்குரியதாக அமைந்திருந்தது. 'பன்னருங்கலை தெரி பட்டிமண்டபம்' என வரும் கம்பராமாயண அடியிலிருந் தும், 'பட்டிமண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்' என வரும் மணிமேகலை அடியிலிருந்தும் பட்டி மண்டபத்தின் சிறப்பை அறியலாம்.

சங்கம் குறிப்பிட்ட எந்த ஒரே இனத்தாருக்கு மட்டும் உரியது என்றில்லை. கல்விச் செல்வம் குறிப்பிட்ட ஓர் இனத்தாருக்கு மட்டுமே உரியது என்ற கட்டுப்பாடுமில்லை. சங்கப் புலவர்கள் பல இனத்தவராகவும், பலவகைத் தொழிலுக்குரியவர்களாகவும், பலபடியான வாழ்க்கை நிலை உடையவர்களாகவும் இருந்தனர். சங்கப் புலவர்களுட் சிலர் சமணர்; சிலர் பௌத்தர்; சேர சோழ நாடுகளி லிருந்தும், கொடுந்தமிழ் நாட்டிலிருந்தும் வந்து புலவரா யினோர் பலர்; இவரனைவரும் சங்கத்தில் புலவராயமர்ந்து தமிழாராய்ந்தனர்.

கடைச் சங்கத்தில் சங்கப்பலகை என ஒன்றிருந்தது. சிறப்புடைய புலவருக்கு அது இடமளித்து வந்ததாகவும் தெரிகிறது.

சங்கங்களின் சிறப்பு

இவ்வாறு சங்கங்கள் பல துறைக் கலைகளையும் வளர்த்துத் தாமும் வளர்ந்து வந்தன. இப்புலவர் அவை மன்னனைக் கலந்து, புலமைத் திறனுடையோரைச் சோதிப்பதும் அவர்க்குப் பரிசிலளிப்பதும் சிறப்பிப்பதுமாகிய செயல்களில் ஈடுபட்டது.

புலவர்கள் இயற்றும் நூல்கள் நேராக மக்கள்பால் சென்றடைவதில்லை; சங்கத்தில் அரங்கேற்றம் செய்து, மற்றப் புலவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டாலொழிய, அந்நூல் மக்களிடை உலவுதல் இயலாச் செயல். சங்கம் ஏற்காத எந்நூலையும் மக்கள் ஏற்பதில்லை.

சங்க நூல்கள் என வழங்கப்பெறும் கீழ்க்கணக்கு நூல்களும், மேற்கணக்கு நூல்களும், ஐம்பெருங் காப்பியங்களும், அரங்கேற்றம் செய்யப்பெற்று வெளிவந்தவைகளேயாகும். இவ்வண்ணம் அரங்கேற்றம் செய்யப்பெற்றுப் புலவர்களின் இணக்கம் பெற்ற நூல்களை எழுதிய ஆசிரியர்கள், மன்னர்களாலும் மக்களாலும் நன்கு மதிக்கப் பெற்றுப் பரிசும் புகழும் பெற்றுச் சிறப்படைவார்கள். புலமைத் திறனுடையோர் மன்னராலும் மற்றையோராலும் சிறப்பிக்கப்படுதலை யறிந்த மக்கள் பல கலையுங் கற்றுப் புலமைத்திறன் பெறுதல் வேண்டும் எனும் பேரவாக் கொள்ளுதலும், அதன் பயனுகக் கற்றலும், கற்ற பின்னை, இவர்கள் நாடெங்கும் புலவரகங்களாகவும் கலைக்கூடங்களாகவும் அமைதலும் இயல்பே அன்ருே!

அச்சிட்ட நூல்கள் இல்லாத அப்பழங்காலத்தில் கல்வி யறிவு நிரம்பப்பெற்ற புலவர்களே பொது நூல் நிலையங்களாக விளங்கினர்.

இவ்வண்ணம் புலவர்கள் நடமாடும் நூல் நிலையங்களாக விருந்து தம்பால் வரும் மாணவர்களைச் சீரும் சிறப்பும் பெறுமாறு கல்வி நலமூட்டி வைத்தனர். இங்ஙனம் புலவர்பால் கல்விபெற்றவர்கள் சங்கமேறித் தங்கள் திறனைக் காட்டிப் புகழும் பரிசிலும் பெற்று மீண்டனர். இவ்வாறு நாட்டில் கல்வி பெருகிப் பரவியது.

இற்றைத் தினம் பல கல்லூரிகளில் கற்கும் மாணவ-மாணவிகள் பல்கலைக் கழகத் தேர்வில் அமர்ந்து தேர்ச்சி பெற்று வெளிவருதல் போல, அக்காலைத் தனித்தனிப் புலவர் மாட்டுப் பல மாணவர் பயின்று சங்கத்தில் தங்கள் திறனை வெளிப்படுத்திப் புலவர்களாயினர்.

இவ்வாறே இலக்கியம், இலக்கணம், இசை, கூத்து, நாட்டியம், உழவு, வாணிகம், நெசவு, கப்பற்றொழில், நகரமைப்பு, மருத்துவம், சோதிடம், வானநூல், கணிதக் கலை, மடைக்கலை முதலிய பல துறைக்கலைகளில் மக்கள் சிறந்த புலமை உடையோராய் விளங்கினர்.

இக்காலத்துப் பல்கலைக் கழகங்கள் போலவே, அக் காலத்துத் தமிழ்ச் சங்கங்கள் விளங்கினவென்று கூறுதல் தவருகாது. மேலும், தமிழ்ச் சங்கங்கள் அனைத்தும் பாண்டிய நாட்டிலேயே இருந்தன வெனினும், அவற்றின் வளர்ச்சியில் சேர சோழர்களும், பிற வேந்தர்களும் பங் கெடுத்துக் கொண்டனரென்பதும், பன்னாட்டு மக்களும் சங்கப் புலவராயினமை கொண்டே கூறலாம்.

அருஞ்சொற்பொருள்

வயிரியர்-கூத்தர், பாணர். முந்நீர்-கடல். நெடியோன்-பாண்டியன். அகன்பொதி-அகன்றபொதியமலை. திருமுனிவன்-அகத்தியன். பிறங்கும்-விளங்கும். வான்பகை-பெரும்பகை. ஏடு-நூல். பேரவை-பெருஞ்சபை.

வினாக்கள்

1. தமிழரிடைப் பல்கலைக் கழகங்கள் இருந்தனவா ?

2. முதல் தமிழ்ச் சங்கம் எவரால் எங்குத் தோற்றுவிக்கப் பட்டது ?

3. பஃறுளி யாறு—குறிப்பு வரைக.

4. தலைச்சங்க காலத்தில் இருந்த வேறு சங்கங்கள் யாவை?

5. ஐந்திரம், பரதம், கூத்து நூல் முதலியவை எச்சங்கத்தில் வெளியாயின ?

6. இடைச் சங்கம் எங்கு எவரால் நிறுவப்பட்டது ?

7. இடைச் சங்கம் செய்த தமிழ்த் தொண்டு யாது ?

8. கபாடபுரத்தின் சிறப்பு யாது ?

9. பேரகத்தியம், சிற்றகத்தியம், பெருந்தேவனார் பாரதம் முதலியவை எச்சங்கத்தில் வெளியாயின ?

10. கடைச் சங்கம் எங்கு எப்போது எவரால் நிறுவப்பட்டது ?

11. கடைச் சங்கத்தினால் தமிழுக்கு ஏற்பட்ட நலன்கள் யாவை ?

12. அக்காலத்தில் தமிழ் மொழி சிறந்து வளர்ந்தோங்கிய தற்குக் காரணம் என்ன ?

13. சங்கங்களின் சிறப்பு யாது ?

14. சங்கங்கள் பல்கலைக் கழகங்களே என்பதைப் பொருத்திக் காட்டுக.

7. இளைஞர்களுக்கு அறிவுரை

[திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள், எம். ஏ., எல். டி.]

மாணவ மாணவியர்களே! உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன்போற் போற்றிப் பயன் படுத்தப்பட வேண்டும் பருவம். வாய்ப்போ கிடைத்தற்கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக்கூடங்களே இல்லாத ஆயிரக்கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந்நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறதென்றால், அதை எளிதானதாகவோ அலட்சியப்படுத்தக் கூடியதாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப்பையும் நன்றாக முழுதும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தில் கற்கவேண்டுவதை எல்லாம் கற்றுக்கொள்ளுங்கள்; பெறவேண்டும் திறமைகளை எல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள்; தேடிக்கொள்ள வேண்டுவன எல்லாம் தேடிக்கொள்ளுங்கள்.

கல்வி கரையற்றது: கற்கவேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்துவிட்டனவாக எண்ணுதீர்கள். கற்க வேண்டுபவைகளை அறிமுகப் படுத்துபவைகளே அவை. பாட நூல்களுக்கு அப்பால் பரீட்சைகளுக்குத் தொடர்பில்லாதவை பலவற்றை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்; படிப்பை முடித்தபின், அவைகளைக் கற்கலாம் என்று மட்டும் காலந் தாழ்த்தாதீர்கள். அன்று குறைந்தால் ஆறு மாதங்கள்தான்.

வெறும் ஏட்டுப் படிப்புத் தகவல்களைத்தான் கொடுக்கும்; அறிவொளியைத்தான் வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன்பெறும் திறமையை நீங்கள் பெற முயலவேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றையெல்லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப்படிப் பெறத் தவறவேண்டா.

பிஞ்சிற் பழுக்கவேண்டா: இளம்பருவத்தே உங்களை மயக்கக்கூடியவை பற்பல.

> " எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற அறிவுரையை மனத்திற்கொண்டு, கல்வியிலே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகத்தான் நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப்பற்றிப் படித்துச் சிந்தித்துத் தெளிவுபெற வேண்டும். மாணவர்களாக இருக்கும் போதே அரசியல் வாதிகளாகிவிட வேண்டா என்று மட்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். எதற்கும் கால முண்டு. காலம் வரும்போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசியல் வாதிகளாவது பிஞ்சில் பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப்படி இருக்குமென்பது நீங்கள் அறியாத தன்று.

உடலோம்பல்: உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவை இல்லை. அதன் தேவையையும் சிறப்பையும் உணர்ந்திருந்தாலும் வசதிக்குறைவும் வேறு பொழுதுபோக்குக் கவர்ச்சிகளும் உடற் பயிற்சியை மறக்கச் செய்து வருகின்றன. இது பெருந் தீங்கு. " உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே " என்பது பொருள் நிறைந்த மொழி. உடல்வலிமை இல்லாதவன் எல்லா வலிமைகளும் பெற்றிருந்தாலும், தனக்கும் பிறருக் கும் முழுப்பயன் அற்றவனாகத்தான் இருக்க நேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்ய வழி வகை செய்து கொள்ளுங்கள்.

ஒப்புரவு:

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்"

என்ற பொய்யா மொழியையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கல்வி, ஏட்டுப்படிப்பு அல்லது தொழி

லறிவு ஆகியவற்றை ஊட்டுவதோடு நிற்கக்கூடாது. அது நமக்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்க வேண்டும். ஒழுக்கம் என்னும்போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்க வில்லை; மக்களோடு மக்கள் எப்படிப்பழகுவது, எங்கெங்கு எப்படி நடப்பது, பொது இடங்களில் எப்படி நடப்பது என்பவைகளையும் சேர்த்துத்தான் குறிக்கிறேன். கட்டுப் பாடும் ஒழுங்கும் அற்ற அறிவாளி கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதை எல்லாம் பாழாக்கும் காட்டாறு போன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப் பாட்டையும் ஒழுங்கையும் இளமையிலேயே கற்றுக் கொள்க.

கற்றதனுல் ஆய பயன் : நல்ல உறுதியான உடலும் கூரிய மதியும் கட்டுப்பாடும் ஒழுங்கும் எதற்குப் பயன் பட வேண்டும்? யாருக்குப் பயன்பட வேண்டும்? ஆக் கத்திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனித சமுதாயம், அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப்படுமோ என்று அஞ்சி அஞ்சி அல்லலுறுகின்ற தல்லவா? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தவறியதே. அறிவும் வலிவும் வளர்ந்த அளவு, மக்கள் உள்ளம் வளர்ந்தபாடில்லை. ஆகவே வலிமை எல்லாம், அறிவெல்லாம் இதுவரை 'தான்' என்கிற சிறையிலிருந்து வெளிப்படவில்லை. தன் பெண்டு தன் பிள்ளை என்கிற தன்னலம், பொதுநலத்திற்கு ஊறுக நிற்கிறது. 'தான்' என்பதைக் குறைத்து 'நாம்' என் பதைப் பெருக்கப் பெருக்கத்தான், நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்.

மக்கட் பண்பு

பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமை யாய் உள்ள குறள்,

> "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்"

என்று இடித்துரைப்பதை மறந்து விடாதீர்கள். கல்வியின் நோக்கம் மக்கட் பண்பைப் பெறுவதே. எது மக்கட் பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட் பண்பாவது பிறிதினேய் தன்னேய் போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிருனே அவனே கல்விமான். மற்றவர்கள் எவ்வளவு அறிந்திருந்தாலும் எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் மக்கள் நிலையை அடையாதவர்களே. மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை? அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்றும் கவனிப்போம்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் :

வறுமை, அதன் விளைவான பட்டினி, அறியாமை, அதன் விளைவான மூட நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள், சாதி ஏற்றத்தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை, சமயவெறி, அதன் விளைவான சமயப் போராட்டங்கள், இவற்றின் கூட்டு விளைவான அமைதியின்மை—ஆகிய துன்பங்களை நாம் அநுபவித்து வருகிறேம். இத்துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டு வைக்கலாமா? நீக்க முடியும்; நீக்க வேண்டும் என்பதே என் முடிவு; பிற நாடுகள் செய்து காட்டிய முடிவுமாகும்.

நல்குரவு :

வறுமை சமூகத் தொத்து நோய். அதைப் போக்குவது சமூகத்தின் முதற் கடமை. அதனை எவ்வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். 'உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினல் எல்லோரும் வறுமையின்றி வாழலாம் என்பது உண்

மையா? பெற்ற பொருள்களை இப்போதுள்ள முறைக்கு மாருக விநியோகிப்பதன் மூலம் வறுமையைப் போக்கு வதா?' என்ற கேள்விகளுக்குப் பதில் என்னிடத்திலிருந்து எதிர்பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்துவிட்ட மற்ருென்றை நான் நினைவூட்டக் கடமைப் பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்கள் செலவு முறையைக் குறிப்பிடுகிறேன். மயக் கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்குகிருேம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப்படுத்தும் துறைகளுக்கு அதிகம் செலவிடக் கற்றுக்கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரியாத மக்களை எம்முறையும் காப்பாற்ருது என்பதை மறக்காதீர்கள்.

அறியாமை :

தற்குறித்தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர்போனதைப் போன்றே தற்குறித் தன்மைக்கும் நம் நாடு உலகறிந்ததாய் இருக்கிறது. அறி யாமையின் விளைவாய் நம்மிடையே உள்ள மூடநம்பிக்கை களும் கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. நாம் முழு மக்கள் தன்மை அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றையெல்லாம் விரைவில் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகி விட்டவர்களை மண்ணுங்கட்டி நிலையில் விட்டு வைப்பது இழிவு மட்டுமன்று, பெருந் தீங்குமாகும். எனவே, இத்தலை முறையின் முழுக் கவன மும் முயற்சியும் 'எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால் உன்னத இமயமலை போல் கீர்த்தி எய்'திடுவதற்கான பணிகளில் திருப்பப்பட வேண்டும்.

சாதி வேற்றுமை

சாதி உயர்வு தாழ்வு நம்மைப் பிடித்துள்ள மற்ருெரு பெருநோய்; தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்தே இல்லாத நோய்; இடையிலே பெற்ற நோய். விரைவிலே ஒழிக்கப்படவேண்டும் நோய். 'உயர்வு தாழ்வு எங்கு

இல்லை? ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் உருவில் இருக்கிறது,' என்கிற முடக்குவாதம் நம்மை முன்னேற வொட்டாமல் தடுக்கும். அவ்வாதத்திற்குச் செவி கொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்டமுடியாது.

"எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்," "யாதும் ஊரே யாவரும் கேளிர்," "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்," என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடைகளிலும் கேட்டுத்தான் வருகிறோம்; இவற்றைத் தமிழனின் உயர்விற்கு எடுத்துக் காட்டாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் நாம் உண்மையிலே சாதிகளை விட்டு மக்களாகும் பாதையில் நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே. நம்மை விட்டுச் சாதி வெறி போகவில்லை என்பதற்குக் காரணம் என்ன? சாதிகளை வைத்துக் கொண்டே சாதிப்பற்று வேண்டாமென்று கூறிக்கொண்டு பொழுது போக்கு வேலை செய்துகொண்டிருந்தோம். எனவே, இடமும் காலமும் கிடைத்தபோது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழிய வேண்டுமென்றால், சாதிகள் இல்லாத நிலை ஏற்பட வேண்டாவா? அதற்கான வழியை இனித்தானா அறிந்துகொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான பேச்சால் கிட்டுமா? கூட்டத்திற் கூடி நின்று, கூடிப் பிதற்றிவிட்டு நாட்டத்திற் கொள்ளாவிட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத் திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அல்லவா முடியும்? இந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர்பார்ப்பது அதிகமா?

சமயவெறி:

சமயப் பற்றும் சமய வெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது. சமயம் மனிதனுடைய தனி விவகாரம். கூட்டு மொத்த வெளிச்சத்திற்காக அதைப் பொது விவகாரமாக்கிப் பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது நல்லதன்று. சமயம் மக்களை ஒழுங்குபடுத்

திப் பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் வேடத்தில் இல்லை; நடையில் இருக்கிறது என்பதை நினைந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

முடிவுரை

உருவால் மக்களாய்ப் பிறந்த நாம் நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்குத் தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் இருக்குமா என்பதைக் காலந்தான் காட்டவேண்டும். அத்தகைய உரமும் உறுதியும் பெருக உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியோர்களை வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

> "கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவரின் வழிகாட்டியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

அருஞ்சொற்பொருள்

உடலோம்பல்-உடலைப் பாதுகாத்தல். ஒப்புரவு - உலக நடை. விழுப்பம்-மேன்மை. ஊறுக-தடையாக. பிறிதின்நோய்-மற்றொன்றின் துன்பம். நல்குரவு-வறுமை. தற்குறித்தன்மை-எழுதப் படிக்கத்தெரியாமல் கையெழுத்துக்குப் பதில் பெருவிரல் அடையாளத்தை இடும் அறிவில்லாத் தன்மை. பன்னரும்-சொல்லுதற்கு அரிய. கேளிர்-சுற்றத்தார். உரம்-வலிமை. நாட்டம்-எண்ணம்.

வினாக்கள்

1. மாணவர்கள் எத்தகைய கல்வி கற்க வேண்டும்?
2. மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது எப்படித் தவறு?

3. மாணவர்கட்குக் கட்டுப்பாடும் ஒழுங்கும் இன்றியமையா தவை என்பதை ஆசிரியர் எங்ஙனம் வற்புறுத்துகிருர் ?

4. மக்கட் பண்பாவது யாது ? அப்பண்பில்லாதவர் எத்தகையராவார் ?

5. மக்கள்நிலை உயரவும் துன்பங்கள் குறையவும் வழி என்ன ?

6. சமூகத் தொற்றுநோய் என்று கூறப்படுவது யாது? அதனைப் போக்கும் முறைகள் யாவை?

7. நம் நாட்டின் தற்குறித் தன்மையைப் பற்றி ஆசிரியர் கூறுவது யாது ?

8. சாதி வேற்றுமையின் கொடுமையையும் அதனைக் களைய வேண்டிய இன்றியமையாமையையும் விளக்குக.

9. சமயவெறி குறித்து ஆசிரியர் கூறுவது என்ன ?

8. திங்கள்

(திரு வி. சேஷகிரி அவர்கள், M. A., L .T.,)

இருண்ட வானில் தோன்றும் திங்களைக் கண்டால் இளஞ்சிறுர் முதல் முதியோர் வரை யாவரும் மகிழ்ச்சிக் கடலிலே திளைக்கின்றனர். வெம்மை மிக்க கதிரவனைப் போலன்றித் தண்ணொளி பரப்பி உள்ளம் உவக்கச் செய்யும் திங்கள் தான் முதன் முதலில் மனிதனை வானத்தே உள்ள பொருள்களை ஆராயத் தூண்டி யிருக்கவேண்டும். வானத்திலுள்ள மற்றெல்லாப் பொருட்களையும் (Bodies) விட இத்திங்களே மக்கள் ஆராய்ச்சியில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு, அத்திங்களைப் பற்றி இவ்வுலகத்தே வழங்கிவரும் எண்ணறும் கதைகளே சான்று பகரும்.

பண்டை மக்கள் திங்களை இருபத்தேழு விண்மீன்களின் கணவன் எனப் புனைந்துரைத்தனர். பண்டை உரோமாபுரி மக்களும் பண்டைத் தமிழ் மக்களும் மணமாகாப் பெண்கள் வணங்கும் பெண்பால் தெய்வமென இதை மதித்தனர். திங்களின் தண்ணொளியையும், அதனுல் மக்கள் பெறும் இன்பத்தையும் பற்றிப் பாடாத புலவர் இல்லை எனலாம்.

வான வெளியிலே உள்ள பொருள்கள் அனைத்திலும், இவ்வுலகிற்கு மிக அருகில் இருப்பது திங்களே. இரவில் தோன்றும் மற்ற எல்லாவற்றையும்விட ஒளி மிகுந்ததாகத் தோன்றினும், இத்திங்கட்குத் தன் ஒளியே கிடையாது. ஒளி மிகுந்ததும் வெம்மை மிகுந்ததுமான கதிரவனின் ஒளியையே இது ஈர்த்து ஒளிரச் செய்கின்றது.

திங்கள் என்பது யாது ? அதன் பண்புகள் யாவை ? அது ஏன் வானத்தே பல்வேறு நாட்களில் பல்வேறு விதமாய்ப் பல்வேறு நேரங்களில் தோன்றி மறைகிறது ? இத்தகைய வினக்கள் மக்கள் உள்ளத்தே மிகப் பழங்காலந் தொட்டே எழுந்து வந்துள்ளன. இவற்றின் பயனுகவே இவ்விண்மீனைப் பற்றிப் பற்பல விந்தையான கதைகள்

தோன்றின. ஒரு சிலர் இச்சந்திரன் சிறிது காலம் வளர்ந்தும் சிறிது காலம் தேய்ந்தும் மாறி மாறி வருகின்ற ஒரு பொருள் என்று கருதினர். வேறு விஞ்ஞான வழியான காரணங்களைக் காணமுடியாத காலத்தே முனிவர்கள் சாபம் போன்ற பற்பல கற்பனைக் காரணங்களை மக்கள் கற்பித்தனர். எனினும், ஆராய்ச்சி மட்டும் தொடர்ந்து கொண்டே வந்து இன்று பல உண்மைகள் வெளிப்பட்டுள்ளன.

வான வெளியில் உள்ள மற்ற எல்லாப் பொருள்கட்கும் இல்லாத சில சிறப்பாய பண்புகள் இந்நிலாவிற்கு உண்டு.

இவ்வொரு வானப்பொருளையே நாம் பகல் இரவு ஆகிய இரு நேரங்களிலும் வானத்தே காணமுடிகிறது. ஒவ்வொரு நாளும் முன்நாள் தோன்றிய நேரத்திற்குச் சிறிது கழித்தே இது தோன்றுகிறது. மற்றைய விண்மீன்களுடன் தொடர்பு படுத்தி நோக்குங்கால் இதனுடைய இடம் நாள் தோறும் மாறுபடுகிறது.

வட்ட வடிவமாகக் காட்சி யளிக்கும் இம்முழு நிலா உண்மையில் கோளவடிவமானது. உலகைப்போல இது இரு முனைகளும் தட்டையானதன்று. நில உருண்டையினும் இந்நிலா உருண்டை சிறியதாகும். இதன் விட்டம் ஏறக்குறைய 2160 மைல்களாகும். அதாவது இவ்வுலகின் விட்டத்தின் கால் பங்குக்குச் சிறிதளவே அதிகமாகும். அதன் புறப்பரப்போ உலகின் புறப்பரப்பில் சுமார் பதினுன்கில் ஒரு பாகமாகும். அதன் கொள்ளளவோ உலகின் கொள்ளளவில் சுமார் நாற்பத்தொன்பதில் ஒரு பாகமாகும். பூமியின் இறுக்கத்தினும் சந்திரனின் இறுக்கம் குறைவாகும். அதாவது சந்திரன், இந்நில உலகு ஆக்கப்பட்ட பொருள்களினும் இலேசான பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளது. பூமியின் இறுக்கத்தை நாம் 100 பங்கு எனக் கொண்டால் நிலாவின் இறுக்கம் 61 பங்குகளே யாகும். சந்திரனின் எடையோ பூமியின் எடையில் சுமார் 81-ல் ஒரு பங்கு ஆகும் என விஞ்ஞான ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுள்ளனர். திங்களின் ஈர்ப்புத் திறன் இப்பூமியின் ஈர்ப்புத்திறனில் ஆறில் ஒரு பங்காகும். அதாவது இப்

புவியில் ஆறு வீசை எடையுள்ள ஒரு பொருளைச் சந்திர னின் எடையிலிட்டுப் பார்ப்போமானால் அது ஒரு வீசை எடையே இருக்கும். என்னே விந்தை !

இந்நிலா தன்னைத்தானே சுற்றுவதோடு இவ்வுலகினை யும் சுற்றி வருகிறது. இது இப்புவியினின்று சற்றேறக் குறைய இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் மைல் தொலை வில் உள்ளது. ஓர் அங்குல விட்டமுள்ள உருண்டையை ஓரிடத்தே வைத்து அதனின்று முப்பது அங்குலத் தொலை வில் மிகப் பெரிய ஒரு மிளகு அதைச் சுற்றி வருவதாகக் கொண்டால் நாம் இவ்விரு உருவங்கட்கு இடையே உள்ள தூரத்தையும் அவற்றின் வடிவத்தையும் ஒப்பிட்டு அறிய முடியும்.

ஒருமுறை இவ்வுலகினைச் சுற்றி வரத் திங்களுக்கு $27\frac{1}{3}$ நாட்கள் ஆகின்றன. ஆனால் இவ்வுலகும் ஞாயிற்றை வலம்வருவதால் இக்காலம் $29\frac{1}{2}$ நாட்களாக நீடிக்கின்றது.

நாம் பார்க்கும் முழு நிலா உண்மையில் முழு நிலா வன்று; ஓர் அரைப்பகுதியேயாகும். நம் கண்ணெதிரே ஓர் உருண்டையான பொருளை வைத்தால் நம் கண்முன் உள்ள அரைப்பகுதியே தெரியும் அல்லவா? அதேபோல் நாம் காண்பதும் முழு நிலாவின் அரைப் பகுதியே. அது உலகை வலம் வருவதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறதோ, அதே நேரத்தில் தன்னைத் தானும் வலம் வருகிறது. ஆகையால் உலகிற்கு எந்த அரைப் பகுதி தெரி கின்றதோ அதே அரைப் பகுதிதான் எப்பொழுதும் தெரி யும். மற்ற அரைப் பகுதி எக்காலத்திலும் இப்புவியிலுள் ளோர் கண்களுக்குத் தெரியாது.

இனி இந்நிலவின் தன்மையை நோக்குவோம். நமக்குத் தண்ணொளி அளிக்கும் நிலவு உண்மையில் தண்மை யானதா அல்லது வெப்பம் மிக்கதா என்று ஆராய்ந்துள்ள னர் பலர். பல வான நூல் வல்லுநர்கள் திங்கள் ஒரு குளிர் மிக்க பொருள் என்றும் அதற்குச் சூடு கிடையாது என்றும் கருதுகின்றனர். வேறு சிலர் மாறுபட்ட கருத்தும் கொண்

டுள்ளனர்; எனினும் யாவரும் விரும்பிப் போற்றும் தண்ணொளி அளிக்கும்வரை நாம் இதைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டுவதில்லை. இந் நிலவின் புறப்பரப்பிலே பற்பல மேடுகளும் பள்ளங்களும் உள்ளன. உலகிற்குப் புலப்படும் பகுதியின்கண் மட்டும் இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் மூவாயிரத்துக்குமேல் உள்ளன என அறிஞர்கள் கருதுகின்றனர். எவ்வாறு இத்தகைய மேடுபள்ளங்கள் தோன்றின என்று நமக்குத் தெரியவில்லையாயினும், இவை திங்களின்கண் இருந்த எரிமலைகள் வெடித்தவையாக இருக்கலாம். அன்றி அதன் தோற்றத்தின்பொழுது தோன்றியவையாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றன. இம் மேடுபள்ளங்களே நம் நாட்டில், 'ஓடும் முயல்' என்றும், 'அப்பம் சுடும் ஔவைப் பாட்டி' என்றும் கூறப்படுகின்றன. மேலும் திங்களில் காற்றும் கிடையாது நீரும் கிடையாது என வான நூல் வல்லுநர் தம் ஆராய்ச்சியின் மூலம் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். நீர் இருந்தால் அல்லவோ நிலம் விளையும்! எனவே அங்கு எத்தகைய புல் பூண்டும் கிடையாது. எவ்விதமான உயிர் வாழ்வனவும் அங்கு இல்லை. ஆகவே அங்குள்ள மலைகள் பள்ளங்கள் யாவும் வறண்டு ஒரு வெறுமைக் காட்சியையே அளிக்கும்.

ஞாயிறு, புவி, திங்கள் ஆகிய இம் மூன்றும் தம் இயக்கத்திலே ஒரே நேரான கோட்டிலே அமைந்தால் சந்திரக் கிரகணங்கள் தோன்றும். திங்கள் ஞாயிற்றின் ஒளியை வாங்கி வெளியே விடுகிறது என்று முன்பு கண்டோம். ஞாயிற்றின் ஒளி திங்களின்மேல் விழாமல் இடையே இப் புவி வருமாயின் உடனே சந்திரக் கிரகணம் ஏற்படுகின்றது. சந்திரக் கிரகணங்கள் இருவகைப்படும். முழுச் சந்திரனும் மறைக்கப்படுதல் ஒரு வகை; சந்திரனின் ஒரு பகுதி மட்டும் மறைக்கப்படுதல் மறுவகையாகும். சந்திரன் இப் பூமியை மேற்கிலிருந்து கிழக்கே நோக்கி வலம் வருவதால் எப்பொழுதும் சந்திரக் கிரகணத்தின்போது சந்திரனின் கீழ்ப் பகுதியே முதலில் மறைக்கப்படும்.

நமக்கு வெண்மையாகக் காட்சி அளிக்கும் திங்களிலே ஒரு மனிதன் வாழ்வானுனால், அவனுக்கு இவ்வுலகு எவ்

வாறு காட்சி அளிக்கும் எனச் சிறிது ஆராய்வோம். நமக்குச்சந்திரனிலே மலைகள் தெரிவதுபோல் அச்சந்திர மனிதனுக்கு இப்புவியின்மேலுள்ள மலைகள் கடல்கள் யாவும் தெளிவாகத் தெரியும். நமக்கு எவ்வாறு மதி தேய்ந்தும், வளர்ந்தும் காட்சி அளிக்கின்றதோ அதேபோன்று அம் மனிதனுக்கும் இவ்வுலகம் தேய்ந்தும் வளர்ந்தும் காட்சியளிக்கும். ஆனால் அம் மனிதன் ஒரே ஒரு வேறுபாட்டை மட்டும் உணர முடியும். திங்கள் நமக்குக் காட்சியளிப்பதைப் போன்று சுமார் பதினாறு மடங்கு பெரிதாக இந்நில வுலகு அம்மனிதனுக்குக் காட்சியளிக்கும். மேலும் திங்கள் ஞாயிற்றின் ஒளியைப்பெற்று வெளிவிடுவதே போன்று அம்மனிதனும் இப்புவி ஞாயிற்றின் ஒளியை வாங்கி வெளி விடுவதைக் காண்பான். ஆனால் உலகினின்று செல்லும் ஒளியானது திங்களின் ஒளியைவிட ஏறக்குறைய இருபது மடங்கு சுடர் மிக்கதாய் இருக்கும்.

இத்துணைப் பெருமை மிக்க மதி, இறைவன் படைப்பிலே ஒரு விந்தையான பொருள். ஆகாயப் பெருவெளியிலே நமக்கு அண்மையில் இருக்கும் இதனைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?

அருஞ்சொற்பொருள்

வெம்மை-வெப்பம். தண்ணொளி-குளிர்ந்த ஒளி. உவக்க-மகிழ. எண்ணறும் - எண் அற்ற. விண்மீன் - நட்சத்திரம். புவி-உலகம்.

வினாக்கள்

1. திங்களே மக்கள் ஆராய்ச்சியில் முதல் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்குச் சான்று யாது?
2. பண்டைக்கால மக்கள் திங்களை எங்ஙனம் மதித்தனர்?
3. திங்கள்பற்றி ஆராய்ச்சியில்லா மக்கள் கூறுவது யாது?
4. மற்றவற்றுக்கில்லாத சிறப்பான பண்புகள் நிலாவுக்கு மட்டும் எவை இருக்கின்றன?
5. நிலா நம் உலகத்தினின்று எவ்வளவு தொலைவில் இருக்கிறது?
6. நாம் காணும் முழுநிலா முழுநிலாவன்று என்பதன் காரணமென்ன?
7. நிலாவின் தன்மை யாது?
8. சந்திரக் கிரகணம் ஏற்படக் காரணம் என்ன?
9. திங்களில் வாழும் மனிதனுக்கு நம் உலகம் எவ்வாறு காட்சியளிக்கும்?

9. குண்டலகேசி

[திரு. பூ. ஆலாலசுந்தரனுர் அவர்கள், எம். ஏ.]

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்ற இவை ஐந்தும் ஐம் பெருங் காவியங்கள் எனப்படும். இந்த ஐந்தனுள் சிலப் பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டும் மற்ற மூன்று நூல்களுக்கும் காலத்தால் முற்பட்டன. அவ்வாறு இருந்தும், சுவை காரணத்தாலோ அன்றிப் பிற காரணத் தாலோ சிந்தாமணி முன்னர் வைக்கப்பட்டுள்ளது. பஞ்ச காவியம் என்ற தொகுதி வடமொழியில் உண்டு. ஹர்ஷ கவி இயற்றிய நைடதம், பாரவி இயற்றிய கிராதார்ஜுனீயம், காளிதாச கவி இயற்றிய இரகு வம்சம், குமார சம்பவம், மாக கவி இயற்றிய சிசுபால வதம் ஆகிய இவை வடமொழியில் பஞ்சகாவியம் எனப்படும்.

காவியத்தின் இலக்கணம் யாது என நோக்குவோம்: கவியால் செய்யப்படுவது காவியம். பொருள் தொடர் நிலைச் செய்யுளையே தமிழில் 'காவியம்' என வழங்குவர். காவியம், பெருங்காவியம் சிறுகாவியம் அல்லது காப் பியம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இனி, பெருங்காவியத்தின் இலக்கணத்தைக் காண்போம்: பெருங்காவியம் பாயிரத்தில் வாழ்த்து, தெய்வ வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் முதலியவற்றுள் ஒன்றினை ஏற்றுவரும்; அறம் பொருள் இன்பம் வீடு என நாற் பொருளைப் பற்றியும் கூறும். காவியத்திற்குச் சிறந்த தலைவன் ஒருவன் உண்டு. இதில் மலை, கடல், நாடு, நகர், பருவம், ஞாயிற்றின் தோற்றம், திங்களின் தோற்றம் முதலியவை பற்றிய வருணனைகள் கூறப்பெற்றிருக்கும். இது திருமணம், முடிசூட்டுவிழா, புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மக்கட்பேறு, தூது, போர் முதலிய இன்னோரன்னபிற பொருள்களைப்பற்றிக் கூறுவதுடன், சருக்கம் இலம்பகம் முதலிய பிரிவுகளைக்கொண்டு எண் வகைச் சுவைகளும் நிரம்பப்பெற்றதாகும். இதுவே

பெருங்காவியத்தின் இலக்கணமாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கனுள் ஒன்ருவது பலவாவது கூறப்படாவிடில், அது சிறு காவியமாகும்.

ஐம்பெருங் காவியங்களுள் சிந்தாமணியும் சிலப்பதிகாரமும் சைன சமயச் சார்பான காவியங்களாம். மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காவியங்கள். வளையாபதியைச் சைன சமயக் காவியம் என்பர். அதனைப் பௌத்த சமயக் காவியம் எனக் கூறுவாருமுளர். ஐம்பெருங் காவியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற மூன்றினையும் மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளனர். குண்டலகேசி, வளையாபதி என்ற இரு காவியங்களும் இதுவரையில் முற்றும் தனிப்பட்ட நூல்களாக வெளிவரவில்லை. எனவே, நமக்குக் கிடைக்காது மறைந்துபோன நூல்களுள் குண்டலகேசியும் ஒன்ருகும். புறத்திரட்டு முதலிய நூல்களின் வாயிலாகக் குண்டலகேசிச் செய்யுட்கள் சில நமக்கு இப்பொழுது அகப்பட்டுள்ளன. இந்நூலை இயற்றியவர் **நாதகுத்தனுர்** என்பவர். இவரது காலம் கி. பி. 5-ஆம் நூற்ருண்டு என்பர்.

மணிமேகலை என்ற காவியம் அக்காவியத் தலைவியின் பெயரால் வழங்கப்படுவதுபோல் குண்டலகேசியும் அக்காவியத் தலைவியான குண்டலகேசியின் பெயரால் வழங்கப்படுகிறது. குண்டலகேசியின் வரலாறு பாளி மொழியில் எழுதப்பட்ட '**தேரி காதை**' என்ற பௌத்த நூலிலும், '**தம்மபாதா**' என்ற பௌத்த நூலிலும் காணப்படுகின்றது. இனி அக்குண்டலகேசியின் வரலாற்றினை நோக்குவோம் :

இராச கிருகம் என்ற நகரத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் பொருட்காப்பாளனுக இருந்த ஒருவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பத்திரை எனப் பெயரிட்டனர். மங்கைப் பருவம் எய்திய பத்திரை ஒருநாள் தன் மாளிகையின் மேன்மாடி

யில் உலாவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவ்வூர்ப் புரோகிதன் மகன் சாதுகன் என்பவன் வழிபறித்தல் என்ற குற்றத்தைச் செய்ததால் அவனைச் சேவகர்கள் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றனர். கட்டழகு மிக்க சாது கனைக் கண்ட பத்திரையின் மனம் பள்ளத்துட் பாயும் வெள்ளம்போல் சாதுகனை அடைய எண்ணியது. அவள் சாதுகனையே மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், அன்றேல் உயிர்விடப்போவதாகவும் கூறினாள். அவளது வார்த்தையைக் கேட்ட அவள் தந்தை, தனது மக ளிடத்தே கொண்டுள்ள அன்பின் மிகுதியால் அச் சேவகர் களுக்குக் கைக்கூலி கொடுத்துச் சாதுகனை மீட்டு, அவன் பத்திரையை மணம் புரியுமாறு செய்தான். பத்திரையும் சாதுகனும் சிறிது காலம் வாழ்க்கையை இன்பமாக நடத்தி வந்தனர்.

ஒரு நாள் அவர்களுள் ஓர் ஊடல் நேர்ந்தது. அப் போது பத்திரை சாதுகனை நோக்கி, "நீ முன்பு கள்வன் அல்லனோ!" எனக் கூறினள். இதைக் கேட்ட சாதுகன் மிக்க கோபம் கொண்டானேனும், தனது கோபத்தை வெளிக் காட்டாது அடக்கிக் கொண்டான். தனது மனைவி அணிந்திருந்த அணிகலன்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அவளை விட்டு விலகவேண்டும் என்ற தீய எண்ணம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது. இதனால் அவன் ஒரு நாள் தன் மனைவியை நோக்கி, "பத்திரை, என் உயிரை முன்பு காப்பாற்றிய தெய்வத்திற்கு யான் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்காக ஒரு மலை உச்சிக் குப் போகப்போகிறேன். நீயும் அதற்குக் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்கு என்னுடன் வருதல்வேண்டும்," என்றனன். இதைக் கேட்ட பத்திரை உயர்ந்த அணி கலன்களை அணிந்துகொண்டு சாதுகனுடன் மலை உச் சிக்குச் சென்றனள். கள்ளத்தனமுடைய சாதுகன் தன் மனைவியை நோக்கி, "பத்திரை, நீ அன்று என்னைக் கள்வன் என்று கூறினாய். ஆதலால் யான் உன்னை இப் போது கொல்லப் போகிறேன். நீ இறப்பதற்கு முன் உன் வழிபடு கடவுளை நினைத்துக்கொள்," என்றான். இதைக்

கேட்ட அவள், ‘ தற்கொல்லியை முற்கொல்லிய ’ என்பதற் கேற்ப, அவன் தன்னைக் கொல்வதன்முன் தான் அவனைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தினை உட்கொண்டு, அவன் கட்டளைக்கு அடங்கி நடப்பவள் போல் நடித்து, ‘ ஐயனே, எனது கணவராகிய தங்களைத் தவிர வேறு தெய்வம் எனக்கில்லை ; ஆதலின் யான் உங்களை வலம் வந்து பணிகிறேன் ’ எனக் கூறி, வலம் வருவதுபோலப் பின் சென்று, அவனை மலையுச்சியினின்றும் தள்ள, அக் கள்வன் கீழே விழுந்து இறந்தான்.

கணவன் இறந்த பின்னர்ப் பத்திரை இவ்வுலக வாழ்க் கையில் வெறுப்புக் கொண்டு, சைன மதத்தின் ஒரு பிரி வாகிய நிகண்ட வாதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தாள். அவர்கள் அவளைத் தம் மதத்துள் சேர்த்துக் கொண்டனர். அம் மத வழக்கப்படி பத்திரையின் கூந்தல் நீக்கப்பட்டது. ஆனால் அக் கூந்தல் மீண்டும் சுருண்டு வளர்ந்ததால், அவளை எல்லோரும் குண்டலகேசி என அழைத்தனர். குண்டலகேசி என்பது ‘ சுருண்ட கூந்தலை உடையவள் ’ எனப் பொருள்படும்.

சைன சமயத்தினைச் சார்ந்த குண்டலகேசி அந்தச் சமயத்தின் கொள்கைகளையும் சாத்திரங்களையும் நன்கு கற்றுச் சமயவாதம் புரியப் புறப்பட்டுப் பல ஊர்களுக்குச் சென்றாள். சமய வாதம் செய்பவர், ஊர் நடுவில் மணல் மேட்டில் சமயவாதம் செய்யப் போவதாகக் குறிப்பிட வேண்டி ஒரு நாவல் மரக்கிளையை நடுவது அக்கால வழக்கமாகும். அவ்வாறே குண்டலகேசி சிராவஸ்தி என்ற ஊரின் நடுவில் ஒரு மணல் மேட்டில் சமய வாதத்தின் நிமித்தம் ஒரு நாவல் மரக்கிளையை நட்டுவிட்டுத் தான் உணவு பெறுவதற்கு வெளியே சென்றாள். புத்தரின் சீடருள் ஒருவரான சாரி புத்திரர் என்பவர் குண்டலகேசி யுடன் வாதம் புரிவதற்குச் சில சிறுவர்களைக்கொண்டு அம்மரக்கிளையைப் பிடுங்கி எறியும்படி செய்தார். வெளியே சென்ற குண்டலகேசி திரும்பி வந்து நடந்த தைக் கண்டு, சாரிபுத்திரருடன் வாதம் புரிந்து தோற்றுப் போய், அவரது குருவாகிய புத்தரைக் கண்டு வணங்க,

புத்தர் அவளுக்கு உபதேசம் செய்து, குண்டலகேசியைப் பௌத்த மதத்தில் சேர்த்துக் கொண்டார். இதுவே குண்டலகேசியின் வரலாற்றுச் சுருக்கமாகும். ***

குண்டலகேசி என்பது பௌத்த சமயச் சார்பான நூலாகும். இதில் கண்ட பௌத்த சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே நீலகேசி என்ற சைன நூல் தோன்றிய தென்பது, சிறு காவியங்கள் ஐந்தனுள் ஒன்ருன நீலகேசியால் அறியலாகும். இப்போது நீலகேசி என்ற நூல் நமக்குக் கிடைத்துள்ளது. ஆனல் நாம் குண்டல கேசியை இழந்து விட்டோம்.

அருஞ்சொற்பொருள்

பொருள் தொடர் நிலைச் செய்யுள் - ஒரு பொருள் பற்றித்தொடர் பாகப் பல செய்யுட்களால் கூறப்படும் நூல். பாயிரம் - முன்னுரைப் பகுதி. புனல் - நீர். பொழில் - சோலை. எண் வகைச் சுவை - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்ற எட்டுவகையான சுவைகள். இவற்றுடன் சாந்தம் என்ற ஒன்றைச் சேர்ப்பின் ஒன்பான் சுவையாகும். இதையே வடநூலார் நவரசம் என்பர். ஊடல் - பிணக்கு.

வினுக்கள்

1. தமிழ்மொழியில் உள்ள ஐம்பெருங் காவியங்கள் யாவை ?

2. வடமொழியில் உள்ள பஞ்ச காவியங்கள் யாவை ?

3. பெருங்காவியத்தின் இலக்கணம் யாது ?

4. ஐம்பெருங் காவியங்களை மதச்சார்புபற்றி எவ்வாறு பிரிக்கலாம் ?

5. குண்டலகேசியின் வரலாறு வேறு எந்நூல்களில் காணப்படுகின்றது ?

6. சாதுகன் பத்திரையை மணந்தது எவ்வாறு ?

7. பத்திரையைக் கொல்ல வேண்டும் எனச் சாதுகன் நினைத்ததற்குக் காரணம் என்ன ?

8. அதற்காகச் சாதுகன் அவளிடம் என்ன கூறினுன் ?

9. குண்டலகேசி பௌத்த மதத்தைச் சார்ந்தது எவ்வாறு ?

10. இசையும் இசைக் கருவிகளும்

[வித்வான் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்.]

உலகத்தில் எம்மொழியிலும் செய்யுட்களே முதலில் தோன்றும். மக்கள் உள்ளத்தில் உவகை ஊக்கம் களிப்பு செருக்கு துன்பம் முதலியவற்றைப் பற்றிய உணர்ச்சி உண்டாகும்போது இசையும் பாட்டும் எழும். பாட்டு இசையோடு கூடியதாயிருக்கும். ஆதலின், இசைப் பாட்டே மொழியில் முதலது என்னலாம்.

நம் தமிழ்மொழியில் உள்ள நூற்பொருட் பாகுபாட்டை மூன்ருக்கி 'முத்தமிழ்' என்றனர் முன்னேர். முத்தமிழ் என்பது—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பவற்றைக் குறிக்கும். இயற்றமிழுள் செய்யுள், உரைநடை என்னும் இலக்கியங்களும் இலக்கணங்களும் அடங்கும். இசைத்தமிழுள் இசைபற்றிய செய்யுட்களும் இசையின் இலக்கண நூல்களும் அடங்கும். நாடகத் தமிழுள் உரையும், இசை யமைந்த பாட்டும், கூத்து முதலியவற்றின் இலக்கணங்களும் சேரும்.

இயற்றமிழ், கற்ருேரை மட்டுமே இன்புறுத்தும். இசைத் தமிழ், கற்றவர் கல்லார் ஆகிய இருதிறத்தாரையும் களிப்புறச் செய்யும். இசைக்கு உள்ளம் உருகாத மக்கள் இலர்; இருப்பின், அவர் இரக்கமில்லாத கொடியோராவர்; அன்னர் கொலே செய்யவும் பின்னிடார் என்ருர் ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர்.

இசையின் சிறப்பினே, 'வண்டின் இசைகேட்டுப் போது விரியும்' என்னும் குறுந்தொகைச் செய்யுளடி இனிது விளக்கும். மதமாவும் படவரவும் அசுணமும் ஆனும் குரங்கும் குழந்தையும் கள்வரும் இசைக்கு வசப்படும் இயல்புடையவர் எனின், இசையின் சிறப்பினே இயம்ப வல்லவர் யார் ?

தினைப்புனங் காக்கும் குறமகள் சுனே மூழ்கியதனுலாகிய தலேயீரத்தைப் போக்கப் பரண்மேல் நின்று கூந்தலேக் காற்றில் உலர்த்திக்கொண்டே குறிஞ்சிப்

பண்ணைப் பாடாநிற்ப, தினைக்கதிரைத் தின்பதற்கு ஆங்குப் போந்ததோர் யானை அவளிசையால் மயங்கி, கதிரைத் தின்னாமல், நின்ற நிலையிற் பெயராது கண்ணுறங்கலாயிற்று என்பது அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. நளகிரி என்னும் மதயானையை உதயணன் வீணை வாசித்து அடக்கி அதன்மேல் அமர்ந்து, படைகளை எடுத்துத் தருமாறு அதனையே ஏவி ஊர்ந்தான் என்று பெருங்கதை கூறுகின்றது. உதயணனுக்கு அம் மதகரி வணங்கியதனை,

" ஆணை யாசாற் கடியுறை செய்யும்
மாணி போல மதக்களிறு படிய "

என்று பெருங்கதையின் ஆசிரியர் உரைத்திருப்பது மாணாக்கர் உளங்கொளற்பாலது.

பாம்பாட்டி இசைக்கருவிகொண்டு ஊதிப் பாம்பினை ஆட்டுவித்தலை இன்றும் நாம் பார்க்கின்றோமன்றோ! இசையறிதலில் வல்ல அசுணன் என்பதொரு விலங்கு இன்னோசைக்கு மகிழும்; இன்னாவோசைக்கு வருந்தி மயங்கி வீழும். அதனைப் பிடிக்க விரும்புவோர் மறைந்திருந்து யாழ்வாசித்து அருகுறச் செய்து, உடனே பறையறைந்து மயங்கிவீழச் செய்து பற்றுவராம்.

" ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பால் நுரைவாய்த் தாய்மடியைப் பற்றுமிளங் கன்றினமும் "

உணவு மறந்தொழியக் குழலூதிய ஆனாயர்,

" கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி ஆட்டகில்லா "

வாறு வேய்ங்குழலூதிய கண்ணபிரான் இவர்தந் திறமை அறியத்தக்கன. இனி, கபிலர் பாட்டு ஒன்றில், குரங்கு இசை அறியும் என்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆறலைகள்வராய வன்னெஞ்சரும் பொருநர் பாடும் பாலைப் பண்ணைக் கேட்டு உருகி, தங் கைப் படைகள் தாமே நழுவ, பொருள் கவர்தலை மறந்து விடுவராம்! என்னே இசையின் இயல்பு!

தமிழிசையுள் வேறு வேறு வகை உளது. அவற்றுள் ஒன்று 'தென்பாங்கு' என்பது. அது தெம்மாங்கு என்று மருவி வழங்குகின்றது இந்நாளில். வேற்றிசை யின் நீங்கித் தமிழிசையினைத் தெரிவிக்கும் பெற்றி அத் தெம்மாங்கிற்கே உளது. கருநாடகச் சங்கீதம் பெருகிய பின் தமிழிசை அருகலாயிற்று. வண்டியோட்டுபவர், உழுவோர், இறைப்போர் பலரும் தமிழிசையை மறந் தொழிந்தனர் ; நாற்று நடுவோர், களை பறிப்போர், மண் ணெடுத்துச் செல்வோர் முதலிய தொழிலாளருக்கும் பண் டிருந்த தமிழிசை இன்று இல்லை.

பண்டைத் தமிழ்ச் சங்கங்களில் இயற்றமிழ் போன்று இசைத் தமிழும் மிகச் சிறந்து விளங்கிற்று. "ஏழிசை நூற் சங்கம்" தமிழிசையை வளர்ப்பது. இசைத்தமி ழிலக்கண நூல்கள் மிகப்பல இருந்தன என்பது சிலப் பதிகாரம், சீவக சிந்தாமணி முதலியவற்றின் உரை களால் அறியலாகும். குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலியவை இக்காலத்தில் தமிழிசைக்குச் சான்றாகத் தோன்றியுள்ளன.

தமிழிசை பண் என்றும், திறம் என்றும் இரு வகைப்படும். பண்கள் ஏழு நரம்புகள் (ஸ்வரங்கள்) கொண்டவை; அப் பண்களினின்று திறங்கள் தோன்றும். பண்ணையும் திறத்தையும் முறையே நிறை நரம்பு உடை யது, குறை நரம்பு உடையது என்று கூறுவர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று பெரும் பண் ஐந்துள. இவற்றின் வகையாகிய பண்கள் பல உள. பகற்பண், இரவுப்பண், பொதுப்பண், காலைப்பண், மாலைப்பண் என்னும் பாகுபாடும் உண்டு. இப் பண் களைப்பாடிக் குறிப்பினை உணர்த்தும் இசைவல்லோர் அக்காலத்தில் இருந்தனர். மாலைப் பண்ணைப்பாடி, தம் நண்பனை மாலையில் வரக் குறிப்பித்தார் ஒருவர்.

பண்களை இயைத்துப் பாட்டு இயற்றுவார் முத்தமிழ்ப் புலவர். பண் அமைந்த பாட்டுக்களை உருக்கள், வரிகள் என்றும் பகுப்பர். கீர்த்தனங்களை உருக்கள் என்னும்

வழக்கு இங்குக் கருதத்தக்கது. அவ்வுருக்களைச் செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டிலம் என்று பத்து வகையாகக் கூறுவர். தாளத்தோடு கூடிய பாட்டுக்களைச் சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்று ஒன்பதாகக் கொள்வர். இசை பாடுவோரிடத்தில் பாடற்றொழிற் குற்றம், உடற்றொழிற் குற்றம் இருத்தல் கூடா என்று முன்னோர் கூறியுள்ளனர். இசைபற்றிய குற்றங்களும் உள. இவற்றை அறிந்தாலன்றி, நல்லிசையை வேறுபடுத்தி அறிய இயலாது.

இசைத்தமிழ் நூல்கள் பாடலைப் பற்றியனவாய் மட்டும் இருக்கும். பாடலொடு கூடிய ஆடலைப் பற்றிய நூல்கள் நாடகத்தமிழ் எனப்படும். சிலப்பதிகாரம் நாடகத் தமிழ் நூல். பாடல் ஆடல் கொட்டல் இவை மூன்றும் ஒரு கொத்து. நாடகமாகிய ஆட்டும், சங்கீதமாகிய பாட்டும், வாத்தியமாகிய கொட்டும் 'நிருத்த கீத வாத்தியம்' என்று வடமொழியில் வழங்கும்; தமிழ் மொழியில் 'கொட்டாட்டுப் பாட்டு' எனப்படும். பாடற் பிரிவும் கூத்துவகையும் பல.

இசைக் கருவியைப் பாட்டுக்கும் ஆட்டுக்கும் இரண்டற்கும் உரியன என்று மூவகையாகக் கொண்டனர் முன்னோர். குழலே இசைக் கருவிகளுள் முதலாவதாகும். அதைக் கண்டறிந்த திறன்,

> " ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
> கோடை யவ்வளி குழலிசை யாக "

என்ற கபிலர் வாக்கினல் ஊகித்தறியலாகும். குழலே முதல் இசைக் கருவியாதலை,

> " குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
> தண்ணுமை நின்றது தகவே ; தண்ணுமைப்
> பின்வழி நின்றது முழவே ; முழவொடு
> கூடிநின்றி சைத்த தாமந் திரிகை "

என்னும் சிலப்பதிகார அடிகள் தெரிவிக்கும். இசைக் கருவிகளின் ஓசை நிற்கும் முறைமையும் இதனுல் விளங் கும். கொன்றைக் குழல், ஆம்பற்குழல், முல்லைக் குழல் என்று குழலின் வகை பலவாதல் சிலப்பதிகாரம் முதலிய வற்ருன் அறியப்படும். யாழின் வகைகளையும் அவற்றின் இலக்கணங்களையும் பண்டைய நூல்கள் உரைகள் இவற் ருனும், இன்றைய யாழ் நூல் என்னும் பெருநூலானும் அறியலாம்.

இசைக்கருவி—தொளைக்கருவி, நரம்புக்கருவி, தோற் கருவி, கஞ்சக்கருவி என்று நான்கு வகைப்படும். அவற்றுள் குழலும் எழிலும் (நாகசுரம்) தொளைக்கருவி யின் பாற்படும். பேரிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப் பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந் திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுந்தூம்பு, நிசா ளம், துடுமை, சிறுபறை அடக்கம், விரலேறுபாகம், உபாங் கம், நாழிகைப்பறை முதலியன தோற்கருவிகள். இவற் றின் பெயர்களை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை யில் எழுதியிருக்கின்ருர்; இவையேயன்றி, மகுளி, பாண் டில், கோடு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, பதலை முதலி யனவும் உண்டு. சிலவற்றின் பெயர்க் காரணமும் அடி யார்க்கு நல்லார் தெரிவித்துள்ளார். உதாரணமாக— கரடிகை கரடியின் ஓசைபோலும் ஓசை உடையதனுல் அப்பெயர் பெற்றது. கஞ்சக்கருவி வெண்கலத்தாலாகிய தாள முதலியவை.

இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் புலவரின் வழி வழி வந்தவர் பலர் தமிழகத்தில் இருந்தனர். பேரரச ரிடத்தும் குறுநில மன்னரிடத்தும் பாட்டுப்பாடிப் பரிசில் பெற்று வாழும் பாணர் வரலாறு பழைய நூல்களில் கூறப் பட்டுள்ளது. பேரியாழ் வாசிப்பவர் பெரும்பாணர். சிறிய யாழ் வாசிப்பவர் சிறுபாணர். இவர்கள் வசித்தற்குப் பாண்சேரி என்று தனியிடம் உண்டு. பெரும்பாணர் சிறுபாணர் பொருநர் முதலியோர் பரம்பரை இந்நாளில் அருகிக் காணப்படுகின்றது.

இறைவனே இசைவடிவினனுயுள்ளான் என்று முன்னோர் கூறுவர். "ஏழிசையாய் இசைப் பயனுய்" என்று ஆன்ரோர் அருளிச் செய்துள்ளனர். இதனுல், நம் முன்னோர் இசையைப் போற்றி வந்த திறன் புலனுகும்.

தமிழிசைக் கருவிகளைப் புதுப்பித்து நாட்டில் வழங்கச் செய்யவும், இசைத் தமிழ் நூல்களை எழுதவும், நாடகத் தமிழை நன்முறையில் .வளர்க்கவும் தமிழ்ச் செல்வரும் அரசாங்கத்தினரும் முற்படுவாராக.

அருஞ்சொற்பொருள்

உருகாத - இளகாத. போது - பேர் அரும்பு. அசுணம்- இசைகேட்டலில் விருப்பமுள்ள விலங்கு. ஆன் - பசு. ஆறலைகள்வர் - வழிப்பறி செய்யும் திருடர். குழல் - புல்லாங்குழல்.

வினுக்கள்

1. முத்தமிழ் என்னும் பெயர்க் காரணத்தை விளக்குக.

2. இயற்றமிழ், இசைத்தமிழ் — இவற்றிற்குள்ள வேறுபாடு யாது ?

3. விலங்குகளும் இசைக்கு வயப்படும் என்பதைச் சான்றுடன் எடுத்துக் காட்டுக.

4. இக்காலத்தில் தமிழிசைக்குச் சான்ருகத் தோன்றியுள்ள நூல்கள் யாவை ?

5. பண், திறம்—இவற்றின் வேறுபாடு யாது ?

6. முதல் முதல் தோன்றிய இசைக்கருவி யாது ? சான்று காட்டுக.

7. இசைக் கருவியின் வகைகள் யாவை ? விளக்குக.

---

11. குடும்பக் கலை

[வித்வான் திரு. அன்னுள் சாந்தப்பன் அவர்கள்]

இந்நாட்டில் இறைவன் வழிபாட்டிலுங் கூட ஒரு குடும்பத்தையே அமைத்துள்ளனர் என்பதை ஆலய வழி பாட்டிற்குச் செல்பவர் நன்கு அறிவர். முதலில் பிள்ளை யாருக்குப் பூசை போட்ட பின்பு தான் சுவாமிக்குப் பூசை யுண்டு. அதன் பின்னரே அம்மைக்குத் தருவதை நாம் கண்கூடாகக் காணலாம். இதில் நம் குடும்பக்கலை பொதிந்து கிடக்கின்றது. இல் வாழ்க்கையில் இளந்தம்பதி களிடையே கூடக் குழந்தை பிறந்தபின் அக்குழந்தைக்கே முதலிடம் கிடைக்கின்றது என்பதை யார் இல்லை என்று சொல்லக்கூடும்?

குடும்ப வாழ்க்கையைச் செம்மையாய் நடத்துவதற் குப் பயன்படும் கலையே 'குடும்பக் கலை' எனப்படும்; குடும்பக் கலையினை நுண்ணிதின் ஆராயின் அதை ஐவகை யாகப் பகுத்துக் கூறலாம். அவையாவன: வீட்டை அலங்கரித்தல், உணவு தயாரித்தல், உடையைப் பேணல், நன் மக்கட்பேறு, நோயற்ற வாழ்வு என்பனவே.

இல்லாள் என்ற சொல்லே இல்லத்தை ஆள்பவள் என்று அறிவுறுத்துகிறது. இல்லத்தில் பெண்ணின் நல்லாட்சி நடைபெறுமாயின் அது அலங்காரத்துடன் விளங்குமென்பதற்கையமுமுண்டோ? தன் முகத்தையும், ஆடையையும் அழகு பெற அலங்கரிக்கும் மங்கை தன் கையால் வீட்டை அலங்கரித்துக் காண்பார் களிக்கச் செய்யவும் பின்வாங்கலாமா? குடும்பக் கலை நூலில் வீட் டின் அமைப்பு, அதைச் சுத்தமாக வைக்கும் முறை, அதை அலங்கரிக்கும் வகை இவை யாவற்றையும் நன்கு தெரிந்து வரும் கற்றபெண்கள் தங்கள் இல்லம் குடிசையாயினும், மாடி வீடெனினும் அது காண்பவர்க்கு இன்பக் காட்சி யளிக்கும் முறையில் இலங்கச் செய்வது இன்றியமையாத தொன்றல்லவா?

நாள்தோறும் இல்லத்தைச் சுத்தம் செய்வதும், இல்லத்தில் உள்ள பொருட்களை அதனதன் இடத்தே அமைப்பதும், வாரத்திற்கு ஒரு முறை நீரால் கழுவியோ அல்லது சாணத்தால் மெழுகியோ சுத்தமாக்குவதும், மாதம் ஒரு முறையேனும் ஒட்டடைகளை அகற்றிச் சுத்தம் செய்வதும், ஆண்டுக்கொரு முறை அல்லது இரண்டு முறை சுவர்களுக்கு வெள்ளை பூசித் தூய்மையாக்குவதும் சாதாரணமாக நாம் காணும் காட்சிகளே அல்லவா ? ஆனல், கற்ற மகளிர் வருவாரை வரவேற்று உட்காரவைக்கத் தக்க இருக்கைகளையும், இடையில் மேசையினையும், அம்மேசை மீது ஒரு பூங்கொத்துடன் விளங்கும் நற்கலத்தையும் அமைத்து மேலும் அலங்காரமாக விளங்கச் செய்யலாம்.

அடுத்தபடியாக, இக்குடும்பக்கலையில் அறிந்து கொள்ளவேண்டிய நுண்கலை அடிசிற்ருெழிலேயாகும். நளவீமபாக சாத்திரம் தோன்றித் திகழ்ந்த இந்நாட்டில், அறுசுவையோடும் விருந்தளிக்கும் மாண்பிற்சிறந்த தமிழ் நாட்டில், உணவு தயாரிக்க அறியாது ஆணே பெண்ணே இருப்பது வெட்கக்கேடு என்று கூடத்துணிந்து கூறலாம். பெண்ணுக்குத் தான் அஃது அவசியம், ஆண்களுக்கு ஏன் என்று எவர் கூற இயலும்? திருவிழாக்களிலும், கல்யாண விருந்துகளிலும், பெரும்பான்மையான உணவு விடுதிகளிலும் பெண்களா வந்து சமைக்கிருர்கள் என்பதைச் சீர்தூக்கிப் பாருங்கள்! பள்ளிக் கூடங்களில் பலகாரஞ் செய்யப் படிப்பதுடன் குடும்பக் கலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் பெண்கள் தங்கள் இல்லத்தை வாழ வைக்கும் நங்கையராகத் திகழ முடியாது. வேலைக்காரிகளை வேலை வாங்கவுங் கூடச் சமையல் பாகங்களை நன்கு அறிந்திருப்பது இன்றியமையாததாகும் என்ருல், தாமே சமைக்கும் பிற பெண்மணிகளுக்கு அது நன்கு தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமல்லவா ?

தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று வந்த செவிலி நற்ருயினிடத்தில், தலைவி தலைவன் உவக்கும்படி அடிசில் சமைத்து அளிக்கும் அழகினைக் கூறுவதைக் கேளுங்கள் :

'முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே'

இதன் பொருள்: தோழி, முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவையாமல் உடுத்துக் கொண்டு குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில், தாளிப் பினது புகை மணப்ப இனிய புளிப்பையுடைய குழம்பைத் தன் தலைவன் இனிதென்று உண்பதனால் தலைவியின் முக மானது நுண்ணிதாக மகிழ்ந்தது என்பதே.

இதனால் விளங்குவது யாது? கணவனின் உள்ளத் தைக் கொள்ளை கொள்ள மெல்லிய ஆடைகளையும், நறுமணம் நிறைந்த மாவுகளையும், பூக்களையும், சங்கீதம் பரதநாட்டியம் போன்ற நுண்கலைகளையும் விடச் சிறந்து விளங்குவது அவர்களது அடிசிற்றிறனே என்பது தெளிவு.

அடுத்து, இல்லக்கிழத்தியின் நற்கலையாகத் திகழ வேண்டியது ஆடைகளைப் பேணுதலேயாம். பள்ளியில் விடிய விடியத் தையல் படித்தும் தனக்கு ஒரு மேற்சட்டை கூடத் தைக்கத் தெரியாமல் இருந்து விட்டால், 'பள்ளிப் படிப்புப் புள்ளிக்கு உதவாது' என்று கூறுவது உண்மை யாகி விடுமே. நல்வாழ்வு வாழ விரும்பும் பெண்களுக்குத் தனக்கும் தன் குழந்தைகளுக்கும் உடைகளைத் தைக்கத் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாத தொன் றுகும். அத்துடன் அவற்றைக் கூடுமான வரை தானே சுத்தம் செய்து, அறுந்த பொத்தான்களையும் கிழிந்த பொத் தல்களையும் தைத்து அவ்வாடைகளைப் பேணுவதும் நன் முறையேயாகும்.

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்ற வள்ளுவர் வாக்குப்படி மக்கள் தாம் பெற விரும்பும் அல்லது பெற்று மகிழும் செல்வங்களுள் 'நன்மக்கட் பேறு' தான் மிகவும் சிறப்பாகக் கூறத்தக்கதாகும். அப்பேற்றினை

அடைய அறிஞர் அரிதின் முயன்று அருந்தவமியற்றி இறுதியில் பெற்று மகிழ்ந்தனர் எனக் கூறக்கேட்கின்ருேம். கணவனும் மனேவியும் ஒன்றிய மனதுடன் இல்வாழ்க்கை நடத்துவதே நன்மக்கள் பேற்றிற்கு இன்றியமையாத தொன்று என்பதை நாம் அறிய வேண்டும். விவிலிய நூலில், தான் தண்ணீர் பருகச் சென்ற விடத்துக் கண்டு காதல் கொண்ட நங்கைக்காக ஒருவர் பதினன்கு ஆண்டுகள் அப்பெண்ணின் தந்தைக்கு ஆடு மேய்த்து அடிமையாக வாழ்ந்து அதன் பின்னர் அவளே மணந்து அருமையான இரு புதல்வரைப் பெற்ருர் என்னும் செய்தி ஒன்றுளது. இதிலிருந்து தம்பதிகளின் ஒன்று பட்ட உள்ளமே நன் மக்களே உருவாக்கும் என்பது விளங்குகிறது அல்லவா? இதனே யார் மறுக்கக் கூடும்? யாக்கோபு அல்லது இஸ்ரவேல் என்ற பெரியாரே இங்ஙனம் யோசேப்பு, பென்யமீன் என்ற இரு நற்புதல்வரைப் பெற்ருர் என்பது வரலாறு.

அன்பு, ஐக்கியம் நன்மக்கட்பேற்றுக்குத் துணையாவது போலவே தாயின் உள்ளத்தில் அந்நாட்களில் திகழும் நல்லெண்ணங்களும், உயர்ந்த சிந்தையும் உதவும் என்பது திண்ணம்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெண் தான் பெற்றெடுக்கும் குழந்தையை நல்ல முறையில் வளர்த்து வருவதுடன், அக்குழந்தையும், தானும், தன் கணவனும், பிறரும் நோயுருவண்ணம் காத்து வருவதும் அவசியமே. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ அல்லவா! குழந்தைகள் அழுகிற காரணம் அறியாது அழுகிறபோதெல்லாம் குழந்தைக்குப் பாலூட்டி அதன் உடல் நலத்தைக் கெடுத்து விடாமல் ஒரு திட்டம் வகுத்துக் குறிப்பிட்ட வேளேகளில் மட்டும் ஒழுங்காய் அளித்து வரவேண்டுவது அவசியமாகும். ஆனல் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தால் மணியாகி விட்டதே யென்று கருதி அதனே எழுப்பி உணவு அளிப்பதைவிட அது நித்திரை விட்டெழுந்ததும் தருவதே சாலச் சிறந்த முறையாகும். நடந்து ஓடிப் பிறருடன் பழகும் நாட்களில் அவைகளேப் பேணுவதிலும் தாய்மார் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும்.

பெற்ரோரின் நன்மாதிரியே குழந்தை வளர்ப்பில் மிகச் சிறந்த அடிப்படையாகும். அதன் பின்னர்ச் சுற்றிலும் உள்ள சகோதரர், சகோதரிகள், நண்பர், உறவினர், அயலகத்தார் முதலானோருடைய தீய பழக்கங்களுக்கும் பலியாகாமல் குழந்தைகளைக் காக்க வேண்டும். குடும்பத்தில் சமாதானம், இல்லத்தில் பரிசுத்தம், வறுமையின்மை முதலியன இந்நிலையில் பெரிதும் பயன்தரத் தக்கவை.

முடிவாகக்கூறின், இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்தும் பெண் தன் கணவன் தேடும் பொருளையும் தான் தன் கைத்தொழில் அல்லது பிற ஏதுக்களால் தேடும் பொருளையும் வரவுக்குத் தக்கபடி திட்டம் வகுத்துச் செலவு செய்து வருவதுடன் ஆடம்பர வாழ்வை நீத்து எதிர்காலச் சேமிப்புக்கும் வழிசெய்து வரவேண்டியது அவசியமாகும். இவ்விடத்து நம் பொய்யா மொழியாரின்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறட்பா சிந்திக்கற்பாலதாகும்.

அருஞ்சொற்பொருள்

பொதிந்து-அழுந்தி. நுண்ணிதின்-நுட்பமாக. நன்மக்கட்பேறு-நல்ல குழந்தைகளைப் பெறுதல். இலங்க-விளங்க. அடிசிற்றொழில்-சமைக்கும் தொழில். திகழ-விளங்க. பேணுதல்-காத்தல். அரிதின்-அருமையாக.

வினாக்கள்

1. நம் நாட்டில் இறைவழிபாட்டிலும் குடும்பக்கலை காண்கிற தென்பதை ஆசிரியர் எங்ஙனம் எடுத்துக் காட்டுகிறார்?
2. குடும்பக்கலை எத்தனை வகையாகப் பகுத்துரைக்கப்படும்?
3. இல்லத்தை இன்பக் காட்சியளிக்கும் முறையில் இலங்கச் செய்வது எப்படி?
4. குடும்பக்கலையில் அறிய வேண்டிய நுண்கலை எது?
5. எவர் இல்லத்தை வாழ வைக்கும் நங்கையராகத் திகழ முடியாது?
6. தலைவி நுண்ணிதின் மகிழுமாறு நடந்த நிகழ்ச்சி யாது?
7. ஆடைகளைப் பேணுதலில் இல்லத் தலைவியின் கடமை யாது?
8. விவிலிய நூலில் கூறப்படும் நல்லன்புக்குரிய நிகழ்ச்சி யாது?
9. குழந்தை வளர்ப்பதில் கவனிக்கவேண்டியவை எவை?
10. இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்த ஒரு பெண் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

12. கோவூர் கிழார்

[வித்வான் திரு. வீ. உலக வூழியனுர் அவர்கள்]

பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டின்கண் வாழ்ந்த நல்லிசைப் புலவர், சான்ருேர் என அழைக்கப்பட்டனர். இவர் தம் தாய் நாட்டின்மீது பற்றுடையவர் ; தமிழ்மொழியில் இயன்ற இலக்கண இலக்கியங்களிலும், இசை நாடகங்களிலும், கணிதம், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளிலும் துறைபோகியவர் ; தாம் எண்ணிய எண்ணங்கள் எண்ணியாங்கு அமையச் செய்யுள் இயற்றும் திறமுடையவர். இச் செய்யுட்கள் செவியின் மாந்துகின்றவரை உவகை யாற்றில் திளைப்பித்து, அறுவகைச் சுவையை அறவே மறப்பித்து, எண்வகைச் சுவையைத் துய்ப்பிக்குந் திறத்தன ; செய்யுள் எனவும், தாம் எனவும் வேறுபாடின்றி அவையே தாமாய் அமர்விப்பன.

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த இப்புலவர் பெருமக்களுள் கோவூர் கிழார் ஒருவராவர். தாய் தந்தையர் இவருக்கு இட்ட பெயரை அறிதல் இக்காலத்து அரிதாயிற்று. தாம் வாழ்ந்த ஊர்ப் பெயராலும், பிறந்த வகுப்புப் பெயராலும் கோவூர் கிழார் என இவர் வழங்கப் பட்டனர். கோவூர் என்பது சோழநாட்டில் உள்ளதோர் ஊர். கிழவர் எனுஞ் சொல் கிழார் என மருவிற்று. இவ்வழக்கினை அக்கால ஆசிரியர் மரூஉ எனக் கூறினர். கிழவர் எனுஞ் சொல் நிலத்தையுடையவராய் அதற்குரியவர் எனப் பொருள்படுதலின் வேளாளரைக் குறிப்பதாயிற்று. எனவே, இவர் வேளாண் குடியில் பிறந்தவர் என்பது ஒருதலையாகும். இவர் நிலக் கிழவராயிருந்து பலர்க்கும் வேளாண்மை செய்தாற் போலவே, புலக்கிழவராயிருந்து பலர்க்கும் உதவிபுரிந்தனர். ஈர நெஞ்சினர் ; வீரவாழ்வினர் ; பிறர் தம் வயப்படுமாறு நயம்பட உரைக்கும் நாவினர் ; குற்றங்கண்ட காலத்து நேர்மையான முறையில் அஞ்சாமல் எடுத்துரைத்து அரசரையும் திருத்துகின்ற ஆற்றல் வாய்ந்தவர் ; தமிழ் மொழியில் அழகொழுகும் பாக்கள் பலவற்றை யாத்தவர்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி ஆகிய அரசர்கள் இவர் காலத்தில் சோழநாட்டிற் செங் கோல் செலுத்தினர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சோழன் கரிகாற் பெருவளத்தானுடைய மகனுயிருத்தல் சாலும் எனவும், சோழன் நலங்கிள்ளியும், மாவளத்தானும் இவ னுடைய தம்பிகள் எனவும், ஆசிரியர் ந. மு. வேங்கட சாமி நாட்டார் அவர்கள் கருதுகின்றனர். இம் மன்னர் பெருமானும், இவன் தம்பி சோழன் நலங்கிள்ளியும் கோவூர் கிழாரிடத்துச் சிறந்த மதிப்பும், அன்பும் வைத் திருந்தனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து செங்கோல் ஓச்சிக் கருங்கலி கடிந்தவன். இவன் இயற்பெயர் கிள்ளிவளவன் என்பது. இவன் சேரநாட்டுக் குளமுற்றம் என்னும் ஊரில் இறந்தானுதலால், பின்னர்க் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்பட்டான். இம் மன்னன் மீது சில பாக்கள் நம் கிழார் இயற்றியிருக்கின் றனர். அவற்றுள், இவனுடைய படை வலியையும், ஊற் றத்தையும், ஊக்கத்தையும் சிறப்பித்துக் கூறிய ஒரு செய்யுளின் உரைத்தொகுப்பு வருமாறு :

“காலத்தின் அதிதெய்வமாகிய காலக் கடவுளும் தொழில் ஒன்றனைச் செய்ய விரும்பினுல் அதற்குப் பொருத்தமான காலத்தையும் இடத்தையும் கருதி அமை யத்தை எதிர்பார்க்கும்; ஆனுல், நீ நினது படைவன்மை யால் அவற்றைக் கருதாமலே எக்காலத்தும், யாண்டும் ஏற்றம் வாய்ந்த மாற்றுரைத் தொலைத்துப் போரை வெல் கின்றவன்; அரசே, காற்றும் நெருப்புங் கலந்தாலொத்த வேகமும் வெந்திறலும் உடையையாய்ப் போரிலே ஊக்கத் தாற்றுக்கும் சோழ மன்ன, சினத்திற்குக் காரணமாகிய குற்றங்களை நின்பாற் செய்தவருடைய நாடு பெரும் குழப்பமுடையதாயிருந்தது. அந்நாட்டில் எட்டுத் திசை களிலும் எரிகொள்ளிகள் எரிந்து வீழ்ந்தன; பெரிய மரத்

திணையுடைய வற்றிய நீண்ட கொம்புகள் இலையில்லாதன வாகி, இடுநெருப்பின்றியும் பற்றி எரிந்தன; வெப்பம் மிக்க சுடரிணையுடைய சூரியன் பலவிடத்துஞ் செறிந்து தோன்றினன்; அஞ்சத்தக்க புட்கள் ஒலித்துப் பின்வருந் தீமையை உணர்த்தின. இத்தீய சகுனத்துடன் கூடிய உற்பாதங்கள் காணப்பட்டன. அன்றியும் அந்நாட்டுமக்களைப் பல தீய கனவுகள் அச்சுறுத்தின. வாய்ப்பற்கள் நிலத்து உதிர்ந்தன; தலைமயிரில் எண்ணெய் வார்க்கப்பட்டது; ஆண் பன்றியின் மேல் ஏறி ஊர்ந்தனர்; ஆடை களையப்பட்டு வெற்றரையாயினர்; எண்ணெய் பூசப்பட்டமையால் துருவேருத வெள்ளிய போர்ப்படைகள் தாமிருந்த கட்டிலுடனே கவிழ்ந்து வீழ்ந்தன. இப்படிப்பட்ட தீக் கனுக்களைக் கண்டவர்கள் பின் விழிப்பு நிலையில் வலியோய், நீ வஞ்சி சூடி வருதலைக் கருதி, மனமயக்கங் கொண்டவராய்ப் பாதுகாவலற்ற இருப்பினராய் இருந்து வருந்துகின்றவர், தம் மக்களுடைய கண்ணில் முத்தங் கொடுத்தல் மூலமாகத் தம் வருத்தத்தை மனைவியர்க்குப் புலப்படுத்தாது மறைப்பாராயினர்.''

இங்குக் கூறிய பகுதியால் நம் புலவர் பெருமானர், அரசனுடைய படைவலியையும், பகைவருடைய குழப்பத்தையும் நன்கு விளக்கிக் காட்டி யிருத்தல் நோக்கி இன்புறற்பாலது. உற்பாதங்களையும், தீக்கனுக்களையுந் தொகுத்துக் கூறியிருத்தலின் இவர் நிமித்த நூலினும், கனு நூலினும் வல்லவர் என்பது காண்க. வருத்த மிகுதி மனைவியர்க்குப் புலனுகாதவாறு மறைத்த உபாயத்தைக் கண்ணுடிபோல் விளக்கியது நம் மனத்திற்கு ஒரு வகை இன்ப உணர்ச்சியை எழுப்புகின்றதன்ருே?

கிள்ளிவளவனுடைய பங்காளி நெடுங்கிள்ளி யென்பவன் ஒருவனிருந்தான். அம்மன்னனுக்கும், கிள்ளிவளவனுக்கும் மனப்பிடித்தம் இல்லாமை காரணமாகப் பகை மூண்டது. நெடுங்கிள்ளி சோழ நாட்டகத்து ஆவூரில் உறைந்தவன். கிள்ளிவளவன் ஆவூரை முற்றுகை செய்யத் தன் தம்பி சோழன் நலங்கிள்ளியை அனுப்பினன். யாவரையும் பொருது வலங்கொள்ளும் மதுகை

யுடைய நலங்கிள்ளி பெரும்படையுடன் சென்று ஆவூரை முற்றினன். போர் பொருதற்கு வலியின்றிச் சோம்பி மடிந்து வாயிற் கதவடைத்து நெடுங்கிள்ளி வாளாவிருந் தான். பகையரசர் முற்றி யிருக்குங் காலத்தில் முற்றப் படும் அந்நகரத்தார் பஞ்சு படும்பாடு படுவர் என்பதனைக் கூறவேண்டா. ஆவூர் நகரத்தில் மக்களும் விலங்குகளும் அலக்கணுறுதலைச் செவியுற்றுக் கோவூர் கிழார் ஆண்டுச் சென்று நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறுகின்றவர் ஒரு பாட்டினுல் அவனுக்கு நீதி காட்டினர். அதன் உரைநடை வருமாறு:

"பகைவர் நெருங்குதற்கரிய வலிமையையுடைய குதிரை யூருந் தலைவ! இங்கு இதுபொழுது நடைபெறும் முற்றுகையாலும், கதவடைப்பாலும், அலமருகின்ற களிறுகள் பிடிக் கூட்டத்துடன் குளத்தில் நீராடில; நெல்லுச் சோற்றுருண்டை கொண்டில; நெய் மலிந்த கவளமுண்டில; பந்தியில் கட்டுத்தறிகளை ஒடிபடுமாறு அடித்து நிலத்தில் துதிக்கையைப் புரள விடுகின்றன; பெருமூச்செறிந்து இடி முழக்கம்போல் முழங்கு கின்றன. தாய்மார் உணவுக்குறைவாலும், உள்ளக் கவலை மிகுதியாலும் பாலிலராக, பால் உண்ணப் பெருமல் கைக்குழவிகள் அலறுகின்றன; பூப்புனைதலில் இயல்பாகவே விருப்பமிக்க மகளிர், வெறுந்தலை முடிக்கின் றனர். அலங்கரித்த உத்தம மனைகளில் தண்ணீரில்லை, உண்ணீரில்லை என்னும் வருத்தக் கூப்பீடுகள் கேட்கப் படுகின்றன. இம் முழக்கத்தையும், அழுகையையும், கூப்பீட்டையும் கேட்டுக்கொண்டு வருத்தமில்லாமல் இவ் விடத்தில் நீ இனிது வாளா விருத்தல் நன்றன்று. ஐயோ! ஊர் படும்பாடு சொல்லுந் தரமன்று. நீ அறவழி யொழு குவோயானுல், 'இவ்வூர் உன்னுடையதே; நீ கொள்க' என்று நலங்கிள்ளியோடு கூறி மதிற் கதவினைத் திறந்து விடுவாயாக. வீரவாழ்வு உடையையானுல் போர் பொருத வுடன் கதவினைத் திறப்பாயாக. நீ இவ் வறத்தினையும் மறத்தினையும் நீங்கியிருக்கின்றனை. திறக்கவும் அடைக்க வுமே கதவுகள் உள்ளன; அடைத்தற்கு மாத்திரம் கதவுகள்

வேண்டா ; அத்தொழிற்கு மதிலே சாலும். இதனை அறியாது திறவாதடைத்த திண்ணிலைக் கதவினுள் ஒரு பக்கத்தில் ஒதுங்கி உளம் ஒடுங்கி இருத்தல் யோசிக்கின் நாணம் தரும் செயலாயிருக்கிறது.''

இவ்வமையத்தில், நெடுங்கிள்ளி மேற்கொள்ளுமாறு இருவகைச் செயல்களை யெடுத்துக்காட்டி, அவற்றுள் ஒன்றை அவன் விரைந்து மேற் கோடல் வேண்டும் என அறிவு கொளுத்துதலின் சிறப்புத்தான் என்னே ! முற்றப் பட்ட அந்நகரத்துத் துன்பத்தினை நாடகம்போல் இழைத் துக் காட்டுகின்றனர்.

> " அறவையும் மறவையும் அல்லை யாகத்
> திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
> நீண்மதில் ஒருசிறை யொடுங்குதல்
> நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.''

என இவர் கூறிய பகுதியால் அச்சமென்பதனை அறியார் என்பதும், நாணம் உயிரினுஞ் சிறந்தன்று என்னும் உறுதியுடையார் என்பதும் நாமுள்ளத் தக்கன.

பின்னர் நெடுங்கிள்ளி ஆவூரை விட்டொழித்து உறையூரில் வந்திருந்தான். அப்பொழுது புலவன் இளந் தத்தன் சோழன் நலங்கிள்ளிபாற் பரிசில் பெற்று, நெடுங்கிள்ளிபாற் பரிசில் பெறுதற்கு உறையூரை யடைந் தான். உளவறிதற்கு நலங்கிள்ளியால் அனுப்பப்பட்ட ஒற்றன் இவன் என, நெடுங்கிள்ளி தேராமற் றெளிந்து அப்புலவனைக் கொல்லப் புகுந்தான். இதனை யறிந்த கோவூர் கிழார் அங்குப் போய், "ஐய ! பழுத்த மரங்களை நாடிப் பறவை பறந்து செல்லுதல் போலப் புலவர் வள்ளல்களை யுள்ளி நீண்ட சுடுநிலங்களைத் தாண்டிச் சென்று, அவர்களைப் பாடிப் பரிசில் பெறுவர். பெற்ற தொகை சிறிதாயிருப்பினும் திருப்தியுற்றுச் சுற்றத்தாரை யருத்தித் தாமுந்துய்த்து, தமக்கென ஓம்பாமல், உள்ளங் கூம்பாமல் பிறர்க்குக் கொடுப்பர். ஆதலால், இரத்தற் றொழில் ஒன்றேயுடையர் அல்லர் ; ஈதற்றொழில் உடைய ராதலின் இகழப் படுதற்குரியர் அல்லர் ; தாம் பெறுதற் குரிய வரிசைச் சிறப்பிலே குறிக்கோளுடையர் ஆதலின்

மாறுகொண்டோர் நாணச் சென்று வீறுகாண வென்று தலைநிமிர்ந்து ஒழுகும் வாழ்க்கையர்; பிறர்க்குத் தீங்கு கனவிலும் அறியார்; நிலமாளுந் திருவுடைய நும்மை ஒத்த செம்மையும் உடையவர். ஆதலின், புலவனாகிய இவன் ஒற்றனல்லன்; தீயனல்லன்; பரிசிலைத் தந்து அவனை அனுப்பி வைப்பீராக!" எனப் பகர்ந்தனர். நெடுங்கிள்ளியும் அங்ஙனமே செய்தான். இங்குக் கூறிய வற்றால் இவர் புலவர்கள்பால் வைத்திருந்த மதிப்பினையும், அவர்தம் பண்பினை அளந்து கூறியிருத்தலையும் நாம் நன்கு அறிதல் கூடும்.

நெடுங்கிள்ளி இவ்வாறு உறையூரில் இருக்கும்போது, நலங்கிள்ளி அவ்வூரையும் முற்றுகை செய்தான். நெடுங் கிள்ளியோ முன்னர் ஆவூரில் இருந்தாங்கு இங்கும் கதவடைத்து வாளா இருந்தான். ஈண்டும் புலவர் பெரு மானார் சென்று, இருவரும் சண்டை ஒழிதல் வேண்டும் என்று ஒரு செய்யுளாற் கூறுகின்றார். அதன் உரை நடைப் பகுதி வருமாறு:

"சோழர் குடியிற் பிறந்த மன்னர்களே, நும் மிரு வரில் பெரிய பனையினுடைய தோட்டைச் சூடிய சேரர் ஒருவரும் இலர்; கரிய கிளைகளையுடைய வேப்பம் பூமாலை சூடிய தென்னவர் ஒருவருமிலர்; (ஒவ்வொருவரையும் பார்த்து) நின்னுடைய மாலையும் ஆத்திப் பூவாற் றொடுக் கப்பட்டதே; நின்னோடு போரைப் புரிவோனுடைய மாலையும் ஆத்தியாற் றொடுக்கப்பட்டதே; நீங்கள் இரு வீரும் சோழர் குடியிற்றோன்றினமையின் ஒருவீரே. நும்மிருவீருள் யாவரேனும் ஒருவீர் தோற்பீராயின் சோழர்குடி தோல்வியுற்றது எனும் வசைமொழி உலகில் நிலை நிற்குமே! 'யாம் இருவேமும் வெல்வேம்' என்பீ ராயின், ஒருவரையொருவர் பகைத்துப் பொருத போரின் முடிவில் இருவரும் வென்றதொரு வரலாறு யாண்டும் எக்காலத்தும் இன்மையின் நீவிர் இருவீரும் வெல்லுதல் யாங்ஙனம் அமைதல் கூடும்? அது கூடாதே; ஆதலால், இச்செய்கை நுங்குடிக்குத் தகுந்த ஒழுக்கமன்று; தீயொழுக்கமே. இதில் கொஞ்சமும் ஐயமில்லை. இம்மாறு

பாட்டுப் போர் நும்மையொத்த முடியுடை மன்னராகிய தென்னவர்க்கும், சேரர்க்கும் பூரிப்பை விளைவிக்கும்; ஆதலால், போரையும் மாறுபாட்டையும் உடன் ஒழிவீராக" என்பதாம்.

இனிய முறையில் இடித்துக் கூறிச் சந்து செய்விக்கும் இவரது மாட்சி,

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்."

என்னுந் திருக்குறள்களை நினைப்பிக்கின்றது. சோழர் குடியாரிடத்து இவர் கொண்டிருந்த அன்பும், பற்றும், மதிப்பும் இவ்வாறு இடித்துக் கூறுதற்கு ஏதுவாயின.

நம் கிழார் இரக்கமே ஒருருக் கொண்டவர் என்பது முன்னர்க் காட்டப்படும் நிகழ்ச்சியினுற் புலனுகும். இப்புலவர் காலத்தில் மலையமான் திருமுடிக்காரி எனப் பெயரிய வள்ளல் ஒருவன் இருந்தான். இவனுடைய ஊர் திருக்கோவலூர். இவ்வள்ளல் நெடுங்கிள்ளிக்குப் போரில் உதவி புரிந்தனன் போலும். இதனுல் சினந்த கிள்ளி வளவன் அவ்வள்ளலுடைய மக்களாகிய இளஞ்சிருரைப் பிடித்து யானைக் காலில் இடறுவிக்கத் தொடங்கினுன். இக்கொடுமையை யறிந்த புலவர் விரைந்து அவண் அடைந்து, "அரசே! நீ புருவினுடைய புன்கண்ணையும் பசு முதலியவற்றின் புன்கண்ணையுந் துடைத்த சிபி, மனு முதலிய சோழ மன்னர்கள் சந்ததியில் வந்து தோன்றினுய். இக்குழந்தைகளோ அறிவால் உழுதுண்ணும் புலவர்க்கு இடுக்கண் செய்யும் வறுமைக்கு அஞ்சித் தம் பொருளை அவர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழ்கின்றவர் மக்கள்; கண்டார்க்கு அச்சந்தோன்ற அழிக்க வரும் யானையைக் கண்டும் இளமையால் அச்சமும் அழுகையும் நீங்கியவர்; சபையைப் பார்த்துப் புதிதாயிருத்தலின் மிரண்டு வருந்துகின்றவர். யான் கூறிய இவற்றைக் கேட்டபின் நீ விரும்பியபடி நடந்து கொள்க" எனக்

கூறி, அக் குழந்தைகளை உய்யக் கொண்டார். இச்செய்தி நாற்பத்தாறும் புறப்பாட்டால் அறியலாகும். சிபி, மனு முதலியவர்களின் வழித் தோன்றலாகிய நீ பகையை யறியாத பச்சிளங் குழந்தைகளை வதை செய்யத் தொடங் குதல் நினக்குப் பெரும் பழியைத் தரும் எனவும், புல வரைப் புரக்கும் வள்ளல் வழி வந்தவரைக் கொல்லலால் எம்மனோர் தூற்றும் பழியை வழிவழி நனிமிகப் பெறுகுவை எனவும், ஆதலால் அத்தொழில் செய்யற்க எனவும் கூறி, மறலி வாயில் நின்ற மக்களைப் பறித்த இவர்தம் சதுரப் பாடு இருந்தவாறு என்னே !

அருஞ்சொற்பொருள்

மாந்துகின்றவரை - உண்ணுகின்றவரை. வேளாண்மை - உப காரம். கருங்கலி-வறுமை. அமையத்தை-சமயத்தை. உற்பாதம்-பின்வரும் தீங்கை முன் அறிவிக்கும் அறிகுறி. மதுகை-வலிமை. அலக்கண் - துன்பம். கவளம் - ஒரு பிடியுணவு. சந்து - தூது. இடுக்கண்-துன்பம். மறலி-இயமன்.

வினாக்கள்

1. கோவூர்கிழார் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவ னுடைய படைவலி முதலியவற்றை எவ்வாறு சிறப்பித்துக் கூறி யுள்ளார் ?

2. நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்ட காலத்துக் கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறிய அறிவுரை யாது ?

3. நெடுங்கிள்ளி இளந்தத்தன் என்ற புலவனைக் கொல்ல நினைக்கக் காரணம் என்ன ? இதனை அறிந்த கோவூர் கிழார் என்ன செய்தார் ?

4. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இருந்த பகைமையைக் கோவூர்கிழார் களைந்த முறையை வரைக.

5. கோவூர்கிழார் இரக்கமுடையவர் என்பதற்கு ஒரு சான்று தருக.

13. தமிழன் கண்ட மலேயா (கடிதம்)

[திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், எம். ஏ., எம். லிட்.]

அன்பின் அரசி,

நான் இன்று பகல் பத்தரை மணிக்குச் சிங்கப்பூரிலிருந்து மலாக்கா செல்லவேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. அந்த வழிப் பயணத்தைப்பற்றிச் சொல்லுமுன், சிங்கப்பூரைப்பற்றி மேலும் சில சொல்ல விரும்புகிறேன்.

சிங்கப்பூரின் சிறப்பு : சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிக முக்கியமானது. உலகம் சுற்றிப் பெரும் வாணிக வகையிலும், பிறவகையிலும் செல்லும் மேலைநாட்டுக் கப்பல்களும், கீழைநாட்டுக் கப்பல்களும் இத் துறைமுகத்தைத் தொட்ட பின்பே செல்லவேண்டும். நாள்தோறும் நூற்றுக்குக் குறையாத கப்பல்கள் இங்கு வந்து செல்லுமாம். மலேயா நாட்டின் தென்கோடியில் சிங்கப்பூர் ஒரு தனித் தீவாகவுள்ளது. ஆளும் முறையிலும் இன்னும் இது தனியாகவே அமைந்துள்ளது. சிறு சிறு குன்றுகள் இடை இடை விளங்க, பலப்பல கலங்கள் கரையிடை நிற்க, மிக அழகிய இயற்கைத் தோற்றத்தோடு காட்சி அளிக்கும் தீவு இது. போர்க்குரிய பெரிய கடற்படைத்தளம் இங்கு உண்டு. சாதாரண மக்கள் இறங்கும் துறைமுகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் பதினேழு கல் தொலைவில் தீவின் மறுபுறத்தே அக் கடற்படைத்தளம் அமைகின்றது.

* * * *

குழந்தாய், சிங்கப்பூர் உலக முக்கியமான இடமாதலால், இங்கு எல்லா நாட்டு மக்களும் வாழ்கின்றனர். எனினும் சீனர் பெரும்பாலராக இருக்கின்றனர். அதற்கடுத்தபடியாக இந்தியர் உள்ளனர். சிங்கப்பூரில் பத்து இலட்சம் மக்கள் வாழ்கின்றார்களாம். அறுபதினாயிரம் தமிழர் அங்கு உள்ளனர். விளம்பரப் பலகைகளைப் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சீன மொழியிலும்தான் காண்

கின்றேன். சிற்சில இடங்களில் தமிழ்ப் பலகைகள் தெரிகின்றன. முஸ்லிம்கள் பெரும்பாலராக வாழ்கின்றனர். பெரு வாணிகத் தலமாதலால் எங்கும் கடைத் தெருக்கள் காட்சி அளிக்கின்றன. இராப்பகல் மூடாத பல கடைகள் உண்டாம். இங்கு மக்கள் வசதிக்காகச் செல்லும் 'பஸ்' முதலியன இரவு ஒரு மணிவரை ஓடுமாம். இந்த நிலை, இவ்வூர் இரவிலும் ஒய்வற்ற பேரூர் என்பதை விளக்கவில்லையா? தெருக்கள் மிகத் தூய்மையாகப் பாதுகாக்கப் படுகின்றன. மக்கள் வாழ்வும் நலத்துறை வகையில் செம்மைப் படுத்தப்பட்டுத்தான் இருக்கிறது. உயரிய கட்டடங்கள் நகரை அணி செய்கின்றன. ஒய்வற்ற உயரிய நகராக இஃது அமைகின்றது. மேலைக் கீழை நாடுகளை இணைக்கும் ஓர் இணைப்பிடமாக இஃது அமைகின்றது என்பது பொருந்தும்.

நகர அமைப்புகள் : சிங்கப்பூர் மட்டும் அல்லாது மலேயாவில் உள்ள அத்தனை ஊர்களும் மிகத் தூய்மையாகத் தான் பாதுகாக்கப்படுமாம். நகரில் மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும் காணவில்லை. காரணம் அறிய விரும்பினேன். மோட்டார்கள் மிக்கிருத்தலால் பிற வண்டிகள் தேவை இல்லை என்பது ஒன்று. மற்றும் நகர நலம் கெடாவகையில் பசு, மாடு முதலியவற்றை ஊர்ப் புறத்தேதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். சில பேரூர்களில் நகர எல்லைக்கு ஐந்து கல் தொலைவிலும் கால்நடைகள் இருக்குமாம். அவை உலவுவதாலும் சாணம் முதலியவற்றாலும் நகர நலம் கெடும் என்பதை அறிந்து, அவற்றைச் சேர்க்காது, நகரத்தை அழகிய முறையில் காக்கிறார்கள். சொந்தப் பசு வைத்துக் கொள்ள விரும்புகின்றவரும் நகரில் வைத்துக்கொள்ளக் கூடாதாம். வெளியே வைத்துத்தான் பாலைமாத்திரம் கொண்டுவர வேண்டுமாம். சென்னை நகரிலே—நம் தலைநகரிலே—மனிதன் வீட்டுக்கும், மாட்டுக் கொட்டிலுக்கும் வேறுபாடு காணாத நமக்கு இது வியப்பாகத் தோன்றவில்லையா? இதுமட்டும் அல்லாது இன்னும் எத்தனையோ வகைகளில் நகரங்கள் நலத்துறை, குடிநீர், கல்வி, போக்குவரத்து

ஆகிய பலவகைகளில் நம் நாட்டினும் நன்கு ஓம்பப்படு கின்றன.

நான் பகல் பத்தரைமணிக்கு மலாக்காவுக்கு, பஸ்ஸில் புறப்பட்டேன். பத்தரை மணிக்குப் புறப்பட்ட பஸ் சிங்கப்பூரின் பல தெருக்களையும் தாண்டி மலேயாப் பெரு நிலத்தில் புகுந்தது. நகர நலங்கண்ட நான், பஸ்ஸில் இருந்தபடியே மலேயா நாட்டுப்புற நலங்களைக் கண்டேன். எப்புறம் நோக்கினும் பசுமை காட்சியளித்தது. நான் புறப்பட்டபொழுது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. மழை பெய்வதும் விடுவதும் இந்நாட்டில் அடிக்கடி காணக் கூடிய ஒன்றாகும். இங்கு மழைக்காலம் என்று ஒன்று இல்லையாம். ஆண்டு முழுவதும் மழை இருக்குமாம். நான் மலாக்கா செல்வதற்குள் பலமுறை மழை வந்து வந்து சென்றது. எங்கும் இயற்கைநலம் காட்சி அளித்தது. சாலைகள் மிக்க அழகாகச் செப்பனிடப்பட்டிருந்தன. நூற்றறுபது கல் தொலைவு அந்த வண்டியில் வந்ததும் அசதி சிறிதும் தெரியவில்லை என்றால், சாலை நலத்தை எண்ணிப்பார். நாற்பது கல் தொலைவிலுள்ள காஞ்சிபுரத்தி லிருந்து சென்னை வருவதற்குள் நாம் எவ்வளவு அசதி பெறுகின்றோம்! அதை இங்கு நினைத்தாலும் அச்சம் எழுகின்றது. வண்டி மிக்க விரைவாக வந்தது. இந்தச் சாலைகளை எண்ணும் காலத்து ஒருபுறம் மகிழ்ந்தேன்; ஆனால் ஒருபுறம் வருத்தமுற்றேன். இத்தகைய அழகிய சாலைகளை ஆக்கித் தந்தவன் யார் என நினைக்கின்றாய்? மலாய் நாட்டுக்காரனா? சீனனா? ஆங்கிலேயனா? இல்லை. நம் அருமைத் தமிழன் கைதான் இந்தச் சாலைகளை அமைத்தன. பிறந்த நாட்டில் வாழ வகை இழந்த தமிழன் நாடோடியாய் இங்கு வந்து வயிற்றை வளர்க்க வழி கண்டான். அவன் அரும்பெரும் உழைப்புத்தான் மலேயாவைச் செல்வ நாடாக மகிழ்விக்கின்றது. எத்தனை தமிழ்த் தாய்மார்கள் கல்லுடைத்திருப்பார்கள்! வரம்பு கட்டியிருப்பார்கள்! அவர்கள் உழைப்பெல்லாம் நம் நாட்டிற்குப் பயன்பட்டிருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும்! ஆனால் அன்றைய ஆளவந்தார்கள் அதை எண்ணவில்லை. இன்று வந்தவராவது இதை

எண்ணி, இனித் தமிழ் மக்களைக் கூலியாட்களாகப் பிற நாடுகளுக்கு அனுப்பாதிருப்பார்களாயின் நாடு உயரும்; நாம் உயர்வோம்.

அரசி! இப்படிக் கைவருந்தி உழைத்த தமிழன் இன்னும் இங்கு உயரவில்லை. ரப்பர்த் தோட்டங்களில் கூலியாளராக வேலை பார்ப்பவருட் பெரும்பாலர் தமிழரே யாவர். இதை எண்ண உண்மையில் உள்ளம் நைகின்றது. அவன் இட்ட சாலையில் அன்னிய நாட்டார் மோட்டார்களில் ஆடாது அசையாது அழகாகச் செல்லுகின்றனர். ஆனால் சாலை அமைத்த தமிழன் அன்றைய நிலையிலேயே இருக்கிறான். தமிழன் செப்பனிட்ட அந்தச் சாலையில் செல்லுங்கால் என் சிந்தையில் பல எண்ணங்கள் வந்து வந்து சென்றன. 'தமிழா, உன்கதி இதுவா! பிறர்க்கு உழைத்தும் ஓட்டாண்டியாக வாழவா நீ பிறந்தாய்!' என்றது என் நா.

* * *

உழைத்துப் பாடுபடும் பாட்டாளி மக்கள் சாலை இரு மருங்கிலும் சாதாரண வீடுகள் அமைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள். அவர்கள் வீடுகளுக்குக் காற்றோடடப் பலகணி உண்டு. இயற்கைச் சோலைகளின் நடுவிலே—பறவைகளின் இனிய ஒலிகளின் இடையிலே—இந் நாட்டுப் பழங்குடி மக்கள்—உழைப்பாளிகள்—பயமற்று, கொண்டதை மன நிறைவால் ஏற்று வாழ்க்கை நடத்துகின்றார்கள். அம்மம்மா! ஓய்வற்ற சிங்கப்பூர்த் தெருக்களுக்கும் இந்நாட்டுப் புறங்களுக்கும்தான் எத்தனை வேற்றுமை! இவற்றை எல்லாம் எனக்கு இயற்கை அன்னை எடுத்து விளக்கிக்கொண்டே வந்தாள். நான் கண்ணும் இமைக்காது அவள் காட்டிய காட்சிகளையும் உணர்த்திய பாடங்களையும் கண்டும் அறிந்தும் வந்தேன். சாலையின் இருமருங்கிலும் உயர்ந்த ரப்பர்த் தோட்டங்கள் காட்சி அளித்தன.

* * *

வீட்டு அமைப்பு: வழியிடைக் கண்ட தோட்ட வீடுகளாம் நாட்டு வீடுகள் புதுமையாக இருந்தன; வீடுகள்

எல்லாம் மரத்தால் ஆகியவை. நிலம் பெரும்பாலும் சதுப்பாக இருந்ததால், ஆழ்ந்த கடைக்கால் இட்டு வீடு கட்ட முடியாது போலும்! அடியில் மரத்தால் ஆகிய கால்கள் நட்டு, இடத்திற்கு ஏற்றபடி இரண்டோ, மூன்றோ, நான்கோ அடிகள் விட்டுப் பின்பு தரை, சுவர் முதலான வற்றை இட்டு, மேலே தகரத்தாலோ அன்றி அதே மரத்தாலோ அன்றி ஓலையாலோ கூரைவேய்ந்த வீடுகளே எங்கும் காணப்பட்டன. அவை மிக எளிய வீடுகள் தாம். சில வீடுகள் தென்னை போன்ற ஒருவகை ஓலையால் வேயப்பட்டிருந்தன. நகரத்தில் கண்ட ஆடம்பர வாழ்க்கை இங்கெல்லாம் காணப்படவில்லை; மக்கள் சாதாரண முறையிலேயே காணப்பட்டனர். சில இடங்களில் ரப்பர்த் தோட்டங்களோடு பல தென்னஞ் சோலைகளும் காணப்பட்டன. மலாக்கா நெருங்க நெருங்கத்தான் தென்னஞ் சோலைகள் மிகுதியாக இருந்தன. தேங்காய்கள் மிகப் பெரியன. நம் நாட்டில் இவ்வளவு பெரிய தேங்காய்களைக் காணுதல் முடியாது. இங்கு உரித்த காய்கள் நம் நாட்டில் மட்டையோடு கூடிய காய்களின் அளவு இருக்கும்.

வழி நெடுகப் பல இயற்கைக் காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவர நூற்று அறுபது கல் தாண்டி ஜோகூர், மூவார், பத்துப்பகார் முதலிய ஊர்களை எல்லாம் கடந்து, மாலை ஐந்து மணிக்கு மலாக்கா வந்து சேர்ந்தேன். வழியில் ஓரிடத்தில் 'சன்மார்க்கத் தமிழ்ப் பாடசாலை' என்ற தமிழ்ப் பள்ளிக்கூடம் இருப்பதை அங்கு மாட்டியிருந்த பலகையால் அறிந்தேன்.

அருஞ்சொற்பொருள்

மேலை-மேற்குத்திசை, கீழை-கிழக்குத் திசை. கலம்-கப்பல். பேரூர்-பெரிய ஊர். அணி-அழகு. நலத்துறை-சுகாதாரத்துறை. ஓம்பப்படுகின்றன - பாதுகாக்கப்படுகின்றன- பலகணி - சன்னல். கடைக்கால் - அஸ்திவாரம். நைகின்றது - வருந்திக்குன்றுகிறது. மருங்கு-பக்கம்.

வினாக்கள்

1. சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் மிகவும் முக்கியமானது—எதனால் ?

2. சிங்கப்பூர் எவ்வாறு அமைந்துள்ளது ?

3. சிங்கப்பூரில் வாழ்பவர் யாவர் ?

4. சிங்கப்பூர் இரவிலும் ஓய்வற்ற பேரூர் எனப்படுவதேன் ?

5. மலேயா நாட்டு நகரங்கள் தூய்மையாய் இருப்பதற்குரிய காரணங்கள் யாவை ?

6. மலேயா நாட்டில் மழைக்காலம் என ஒன்றில்லை எனப் படுவதேன் ?

7. தமிழனின் கைத்திறனாக அங்குக் காணப்படுபவை எவை ?

8. 'நாடு உயரும் நாம் உயர்வோம்'—இதற்கு ஆளவந்தார்கள் செய்யவேண்டியது யாது ?

9. 'தமிழா, உன் கதி இதுவா ?' என்று ஆசிரியர் வருந்தக் காரணம் யாது ?

10. மலேயாவின் இயற்கை வளம் எத்தகையது ?

11. மலேயாவிலுள்ள வீட்டு அமைப்பு எவ்வாறிருந்தது ?

12. மலேயா நாட்டில் மிகுதியாகக் காட்சியளிக்கும் தோட்டங்கள் எவை ? ஏன் ?

13. அந்நாட்டுத் தேங்காய்கள் எத்தகையவை ?

14. முன்னேற்றப் பாதையில் நம்நாடு

[திரு. சு. இலக்குமி அவர்கள், M.A., B.T., சென்னை.]

நம் நாடு நலம் பல பொருந்திய பாரதநாடு. இது பற்பல துறைகளில் முன்னேற்ற மடைந்துள்ளதனை நாம் காண்கிறோம். பன்னாட்டவரும், இந்நாட்டின் செல்வத்தில் விருப்பங் கொண்டு, இங்கு வதிந்த காலந் தொட்டு, இந்தியாவின் பண்பாடு, நாகரிகம் முதலியன விளங்கின. கிரேக்கரும், பார்த்தியரும், மொகலாயரும் இங்கு வந்துறைந்தனர்; இந்தியாவின் பண்பாடு அவர்களைக் கவர்ந்தது. இந்நாட்டைத் தம் நாடு என்று எண்ணி, அவர்கள் இந்திய இரத்தத்தில் ஒன்று கலந்தனர். ஆனால் இன்றைய இந்தியாவில் வறுமையும், கொடிய பஞ்சங்களும் பலவிடங்களில் மக்களைத் துன்புறுத்தக் காண்கிறோம். இது எவ்வாறு நேர்ந்தது? ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய பல வகுப்பினரும், இந்திய வாணிகத்தில் நாட்டங் கொண்டு ஈண்டடைந்தனர். வாணிகம், நாளடைவில் அரசியலுக்கு வழி வகுத்தது. 'வாணிகம் முன்னே; கொடி பின்னே' என்னும் கூற்று உண்மையாயிற்று. அந்நியரின் சூழ்ச்சி இந்தியரின் ஒற்றுமையைக் குலைத்தது. விரைவில் நாடு சீர்கேடுற்றது. போட்டியில் வெற்றிகண்ட ஆங்கிலேயர் இந்தியா நாட்டை நூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். நாட்டுக்குச் சில நன்மைகள் அவர்களால் ஏற்படாமல் போகவில்லை. இருப்பினும், இந்தியாவின் பழம்செருக்குக் குன்றியது; இது வறிய நாடாயிற்று.

இந்நிலையினைக் கண்டு பொருமிய இந்திய உள்ளங்கள் எத்தனையோ? நாட்டின் விடுதலைக்கான முயற்சியில் நமது தலைவர்கள் இறங்கினர். காந்தியடிகள் துன்புறுத்தாமை, உண்மை என்னும் கருவிகளைக் கொண்டு அந்நியர் மீது அறப்போர் தொடுத்தார். இதன் பலனாக, நாடு விடுதலைபெற்றது. 1947-ஆம் ஆண்டு இந்தியா உரிமை பெற்ற

நாடாயிற்று. நாட்டின் நிலைமை அதன் பின்னர்த் தெளிவாயிற்று. வறுமையும் பஞ்சமும் எங்கணும் நிறைந்து கிடந்தன. வேலைசெய்யுந் திறமையுள்ளோருக்கு வேலை கிடைக்கவில்லை. வேலை கிடைத்தால் போதிய ஊதியமில்லை. மக்கள் தொகையோ, பெருவாரியாகப் பெருகியுள்ளது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் பரப்பில், இந்தியா மூன்றில் ஒரு பங்காகும். ஆனல் அங்குள்ள மக்கள் தொகையைப் போல், நம் நாட்டில் இருமடங்கு உள்ளது. இந்நிலையைச் சீர்செய்ய, இந்திய அரசாங்கம் திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. அவற்றுள் நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் இன்றியமையாதவை.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1951—1956-இல் செயலாக்கப்பட்டது. உழவுத் தொழில் முன்னேற்றத்திற்காகப் பெருந்தொகை இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் 2,600 கோடி ரூபாய் செலவில் நடைமுறையில் கொண்டு வரப்பட்டது. இந்தியா ஒரு வேளாண்மை நாடு. இங்குள்ள மக்களில், நூற்றுக்குத் தொண்ணூறு பேர், பயிர்த்தொழிலையே நம்பிச் சிற்றூர்களில் வாழ்கின்றனர். இவர்களில் சொந்த நிலம் உள்ளவர்கள் சிலரே; பலர், கூலிக்கு வேலை செய்பவர்கள். குடியானவர்களில் பெரும்பாலோர், நம் நாட்டில் கல்வியறிவு இல்லாதவர்கள்; கடன் தொல்லையில் மூழ்கித் தவிப்பவர்கள். பஞ்சாப், உத்தரப் பிரதேசம் முதலிய இராச்சியங்களில் பெரும்பாலான குடியானவர்கள் இவ்வகைத் தொல்லைகளால் இடர்ப்படுகின்றனர். நம் நாட்டில் ஓடும் ஆறுகளில் பெரும்பாலானவை, பருவக்காற்று மழையை நம்பியிருக்கின்றன; இந்திய வேளாண்மையும் அப்படியே. எனவே, பயிர்கள் மழை குறைந்தாலும், வெள்ளப் பெருக்க மேற்பட்டாலும் தக்க பாதுகாப்பின்றி அழிந்து போவதுண்டு. புதிய கருவிகள், எருக்கள், புதிய முறைகள் முதலியவற்றைக் கல்வியறிவு பெருத குடியானவன் பயன்படுத்த அஞ்சுகின்ருன். ருஷியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியவற்றில் நிலங்கள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களாக உள்ளனவென்றும், அவை பேரளவில் பயிரிடப்

படுகின்றன வென்றும் காண்கிறோம். இந்தியாவின் நிலங்கள் மிகச்சிறியவைகளாகவுள்ளன. உழுவதற்காகப் பயன்படும் எருதுகள் சென்று திரும்பவும் சில இடங்களில் வசதியில்லை.

இந்தியக் குடியானவரிடையே ஒற்றுமைக் குறைவையும் மிகுதியாகக் காண்கிறோம். வரப்புக்காகத் தொடங்கும் சிறுபூசல், வயலையே விழுங்குமளவிற்கு வளர்ந்து விடுகிறது. எனவே, குடியானவரது நிலையை உயர்த்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முன் வந்துள்ளது. இவ்வகைத் திட்டங்களால் சோவியத் ருஷியா, சீனு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியன முன்னேற்ற மடைந்துள்ளன. 1917-ஆம் ஆண்டு ருஷியப் புரட்சிக்குப் பின், அந்நாடு மிகவும் சீர்கேடான நிலைமையில் இருந்தது. சுமார் ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பின்னர், இன்று சோவியத் நாடு, வல்லரசுகளுள் வலிமை மிக்க வொன்ருக விளங்குகின்றது.

நம் நாட்டின் நிலைமைக் கேற்ப, நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் செயலாக்கப் பட்டு வருகின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நீர்ப்பாசன வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நாட்டின் உயிர்நாடி போன்றிருக்கும் வேளாண்மைக்குப் பெருந்தொகை ஒதுக்கப் பட்டது. நாடெங்கும் பல அணைகள் கட்டப்பட்டன; பக்ரா-நங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, ரிஹந்த், ஹிராகுட், துங்கபத்ரா முதலிய அணைக்கட்டுகள் குறிப்பிடத்தக்கவை. ஏறத்தாழ எழுபத்தேழரைக் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்ரா-நங்கல் திட்டம், உலகத்திலேயே மிகப் பெரிய அணைக்கட்டுத் திட்டமாகக் கருதப்படுகிறது. இது பஞ்சாபில், சிந்து ஆற்றின் துணை ஆருகிய சட்லெஜில் கட்டப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தமட்டில், இந்தியா உலகத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அணைகள் பலவற்றிலிருந்து, ஆக்க வேலைக்குத் தேவையான 'மின்சாரம்' எடுக்கப்படுகிறது. இருப்புப் பாதைகள், சாலைகள், தபால்

தந்தி முதலிய போக்கு வரவு வசதிகளும் இத்திட்டத்தில் செயலாற்றப்பட்டன. குடிசைத் தொழில்களை நிறுவவும், அறியாமையைப் போக்கும் கல்வி நிலையங்களை ஏற்படுத்தவும் பெருந்தொகை செலவிடப்பட்டது. சமூக நலனுக்காக 533 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமை இதனால் பெரிதும் உயர்த்தப் பட்டுள்ளது. நோயுற்றோர் தொகை நம் நாட்டில் பெருகி வந்திருக்கிறது. ஆனால் இதற்கேற்ற மருத்துவ வசதிகள் நம் நாட்டில் இல்லை. எனவே, மருத்துவ நிலையங்கள் பல நிறுவப் பட்டன. மருத்துவப் பயிற்சி பெறுவோரின் தொகை மிகுதியாயிற்று. தொழில்களுக் கெனவும் ஒரு பங்கு ஒதுக்கப்பட்டது.

1956 – 61-க்குள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தனது குறிக்கோளை அடைந்துவிடும். முதலாவது திட்டத்தை விட இது மிகவும் பெரியது. முதல் திட்டத்தில் வேளாண்மை சமூக நலன் முதலியவற்றிற்குப் பெருந் தொகை ஒதுக்கப் படுவதைக் காண்கிறோம். இரண்டாவது திட்டத்தில், இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்காகப் பெருந் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. குடிசைத் தொழில்கள், பெருந்தொழில்கள் முதலிய பலவற்றாலும், நாட்டின் உற்பத்திப் பொருள்களைப் பெருக்குவதே இதன் நோக்கம். இதுவரையிலும் எடுக்கப்படாத கனிப் பொருள்கள் இப்போது தோண்டி எடுக்கப்படுகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் ‘பழுப்பு நிலக்கரி’ என்னும் கறுப்புத் தங்கம் வெட்டியெடுக்கப் படுகின்றது. இந்தியா முழுவதற்கும் தேவையான பழுப்பு நிலக்கரி இவ்விடத்தில் கிடைக்கு மென்று கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் சுமார் இருநூற்றைம்பது வகையான தொழில்களை இயக்க வியலுமாம்.

நம் நாட்டில் நகரங்களில் தொழில்களை நம்பி வாழ்வோர் தொகை நூற்றுக்குப் பத்துப் பேருக்குக் குறைவாகவே உள்ளது. வேலையில்லாது துன்புறும் பெரும்பான்மை

யோருக்குத் தொழிற்சாலைகள் உழைப்பையும், ஊதியத்தையும் நல்க வியலும். எனவே இரண்டாவது திட்டத்தில் பேரளவை, சிறிய அளவைத் தொழில்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப் பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்தில் 4,800 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் உதவியால் 1,200 கோடி ரூபாயும், வரிகளிலிருந்து 800 கோடி ரூபாயும், பிறநாடுகளிலிருந்து கடன் தொகையாக 800 கோடி ரூபாயும் இத்திட்டத்திற்காக எதிர்பார்க்கப் படுகின்றது.

ஜப்பான், அமெரிக்கா, ருஷியா முதலிய நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குமேல் கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர். நம் நாட்டில் நூற்றுக்குப் பதினைந்கு பேருக்குமட்டுமே எழுதப் படிக்கத் தெரியும். இந்நிலையை மாற்றக் கட்டாயக் கல்விக்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. நாடெங்கும் கல்வி நிலையங்கள் பல தோன்றுகின்றன. ஜாம்ஷெட்பூரிலுள்ள மிகப் பெரியதான டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலையைப் போன்று, ' பிலாய் ', ' தூக்பூர் ', ' ரூர்கலா ' என்னும் பெயர் கொண்ட மூன்று பெரும் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் முறையே பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய இராச்சியங்களில், அயல் நாட்டினரின் உதவியுடன் துவக்கப்பட்டுள்ளன. சென்னையைப் போன்ற பெருந் துறைமுகங்கள் மேலும் பெரிதாக்கப்பட்டு வருகின்றன. சித்தரஞ்சனில் இரயில்வே என்ஜின்கள் செய்யும் தொழிற்சாலையும், சென்னையிலுள்ள பெரம்பூரில் இரயில்வே வண்டிகள் செய்யும் தொழிற்சாலையும் குறிப்பிடத்தக்கவை.

முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் வெவ்வேறு துறைகளுக்கென ஒதுக்கப் பட்டுள்ள தொகைகளிலிருந்து அவை எவ்வளவு பெரிய திட்டங்கள் என்பது புலனாகும். இவை அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப் பட்ட பிறகு, நம் நாடு அடையும் பலன் மிகச் சிறந்ததாயிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

	முதல் ஐந்தாண்டுத் திட்டம்		இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	
	மொத்தத் தொகை (கோடி ரூபாய்)	சத வீதம்	மொத்தத் தொகை (கோடி ரூபாய்)	சத வீதம்
1. வேளாண்மையும் சமூக முன்னேற்றமும்	357	15·1	568	11·8
2. நீர்ப்பாசனமும், நீர் மின்சக்தியும்	661	28·1	913	19·0
3. தொழில்களும் சுரங்கமும்	179	7·6	890	18·5
4. போக்குவரவு, செய்தி	557	23·6	1385	28·9
5. சமூக நலன்	533	22·6	945	19·7
6. பிற இலாகாக்கள்	69	3·0	99	2·1
மொத்தம்	2,556	100	4800	100

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், முதல் திட்டத்தை விட மிகுந்த செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதென்பது புலனுகும். இதனுல் கோடிக்கணக்கான மக்களுக்கு வேலே கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நாடு நலம் பெற இவ்வகைத் திட்டங்கள் இந்தியாவுக்கு மேலும் அவசியம். திட்டங்கள் செயலாற்றப்படும்போது, துன்பங்கள் பல நேரிடலாம். நாட்டு மக்கள் அனைவரும் அவற்றைப் பொருட்படுத்தாது ஒன்றுபட்டு உழைப்பாரேயாயின், நம் நாடு பொருளாதாரம், சுகம் முதலிய பல துறைகளில் சிறந்து, உலக நாடுகள் போற்றும் வகையில் அமையுமென்பது திண்ணம்.

அருஞ்சொற் பொருள்

நலம்-நன்மை. பன்னாட்டவர்-பல நாட்டைச் சேர்ந்தவர்கள். வதிந்த-வசித்த. உறைந்தனர்-வாழ்ந்தனர். துன்புறுத்தாமை-அகிம்சை. நல்க-அளிக்க.

வினாக்கள்

1. இன்று நம் நாடு வறுமையால் வாடுவதேன் ?

2. கிரேக்கர், மொகலாயர் இங்குறைந்தபோது நம் நாடு எப்படியிருந்தது ? ஏன் ?

3. நம் நாடு எப்படி எப்போது விடுதலை யடைந்தது ?

4. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால் உண்டான நலன்கள் யாவை ?

5. இந்திய வேளாண்மை குன்றியிருக்கக் காரணம் என்ன ?

6. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் நாம் அடையக்கூடிய நலன்கள் யாவை ?

7. இவ்விரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு மிடையுள்ள வேறுபாடு யாது ?

8. நாடு நலம்பெற இப்போது நாம் செய்ய வேண்டியிருப்பது யாது ?

15. அழகிய ஜப்பான் நாடு

(முன்னைய மேயர் திரு. சு. இராமசுவாமி நாயுடு அவர்கள்)

நோக்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அழகு படைத்த நாடுகள் இவ்வுலகில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் ஒன்று ஜப்பான் என வழங்கும் நிப்பான் நாடாகும். 'நிப்பான்' என்பதற்கு 'எழு ஞாயிற்றுக்குரிய நாடு' என்பது பொருள். நிப்பான் நாடு கைபுனைந்தியற்றுக் கவின் பெறு வனப்புடையதாகும்.

ஜப்பானில் காலையில் தோன்றும் நீலவான் வனப்பும் செம்பொன்னை உருக்கி வார்த்தது போன்று காட்சியளிக்கும் அந்திவான் அழகும், முகில் தவழ வானுற ஓங்கி நிற்கும் வெள்ளிப்பனிமலைப் பொலிவும், கொண்டல் பொழியும் மழை எழிலும், அம்மழைநீர் மலைக் கற்களை அரித்தோடும் அருவியழகும்,பின் அவ்வருவிகள் ஆருகப்பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், அதனால் நாடெங்கும் பச்சைப் பசேலெனப் பெருங்காட்சி நல்கும் பொழில்களின் பொலிவும் இனிய காட்சியளிப்பவையாகும். அப்பொழில்களில் வானளாவி நிற்கும் மரங்களும், அவைகளைப்பற்றுக் கோடாகக் கொண்டு பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் பெரு வனப்பும், இப்பசுமையினிடையே பலநிற மலர் தரும் கண்கவர் தோற்றமும் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவனவாக அமைந்திருக்கின்றன.

மூவாயிரம் தீவுகள்

படத்தில் பார்க்கும் போது, ஜப்பான் நாடு என்பது, வளர்பிறை எனக் காட்சி நல்கும் பல தீவுக் கூட்டம் என்பது விளங்கும். சற்றேறத்தாழ மூவாயிரம் தீவுகள் இப்பிறை வடிவத்தில் அடங்கிக் கிடக்கின்றன. இவற்றுள் பல வளமற்ற பாறைத் தீவுகளாகும். ஆதலால், மக்கள் இவற்றில் குடியேறி வாழவில்லை. நான்கு பெருந் தீவுகளே சிறப்பாக மக்கள் வாழ்விற்குரியனவாயும் காண்போர் கருத்தை ஈர்ப்பனவாயும் மிளிர்கின்றன. இந்நான்கு தவிர,

மற்றும் சில தீவுகள் எரிமலைகளை எண்ணற்றுப் பெற்றிருப் பனவாய் மக்களுக்கு அச்சமூட்டுவனவாய் அமைந்திருக் கின்றன. ஒருபுறம் இயற்கையின் எழில்சிறந்து விளங்கும் அறநெறிக் காட்சி, மற்றொருபுறம் இயற்கையின் படைப் பாகிய எரிமலைக் கூட்டம் வழங்கும் மறநெறிக் காட்சி என, ஜப்பான் தீவுகள் மக்களுக்கு இரு வகைக் காட்சிகளையும் அளிப்பனவாய் உள்ளன.

ஜப்பான் நாட்டில் மக்கள் வாழ்விற்குரியனவாய்ச் சிறு தீவுகள் சில இருக்கின்றன. அவை, கியுஷு (Kyushu), ஷிக்கோகு (Shikoku), எஸோ (Yezo), ஸடோ (Sado), ஸுஷிமா (Tsushima), ஹிராடோ (Hirado), அவாஜி (Awaji), ஓஷிமா (Oshima), ஐகி (Iki), ஓகி (oki), கோட் டோ (Goto), போனின் (Bonin), ரியூகியூ (Riukiu), குரைல் (Kurile), பெப்பு (Beppu) முதலியன.

எட்டுக்கோடி மக்கள்

ஜப்பானியர் இன்று 1,48,742 சதுர மைல் நிலப்பரப் புடைய பிரதேசத்தையே தங்கள் வாழ்வுக்குரிய நாடாகக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய எட்டுக்கோடி மக்கள் இருக்கின்றனர். எனவே, மக்கள் தொகை மிகுதி யாயும், மக்களுக்குப் போதுமான இடமின்றி நெருக்கமாயும் உள்ள உலக நாடுகளுள் இதுவும் ஒன்றாகும் என்பதனை நன்கறியலாம். ஜப்பான் மக்களில் நூற்றுக்கு நாற்பத்தாறு பேர் உழவர்களாகவே உள்ளனர். மற்றையோர் பிறதொழில் களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஜப்பானியரின் சிறப்புணவு அரிசியேயாகும். மீன், காய்கறி வகைகள் முதலியவற்றைத் துணை உணவாக அவர்கள் பயன்படுத்திக் கொள் கின்றனர்.

ஜப்பான் நாடு நாற்பத்தாறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் ஆட்சிக்கு உட்படுத்தப் பட்டுள் ளது. ஜப்பானிய மக்கள் தங்கள் அரசர் மாட்டுப் பேரன் பும் பெரும் பணிவும் கொண்டவராக விளங்குகின்றனர். ஜப்பான் அரசர் பெயர் ஹிரோஹிட்டோ (Hirohito) என்ப தாகும். அரசியார் பெயர் நககோ(Nagako) என்பது.

புனிதம் மிக்க பூஜியாமா

ஜப்பானில் நோக்கும் திசையெல்லாம் மலைகளைக் காணலாம். எனினும், ஏழு மலைகளே அங்குக் குறிப்பிட்டுக் கூறத் தக்கவையாகும். அவற்றுள் தலையானதும் உலக மக்கள் கவனத்தைக் கவர்ந்திருப்பதுமான பூஜியாமா (Fujiyama) என்னும் மலை 12,392 அடி உயரமுடையதாகும். அடிப்புறத்தில் இதன் சுற்றளவு 63 மைல்களாகும். ஜப்பான் மலைகள் அனைத்தும் எரிமலைகளே ஆதலின் பூஜியாமாவும் எரிமலையேயாகும். எனினும் பூஜியாமா கொதித்து எரிக்கும் மறநெறியைக் கைவிட்டு நீண்ட காலமாயிற்று என்னலாம்; இன்று உச்சியில் பனி படர்ந்து, உலகோர் உள்ளத்தில் உவப்பூட்டி ஈர்க்கும் வண்ணம் அமைதி மிக்கதொரு வெள்ளிப்பனி மலையாகக் காட்சி அளிக்கின்றது. இதன் உச்சியில் இன்றும் எரிக்கும் வாய் ஐந்நூறு அடி ஆழமுடையதாகப் பனிபடர்ந்து, 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதைக் கற்றறிந்ததுபோல, அறநெறி காக்கும் அமைதிச் சின்னமாய் அமர்ந்திருப்பதைக் காணலாம். பூஜியாமாவின் கொடுமுடி, எட்டிதழ் கொண்ட தாமரை மலரொன்று இதழ்களை விரித்து மலர்ந்திருப்பது போன்று எழில் மிக்க தோற்றம் அளிப்பதாகும். தொலைவில் நின்று நோக்குவார்க்குப் பூஜியாமா ஐந்தாறு கொடுமுடிகளை உடையது என்றே தோன்றும்.

ஜப்பானியர் இதனைப் புனிதம் மிக்கதாகக் கருதி, ஆண்டுதோறும் இம்மலைக்கு யாத்திரை செய்கின்றனர். இந்த மலையைக் கடவுள் தன்மைவாய்ந்த தென்றே அம் மக்கள் கருதுகின்றனர். இம்மலைமீது ஏற எட்டுமணி நேரம் ஆகிறது. இரவில் யாத்திரிகர்கள் மலைமீது ஏறத் தொடங்கினால், கதிரவன் தோன்றும் நேரத்தில் மலையுச்சி அடைவர். பூஜியாமாவின் உச்சியில் கதிரவன் தோன்றும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது. யாத்திரிகருக்கென்று மலைமீது ஆங்காங்கே சிறுகுடில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. யாத்திரிகர் இக்குடில்களில் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளலாம். இம்மலைமீது ஏறிச்செல்வதற்கு வழிமுழுமையும் படிகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

இம்மலையைப் பார்க்கச் செல்பவர்கள் இதன் அடியில் உள்ள ஐந்து அழகிய ஏரிகளைக் காணுமல் இருக்க முடியாது. இவ்வைந்தினையும் சேர்த்தால் 63 சதுர மைல்களாகின்றன. இந்த ஏரிகள் பனிக்காலத்தில் உறைந்து விடுமாதலின், சறுக்கி விளையாடுவோர் இவற்றைப் பயன் படுத்திக்கொள்வர்.

ஆற்று வளம்

ஜப்பான், பெரும்பாலும் மிகச் சிறு தீவுகளான நாடே எனினும் ஆறுகள் பலவற்றைக் கொண்டது. அவற்றுள் மிக நீண்டதும் அகன்றதுமான ஆறு ஷினுனே (Shinano) என்பது. இது 229 கல் தொலைவு ஓடிக் கடலில் கலக்கிறது. இதற்கடுத்தது டோனெகவா (Tonegawa) என்னும் ஆருகும். இந்த ஆறு கோட்சுகே (Kodzuke) என்னும் இடத்தில் தோன்றிக் கிழக்குத்திசை நோக்கி 170 கல் தொலைவு பாய்ந்து கடலில் கலக்கிறது. இவை இரண்டும் ஜப்பானில் பாயும் ஆறுகளில் நீண்டவை. பூஜிகாவா (Fujikawa) என்னும் ஆறு மிக விரைந்து பாய்கின்றது. இந்த ஆற்றில் தண்ணீர் ஓடிவரும் விரைவினை உலகில் வேறு எந்த ஆற்றுடனும் ஒப்பிட இயலாதாம். ஜப்பான் ஆறுகள் அனைத்தும் என்றும் வற்ருதவை. வேனிற் காலத்திற்ருன் அங்குள்ள ஆறுகளில் தண்ணீர் பெரு வெள்ளமாக வருகின்றது. அங்குள்ள ஆறுகள் அனைத்தும் மலைகளினின்றே தோன்றுவதால், கோடையில் அம் மலைகளின் மீது படிந்துள்ள பனி உருகி வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது.

ஏரி வளம்

ஜப்பானில் ஏரிகள் பல இருக்கின்றன. அவற்றுள் பீவா (Biwa) ஏரி என்பதே மாபெரும் ஏரியாகும். இந்த ஏரி ஐம்பது கல் நீளமும் இருபது கல் அகலமும் உடையதாகும். கடல் போன்ற இந்த ஏரி ஓமி (Omi) மாகாணத்தில் இருக்கின்றது. இதன் நீர் மூலம் ஜப்பானியர் மிகப் பெரிய அளவு மின்சார சக்தியை உற்பத்தி செய்கின்றனர்.

இயற்கைச் செல்வம்

ஜப்பான் நாட்டில் தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, நிலக்கரி, மணிகள் முதலியவை நிறையக் கிடைக்கின் றன. ஓஷியு (Oshiu), சுருகு (Surugu) மாகாணங்களில் தங்கக் கனிகள் இருக்கின்றன. அவற்றினின்று தங்கம் நிறைய எடுக்கப்படுகிறது.

ஜப்பான் நாட்டில் குதிரை, எருது, பசு, பன்றி, ஆடு, கழுதை, நாய், பூனை முதலியவை வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் ஆகும். ஜப்பானியக் காடுகளில் காட்டுப் பன்றிகள், மான், நரி, குரங்கு போன்ற விலங்குகள் வாழ்கின் றன.

யாமாகுச்சி (Yamaguchi) மாகாணத்தில் வெள்ளைப் பாம்புகள் இருக்கின்றன. இவை ஆறடி நீளம் உடை யவை. அந்நாட்டில் பறவை இனங்கள் பலவகையாக உள்ளன. மக்கள் தங்கள் வீடுகளில் கோழி, வாத்து, புரு முதலியவற்றை வளர்க்கின்றனர். இருபது அடி நீள வாலுள்ள ஒருவகைச் சேவலும் அந்நாட்டில் இருக்கிறது.

காடுகளில் கற்பூர மரங்கள் அடர்ந்து வளர்கின்றன. ஜப்பானியர் இந்த மரங்கள் மூலம் கற்பூரம் உற்பத்தி செய்து, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். கற்பூர மரங்கள் தொண்ணூற்றேரடி உயரம் வளர்கின் றன. வேறு பல மரங்களும் ஜப்பானில் நிறைய வளர்ந்து, ஜப்பான் செல்வத்தைப் பெருக்குகின்றன.

கடல் தரும் செல்வம்

கடலிலிருந்து உப்பு, வகைவகையான மீன்கள், முத்து, பவழம் முதலியவை கிடைப்பதாலும், அவை அம்மக் களுக்குப் பெருஞ் செல்வம் ஈட்டித்தரும் பொருள்களாக விளங்குவதாலும், ஜப்பானியர் கடலைத் தங்கட்குக் கிடைத் துள்ள இயற்கையின் பெரும் பேறு என மதிக்கின்றனர். ஜப்பானியர் கடலில் மீன் பண்ணை, முத்துச் சிப்பிப் பண்ணை முதலியவற்றை அமைத்து, அவற்றை வளர்த்துப் பெருவாணிகம் செய்கின்றனர்.

பழங்குடி மக்கள்

ஜப்பான் நாட்டின் பண்டை மக்கள் பெயர் அய்னூ (Ainu) என வழங்கப்படுகிறது. இம்மக்கள் இனம் இன்று அளவில் குறைந்துள்ளது. இவர்கள் இன்று ஹொக்கைடோ (Hokkaido) தீவில் வாழ்கின்றனர். இவர்கள், உடலில் மயிர் அடர்ந்தவராய் அச்சமூட்டும் தோற்றத்துடன் காணப்படுகின்றனர்; எனினும், நட்புக்கு உகந்தவராயிருக்கின்றனர்; பிற மக்களுடன் கலந்து உறவாடுகின்றனர்; கல்வி பயிலுகின்றனர் ; சிறிது சிறிதாகத் திருந்தி வருகின்றனர்.

இன்றைய ஜப்பானியர்

இந்த அய்னூ மக்களே ஜப்பான் நாட்டின் பண்டைக் குடிகள். ஜப்பானில் இன்றுள்ள மக்கள் கி. மு. ஆறு, ஏழாம் நூற்றுண்டுகளில் குடியேறினர். இன்றுள்ள ஜப்பானியர் மஞ்சு, மங்கோலிய, மலேய இனத்தவர்களின் கூட்டுறவால் தோன்றியவர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

முதல் ஜப்பானிய மன்னர்

இங்ஙனம் குடியேறிய மக்களுள் ஜிம்முடென்னே (Jimmutenno) என்பார் பெருவீரராய்த் திகழ்ந்தவர். இவர் அய்னூக்களைப் போரில் முறியடித்து, மீண்டும் அவர்கள் தொல்லை ஏற்படாவாறு, அவர்களை வட தீவுகளுக்கு ஓட்டிவிட்டுக் கி. மு. 660 பிப்ரவரி 11-ஆந் தேதியன்று இத்தீவுகளின் மன்னரானர். அதனுற்றுன் இன்றும் ஜப்பானில் இந்த நாள் அரசாங்கப் பொது விடுமுறைக் குரிய நாளாக விளங்குகிறது. ஜிம்முடென்னே வெற்றி பெற்ற பிறகு, இன்றுள்ள மக்கள் இத்தீவுகளில் கூட்டம் கூட்டமாகக் குடியேறி வாழலாயினர். துவக்கத்தில் சில அய்னூ மக்களுடன் இம்மக்கள் தொடர்பு கொண்டமையால், இன்றுள்ள ஜப்பானியர் அய்னூ இரத்தக் கலப்பும் சிறிதளவு உடையவர்கள் என்று கூறலாம்.

நாற்பெருந் தீவுகள்

எண்ணற்ற ஜப்பான் தீவுகளில் நான்கே சிறப்பிடம் பெற்றுள்ளவை என்று முன்னரே கூறினோம் அல்லவா? இவற்றுள் முதன்மைபெற்றுப் பெரும் நிலப்பரப்பு உடையதாகவும் நடுத் தீவாகவும் இருப்பது ஹோன்ஷு. இதுவே இன்று ஜப்பானின் தலைமைத் தீவு. ஹொக்கைடோ என்பது வடகோடித் தீவாகும். ஷிக்கோகு என்பது மற்றொரு தீவு. கியுஷு என்பது நான்காம் தீவு. இவை நான்குமே இன்று ஜப்பான் நாடென விளக்கம் பெற்றுள்ளன.

ஜப்பான் நாட்டுத் தலைநகர்

ஜப்பானின் தலைநகராக விளங்குவது டோக்கியோ நகரமாகும். இது ஹோன்ஷு என்னும் நடுத்தீவில் துறைமுகப்பட்டினமாக அமைந்திருக்கிறது. இன்று இதன் நிலப்பரப்பு 2,063 சதுரக் கிலோ மீட்டர்களாகும். 15-ஆம் நூற்றுண்டுவரை இஃது ஒரு மீன் பிடிக்கும் சிற்றூராயிருந்தது. அதன் பிறகே இது தலைநகரமாக மாற்றி அமைக்கப்பட்டது. இங்கு 1487-ஆம் ஆண்டில் ஜப்பான் மன்னரது அரண்மனை கட்டப்பட்டது. இன்று இந்நகரம் உலக நாகரிக நகரங்களுள் ஒன்றுக விளங்குகிறது. இது மேல் நகர் கீழ்நகர் என இரு பிரிவுகளாக மிகப் பரந்திருக்கிறது. அறுபது லட்சம் மக்கள் இந்நகரில் வாழ்கின்றனர்.

அருஞ்சொற்பொருள்

நீக்கம்-விலக்கம். கைபுனைந்து-கையால் செய்து. கவின்-அழகு. வனப்பு-அழகு. வான்-வானம். அந்தி-மாலை. முகில்-மேகம். பொலிவு-அழகு. கொண்டல்-மேகம். எழில்-அழகு. பொற்பு-அழகு. பொழில்-சோலை. அறநெறி × மறநெறி. அமரர்-தேவர். கொடுமுடி-சிகரம். புனிதம்-தூய்மை. வேனிற் காலம்-வெய்யிற்காலம். ஈட்டி-சம்பாதித்து. பேறு-பாக்கியம்.

வினாக்கள்

1. நிப்பான் நாடு—குறிப்பு வரைக.
2. ஜப்பானின் இயற்கை அழகு எத்தகையது?

3. ஜப்பான் நாடு மொத்தம் எத்தனை தீவுகளுடையது? அவற்றுள் மக்கள் வாழத்தகுதியுடையவை எவை?

4. ‘ஜப்பான் தீவுகள் மக்களுக்கு இருவகைக் காட்சிகள் அளிப்பன’—எக்காட்சிகள்? ஏன்?

5. ஜப்பானில் எத்தனை மாகாணங்கள் இருக்கின்றன? எத்தகைய ஆட்சி நடைபெறுகிறது?

6. ஜப்பான் தீவுகளில் வாழும் மக்கள் பற்றிய விளக்கம் தருக.

7. பூஜியாமாவைப் பற்றி விளக்கி வரைக.

8. ஜப்பானின் ஆற்றுவளம், ஏரிவளம் எத்தகையவை?

9. ஜப்பானின் இயற்கைச் செல்வங்கள் யாவை?

10. அங்குள்ள வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள், பறவைகள் யாவை?

11. ஜப்பானியர் கடலைப் பயன்படுத்தும் விதம் யாது?

12. நிப்பானில் வாழும் மக்களின் மரபு யாது?

13. முதல் ஜப்பானிய மன்னர் யார்?

14. ஜப்பான் நாட்டுத் தலைநகர் பற்றி நீ யாது அறிவாய்?

16. கல்வி—செல்வம்

(சொற் போர்)

வித்வான் திரு பு. செல்வராசனார் அவர்கள்

[பேராசிரியர் பு. செ. திருமாவளவன் தலைமையில், திருவள்ளுவர் உயர்நிலைப்பள்ளியின் மாணவர் தமிழ் மன்றச்சார்பில் சொற் நடைபெறுகிறது.]

செல்வமே சிறந்தது என்று பேசுபவன்-தியாகராசன்
கல்வியே சிறந்தது என்று பேசுபவன்—செங்குட்டுவன்

தியாகராசன் :

உலகத்தில் நல்வாழ்வு வாழவேண்டுமென்றால், துன்பமில்லாமல் காலங்கழிக்க வேண்டுமென்றால், வயிறார உண்டு, நல்ல முறையில் உடுத்தி, நாகரிகமாக விளங்க வேண்டுமென்றால், அதற்கு இன்றியமையாத் தேவையாயிருப்பது செல்வமேயாகும். செல்வம் இல்லா வாழ்வு சிறந்த வாழ்வாகாது. இதை உணர்ந்தே பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று வள்ளுவப் பெருமானார் கூறியருளினார்.

நாலடி இதை இன்னும் தெளிவாக விளக்குகிறது; "இந்த உலகத்தில் அறம் பொருள் இன்பம் என்று கூறப்படும் மூன்றனுள் நடுவிற் கூறப்பட்ட பொருளை ஒருவன் முதலில் அடைந்துவிட்டால், முன்னும் பின்னும் உள்ள அறத்தையும் இன்பத்தையும் எளிதில் அடைந்து விடுவான். அச்செல்வத்தை அடையாதவன் கொல்லனுடைய உலைக்களத்தில் இட்டுக் காய்ச்சினால் உண்டாகும் துன்பத்தைப்போன்ற பெருந் துன்பத்தை அடைவான்" என்று எடுத்துக் காட்டுகிறது. அச் செய்யுளைப் பாருங்கள்:

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்
நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலுந் துயர்."

இதனால் செல்வத்தைப் பெற்றால்தான் தானதருமங்களைச் செய்யவும், இம்மை இன்பங்களை அனுபவிக்கவும் கூடுமேயொழிய, செல்வத்தைப் பெறுமற்போனால், இரத்

தல் முதலியவற்ருல் மிக்க துன்பத்தை அடையவே நேரிடும்.

மேலும் உயர்ந்த சாதிப் பசுவின் கன்ருயிருக்கு மாஞல் இளங்கன்றே என்ருலும் நல்ல விலை மதிப்பைப் பெறும். அதுபோலவே, படியாதவரா யிருந்தாலும், செல்வம் மட்டும் இருந்து விட்டால், அத்தகைய செல்வரின் வாயிலிருந்து வரும் சொற்கள் படித்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உயர்ந்த கல்வியறிவு கேள்வியறிவு பெற்றுள்ளவரே என்ருலும் செல்வம் பெருத ஏழை வறியவரின் சொற்கள் அவை எவ்வளவுதான் ஆழ்ந்த கருத்துடையவைகளாயிருந்தாலும், மேலே மட்டும் ஈரம் உடையதாய்க் காணப்படும் கழனியில் உழுதால் பயன் இல்லாமற் போய்விடுவது போலவே, பயன் இல்லாமற் போய்விடும். இதனை நாலடியார் கூறுமாறு காண்க:

"நல்லாவின் கன்ருயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்."

கல்விக் கடலைக் கடைந்து கற்றுவிடுவது மட்டும் வாழ்க்கையை வளப்படுத்தாது என்பதையும், கல்வியைப் பெருவிடினும் செல்வத்தைப் பெறுவதே மிகமிக இன்றியமையாதது என்பதையும், தமிழ் மறையாம் திருக்குறள், அதனை ஒட்டிய மறையாம் நாலடியார் போன்ற உயர்தனி நூல்களிலிருந்து எடுத்துக் காட்டினேன். அவ்விரு பெரு நூல்கள் மட்டுமா அவ்வாறு கூறியுள்ளன!

தமிழகம் போற்றும் தனிச்சிறப்புப் பெற்றுப் பொலியும் ஔவைப் பெருமாட்டியார்,

"கல்லானே யானுலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்"

என்று மிகமிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். பணமில்லாதவனைப் பெற்ற தாயும் கட்டிய மனைவியுமே

விரும்பமாட்டார்கள் என்ருல், அவன் கதி மற்றையோரிடத்தில் என்னவாயிருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்? மேலும், செல்வத்தின் சிறப்பை அறிந்த ஔவையார், "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" எனக் கூறியிருப்பது கவனித்தற்குரியதாகும்.

"பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்றும்
ஆராயின் தானே யறம்பொருள் இன்பமென்
ருரா ரிவற்றி னிடையதனை எய்துவார்
சீரா ரிருகலையும் எய்துவர்."

என்னும் பாவும், "இல்லார் இருமையும் நல்ல வெய்தார்"—"வறியார் இருமை அறியார்"—"ஏழைசொல் அம்பலம் ஏருது"—என்பனவும், "பொருளுடையான் கண்ணதே போகம்" என்னும் காரியாசான் உரையும் செல்வமே மனிதன் முயன்று ஈட்டவேண்டுவதேயொழியக் கல்வியன்று என்பதையும், செல்வம் அடைந்துவிட்டால், அறமும் இன்பமும் எளிதில் பெறக்கூடியவை யாகிவிடும் என்பதையும் நன்கு விளக்குவனவாக இருக்கின்றன.

எனவே, உலகில் பிறந்த எந்த மனிதனும் செல்வம் பெற்றிருந்தாலொழிய, நல்ல முறையில் வாழமுடியாதென்பதை நாம் நேருக்கு நேர் பார்க்கின்ருேம். நம் நாட்டுச் சிறந்த இலக்கியங்களும் இதனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சிறந்த பேரறிஞர்களாகிய திருவள்ளுவப் பெருந்தகையாரும், சமண முனிவர்களும், ஔவைப் பெருமாட்டியாரும், காரியாசானும், மற்றும் பலரும் இவ்வாறே கருத்துக் கொண்டிருந்தனர் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினேன்.

நல்ல முறையில் நாம் கல்வி கற்க வேண்டுமாயின் பணமில்லாமல் முடியாது. கல்வியிற் சிறப்படைய வேண்டுமெனின், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை யெல்லாம் படிக்கவேண்டுமெனின், பணமில்லாமல் முடியாது. இன்று நம் நாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் படிக்க ஆர்வம் இருந்தும், திறன் இருந்தும், பணமில்லாமல் ஏழாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக்கொள்ள வேண்

டிய நிர்ப்பந்தமான நிலையிலிருக்கின்றனர் என்பது வெளிப் படையல்லவா? நல்ல உடுப்பணிந்து, சுகாதாரமான முறை யில் வாழவேண்டுமென்னும் எண்ணமும் ஆர்வமும் உடைய மக்கள் பலர் வறுமையின் காரணமாக அன்றுடம் குளிக்கவும் துணிகளைத் துவைக்கவும் சுகாதாரமான முறை யில் வாழவும் முடியாமல் திண்டாடுகின்றனர். அதே சமயத் தில் படிப்பேயில்லாத பணக்காரர்கள், மிக உயர்ந்த நாக ரிகமுடையவர்களாக, தூய்மையுடையவர்களாக, நல்ல நிலையில் வாழ்பவர்களாக, வாழ்க்கையின் இன்பங்கள், நலன்கள் அனைத்தும் அனுபவிப்பவர்களாக, அறச் செயல்கள் பல புரிபவர்களாக விளங்குவதைக் காண்கி ரேம். வள்ளல்கள் எனப் போற்றப்படுபவர்கள் எவர்? படித்த ஏழைகளா? இல்லை. பணக்காரர்களேயல்லவா? பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், கோவில்கள் முதலிய வற்றை நிறுவியவர்கள், படித்துவிட்டு ஏழைகளாகத் திரிந்த புலவர்களா? இல்லை. படியாதவர்களாயிருந்த பணக்காரர்கள் அல்லவா? அதுமட்டுமன்று. படிப்பிற் சிறந்த பெரும் புலவர்கள் பழங்காலத்தில் பணக்காரர்கள், அரசர்கள் இருக்குமிடங்களைத் தேடிச் சென்று இரக்க வேண்டிய நிலையில்தானே வாழ்ந்தனர்! இன்றும் படித்த வர்கள் பணக்காரர்களின் அடிமைகளாகத் தானே இருக்க வேண்டியிருக்கிறது! படித்துக்கொண்டேயிருந்தால் வயிறு சும்மா இருக்குமா? அதனைத் திருப்திப்படுத்தவேனும் பணம் வேண்டுமே!

எனவே, இவற்றையெல்லாம் நோக்குமிடத்துப் படிப் பைவிடப் பணம்தான் சிறந்ததாகும். கல்வியைப் பெறப் பாடுபடுவதைவிடச் செல்வத்தைப் பெறப் பாடுபடுவதே சிறந்ததாகும் என்பதே என் கருத்தாகும்.

செங்குட்டுவன் :

இதுகாறும் என் தோழர் தியாகராாசனுர் செல்வத்தின் சிறப்பை எடுத்துக் காட்டிப் பேசியதை நாம் அனைவரும் கேட்டோம். செல்வத்தின் பெருமைகளைப்பற்றி அவர் கூறியவை அனைத்தும் மிகமிகச் சரியானவைகளாகும். வான்புகழ் பெற்ற மாபேரறிஞர்களாகிய திருவள்ளுவப்

பெருந்தகையார், ஔவைப் பெருமாட்டியார், சமண முனிவர்களாகியோரின் அருமையான செய்யுள்களை அவர் மேற்கோள் எடுத்துக் காட்டியதும் அனைவரும் ஒப்பமுடிந்தவைகளாகும். செல்வம் சிறப்புடையது, இன்றியமையாதது, வாழ்வை வளப்படுத்தவல்லது என்பதை எவரும் மறுக்கவில்லை, மறுக்கவும் முடியாது. ஆயின் என் நண்பர் ஒருதலைச் சார்பாக நின்றுவிட்டார் என்பதனை நான் எடுத்துக் காட்டவேண்டியவனாக உள்ளேன். செல்வம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததுதான். ஆனால், அது கல்வியுடன் சேர்ந்த செல்வமாயிருந்தால்தான் பூவுடன் சேர்ந்த நார் போல் மணம் பெறக்கூடியதாயிருக்கும். கல்வியில்லாமல் வெறும் செல்வம் மட்டும் பெற்றிருப்பவன் பண்பற்ற முரட்டுக் கயவனாயிருப்பதை நாம் காண்கிறோம்.

மேலும், செல்வம் எவ்வளவுதான் சிறப்புடையதாயிருந்தாலும் நிலைத்து நிற்கக் கூடியதன்று. சகடக் கால் போன்று உருண்டு சென்றுவிடக் கூடியதாகும்; அழியக் கூடியதாகும். கல்வி அத்தகையதன்று ; என்றும் நிலைத்து நிற்கக் கூடியது, அழிவில்லாதது. திருவள்ளுவப் பெருமான், கல்வியின் சிறப்பை எடுத்துக்காட்டி ஓர் அதிகாரமே—பத்துக் குறட்பாக்கள்—தம் திருக்குறளில் பாடிவைத்துள்ளார். ஆனால் செல்வத்தின் சிறப்பைப்பற்றி அவ்வாறு பாடியுள்ளாரா ? இல்லை. ஔவைப் பெருமாட்டியார் விரும்பியிருந்தால் அரசியைப்போல் வாழ்ந்திருக்கலாம். அரச செல்வம் அவரது காலடியில் குவியக் காத்திருந்தது. ஆனால் அவர் அதனைச் சிறிதேனும் விரும்பாமல் வேளா வேளைக்கு வயிற்றுக்குக் கூழ் கிடைத்தாலே போதும் என்று தம் கல்வித்தொண்டை நாடெங்கும் சுற்றிச் சுற்றிப் புரிந்துவந்தார் என்பதை அறிகிறோம். அது மட்டுமா ஔவைப் பெருமாட்டியார்,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு."

என்ற செய்யுளின் மூலம் செல்வத்தைவிடக் கல்வியே சிறந்தது என்பதை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். சிறுவர்கள் மனத்திலும் இது பதியவேண்டும் என்னும் கருத்துடன், "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்று ஒரே வரியில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

மன்னராகப் பெருஞ்செல்வத்தில் திளைத்த அதிவீர ராமன் எனும் பாண்டிய மன்னரே,

"உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா
குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்
குன்றத் தனையிரு நிதியம் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்."

என்று செல்வத்தின் நிலையாமையைக் கூறி, "கற்கை நன்றே கற்கை நன்றே,பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கல்வியைப் பெறவேண்டியதன் இன்றியமை யாமையை வற்புறுத்தியுள்ளார். இவ்வாறே நம் நாட்டில் தோன்றிய புகழ்மிக்க அறிஞர்கள் அனைவரும் செல்வத் தைச் சிறப்புடையதாகக் கருதாமல், அதனைத் திரட்டி வைக்கவிரும்பாமல். கல்வியினை வளர்ப்பதிலேயே கண் ணும் கருத்துமாயிருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற குறட்பா மூலம் வள்ளுவப் பெருமான் கல்வியை அழி வில்லாத சீரிய செல்வமாக விளக்கி, மற்றைப் பொருட் செல்வத்தைச் செல்வமேயாகா என்று அழுத்தந் திருத்த மாகக் கூறியுள்ளார். மேலும், மக்களுக்குக் கல்வியே கண்ணாக விளங்குகிறது என்றும், கல்லாதவர்கள் முகத்தில் இருப்பவை கண்களல்ல புண்களே என்றும் வள்ளுவர் பெருமான் கூறியிருப்பதை நீங்கள் அனைவரும் அறிந்தே இருக்கின்றீர்கள். அன்றி,

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்ற குறட்பா மூலம் கல்வியில்லாதவர் மாட்டுள்ள செல் வம் வறுமையைவிடக் கொடியதாகும் எனவும்,

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்''

என்ற குறட்பா மூலம் கல்லாதவர் விலங்கோடு ஒப்பாவர் எனவும் வள்ளுவர் பெருமான் எடுத்துக் காட்டி யிருப்பது சிந்திப்பார்க்கு உண்மையை விளக்குவதாகும்.

நாலடியார் எனும் நூல் உருவாதற்குக் காரணமாய சமணப் புலவர்கள்,

''இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து''

என்று பாடியிருப்பதன் மூலம், "கல்விப் பொருளானது செல்வப் பொருள் போலவே இம்மையைப் பயக்கக் கூடியதாகும். ஆனால், செல்வம் ஈயக் குறையும். கல்வி ஈயக்குறைவதில்லை. அன்றியும் கல்வியானது தம்மை விளக்குவதாயிருந்து, தாமுள்ளவரை கெடுவதில்லை. அதுவன்றி, செல்வமோ அறியாமையை, ஆணவத்தை, அகம்பாவத்தை, இறுமாப்பை வளர்ப்பதாகும். கல்வியோ இவற்றை அடியோடு ஒழிக்கின்றது'' என்பதை நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர்; மேலும்,

''வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற''

என்னும் செய்யுளின் மூலம் செல்வத்தை விடக் கல்வியே சிறந்த தென்பதை எடுத்துக்காட்டி, மக்கட்கு வைத்து விட்டுச் செல்லவேண்டிய சொத்து கல்வியே என்றும், அதுவே ஒவ்வொருவருக்கும் கடமை யாகுமென்பதையும் மிக விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

எனவே, மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமாயின், அதற்குச் செல்வம் ஒன்று மட்டும் இன்றியமையாததாகி விடாது. கல்வி ஒன்றே இன்றியமையாதது என்று கூறலாம். செல்வம் மட்டுமே உடையவன் அதை இழந்து

விட்டால், அவன் நிலை என்னவாயிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். கல்வி மட்டுமே உடையவன் அதை இழக்கவே முடியாது. செல்வத்தை அடியோடு இழந்த கல்வியறிவுடைய ஒருவன் அதனை எப்படியும் மீண்டும் பெற்றுக் கொள்வான். செல்வம் மட்டும் இருந்தால், அது நல்ல பண்புகளை வளர்ப்பதில்லை; தீயபண்புகளையே வளர்க்கிறது. கல்வி அங்ஙனமன்று. அது தீயசிந்தனைக்கு இடமில்லாமல் நற்சிந்தனைகளையே வளர்க்கிறது.

நல்ல உடைகளையணிவதோ, பகட்டாக வாழ்வதோ நல்ல நாகரிகமாகிவிடாது. உள்ள உயர்வு பெற்று வாழ்வதே நல்ல நாகரிகமாகும். உள்ள உயர்வை அளிக்கவல்லது கல்வியேயொழியச் செல்வமன்று என்பதை அனைவரும் அறிவர். எனவேதான், நம் நாட்டில் பிறந்த பேரறிஞர்களும், மெய்ஞ்ஞானச் செல்வர்களும் செல்வத்தை வெறுத்துக் கல்வியைப் போற்றினர்.

எனவே, செல்வத்தினும் கல்வியே சிறந்தது என்பது பெறப்படுகிறது. நான் செல்வத்தை விடக் கல்வியையே பெரிதும் மதிக்கின்றேன். அதுவே முயன்று பெறுதற்குரிய செல்வமாகும். கல்விச் செல்வ முடையவனே கண்ணிய வாழ்வு வாழ்ந்து, உலகத்தாரால் புகழப்பெற்று விளங்குவான் என்பதை உங்கட்கு நான் எடுத்துக் காட்ட வேண்டுவதில்லை. என் நண்பர் தியாகராசனும் இதனை ஏற்றுக் கொள்வார் என்று கருதுகிறேன்.

தலைமை தாங்கிய பேராசிரியர் திரு. பு. செ. திருமாவளவன், இருவர்தம் கருத்துக்களையும் விளக்கியபின், மாணவர்கள் கருத்தறியக் கையைத் தூக்கச் சொல்லியபோது, ஒருசிலரே மாணவன் தியாகராசன் கருத்துக்கு ஆதரவு காட்டினர். மற்றையோர் மாணவன் செங்குட்டுவனின் கருத்தையே ஆதரித்தனர். பேராசிரியர், “மாணவர்களே, நல்வாழ்வுக்குச் செல்வம் தேவையானதே என்றாலும், கல்வியறிவில்லாமல் செல்வம் பெற்றிருப்பது கண்களற்ற மனிதனையே ஒக்கும். எனவே, கல்விதான் மிகமிக இன்றியமையாததாகும். அதனை விரும்பி, முயன்று, பெற்றுவிட்

டால், அறிவை நன்கு வளர்த்துக் கொண்டால், பொருட் செல்வம் பெறுதல் எளிது. எனவே, நான் மாணவன் செங் குட்டுவன் கருத்தையே ஆதரிக்கிறேன்; இச்சொற்போரில் கலந்துகொண்ட இரண்டு மாணவர்களையும் பாராட்டு கிறேன். இருவரும் நன்கு படித்துக் குறிப்புகள் எடுத்து, தக்க மேற்கோள்கள் காட்டிப் பேசியுளர். அவர்களை நான் வாழ்த்துகிறேன்.

பிறகு, மன்ற அமைச்சர் நன்றியுரை கூற, மன்றக் கூட்டம் நாட்டு வாழ்த்துப் பாடலுடன் இனிது கலைந்தது.

அருஞ்சொற்பொருள்

மறை - வேதம். திரைகடல் - அலைகடல். இருமை - இம்மை மறுமை. அம்பலம்-மன்றம். சகடக்கால்-வண்டிச் சக்கரம். திளைத்த- விளங்கிய. மெய்ஞ்ஞானம்-உண்மை அறிவு. வடு-குற்றம். வையம்- உலகம். ஆ - பசு. நல்கூர்ந்தார் - வறியவர். இல்லான் - பொருள் அற்றவன். இல்லாள் - துணைவி. குஞ்சரம் - யானை. கேடு-பழுது. விழுச்செல்வம் - சிறந்த செல்வம். மாடு - செல்வம். மம்மர் - அறி யாமை மயக்கம். விச்சை - வித்தை.

வினாக்கள்

1. வள்ளுவர், பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற தேன் ? இதனை நாலடி இன்னும் எவ்வாறு தெளிவுபடுத்துகிறது ?

2. 'செல்வரது சொல்லைக் கற்றவரும் ஏற்பர்'—இதனை நாலடி நவிலும் எடுத்துக்காட்டுகளால் விளக்குக.

3. இல்லார் அடையும் தொல்லைகளைப்பற்றி ஔவையார் உரைத்துள்ளன யாவை ?

4. கல்வியினும், செல்வமே சிறந்தது என்பதனைத் தியாக ராசன் எவ்வாறு எடுத்துக் காட்டுகிருன் ?

5. 'பண்பற்ற முரட்டுக் கயவன்'— யார் ? விளக்குக,

6. வள்ளுவரும் ஔவையும் கல்வியையே விரும்பினர்கள் என் பதனைச் செங்குட்டுவன் எதனைக் கொண்டு விளக்குகிருன் ?

7, 'சென்றவிட மெல்லாம் சிறப்பு'—யாருக்கு ? ஏன் ?

8, செல்வத்தை விடக் கல்வியே சிறந்தது என அதிவீரராம ரும் வள்ளுவரும் எவ்வாறு வற்புறுத்துகின்றனர்?

9. 'மம்மர் அறுக்கும் மருந்து,' 'எச்சம் என ஒருவன் மக்கட் குச் செய்வன விச்சை'—இத்தொடர்களை விளக்குக.

10, செங்குட்டுவன், கல்வியையே விரும்பக் காரணங்கள் யாவை ?

11. கூட்டத் தலைவர் கருத்து யாது ?

17. ஈறிலா இன்பம் பெறவழி

(கவியரசர் தாகூர் தெளித்த கருத்து)

இவ்வுலகத்திணையும், இவ்வுலகப் பொருள்களையும் படைத்தவர், காப்பவர், இறுதியில் அழிப்பவர்—இறைவரே ஆவர். அவர் யாண்டும் நீக்கமற நிறைந்திருப்பவர்; அங்கு இங்கு எனுதபடி எங்கும் பேரொளியாய் இலங்குபவர்; இன்ப நிறைவாக அருள்வடிவம் கொண்டவர்; உள்ளத்தின் உணர்வாற்ருன் உணரப்படுபவர்; சாதி அறியாச் செம்மல்; சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்தவர்; அலகிலா விளையாட்டு உடையவர். அவர், நம் உலக விவகாரங்கட்குப் பயன் படாதவர்; நமக்கு வேண்டும் பொன்னையோ, பொருளையோ, போகத்தையோ பெறும் முயற்சியில் கூட்டாளியாய் இருக்கத் தக்கவரல்லர்; அரசியலிலோ—செல்வம் திரட்டலிலோ—போர்த் தொழிலிலோ—பிறவற்றிலோ நம்மால் பயன் படுத்தத் தக்கவர் அல்லர். அவர், இவை அனைத்தையும் அறவே கடந்த இன்ப நிலையில் நிலைத்து நிற்பவர்; ஓர் உருவ மாத்திரையில் நம் கட்புலனுக்குத் தோற்றம் அளிப்பவரும் அல்லர்.

எல்லாம் வல்ல இறைவர் தாம் படைத்துள்ள பொருள் களாலேயே தம்மை வெளிப் படுத்துகின்ருர். அறிவுடை ஒருவன் கட்புலனுக்குக் காட்சியளிப்பன அனைத்தும் கடவுள் தோற்றமே—இன்ப மயமே ஆகும். இயற்கையின் பேரெழிலை எண்ணி யெண்ணி, கண்டு கண்டு, உள்ளம் அன்பு வழிப்படுங்கால், அவன் இயற்கையின் வாயிலாக இறைவரைக் காண்கிருன். அவ்வியற்கையோடு தானும் ஒன்றுபடும் எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றுகிறது. அதுமுதல் அவ்வேட்கையே அவனை வாட்டுகிறது; அதனுல் அவன் எப்போதும், இயற்கையும் அதன்வாயிலாக அறியப்படும் இறைவரையும் நினைந்து நினைந்து உருகு கின்ருன்; இயற்கையோடு—இறைவரோடு இரண்டறக் கலத்தலை விரைந்து விழைகிருன். இங்ஙனம் மனிதன்

இறைவனேடு ஒன்றுபடும் நிலையே ஆனந்த நிலை—மோட்ச (வீட்டு) நிலை எனப் பண்டை நூல்கள் பகர்கின்றன.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவரை ஓரிடத்தில் தேடல் வேண்டுவதில்லை; அம்முயற்சியில் ஈடுபடுவதே தவறு. நாம், இறைவரோடு நம்மை ஒன்றுபடுத்தல் வேண்டுமாயின், இயற்கைப் பேரழகில் நம்முள்ளம் ஊன்றுதல் வேண்டும். எங்கும் எழில் பெறவிளங்கும் இறைவரைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் இருப்பதாக மனத்தால் நினைத்தலும் தவறு. அஃது ஆண்டவரை அவமதித்தலை ஒக்கும். இறைவரை எண்ணுதல்—வழிபடுதல் என்பது அவரோடு நாம் ஒன்று படுதற்கே அன்றி, அவரை நம் வழிப்படுத்தற்கு அன்று! அன்று!! நம் உலக இச்சைகளை அவரைக்கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கும் அன்று! நாம் உலக வாழ்வில் எதைச் செய்யினும், இறைவர் உணர்வு நம் உளம்விட்டு நீங்காது நிலைத்தல் வேண்டும். என்னை? அவ்விறைவர் உணர்ச்சியே நம்மை இன்ப நிலையிற்சேர்க்கும் ஆதலின் என்க.

'அடைதல்—பெறுதல்' என்னும் இரு சொற்கள் வெவ் வேறு பொருள் கொண்டவை. இறைவரைப் 'பெறுதல்' நமது நோக்கமாக இருத்தல் கூடாது. அதனுற்றான் நூல்கள், 'எதற்கும் எட்டாதவர் இறைவர்' எனக் கூறிப் போந்தன. நாம் முயன்று இறைவரை 'அடைதல்' என்பதே நமது பெரு முயற்சியாக இருத்தல் வேண்டும். இறைவர் நம்மால் 'அடைதற்கு உரியவரே' அல்லாமல், 'பெறுதற்கு உரியவர்' அல்லர். அவர் நம்மிடை அகப்படும் அத்துணை எளியவர் அல்லர். அவரை மெய்யாகக் கொண்டு, அவரது அருட்பிழம்பில்—இயற்கைப் பேரழகில்—நம்மைக் கடந்து விடச் செய்தல் வேண்டும்.

இறைவர் நம்மிடைத் தம் பேரெழில் தோற்றத்துடன் இருந்தும், கண் இருந்தும் குழியில் விழும் கசடரைப் போல—நாம், வயிற்றுச் சோற்றுக்கும் நிலையற்ற இவ் வுலகத்துப் போக பாக்கியங்கட்குமே பெறுதற்கு அரிய

நமது ஆயுட்காலத்தை வீணுக்குகின்றோம். அது பெருந் தவறு. இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ? அறிகிலேம். ஆதலின், அடைதற்கு அரிய இம்மனிதப் பிறவியை எடுத்துள்ள நாம், இப்பிறவியிலேயே பேரின்ப நிலையை முயன்று அடைதலே அறிவுடைமையாகும். நாளும் 'ஆன்ம சிந்தனை' உடையவராக நாம் இருத்தல் வேண்டும்; 'மரணத்தின் பின் மனிதர் நிலைமை யாது? நாம் ஏன் இங்குப் பிறந்துள்ளோம்? நமது கடமை யாது? ஈறிலா இன்பம் பெற, நாம் யாது செய்தல் வேண்டும்; நாளும் உழன்று பொருள் ஈட்டிப் பாழும் வயிற்றை நிரப்புவதற்கே இப்பிறவி எடுத்தோமா? இஃதன்றி, நாம் செய்யத்தகுவது வேறு ஏதேனும் உளதோ?' என்பன போன்ற கடாக்களைத் தோற்றுவித்து, அவற்றிற்கு ஏற்ற விடைகளைக் கண்டு, செந்நெறியில் வாழ்தலே நாம் செயற்பாலதாம்.

"யாஅம் இரப்பவை,
பொன்னும் பொருளும் போகமும் அல்ல: நின்
அன்பும் அருளும் அறமெனும் மூன்றே"

என்பது ஒன்றே நாம் இறைவரை வேண்டும் வரமாக இருத்தல் வேண்டும். இந்நிலையை மனிதன் பெறுவன் ஆயின், அவன் இன்ப நிலையை எய்தியவன் ஆவான்.

உலகில் தோற்றம் கொண்டுள்ள யாறுகள் அனைத்தும், தாம் பிறந்த அகமாகிய கடலை நோக்கியே விரைந்து ஓடுதலைப் போல்—நாம், நம்மைப் படைத்த இறைவர் இடத்தை அடைய விரைதல் முறையே அன்றே? அஃறிணைப் பொருளாய யாறு, தனது கடமையைக் கசடற உணர்ந்துள்ளது. ஆயின், மனிதன் தன் கடமையை உணர்ந்திலன். அவன், சேரவேண்டும் திசை அறியாது வேறுதிசை நாடி விரையும் மரக்கலம் போல—பிறவிப் பயனையும், தன் கடனையும் உணரானாய், நீரில் தோன்றி மறையும் குமிழிபோன்ற நிலையற்ற போக பாக்கியங்களில் உழலுதற்கே தன் வாணுளை வீணுக்குகின்றான். மனிதன், தான் இங்ஙனம் தவறான நெறியிற் செல்லுதலை விட்டுத் தன் கடமையைச் சரிவர உணர்தல் வேண்டும்; யாறு

தனித்திருக்கையில் யாருகவேயுள்ளது; ஆயின், கடலை அடைந்து விடுமாயின், கடலாகவே காட்சி அளிக்கின்றது. அஃதே போலத் தனித்துள்ள ஆன்மா, இறைவரது பேரழகில் இரண்டறக் கலந்து விடுமே ஆயின், பேரின்பப் பிழம்பாக வன்ருே காட்சி யளிக்கும்! அப்பேரின்ப நிலையை இவ்வான்மா பெறுதல் அன்ருே பேறு! அதனைப் பெற ஒவ்வொருவரும் தம் கடமையினின்று அணுவும் பிறழாது நடத்தல் வேண்டும். பிறவி எடுத்ததன் பயன் கடமை யறிந்து நடத்தலே என்பதை உணர்தல் வேண்டும்.

அருஞ்சொற்கள்

உணர்வாற்ருன் = உணர்வு + ஆற்ருன் — உணரும் வழியில். அலகு இலா — மாசு அற்ற. மாத்திரை — அளவு. விழைகிருன் — விரும்புகிருன். பாக்கியம் — பேறு. அகம் — இடம். வாணுள் — வாழ் + நாள்.

விஞக்கள்

1. இறைவர் எவ்வெத் தன்மைகள் உடையவர்? எவ்வெத் தன்மைகள் அற்றவர்?
2. மோட்ச நிலை என்ருல் என்ன?
3. ஆண்டவரை அவமதிக்கும் செயல் எது? ஏன்?
4. இறைவரை 'அடைதல்' — பெறுதல் — இம்முறைகளில் எது சிறந்தது? ஏன்?
5. ஈறிலா இன்பம் பெறும் செந்நெறியினை விளக்குக.
6. இன்ப நிலையை எய்தியவன் யாவன்?
7. ஆன்மா பெறும் பேறு எது? அப்பேற்றினை அடைய ஆசிரியர் கூறும் மணிமொழிகள் யாவை?

18. கௌசாம்பி மன்னன்

[திரு. எஸ். உருத்திரபதி அவர்கள், எம். ஏ.]

முதற்களம்

இடம் : உச்சயினி அரண்மனை.

காலம் : காலை.

உறுப்பினர் : பிரச்சோதனன், சேனாதிபதி, சாலங்காயன்.

பிரச்சோதனன் : (தனக்குள்) என்னே! இந்நகர மாந்தர் நம் செல்வி வாசவதத்தையைப் பற்றியும் உதயணனைப் பற்றியும் அலர் தூற்றுகின்றனரே! இல்லாத செய்தி இவ்வாறு பரவுமோ! ஏதேனும் உண்மை இருக்குமோ! நம் மதி சான்ற சாலங்காயன், உதயணனிடம் வாசவதத்தையை ஒப்புவிக்கப் புறப்படு முன்பு தனது கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னான். உண்மையிலேயே அவன் வரும் பொருள் உரைக்கும் அமைச்சனே. இக்காலத்தில் ஓர் இளைஞனும் இள மங்கையும் பேசுவதையோ, ஒருவரையொருவர் பார்ப்பதையோ கண்டாலே வீண் பழி சுமத்துவது உலக இயல்பன்றோ? ஒருகால் இம்முறையில் நம் தத்தையின் மீது நகரமாந்தர் அடாத பழி சுமத்துகின்றனரோ, என்னவோ!

[காவற்காரனைக் கூப்பிட்டுச் சாலங்காயனை அழைத்துவரச் சொல்லுகின்றான்; சாலங்காயனும் வருகின்றான்.]

சாலங்காயன் : அரசரே, வணக்கம். என்ன ஒருவாறாகக் காணப்படுகிறீர்கள்? உடல் நலமில்லையோ? அரசாங்கத்தில் ஏதேனும் குறை நேர்ந்து விட்டதா? அல்லது நேற்று நடந்த நீர் விழாவில் எதிர்பாராத விபத்து ஏற்பட்டதா? முகவாட்டத்திற்குக் காரணம் என்ன? மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கு முள்ளத் துரவோராகிய நீங்கள், இன்ப துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் சம நோக்கமுடையவர்களாயிற்றே? அவ்வாறிருந்தும், இன்று இவ்வாறு மனம் வருந்தக் காரணம் என்னைகொல்?

பிரச்சோதனன் : சாலங்காயரே, நம் செல்வி உதயண னிடஞ் சென்று யாழ் பயின்று வருகின்ருளன்ருே ? அது கொண்டு இவ்வூரார் அலர் தூற்றுகின்றனர். இருவரும் காதல் வயப்பட்டிருப்பதாகவும், உதயணன் வாசவதத் தையை அழைத்துப் போய்விடத் தீர்மானித்திருப்பதாக வும் மக்கள் பேசிக்கொள்கிருர்களாம். நம் அமைச்சர் சிவ தேவனும், பிற உளவுக்காரர்களும் எனக்குத் தெரிவித்தார் கள். உமக்கு ஏதேனும் தெரியுமா ?

சாலங்காயன் : வெற்றி வேந்தரே ! அதைப் பற்றி அப்பொழுதே தெரிவித்தேன். நீங்கள் பிடிவாதமாகவும், என்னுடன் கலந்தாலோசிக்காமலும் செய்து விட்டீர்கள். அமைச்சன் யூகி இறக்கவில்லையென்றும், அவன் நம் நகர்க் கண் இருந்து பேய் பிடித்தவன்போல் நடித்து உதயண னுக்கு உதவி வருகின்ருனென்றும் உங்கட்கு முன்னரே தெரிவித்தேன். அவனுடன் இன்னும் பலர் மாறுவேடம் புனைந்து இந்நகரில் இருந்து வருகின்றனர். அவர்களெல் லாம் சேர்ந்து ஏதேனும் சூழ்ச்சி புரியலாம். நாம் வஞ்ச னையால் உதயணனைப் பிடித்து வந்த செய்தியைக் கேட்ட யூகி, பழிக்குப் பழி வாங்காமல் விடுவதில்லை யென்றும், வஞ்சனையால் உதயணனைப் பிடித்துச் சென்றதற்காக அவ னைத் தந்திரமாகச் சிறை மீட்பதல்லாமல் வாசவதத்தை யையும் அவ்வாறே அழைத்துக்கொண்டு கௌசாம்பி சென்று மணம் முடித்து விடுவதாகவும் சூள் உரைத்திருக் கின்ருனும். நேற்றிரவுதான் இச்செய்தி என் காதில் விழுந் தது. அதைக் கேட்டதுமுதல் எனக்கு மன அமைதியில்லை. அதை உங்களிடம் இன்று காலையில் தெரிவிக்க வேண்டு மென்றிருந்தேன். அதற்குள் நீங்களே ஆள் விட்டனுப்பி னீர்கள்.

வாயிற்காவலன் : மன்னர் மன்னரே, அமைச்சரே, உங்களிருவரையும் பார்க்க, நம் சேனைத் தலைவரும் சில வீரர்களும் வந்திருக்கிருர்கள்.

பிரச்சோதனன் : உடனே அவர்களை வரவிடு.

[அவர்கள் வருகின்றனர்.]

சேனைத் தலைவர் : மன்னரேறே, மதிசால் அமைச்சரே, வணக்கம். உங்களாட்சியிலும் இவ்வநீதி நடக்குமா ? இரும்பை எலி விழுங்குமா ? குழந்தையைப் பருந்து தூக்கிச் செல்லுமா ?

பிரச்சோதனன் : படைத் தலைவரே, நடந்த செய்தியை உடனே தெரிவியும்.

சேனைத் தலைவர் : அரசரே, அமைச்சரே, நேற்று நடந்த நீர் விழாவின் போது, மாலையில் இருட்டிய பின்னர், யானை மதங்கொண்டு குழப்பத்தை உண்டுபண்ணிற்று. சில விடங்களில் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இக்குழப்பத் தில், மக்கள் இங்குமங்கும் சிதறி ஓடினர். அப்போது உத யணனைச் சேர்ந்த பலர் நமது யானை பத்திராபதியின் மேல் உதயணனும் வாசவதத்தையும் ஏறி ஓடிப்போக உதவினர் கள். யானை மிக விரைந்து செல்லத்தொடங்கியது. நாங்கள் தடுக்க முயன்றோம். அவர்கள் எங்களை நன்றாகப் புடைத்து விட்டார்கள். ஊமையர் போலவும், செவிடர் போலவும் நம் நகரத்தில் இருந்த பலர் உதயணன் ஆட்களே. நெடு நேரம் போராடியும் பயன் இல்லை. நமது சேனையில் பலர் மாண்டனர்.

பிரச்சோதனன் : என்னே ! என்னே ! நம் செல்வி வாசவதத்தையை உதயணனா தூக்கிச் சென்றான் ? அவனை நம்பி அவனிடத்தில் என் மகளை யாழ் வாசிக்க விட்டேனே! நம்பிக்கைத் துரோகம் செய்தானே ! அவனைச் சும்மா விடு வேனோ ! கௌசாம்பியின் மேல் படையெடுத்துச் செல் வோம். சாலங்காயரே, நீர் அன்று கூறினவெல்லாம் உண்மையாயின. உம்மைக் கலந்தாலோசிக்காமல் செய் தது என் தவறு. நமது பொய்யில் புலவர், “ இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன், கெடுப்பா ரிலானுங் கெடும் ” என்று கூறிய வாக்குப் பொய்க்குமோ ? இடித்திடித்துப் புத்தி புகட்டும் அமைச்சர் இருந்தும், உம் அறிவைப் பயன் படுத்திக் கொள்ளாது போனது எனது தவறு. இதற்கென் செய்யலாம் ? மாசற்ற நங் குலத்திற்குப் பெரும்பழி வந்து விட்டதே !

சாலங்காயன் : அரசரே, உலகியல் அறிந்தே உங்களிடம் அப்பொழுது தத்தைக்கு உதயணன் ஆசானுக அமைவது பற்றி மறுப்புரை கூறினேன். காரியம் மிஞ்சி விட்டது. அதைப்பற்றிப் பேசிப் பயனென்ன ? உதயணன் திறை கட்டவில்லையென்ற காரணத்தால், காட்டில் மாய யானையைக் காட்டி, அவனைக் கட்டி இங்குக் கொணர்ந்து சிறைப் படுத்தினேம். யூகியோ உதயணனுக்கு அமைச்சன் மட்டுமன்று, இன்னுயிர்த் தோழனுமாவான். அவர்கள் இருவரும் ஈருடல் ஒருயிர்போல வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, யூகி தன் மதிவன்மையால் உதயணனை மீட்டதுடன், வாசவதத்தையையும் எடுத்துச் சென்ருன். இதற்கினி வருந்துவதால் பயனில்லை. படையெடுத்துச் செல்வதாலும் பயனில்லை. நமது பண்டை நாகரிகத்தில், அகத்திணைத் துறைகளுள் உடன் போக்குத்துறை என்பதும் ஒன்று. அதன்படி உதயணன் செய்துவிட்டான். நம் அரசிளங் குமரி இதற்கு முழுச் சம்மதம் அளித்திருப்பாள். ஆகவே, இதில் வருந்த வேண்டுவது ஒன்றுமில்லை. நம் குலத்துக்கு இதனல் இழிவுமில்லை. அவனும் குலத்தாலும் பிறப்பாலும் உயர்ந்தவன். உதயணனைப் போன்ற உத்தமன் நம் பெண்ணுக்கு மணமகனுக வாய்த்தல் அரிதினும் அரிதே. நமது குலக்கொடி தத்தை நல்ல இடத்திற்போய்ச் சேர்ந்ததற்கு நாம் மகிழவேண்டுமேயன்றி, வருந்துவதால் பயனில்லை.

பிரச்சோதனன் : அமைச்சரே, உம் அறிவுரைகள் என்னை அகமகிழச் செய்தன ; நீர் இவ்வளவு கூர்த்த மதியினர் என்பதை இன்றுதான் உணர்ந்தேன். உம் வார்த்தைகளால் ஒருவாறு மனந்தேறினேன். கௌசாம்பியில், வாசவதத்தைக்கு மணவினை நடக்குங்கால், யாம் அனைவரும் சென்று, அதை இன்பமாய் முடித்து வர வேண்டும்.

சாலங்காயன் : அரசரே, உங்களைப் போன்ற தந்தைமார்கள் உலகில் வாய்ப்பதரிது ; மலையின் உச்சியில் விளையும் நார்த்தங்காய் மலைமேலே இருந்துவிடுவதில்லை; கடலில் விளையும் உப்புடன் கலந்தே தீரும். சந்தனம் அரைத்

தால் தானே கமழும்? யாழ் எவ்வளவு அழகியதாக இருந்த போதிலும், அதை மீட்ட ஒருவர் வேண்டுமல்லவா? ஆகவே, நம் செல்விக்குங் கண்ணிறைந்த கணவன் வேண்டும். அதிலும், உண்மையான காதல் மணம் நன்மை தரக்கூடியது.

பிரச்சோதனன் : அமைச்சரே, நீர் கௌசாம்பி நகர்க் கிறைவனாகிய உதயணனுக்கு நல்ல முறையில் ஒரு திரு முகம் எழுதிக்கொண்டு வாரும். அதில் மணவினை நாளைக் குறித்து எழுத மறக்கவேண்டா. என்ன எழுத வேண்டு மென்பதைப் பற்றி உமக்கு யான் ஒன்றுங் கூறத் தேவை யில்லை. ஆண்டிலும், அனுபவத்திலும், அறிவிலும் என் னைக் காட்டிலும் நீர் சிறந்தவர். ஆகவே நீரே எழுதிக் கொண்டு வாரும். அதில் யான் கையொப்பமிடுகிறேன்.

இரண்டாம் களம்

இடம் : சயந்தி நகரம்.

காலம் : காலை

உறுப்பினர் : உதயணன், பெருங்கணி, வள்ளுவன்.

உதயணன் : நகர மக்களே, நீங்களனைவரும் ஒரு முகமாக என்னையும் வாசவதத்தையையும் மனமுவந்து வரவேற்றமைக்கு மிகவும் மகிழ்கின்றேன்! உங்களனைவ ருக்கும் எனது நன்றியுரியதாகுக.

நகரமக்கள் : தெய்வயானையைத் தேடிப் பெறுவ தற்காகச் சேனையின்றித் தனியே சென்று, பகைவனாற் பற்றப்பட்டு உச்சயினி சென்று வதிந்து, பகைவனை வென்று, அப் பகைவனுடைய செல்வப் புதல்வியைச் செங்கரம் பற்றி அழைத்துக் கொண்டுவந்த ஆண் சிங்கமே நெடிது வாழ்க! திருமகள் போல் எங்கள் அரச னைச் சார்ந்து வாழ வந்த எழிற் பாவையே வாழ்க!

உதயணன் : நகரமக்களே, உங்கள் நன்மையை நாடி நாடாள்வதே எமது கடமை! உங்களை என் கண் களேபோலக் கவனிக்கிறேன்.

RTR 1164

உதயணன் ; (சபையைக் கலைத்தபின் காவலாளியை அழைத்து) காவலா, நீ சென்று பெருங்கணியை அழைத்து வா.

[பெருங்கணி வருகிறான்]

பெருங்கணி : அரசர் பெருமானே, வணக்கம். கட்டளை என்னவோ ! தெரிவித்தருள வேண்டுகிறேன்.

உதயணன் : பெருங்கணியே, நாம் வாசவதத்தையைத் திருமணம் புரிதற்கேற்ற நன்னாளை ஆய்ந்தறிவித்தல் வேண்டும்.

பெருங்கணி ; இறைவரே, இதோ, உங்கள் கட்டளைப்படி ஏற்றதொரு நாளை இப்பொழுதே தெரிவிக்கிறேன்.

[நல்ல நாளைக் குறிப்பிடுகிறான்]

உதயணன் : காவல, வள்ளுவ முதுமகனை அழைத்து வா.

[வள்ளுவ முதுமகன் வருகிறான்]

வள்ளுவன் : மன்னர் மன்னரே, வணக்கம். உங்களுடைய கட்டளை யாதோ ?

உதயணன் : வள்ளுவ, இற்றைக்கேழாம்நாள் எமக்கும் உச்சயினி நகர மன்னர் பிரச்சோதனர் மகள் வாசவதத்தைக்கும் திருமணம் நடைபெறும் என்ற செய்தியை நகரமக்கட்குப் பறையறைவித்துத் தெரிவிப்பாயாக.

வள்ளுவன் : அரசர் பெருமானே, மகிழ்ச்சி. அப்படியே செய்கின்றேன். (யானை மீதிருந்து வீதிதோறும் சென்று மணமுரசறைந்து, நகரத்தாரெல்லோரும் அறியும்படி) அரசர் வேல் வெற்றி பெற்று விளங்குக ! பூமகள் பொருந்த ; மண்மகள் மலிக ; நகரத்தீர், நான் கூறுவனவற்றைக் கேளுங்கள். மறச் செயல்களை நீக்கித் திருவையுடையீராய்ப் புகழ்பெற்று விளங்குங்கள் ; பிரச்சோதன மன்னரின் குலமகள் வாசவதத்தையாரை நம் அரசர் பெருமான் மணஞ்செய்யும் நாள் இற்றை ஏழாம் நாளாகும் (முரசறைகின்றான்,)

[உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமணம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. அதன் பிறகு உதயணனும் வாசவதத்தையும் அரண்மனையில் மிக்க அன்புடையவர்களாய் வாழ்ந்து வருவாராயினர்.]

அருஞ்சொற்பொருள்

அலர் தூற்றுதல்-பழியைப் பலரும் அறியச் சொல்லுதல். மதி சான்ற-அறிவு நிறைந்த. திணை-ஒழுக்கம். கணி-சோதிடன்.

வினாக்கள்

1. சாலங்காயன் அரசரை வணங்கி யாது கூறினான்?

2. சாலங்காயன் மன்னனிடம் முதல் நாள் இரவு அறிந்த செய்தியாகக் கூறியது எது?

3. சேனைத்தலைவன் அரசனுக்குத் தெரிவித்த செய்தி யாது?

4. மதியூகியின் திறமையும் நட்பும் எவ்வாறு எடுத்துக்காட்டப் பட்டுள்ளன?

5. உதயணன் வாசவதத்தையுடன் உச்சயினியிலிருந்து தப்பிச் சென்றது எங்ஙனம்?

6. மகளைப் பிரிந்த மன்னனுக்குச் சாலங்காயன் கூறிய சமாதானம் யாது?

7. மன்னனின் சமயோசித புத்திக்கு மகிழ்ந்த சாலங்காயன் மன்னனிடம் கூறியதென்ன?

8. வள்ளுவன் மணமுரசறைந்து யாது கூறினன்?

TB 03118 NS

89770
சென்னை-600 008.

319